# நிதியியல் அறிக்கைகளும் தொழிற்பாடுகளும்

## இலங்கை மத்திய வங்கி

# 2023

இலங்கை மத்திய வங்கி

# இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் அறிக்கைகளும் தொழிற்பாடுகளும்

# 2023

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 99(2)ஆம் பிரிவிற்கிணங்க, ஆளுநர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டவையும் கணக்காய்வாளர் நாயகத்தினால் பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டவையுமான 2023 திசெம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான ஆண்டு நிதியியல் கூற்றுக்களை, இலங்கை மத்திய வங்கி நிதி, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சருக்கு இத்தால் சமர்ப்பிக்கிறது. இவ் அறிக்கையானது 2023இல் மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் மீதான இற்றைப்படுத்தலையும் வழங்குகிறது.

இலங்கை மத்திய வங்கி

## வாசகர்களுக்கான குறிப்பு

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் கீழ், இதுவரை காலமும் வெளியிடப்பட்டு வந்த ஆண்டறிக்கைக்குப் பதிலாக, இலங்கை மத்திய வங்கி, 2023 நிதியியல் ஆண்டிலிருந்து 2023 செத்தெம்பரில் இயற்றப்பட்ட 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க மத்திய வங்கிச் சட்டத்தின் நியதி ஏற்பாடுகளை நிறைவேற்றும் விதத்தில் “இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் அறிக்கைகள் மற்றும் தொழிற்பாடுகள்” மற்றும் “ஆண்டுப் பொருளாதார மீளாய்வு” எனும் பெயர்களில் இரண்டு தனித்தனியான அறிக்கைகளைப் பிரசுரிக்கத் தொடங்குகிறது.

இவ்வெளியீடுகளான, இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் அறிக்கைகள் மற்றும் தொழிற்பாடுகள் - 2023, 2023 திசெம்பர் 31இல் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் மற்றும் 2023 காலப்பகுதியில் வங்கியின் தொழிற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் மீதான இற்றைப்படுத்தலுடன் சேர்த்து உள்ளடக்கியிருக்கிறது.

ஆண்டு பொருளாதார மீளாய்வு - 2023, நிதியியல் முறைமையின் கொள்கை, குறிக்கோள்கள் மற்றும் நிலைமைகளை வலியுறுத்துகின்ற விதத்தில் 2023ஆம் ஆண்டிற்கான பொருளாதாரத்தின் நிலையினைப் பகுப்பாய்வு செய்கிறது.

ஒன்றுசேர்ந்த, இவ்வெளியீடுகள் மத்திய வங்கியின் தொழிற்பாடுகள், அதன் கொள்கை குறிக்கோள்கள், பொருளாதாரம் மற்றும் நிதியியல் முறைமை மீதான அவற்றின் தாக்கம் என்பன தொடர்பில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் தகவல்களைப் பரப்புதல் என்பனவற்றை மேன்மையுறச் செய்வதற்கு உதவியிருக்கின்றன.

**இந்த வெளியீட்டின் இலத்திரனியல் பதிப்பினை இதனூடாக பார்வையிடலாம்**

*https://www.cbsl.gov.lk/en/publications/economic-and-financial-reports/financial-statements-operations*

# முன்னுரை

நிதியியல் துறையில் உச்சநிறுவனமாக விளங்கும் இலங்கை மத்திய வங்கி (மத்திய வங்கி) 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இலங்கையிலுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபையாகும். இது, 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டம் இரத்துச் செய்யப்பட்டமையின் மூலம் 2023 செத்தெம்பர் 15ஆம் நாள் தொழிற்பாட்டிற்கு வந்தது. மத்திய வங்கி பூர்வாங்க கம்பனிச் சபையாக இருப்பதுடன் இலங்கையின் நாணய, நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறைமைகளின் நிருவாகத்திற்குப் பொறுப்புடையதாகவும் இருத்தல் வேண்டும்.

மத்திய வங்கியின் புதிய ஆளுகைக் கட்டமைப்பு இரண்டு சமாந்தரமான தீர்மானங்களை மேற்கொள்ளும் சபைகளை உள்ளடக்கியுள்ளது அதாவது (i) ஆளுகைச் சபை மற்றும் (ii) நாணயக் கொள்கைச் சபை, இரண்டிற்கும் ஆளுநரே தலைமை தாங்குவார்.

- ஆளுகைச் சபை - இலங்கை மத்திய வங்கியின் நிருவாகம் மற்றும் முகாமைத்துவ அலுவல்களை மேற்பார்வை செய்வதுடன் நாணயக் கொள்கை தவிர்ந்த மத்திய வங்கியின் பொதுவான கொள்கைகளைத் தீர்மானிக்கும்.

- நாணயக் கொள்கைச் சபை - மத்திய வங்கியின் நாணயக் கொள்கையை வடிவமைப்பதுடன் உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினைப் பேணுவதற்காக நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி வீத அமைப்பினை நடைமுறைப்படுத்தும்.

இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் மத்திய வங்கியின் குறிக்கோள்களாவன:

- உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை அடைவதும் பேணுவதும் இதன் முதன்மை நோக்கமாகும் மற்றும் பயன்பாட்டினை முழுமையாக அடைவதற்கு வெளியீட்டின் உறுதித்தன்மையைப் பேணுவதனை இலங்கை மத்திய வங்கி பரிசீலனையில் கொள்ளும்.

- நிதியியல் முறைமையின் உறுதித்தன்மையினை அடைந்து கொள்ளுதல் இதன் மற்றைய குறிக்கோளாக உள்ளதுடன் இதற்கு மத்திய வங்கி நிதியியல் முறைமையின் அபிவிருத்தி மற்றும் வினைத்திறனை கருத்தில் கொள்ளும்.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் இதன் முதன்மை நிறைவேற்று அலுவலராகத் தொடர்ந்தும் தொழிற்படுவார். ஆளுநருக்கு மேலதிகமாக, மூத்த முகாமைத்துவத்தினர், துணை ஆளுநர்கள், உதவி ஆளுநர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் ஆகியோரை உள்ளடக்கியிருக்கும். வங்கி 29 திணைக்களங்களையும் 6 பிரதேச அலுவலகங்களையும் உள்ளடக்கியுள்ளது. திணைக்களங்கள் பணிப்பாளரால் தலைமை தாங்கப்படுவதுடன் உதவி ஆளுநரரொருவரூடாக ஆளுநருக்கு அல்லது துணை ஆளுநருக்கு அறிக்கையளிக்கப்படுகிறது.

# ஆளுநரின் செய்தி

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க மத்திய வங்கிச் சட்டம் இயற்றப்பட்டதனை அடுத்து 2023ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் மற்றும் தொழிற்பாட்டு அறிக்கையின் முதலாவது வெளியீட்டினைச் சமர்ப்பிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வறிக்கையானது, பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களுக்கிணங்கத் தயாரிக்கப்பட்டு மாண்புமிகு கணக்காய்வாளர் நாயகத்தினால் சரியான முறையில் கணக்காய்வு செய்யப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்களை உள்ளடக்கியிருக்கிறது. இது, 2023இல் இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட தொழிற்பாடுகளின் விபரங்களை உள்ளடக்குவதுடன் நிறுவனத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் ஆர்வலர்களுக்கு வெளிப்படையான தொடர்பூட்டல்களையும் உறுதிப்படுத்துகிறது.

2023ஆம் ஆண்டானது, முன்னைய ஆண்டில் காணப்பட்ட கடுமையான சமூகப் பொருளாதார நெருக்கடிகளைத் தொடர்ந்து எமது நாட்டின் பொருளாதாரம் குறிப்பிடத்தக்கதொரு திருப்புமுனையினை குறித்துக்காட்டுகின்றது. சவால்களுக்கு மத்தியிலும் பொருளாதாரம் மற்றும் விலை உறுதிப்பாட்டு நியதிகளில் அடையப்படட முன்னேற்றம் காத்திரமான விதத்திலும் சரியான நேரத்திலும் பின்பற்றப்பட்ட பொருத்தமான கொள்கை வழிமுறைகளுக்குச் சான்றாக விளங்குகிறது. பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டின் தெளிவான அடையாளங்களுடன், குறிப்பாக கடுமையான பணவீக்கச் சுருக்கம் மற்றும் மீள்நிலைநிறுத்தப்பட்ட எதிர்பார்ப்புக்களுடன் நாணயக் கொள்கை தளர்த்தப்பட்டு, பொருளாதார நடவடிக்கைக்கு மேலும் ஆதரவளிக்கப்பட்டது. இவ்வாண்டுப்பகுதியில் மேம்பட்ட நாணயக்கொள்கை தொடர்பூட்டல்கள் நாணய ஊடுகடத்தல்கள், நிறுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்புக்கள் உயர்வடையவும் இலங்கை மத்திய வங்கியின் நடவடிக்கைகள் மீதான வெளிப்படைததன்மை அதிகரிக்கவும் உதவின. சுமுகமான நாணயத் தொழிற்பாடுகள் பொதுமக்களின் நம்பிக்கையினையம் பொருளாதாரத்தின் சரியான தொழிற்பாடுகளையும் பேணும் விதத்தில் உறுதிப்படுத்தப்பட்டன. 2023இல் இலங்கை மத்திய வங்கிச் சட்டம் இயற்றப்பட்டமை, நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல், நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி வீதத்துடன் சேர்ந்து இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைக் கட்டமைப்பாக விளங்குவதற்கு உரிய இடத்தினை வழங்கியிருக்கின்ற வேளையில் இலங்கை மத்திய வங்கியின் சுயாதீனத்தினையும் பொறுப்புக்கூறும் தன்மையினையும் உயர்வடையச் செய்கிறது.

சமூக பொருளாதார நெருக்கடிகளின் தாக்கம் காரணமாக 2023இல் நிதியியல் துறை பல சவால்களை எதிர்நோக்கியமைக்கிடையிலும் உத்வேகம் மிக்க ஒழுங்குமுறைப்படுத்தல் தலையீடுகள், விழிப்புணர்வுமிக்க மேற்பார்வை மற்றும் காத்திரமான கொள்கை வழிமுறைகள் என்பனவற்றினூடாக நிதியியல் முறைமை உறுதிப்பாடு அடையப்பட்ட வேளையில் துறையின் முன்னேற்றத்தினையும் வசதிகளுக்குட்படுத்தலையும் அதிகரிப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், இலங்கை மத்திய வங்கி இலங்கையின் பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபையாக, தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரசபையாக குறித்துரைக்கப்பட்டு, மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் நிதியியல் வசதிக்குட்படுத்தலை மேம்படுத்துவதற்கான பொறுப்பு வழங்கப்பட்டுள்ளமையானது நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை அடைந்து கொள்வதில் அதன் பொறுப்பினையும் செயற்பரப்பினையும் விரிவுபடுத்தியிருக்கிறது. மேலும், நிதியியல் வாடிக்கையாளர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்ட வேளையில், நிதியியல் பணிகளை வழங்குவோரிடையே

நியாயமானதும் ஒழுக்கவியல் நிறைந்ததுமான நடைமுறைகள் பேணப்பட்டு வருகின்றன. நிதியியல் மோசடிகளையும் பிரமிட் திட்டங்களையும் ஒழிப்பதுடன் தொடர்பான நடவடிக்கைகள் சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளின் ஒத்துழைப்புடனும் பொதுமக்களின் ஆதரவுடனும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொதுப்படுகடன் முகாமைத்துவம், வெளிநாட்டுச் செலாவணி, ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் நிதியியல் உளவறிதல் துறைகளின் முகவர் என்ற எமது பொறுப்புக்கள் நேர்த்தியான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதன் நன்மைகள் தொடர்பான ஆர்வலர்களுக்கும் பெருமளவில் தேசிய பொருளாதாரத்திற்குமிடையே பகிரப்பட்டு வருகின்றன.

சட்டத்திற்கும் ஒழுங்குவிதிகளுக்கும் இணங்கியொழுகுதல், அநேக இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையினைக் குறைத்தல், அதன் ஆதனங்களையும் அதன் ஊழியர்களையும் பாதுகாத்தல் என்பனவற்றை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதிகளவு பலயீனங்களின் காரணமாக மனித வளங்களைப் பேணுவதிலும் முகாமைப்படுத்துவதிலும் எதிர்நோக்கப்பட்ட சவால்களைத் தளர்த்துவதற்காக ஆட்சேர்ப்பு மற்றும் ஊழியர்களின் திருப்தியை உயர்த்துதல் என்பன தொடர்பில் வழிமுறைகள் முன்னெடுக்கப்பட்டன.

2023இன் சாதனைகள் தொடர்பில் நாம் பிரதிபலித்தவாறு, இவ்வறிக்கை இலங்கை மத்திய வங்கியின் பொறுப்பாணையினை நிறைவேற்றுவதில் எமது முயற்சிகளைத் துல்லியமான முறையில் உள்ளடக்கியிருக்கிறது என நான் நம்புகிறேன். முன்னோக்கிப் பார்க்கையில், பொருளாதாரத்தின் முன்னேற்றங்களுக்குத் தொடர்ந்தும் பங்களிப்பது தொடர்பில் எமது கவனம் என்றும் நிலைபெற்றிருக்கும். இம்முயற்சியில், ஏற்கனவே பின்பற்றப்பட்ட கொள்கை வழிமுறைகளிலும் முன்னோக்கிய பார்வையுடன் எம்முன்னேயுள்ள சவால்களைப் பூர்த்திசெய்யும் விதத்தில் தரவுகளின் அடிப்படையில் இனிமேல் மத்திய வங்கியினால் பின்பற்றப்படவுள்ள வழிமுறைகளிலும் பொருளாதார முன்னேற்றங்களை நோக்கிப் பயணிப்பதிலும் நான் முழுமையான நம்பிக்கை வைத்துள்ளேன். தொழிற்பாடுகளின் அனைத்துத் துறைகளிலும் காத்திரமான தன்மையினையும் வினைத்திறனையும் அதிகரிப்பதற்காக, முன்னேற்றங்கண்ட தொழில்நுட்பங்களைப் புகுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தவும் நாம் எண்ணுகிறோம்.

நான் மத்திய வங்கியிலுள்ள அர்ப்பணிப்பு மிக்க குழுவினருக்கு அவர்களின் கடப்பாடுகளுக்காகவும் எமது நாட்டின் பிரசைகள் உட்பட, எமது பெறுமதிமிக்க ஆர்வலர்களுக்கும் அவர்கது தடுமாற்றமற்ற ஆதரவிற்காகவும் இப்பயணம் முழுவதிலும் அவர்கள் எம்மீது வைத்த நம்பிக்கைக்காகவும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**முனைவர் பி. நந்தலால் வீரசிங்க**
ஆளுநர்

24 ஏப்பிறல் 2024

# நிறுவன மூலோபயம்

மத்திய வங்கி அதன் மூலோபாய திட்டமிடல் செய்முறைகளினூடாக அதன் குறிக்கோள்களை எய்துவதற்கேற்ற நடைமுறைசார் நிறைவேற்றுகையுடன் அதன் அனைத்தையும் தழுவிக் கொள்கின்ற பொறுப்பாணைகளுடன் இணைத்துக் கொள்கின்றது. இச்செய்முறையானது, வங்கியின் குறிக்கோள்கள், பணி மற்றும் தொலைநோக்கு என்பனவற்றுடன் இணைந்து கொள்வதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் மேலிருந்து கீழான நெறிப்படுத்தல்கள் மற்றும் பல்வேறுபட்ட திணைக்களங்களிடமிருந்துமான கீழிருந்து மேலான உள்ளீடுகள் இரண்டினையும் ஒருங்கிணைக்கிறது.

2023இல் மத்திய வங்கியின் முகாமைத்துவ முன்னுரிமைகளின் மாதிரி தொழிற்பாடுகளில் குறிப்பிடத்தக்க பரிணாமத்தினை அடையாளப்படுத்துகின்ற விதத்தில் மத்திய வங்கிக்குள் மூலோபாய முன்னுரிமைகளை அடையாளம் காணுகின்ற முறையியலுக்கு கணிசமான மேம்படுத்தல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. பரந்த வீச்சிலான கரிசனைகளினால் சூழப்பட்டுள்ள மிக முக்கியமான பிரச்சனைகளை அடையாளம் காண்பதற்காக, மிகக் கடினமான பகுப்பாய்வு மற்றும் முறைமையியல் சார்ந்த அணுகுமுறைகளூடாக மத்திய வங்கி அடுத்த மூன்றாண்டுகளுக்கான அதாவது 2024 – 2026 காலப்பகுதிக்கான அதன் முன்னுரிமைகளை குறிப்பிட்டிருக்கிறது. ஒவ்வொரு முன்னுரிமையின் கீழும் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள், வெளியீடுகள் மற்றும் முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகள் என்பன அவற்றின் நிறைவேற்றலுக்கு வழிகாட்டுவதற்காக தயாரிக்கப்பட்டன. தனிப்பட்ட திணைக்களங்கள் முன்னுரிமைத் திட்டங்களுடன் தொடர்பான அனைத்து நடவடிக்கைகள் மற்றும் ஏனைய திணைக்களங்களின் குறித்துரைக்கப்பட்ட உபாயங்கள் மற்றும் தொழிற்பாடுகளை உள்ளடக்குகின்ற 2024ஆம் ஆண்டிற்கான வருடாந்த திணைக்கள நடவடிக்கைத் திட்டங்களைத் தயாரித்தன.

இவற்றிற்குப் புறம்பாக, இத்திட்டங்கள் சரியான நேரத்தில் நிறைவுசெய்யப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக, முன்னேற்ற கண்காணிப்பு 2023இலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. இதற்கமைய, முன்னுரிமைத் திட்டங்கள் தொடர்பில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் அரையாண்டிற்கொரு தடவை நடத்தப்பட்ட வேளையில் திணைக்கள ரீதியான நடவடிக்கைத் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல்கள் தனிப்பட்ட திணைக்களங்களுடன் காலாண்டு அடிப்படையில் இடம்பெற்றன. இக்கண்காணிப்புப் பொறிமுறை முகாமைத்துவத்தினால் தகவல்களை அடிப்படையாகக் கொண்ட தீர்மானங்களை வகுப்பதற்கான பெறுமதிமிக்க நுண்ணறிவுத் திறனை வழங்குவதுடன் மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை எய்துவதனை நோக்கிய முன்னேற்றத்தினைத் தொடர்வதற்கும் தூண்டுதலளிக்கிறது.

மீண்டும் மீண்டும் குறிப்பிடப்படுகின்றதும் பின்பற்றத்தக்கதுமான இவ்வணுகுமுறையினை ஈடுபடுத்துவதன் மூலம் மத்திய வங்கி 2023இன் இயக்கவாற்றல் மிக்கதும் பரிணாமமடைந்து வருகின்றதுமான பொருளாதாரத் தோற்றப்பாட்டில் அதன் பொறுப்பாணையினையும் குறிக்கோள்களையும் நிறைவேற்றுவதற்கான அதன் அர்ப்பணிப்பினை எடுத்துக்காட்டியது. உபாயத் திட்டங்களை அதன் குறிக்கோள்களுடன் இணைத்து உள்ளக மற்றும் வெளிவாரி சவால்களுக்கு பதிலிருத்துவதன் மூலம் மத்திய வங்கி தாக்குப்பிடிக்கும் தன்மை, விரைந்த செயலாற்றம் என்பனவற்றைப் பேணி வளர்ப்பதுடன் இலங்கைப் பொருளாதாரத்திற்குள் அதன் இன்றியமையாத வகிபாகத்தினை நிறைவேற்றுவதில் உறுதியான வெற்றியை நிலைநாட்டியிருக்கிறது.

# உள்ளடக்கம்


**நிதியியல் கூற்றுக்கள்**

நிதியியல் மீளாய்வு 1-4
கணக்காய்வாளர் நாயகத்திற்கான அறிக்கை 5-8
நிதியியல் நிலைமைக் கூற்று 9
வருமானக் கூற்று 10-12
காசுப்பாய்ச்சல் கூற்று 13
நிதியியல் கூற்றுக்களின் விளக்கக் குறிப்புக்கள் 14-90

**வங்கியின் வகிபாகம்**

உள்நாட்டு விலை உறுதிப்பாட்டைப் பேணுதல் 91-97
நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை உறுதிசெய்தல் 98-105
முன்னேற்றகரமான மற்றும் அனைவரையும் வசதிக்குட்படுத்துகின்ற நிதியியல் முறைமையொன்றினை ஊக்குவித்தல் 106-110
நாணயத் தொழிற்பாடுகளின் முகாமைத்துவம் 111-113
பன்னாட்டு ரீதியான ஈடுபாடுகள் 114-117
முகவர் தொழிற்பாடுகள்
- வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை ஒழுங்குபடுத்தலும் மேற்பார்வை செய்தலும் 118
- பொதுப் படுகடன் முகாமைத்துவம் 119-123
- ஊழியர் சேமலாப நிதியம் 124-127

ஏனைய பொறுப்பளிக்கப்பட்ட பொறுப்புக்கள்
- நிதியியல் உளவறிதல் பிரிவைத் தொழிற்படுத்தல் 128-130

**வங்கியை முகாமை செய்தல்**

இடர்நேர்வு முகாமைத்துவமும் இணங்குவித்தலும் 131-132
உள்ளகக் கணக்காய்வு 133-134
மனித மூலதனமும் பொது நிர்வாகமும் 135-138

**ஆளுகை**

சபை அங்கத்தவர்கள் 139-144
சபை உப குழுக்கள் 145-150
முதன்மை அலுவலகர்கள் 151-154
ஏனைய குழுக்கள் 155-159

**துணைத் தகவல்கள்**

வெளியீடுகள் மற்றும் தரவு பரவலாக்கம் 160
பிராந்திய அலுவலகங்கள் 161
மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும்/மேற்பார்வை செய்யப்படும் நிறுவனங்கள் 162-168
நிறுவனத் தகவல் 169

## நிதியியல் செயலாற்றமும் பொறுப்புக்கூறலும்

இலங்கை மத்திய வங்கியானது, நாட்டினுடைய நாணயக் கொள்கை, நிதியியல் முறைமை மேற்பார்வை, கொடுப்பனவு முறைமை ஒழுங்குபடுத்தல், வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள் மற்றும் நாணயம் வழங்குதல் என்பவற்றுக்கான அதிகாரசபையாக பணியாற்றுகின்றது. 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் கீழ் இது தாபிக்கப்பட்டு, தற்போது 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தினால் ஆளப்படுகின்றது. அதன் பிரதான குறிக்கோளாக உள்நாட்டு விலை உறுதிப்பாட்டை அடைவதுடன் அதனை தொடர்ந்து பேணுவதை இச்சட்டம் எடுத்துரைக்கின்ற அதேவேளை மற்றைய குறிக்கோளாக நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பாதுகாப்பதை அடையாளப்படுத்துகின்றது. வங்கியின் வெற்றியானது வெறுமனே இலாபத்தன்மை மூலமாகவன்றி இக்குறிக்கோள்களை எய்துவதில் அதன் கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் பற்றிய செயல்திறன்வாய்ந்த தன்மை மூலமே அளவிடப்படுகின்றது. இத்தனிச்சிறப்பே ஏனைய அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களிலிருந்து இலங்கை மத்திய வங்கியினை வேறுபடுத்துகின்றது. அதன் நாணயக் கொள்கை சாதனங்களூடாகவும் வட்டி வீதங்களினூடாகவும் செலாவணி வீதங்களில் செல்வாக்குச் செலுத்துவதனூடாகவும் இலாபங்களை ஈட்டுவதற்கு வங்கி தனித்துவமான இயலுமையினைக் கொண்டிருப்பதனால், இலாபத்தன்மை மையப்படுத்தலானது அதன் குறிக்கோள்களை விட்டுக்கொடுப்பதில் ஊக்கமளிக்கும் நடவடிக்கைகளாக அமையலாம். இதன் பின்னணியில் மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்களானவை நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல், செலாவணி வீத முகாமைத்துவம் மற்றும் நாணய வழங்கல் போன்றவற்றின் கொள்கைகள் மற்றும் செயற்பாடுகள் காரணமாக உறப்படுகின்ற இலாபங்களை அல்லது நட்டங்களை தேறியவாறான பெறுமதிகளில் பிரதிபலிக்கின்றன. இதன் பின்னணியில் இந்நிதியியல் கூற்றுக்களில் எடுத்துரைக்கப்பட்டவாறு, வங்கியின் நிதியியல் செயலாற்றுகையை பொருள்கோடல் செய்வதும் புரிந்துகொள்வதும் மிகமுக்கியமானதாகும்.

மத்திய வங்கிச் சட்டத்தின் பகுதி XVI (பிரிவுகள் 92 தொடக்கம் 99) ஆண்டுக்கான நிதியியல் அறிக்கைகளை தயாரித்தல், சமர்ப்பித்தல் மற்றும் வெளியிடுதல் (99ஆம் பிரிவு) தொடர்பிலானவை உள்ளடங்கலாக இலங்கை மத்திய வங்கியுடன் தொடர்புடைய நிதியியல் ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது. மத்திய வங்கிச் சட்டத்தின் 101ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய, இலங்கை மத்திய வங்கியின் கணக்குகள், கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்படவேண்டுமென்பதுடன் ஆண்டுக்கான நிதியியல் கூற்றுக்களுடன் சேர்த்து கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம் வெளியிடப்படுதல் வேண்டும். மேலும், இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 103(4)(ஈ) பிரிவின் நியதிகளின் பிரகாரம் ஆண்டுக்கான நிதியியல் கூற்றுக்களை கணக்காய்வாளர்களுடன் மீளாய்வுசெய்வது கணக்காய்வுக் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, எடுத்துரைக்கப்பட்டுள்ள ஆண்டுக்கான நிதியியல் கூற்றுக்கள் இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிசைவாக தயாரிக்கப்பட்டு, மீளாய்வுசெய்யப்பட்டு, கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன.

## 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்கள் பற்றிய சிறப்புக் கூறுகள்

### நிதியியல் நிலைமைக் கூற்று

### சொத்துக்களின் உள்ளமைப்பு

மொத்தச் சொத்துக்கள், 2022இன் ரூ.4,510.4 பில்லியனிலிருந்து 2023இல் ரூ.4,205.4 பில்லியனாக ரூ.305.0 பில்லியனால் (6.8 சதவீதம்) குறைவடைந்தன. ரூ.1,022.5 பில்லியன் கொண்ட உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களில் கணிசமான வீழ்ச்சியினால் இவ்வீழ்ச்சி முதன்மையாக தூண்டப்பட்டிருந்தது. இலங்கை அரசாங்கத்தினுடைய உள்நாட்டு படுகடன் மேம்படுத்துகையின் விளைவாக இலங்கை மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உரித்துக்களையும் நிலுவையாகவிருக்கின்ற அரசாங்கத்திற்கான தற்காலிக முற்பணங்களையும் நீண்ட கால திறைசேரி முறிகளாக மாற்றுவதிலிருந்து இவ்வீழ்ச்சி பிரதானமாக தோற்றம்பெற்றது. ஏற்கனவே காணப்படுகின்ற திறைசேரி உண்டியல்களுக்கும் நிலுவையாகவிருக்கின்ற அரசாங்கத்திற்கான தற்காலிக முற்பணங்களுக்கும் முறையே ரூ.2,368.4 பில்லியன் மற்றும் ரூ.344.7 பில்லியன் தொகைக்கு எதிராக ரூ.1,946.7 பில்லியன் தொகையுடைய புதிய திறைசேரி உண்டியல்களினதும் திறைசேரி முறிகளினதும் சீர்மதிப்பு பெறுமதியின் மாற்றீடானது ரூ.766.4 பில்லியன் கொண்ட முதல் நாளுக்கான இழப்பிற்கு வழிவகுத்தது. உள்நாட்டுப் பணச் சந்தையில் மேம்படுத்தப்பட்ட திரவத்தன்மை நிலைமைகளின் விளைவாக நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவுசெய்யப்பட்ட பிணையங்கள் ரூ.364.1 பில்லியன் குறைவடைவதற்கு காரணமாயின.

எவ்வாறாயினும், இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டு ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 3.48 பில்லியனாக ஐ.அ.டொலர் 1.63 பில்லியனால் (2022இன் இறுதியில் ஐ.அ.டொலர் 1.85 பில்லியனுடன் ஒப்பிடுகையில்) அதிகரித்தமை காரணமாக வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் அதிகரித்துள்ளன. பண மீதிகளில் ரூ.547.3 பில்லியனால் அதிகரிப்பிற்கும் நிலையான வருமானம் பிணையங்கள்

மற்றும் திறைசேரி உண்டியல்களில் ரூ.212.5 பில்லியனால் அதிகரிப்பிற்கும் இது வழிவகுத்தது. எப்படியிருப்பினும் சிறப்பு எடுப்பனவு உரிமைக்கெதிராக இலங்கை ரூபா உயர்வடைந்தமையானது (2022 இறுதியில் ரூ.483.3276 இலிருந்து 2023 இறுதியில் ரூ.437.9894 ஆக) ரூபா நியதிகளில் ரூ.16.1 பில்லியனால் பன்னாட்டு நாணய நிதியம் (பா.நா.நி) தொடர்புடைய சொத்துக்களின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது.

**மொத்தச் சொத்துக்களின் உள்ளமைப்பு (ரூ.பில்)**




## பொறுப்புக்களின் உள்ளமைப்பு

இலங்கை மத்திய வங்கியின் மொத்தப் பொறுப்புக்கள், 2022இல் ரூ.4,428.1 பில்லியனிலிருந்து 2023இல் ரூ.4,194.2 பில்லியனாக ரூ.233.9 பில்லியனால் சுருக்கமடைந்து, 5.3 சதவீதம் கொண்ட வீழ்ச்சியை எடுத்துக்காட்டுகின்றது. இவ்வீழ்ச்சிக்கு உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களில் குறைவடைதல் முதன்மைக் காரணமாக அமைந்திருந்தது. 2023 ஓகத்தில இருந்து நியதி ஒதுக்கு விகிதத்தை 4 சதவீதத்திலிருந்து 2 சதவீதத்திற்குக் குறைத்தமை மற்றும் துணைநில் வைப்பு வசதி மீதிகளை ரூ.103.6 பில்லியனால் குறைத்தல் என்பவற்றின் விளைவாக வர்த்தக வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்கள் இலங்கை மத்திய வங்கியில் வைத்துள்ள மீதிகள் ரூ.180.7 பில்லியனால் குறைப்பின் காரணமாக உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் ரூ.161.2 பில்லியனால் குறைவடைந்தன. துணைநில் வைப்பு வசதி நிலுவைகளில் வீழ்ச்சிக்கு வங்கிகளுக்கிடையேயான திரவத்தன்மை பகிர்வு மாற்றங்கள் காரணமாக அமைந்தன. ரூ.159.9 பில்லியன் தொகையுடைய சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தில் அதிகரிப்பின் மூலம் இக்குறைதல்கள் பொறுப்புக்களில் பகுதியளவில் எதிரீடு செய்யப்பட்டன.

ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்திற்குச் செலுத்தத்தக்க நிலுவை ரூ.736.2 பில்லியனால் குறைவடைந்தமை மற்றும் பன்னாட்டு நாணய நிதியப் பொறுப்புக்களில் ரூ.160.6 பில்லியனால் வீழ்ச்சி என்பனவற்றின் பிரதான காரணமாக வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் ரூ.97.1 பில்லியனால் வீழ்ச்சியடைந்தன. ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்திற்குச் செலுத்தத்தக்க நிலுவை ஏனைய நிதியியல் பொறுப்புக்களில் கீழ் பதிவாகிய இந்திய றிசேர்வ் வங்கிக்கு ஏற்கனவே செலுத்தத்தக்கவையுடன் ஒன்றிணைத்து இந்திய றிசேர்வ் வங்கியுடனான புதிய பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்த வசதியாக மாற்றம்செய்யப்பட்டது. பன்னாட்டு நாணயப் பொறுப்புக்களில் வீழ்ச்சிக்கு முன்னைய பன்னாட்டு நாணய விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் ஆண்டுகாலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கடன் மீள்கொடுப்பனவு மற்றும் சிறப்பு எடுப்பனவு உரிமைக்கெதிராக 10.8 சதவீதத்தினால் இலங்கை ரூபாயின் உயர்வடைதல் காரணமாக அமைந்தன.

வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்களின் வீழ்ச்சியானது ஏனைய வகையின் கீழ் பதிவாகிய வெளிநாட்டுப் பொறுப்புக்களில் ரூ.914.8 பில்லியன் அதிகரிப்பினால் பகுதியளவில் எதிரீடு செய்யப்பட்டது. இவ்வதிகரிப்பிற்கு இந்திய றிசேர்வ் வங்கியுடனான புதிய பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்த உடன்படிக்கையில் ரூ.800.5 பில்லியன் அதிகரிப்பு மற்றும் பன்னாட்டு நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு போன்றவற்றிடமிருந்து அரசாங்கத்திற்கான நிதிக் கிடைப்பனவினைத் தொடர்ந்து பெடரல் றிசேர்வ் வங்கியில் இலங்கை மத்திய வங்கிக் கணக்கில் வைக்கப்பட்ட ரூ.247.7 பில்லியன் மூலம் பிரதிச் செயலாளர்- திறைசேரி கணக்கில் மீதியின் அதிகரிப்பு என்பன பிரதான காரணமாக அமைந்தன.

**மொத்தச் பொறுப்புக்களின் உள்ளமைப்பு (ரூ.பில்)**




## மொத்த உரிமை மூலதனம்

இலங்கை மத்திய வங்கியின் மொத்த உரிமை மூலதனமானது 2022இன் ரூ.82.3 பில்லியனிலிருந்து 2023இல் ரூ.11.2 பில்லியனாகக் குறைவடைந்த மூலதன நிதியங்கள் மற்றும் ஒதுக்குகள் என்பவற்றை உள்ளடக்கியதாகும். இவ்வீழ்ச்சி,

முதன்மையாக இரு காரணிகளால் தூண்டப்பட்டிருந்தன. முதலாவதாக, உள்நாட்டு படுகடன் மேம்படுத்துகையின் விளைவாக 2023 செத்தெம்பரில் ரூ.766.4 பில்லியனுக்கு வகைகூறிய முதல் நாள் இழப்புக் காரணமாக ரூ.114.4 பில்லியன் தொகையுடைய 2023இல் உறப்பட்ட தேறிய இழப்பு. இரண்டாவதாக, கணக்கீட்டு நியமத்திற்கமைவாக பிடித்துவைக்கப்பட்ட உழைப்புகளுக்கெதிராக அறவிடப்பட்ட தொழிலுக்குப் பிந்திய நலத்திட்டங்களிலிருந்து ரூ.24.6 பில்லியன் தொகையுடைய கணிப்பீட்டு இழப்புக்கள். எனினும், ரூ.63.6 பில்லியன் கொண்ட ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமான சாதனங்களூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் சந்தை விலை குறிக்கப்பட்ட இலாபங்களில் அதிகரிப்பு மற்றும் ரூ.4.8 பில்லியன் கொண்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீடு மீதான இலாபங்கள் என்பன மூலம் இவ்விழப்புகள் பகுதியளவில் எதிரீடு செய்யப்பட்டன.

இலங்கை மத்திய வங்கியின் சொத்துக்களின் பெறுமதி அதன் நாணயப் பொறுப்புக்களினதும் அதன் செலுத்தப்பட்ட மூலதனத்தினதும் மொத்தத்திற்குக் கீழ் வருகின்றதை அதன் கணக்காய்வுசெய்யப்பட்ட ஆண்டு நிதியியல் கூற்றுக்கள் பிரதிபலிக்குமாயின், மூலதன மீளமைத்தல் தேவைப்பாடொன்று தூண்டப்படலாம் என்பதனை இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 97ஆம் பிரிவு எடுத்துரைக்கின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயம், இலங்கை மத்திய வங்கியில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளாலும் அரசாங்க முகவராண்மைகளாலும் வைத்திருக்கப்படுகின்ற வைப்புக்கள் ஆகியவற்றை நாணயப் பொறுப்புக்கள் உள்ளடக்குகின்றன. அதற்கமைய, 2023 திசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டிற்காக இலங்கை மத்திய வங்கியின் சொத்துக்கள் ரூ.2,837.1 பில்லியன் கொண்ட ஆரோக்கியமான எல்லையொன்றினால் அதன் நாணயப் பொறுப்புக்களையும் செலுத்தப்பட்ட மூலதனத்தையும் விஞ்சியிருந்தன.

உரிமை மூலதனத்தின் உள்ளமைப்பு (ரூ.பில்.)




## வருமானக் கூற்று

### வருமானம், செலவுகள் மற்றும் தேறிய இலாபம்/(நட்டம்)

இலங்கை மத்திய வங்கியானது பிரதானமாக 2022இன் ரூ.610.1 பில்லியன் கொண்ட செலாவணி மீள்மதிப்பீட்டு இழப்பிற்கெதிராக 2023இல் ரூ.140.1 பில்லியன் கொண்ட செலாவணி மீள்விலைமதிப்பீட்டு இலாபத்தின் காரணத்தினால் 2022இன் ரூ.374.3 பில்லியன் தேறிய நட்டத்துடன் ஒப்பிடுகையில் 2023இல் ரூ.114.4 பில்லியன் தேறிய நட்டத்தினைப் பதிவுசெய்தது. அதிகரித்த வெளிநாட்டு ஒதுக்கு மட்டங்கள், அதிகரித்த வர்த்தகப்படுத்தல் இலாபங்கள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி அத்துடன் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பரபரிமாற்றல் ஒப்பந்தங்கள் என்பவற்றிலிருந்து உயர்வான தேறாத சந்தை விலைகுறிக்கப்பட்ட இலாபங்கள் என்பன காரணமாக ஈட்டிய உயர்வான வட்டி வருமானம் தேறிய தொழிற்பாட்டு வருமானத்தின் அதிகரிப்பிற்கு வழிவகுத்தது.

மேலும், அரசாங்க பிணையங்களின் சராசரி நாளாந்த கையிருப்பு உயர்வாக பேணியமை மற்றும் சந்தையில் நிலவிய உயர்வான வட்டி வீதங்கள் என்பவற்றின் விளைவாக இலங்கை மத்திய வங்கி 2023 காலப்பகுதியில் அரசாங்க பிணையங்களிலிருந்து உயர்வான வட்டி வருமானத்தை ஈட்டியது.

பிரதானமாக ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பொறுப்புக்கள் (ரூ.66.2 பில்லியன்) மற்றும் இந்திய றிசேர்வ் வங்கி பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தம் (ரூ.26.1 பில்லியன்) ஆகியவற்றின் மீதான அதிகரித்த வட்டிச் செலவுகளின் காரணமாக வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவுகள் 2023இல் ரூ.110.2 பில்லியனால் அதிகரித்தன. துணைநில் வைப்பு வசதி மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளின் காரணமாக குறைவான கொடுக்கல்வாங்கல் அளவுகளின் காரணத்தினால் துணைநில் வைப்பு வசதியின் வட்டிச் செலவுகளில் குறைவின் விளைவாக ரூ.15.8 பில்லியனால் உள்நாட்டு வட்டிச் செலவுகளில் குறைவின் மூலம் இது பகுதியளவில் எதிரீடு செய்யப்பட்டுள்ளது. 2023இல் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டு மதிப்பீட்டின் அடிப்படையில் தொழிலுக்குப்பிந்திய பங்களிப்புத் திட்டங்களுக்கான ஏற்பாட்டுத் திரும்பல் காரணமாக ஆளணிச் செலவுகளின் குறைவிலிருந்து தொழிற்பாட்டுச் செலவுகளும் ரூ.15.5 பில்லியன் கொண்ட குறைவினைப் பதிவுசெய்தன.

எவ்வாறாயினும், ரூ.766.4 பில்லியன் கொண்ட உள்நாட்டு படுகடன் மேம்படுத்துகையின் முதல் நாள் இழப்பு ரூ.114.4 பில்லியன் கொண்ட தேறிய இழப்பை விளைவித்தது. வேறுவிதமாகவிருந்திருப்பின் 2023ஆம் ஆண்டிற்காக தேறிய இலாபமொன்றை இது ஏற்படுத்தியிருக்கக்கூடும்.

வரிக்குப் பின்னர் தேறிய இலாபம்/(நட்டம்) (ரூ.பில்.)



தேறிய வெளிநாட்டுச் செலாவணி இலாபம்/ (நட்டம்) (ரூபில்)




## பகிர்ந்தளிக்கக் கூடிய இலாபங்கள்

2023இல் வங்கி வரிக்குப் பின்னர் தேறிய நட்டத்தை ஈட்டியிருந்தது. மீள்மதிப்பீடுகள் மற்றும் வரிக்குப் பின்னர் தேறிய இலாபத்திலிருந்தான தேறாத செலாவணி இலாபங்கள் மற்றும் நட்டங்கள் மீதான தேறாத நட்டங்களை தவிர்ப்பதற்கு இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 95ஆம் பிரிவு தேவைப்படுத்துகின்றது. இதன்விளைவாக, இலங்கை மத்திய வங்கியின் இலாபங்களைப் பகிர்ந்தளித்தலானது ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியின் பின்னரும் 60 நாட்கள் முடிவடைவதற்கு முன்னர் இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 96ஆம் பிரிவிற்கமைவாகக் கணிக்கப்படுகின்றது. அதற்கமைய, ஆளுகைச் சபை பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறு விசேட ஒதுக்குகளைத் தாபிப்பதற்காக பகிரத்தக்க வருமானத்தில் முதலில் ஒதுக்கீடுசெய்யப்படுகின்றன. இரண்டாவதாக, விசேட ஒதுக்குகளுக்கான ஒதுக்கீட்டின் பின்னர் எஞ்சியிருக்கின்ற பகிரத்தக்க வருமானத்தின் நூறு சதவீதத்திற்குச் சமமான தொகை, செலுத்தப்பட்ட மூலதனத்தின் மொத்தத் தொகை வரையும் பொது ஒதுக்குக் கணக்கிற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் பொது ஒதுக்கானது மத்திய வங்கியின் மொத்த நாணயப் பொறுப்புக்களின் குறைந்தது 6 சதவீதமாகக் காணப்படுகின்றது. மூன்றாவதாக, ஏதேனும் எஞ்சியிருக்கின்ற பகிரத்தக்க வருமானங்கள் அமைச்சருடனான ஆலோசனையுடன் ஆளுகைச் சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு ஒன்றில் ஏதேனும் மத்திய வங்கிக்குச் செலுத்தவேண்டிய அரசாங்க நிலுவைகளைத் தீர்ப்பதற்கு பிரயோகிக்கப்படுதல் வேண்டும் அல்லது திரட்டு நிதியத்திற்குச் செலுத்துவதற்காக வரவு வைக்கப்படுதல் வேண்டும். இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 96(1)(ஆ) பிரிவின் பிரகாரம் செலுத்தப்பட்ட மூலதனத்தின் தொகையின் விகிதம் மற்றும் மொத்த நாணயப் பொறுப்புக்களுக்கான பொது ஒதுக்கு என்பன 2023 திசெம்பர் 31 அன்று 6.15 சதவீதமாகக் காணப்பட்டன. இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 96ஆம் பிரிவிற்கமைவாக, 2023இல் பகிர்ந்தளிப்பதற்கு இலாபம் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

நிதியியல் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயமும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களும் இதனைத் தொடர்ந்து சமர்ப்பிக்கப்படுகின்றது.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | பீஏஎன்/ஜீ/சீபிஎஸ்எல்/1/23/1 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 2024 ஏப்பிறல் 10 |

கௌரவ நிதி அமைச்சர்

**இலங்கை மத்திய வங்கியின் 2023 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை**

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

## 1. நிதியியல் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை மத்திய வங்கியின் ('வங்கி') 2023 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிதியியல் நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று, ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய நிதியியல் கூற்றுக்களிற்கான குறிப்புக்களின் கணக்காய்வு 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம், 1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் 13(1)ஆம் பிரிவு மற்றும் 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 101(4) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. அரசியலமைப்பின் 154(6)ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும். இக்கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவகமொன்று எனக்கு உதவியது.

எனது அபிப்பிராயத்தின்படி வங்கியின் 2023 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிதியியல் நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதியியல் செயலாற்றம் மற்றும் காசுப்பாய்ச்சல் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களிற்கு (ப.நி.அ.நி) இணங்க அனைத்துப் பொருண்மையான விடயங்களையும் நியாயமாகப் பிரதிபலிக்கின்றன.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ஐஎஸ்ஏஎஸ்) இற்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව   இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.   No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34   +94 11 2 88 72 23   ag@auditorgeneral.gov.lk   www.naosl.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

### 1.3 ஆளுகைச் சபையினதும் நிதியியல் கூற்றுக்களின் ஆளுகைக்குப் பொறுப்பான தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதியியல் கூற்றுக்களை ப.நி.அ.நி இற்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதியியல் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென ஆளுகைச் சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கடப்பாடுகள் என்பவற்றிற்கு வங்கியின் ஆளுகைச் சபை பொறுப்பாகவுள்ளது.

நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கையில், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் அடிப்படையில் தொடர்வதற்கான வங்கியின் இயலுமையை மதிப்பிடுதல், பொருத்தமானவிடத்து தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்பான விடயங்களை வெளிப்படுத்துதல் மற்றும் கணக்கீட்டுக்காகத் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவைப் பயன்படுத்துதல் என்பவற்றுக்கு ஆளுகைச் சபை பொறுப்பாகவுள்ளது.

ஆளுகைக்குப் பொறுப்பானவர்கள் வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்வதற்குப் பொறுப்பாக இருப்பார்கள்.

2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1)ஆம் பிரிவின் பிரகாரம் வங்கி வருடாந்த மற்றும் காலாந்தரமான நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கப்பட வேண்டியவாறு வங்கி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாகப் பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து ஒட்டுமொத்தமாக நிதியியல் கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாகக் காணப்படுகின்ற போதிலும் ஐஎஸ்ஏஎஸ் இற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதியியல் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாகக் கருத்திலெடுக்கப்படும்.

ஐஎஸ்எஸ் இற்கு இணங்க கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வு முழுவதன் போதும் நான் தொழில்சார் நிபுணத்துவ கருதுகோள்களையும் தொழில்சார் நிபுணத்துவ ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதியியல் கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான இடர்நேர்வுகளை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்நேர்வுகளை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக்கொள்வது சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காகவேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் ஆளுகைச் சபையால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு ஆளுகைச் சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு வங்கியிடமுள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாகக் காணப்படாதிருக்கையில், நிதியியல் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் வங்கியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்குக் காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதியியல் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதியியல் கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

ஏனைய விடயங்களிடையே, என்னுடைய கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏதாவது முக்கிய குறைபாடுகள் உள்ளடங்கலாக முக்கியமான கணக்காய்வு காண்புகள் தொடர்பாக ஆளுகைக்குப் பொறுப்பானவர்களுக்கு நான் தெரிவிக்கின்றேன்.

**2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2.1 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம், பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன:

2.1.1 கணக்காய்விற்கு அவசிமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவு என்பவற்றின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வங்கியினால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் வைத்திருக்கப்படுகின்றன.

2.1.2 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii)ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv)ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பொருண்மையான பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

2.2 மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை:

2.2.1 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வியாபாரச் செயற்பாடுகளிற்கு வெளியே வங்கி செய்துகொண்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் வங்கியின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதை குறிப்பிடுதல்.

2.2.2 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வங்கி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் வங்கி இணங்கியொழுகாதுள்ளமையைக் குறிப்பிடுதல்.

2.2.3 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வங்கி அதன் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளுக்கிணங்க செயலாற்றியிருக்காதமையைக் குறிப்பிடுதல்.

2.2.4 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வங்கியின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காதமையைக் குறிப்பிடுதல்.

**ஒப்பம் : டபிள்யூ. பி. சி. விக்ரமரத்ன**

கணக்காய்வாளர் நாயகம்

# நிதியியல் நிலைமைக் கூற்று

| 2023 திசெம்பர் 31இல் உள்ளவாறானது | குறிப்பு | 2023 ரூ.000 | 2022 ரூ.000 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 8 | **1,198,979,570** | 651,687,864 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | 9 | **223,406,791** | 10,867,425 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 10 | **5,775,226** | 401,580 |
| பன்னாட்டு நாணய நிதியத்துடன் (ப.நா.நி) தொடர்பான சொத்துக்கள் | 11 | **265,339,197** | 281,421,074 |
| ஏனைய பெறத்தக்கவைகள் | | **-** | 37,022,631 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **1,693,500,784** | 981,400,574 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 12 | **2,044,347,592** | 2,498,995,015 |
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | 13 | **333,951,940** | 698,069,219 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | 14 | **-** | 235,638,700 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களில் செய்யப்பட்ட பங்குரிமை முதலீடுகள் | 15 | **2,169,541** | 1,817,132 |
| வங்கிகளுக்கான கடன்கள் | 16 | **47,795,687** | 28,257,902 |
| ஏனைய சொத்துக்கள் | 17 | **42,184,721** | 30,182,560 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **2,470,449,481** | 3,492,960,528 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | | **4,163,950,265** | 4,474,361,102 |
| **வெளிநாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | |
| தங்கம் | 18 | **10,120,756** | 10,031,610 |
| **நிதியல்லாச் சொத்துக்கள்** | | | |
| இருப்புக்கள் | 19 | **5,433,838** | 4,788,407 |
| ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் முற்பணங்கள் | | **1,526,263** | 1,222,568 |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 20 | **23,723,256** | 19,035,278 |
| அருவச் சொத்துக்கள் | 21 | **689,883** | 908,137 |
| **மொத்த நிதியல்லாச் சொத்துக்கள்** | | **41,493,996** | 35,986,000 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **4,205,444,261** | 4,510,347,102 |
| **பொறுப்புக்களும் பங்குரிமை மூலதனமும்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 22 | **54,113,792** | 146,408,028 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 10 | **48,947,900** | 71,697,994 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 23 | **-** | 736,258,129 |
| பன்னாட்டு நாணய நிதியம் | 24 | **967,325,212** | 1,127,925,092 |
| ஏனையவை | 25 | **1,509,255,772** | 594,383,451 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | **2,579,642,676** | 2,676,672,694 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 26 | **142,472,582** | 323,046,181 |
| அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | 27 | **2,073,290** | 221,411 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் மற்றும் துணைநில் வைப்பு வசதிகள் | 28 | **227,035,873** | 330,637,059 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 29 | **1,186,503,181** | 1,026,567,252 |
| ஏனைய செலுத்தத்தக்கவைகள் | 30 | **29,507,806** | 68,320,347 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | **1,587,592,732** | 1,748,792,250 |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | | **4,167,235,408** | 4,425,464,944 |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | |
| பிற்போடப்பட்ட கொடைகள் | 31 | **2,475** | 1,834 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்கள் | 32 | **26,395,012** | 1,772,429 |
| நானாவிதப் பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | 33 | **626,310** | 855,043 |
| **மொத்த ஏனைய பொறுப்புக்கள்** | | **27,023,797** | 2,629,306 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **4,194,259,205** | 4,428,094,250 |
| **பங்குரிமை மூலதனம்** | | | |
| மூலதன நிதியம் | | **50,000,000** | 50,000,000 |
| ஏனைய ஒதுக்குகள் | 34 | **252,773,117** | (191,184,970) |
| பிடித்துவைக்கப்பட்ட வருவாய்கள் | | **(291,588,061)** | 223,437,822 |
| **மொத்தப் பங்குரிமை மூலதனம்** | | **11,185,056** | 82,252,852 |
| **மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் பங்குரிமை மூலதனம்** | | **4,205,444,261** | 4,510,347,102 |

ஆளுகைச் சபையின் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும் முதன்மைக் கணக்காளரும் 2024 ஏப்பிறல் 5 ஆம் திகதியில் வெளியிடுவதற்காக இந்நிதியியல் கூற்றுக்களை அங்கீகரித்துள்ளனர்.

..........................................................
முனைவர் பீ நந்தலால் வீரசிங்க - ஆளுநர்

..........................................................
டி.எஸ்.எல் சிறிமான்ன - முதன்மைக் கணக்காளர்

14ஆம் பக்கம் தொடக்கம் 90ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

# வருமானக் கூற்று

| 2023 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | குறிப்பு | 2023<br>ரூபா 000 | 2022<br>ரூபா 000 |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு வருமானம்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 36 | **18,031,111** | 1,579,295 |
| தேறல் செய்யப்படாத விலை மீள் மதிப்பீடுகளிலிருந்தான இலாபம்/(நட்டம்) | 37 | **29,165,459** | (127,286,104) |
| தேறல் செய்யப்பட்ட விலை மாற்றங்களிலிருந்தான இலாபம்/(நட்டம்) | | **39,013,468** | (9,968,941) |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வருமானம்** | | **86,210,038** | (135,675,750) |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான செலவினம்** | | | |
| வட்டிச் செலவினம் | 38 | **(142,515,856)** | (32,293,277) |
| வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களின் திருப்புதல்/ (கட்டணம்) | 39 | **(86,696)** | (763,218) |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்தச் செலவினம்** | | **(142,602,552)** | (33,056,495) |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள் மதிப்பீட்டு இலாபம்/(நட்டம்) | | **140,077,201** | (610,149,293) |
| **வெளிநாட்டு நாணய முதலீட்டு வருமானம்** | | **83,684,687** | (778,881,538) |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான தேறிய வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 36 | **595,962,421** | 482,676,527 |
| தேறல்செய்யப்பட்ட விலை மாற்றங்களிலிருந்தான இலாபம்/ (நட்டம்) | | **(1,293,472)** | (7,866,974) |
| வட்டிச் செலவினம் | 38 | **(21,810,330)** | (37,619,594) |
| உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகையின் அகற்றல் இலாபம்/ (நட்டம்) | | **6,775,702** | - |
| உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகையின் முதலாவது நாளின் இலாபம்/ (நட்டம்) | | **(766,413,281)** | - |
| உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களின் திருப்புதல்/ (கட்டணம்) | 39 | **396,659** | 497,432 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான தேறிய வருமானம்** | | **(186,382,301)** | 437,687,391 |
| ஏனைய வருமானம் | 40 | **1,585,485** | 2,454,218 |
| ஏனைய செலவினம் | 40.1 | **(3,536,359)** | (10,260,110) |
| **மொத்த தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | | **(104,648,488)** | (349,000,039) |
| **தொழிற்பாட்டுச் செலவினங்கள்** | | | |
| ஆளணிச் செலவினங்கள்: | 41 | | |
| - சம்பளங்களும் கூலிகளும் | | **(7,253,093)** | (6,691,770) |
| - நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டச் செலவினம் | | **3,949,834** | (11,550,422) |
| - தொழிலுக்குப் பின்னரான நன்மை திட்டச் செலவினம் | | **(891,177)** | (2,091,404) |
| | | **(4,194,436)** | (20,333,596) |
| பெறுமானத் தேய்வும் பதிவழிப்பும் | | **(715,321)** | (737,304) |
| இருப்புச் செலவினம் (புதிய நாணயங்களை வெளியிடுவதற்கான செலவினம்) | | **(2,108,575)** | (2,339,653) |
| நிர்வாகம் மற்றும் ஏனைய செலவினங்கள் | 42 | **(2,763,994)** | (1,910,381) |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் மீள்பெறுமதியிடல் தொடர்பான தேறிய நட்டம் | | | |
| சொத்துக்கள் மீதான பெறுமதியிழப்புக் கட்டணங்கள் | | | |
| **மொத்தத் தொழிற்பாட்டுச் செலவினங்கள்** | | **(9,782,326)** | (25,320,934) |
| **வரிக்கு முந்திய இலாபம்/ (நட்டம்)** | | **(114,430,814)** | (374,320,973) |
| **வரி** | 43 | - | - |
| **ஆண்டிற்கான நட்டம்** | | **(114,430,814)** | (374,320,973) |

அடைப்புக்குறியினுள் காட்டப்படும் எண்தொகைகள் கழித்தலைக் குறிக்கும்.

14ஆம் பக்கம் தொடக்கம் 90ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

# ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று

| 2023 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | | 2023 ரூபா 000 | 2022 ரூபா 000 |
|---|---|---|---|
| **ஆண்டுக்கான நட்டம்** | | **(114,430,814)** | (374,320,973) |
| **ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | | |
| **இலாபம்/ (நட்டம்) இற்குப் பின்னர் மீள்வகைப்படுத்தப்பட்ட அல்லது மீள்வகைப்படுத்தக்கூடிய விடயங்கள்** | | | |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் மீதான தேறிய சீர்மதிப்புப் பெறுமதி இலாபம்/ (நட்டம்) | 34 | **1,266,198** | (1,189,382) |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான அரச பிணையங்கள் மீதான தேறிய சீர்மதிப்புப் பெறுமதி இலாபம் | 34 | **61,897,210** | 11,225,713 |
| | | **63,163,408** | 10,036,331 |
| **இலாபம்/ (நட்டம்) இற்குப் பின்னர் மீள்வகைப்படுத்தப்படாத விடயங்கள்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் மீள்பெறுமதியிடல் தொடர்பான நன்மைகள் | | **4,752,685** | - |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களின் செலவு | 32 | **(24,625,742)** | 14,163,877 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பங்குரிமை முதலீடுகள் மீதான தேறிய சீர்மதிப்புப் பெறுமதி இலாபம் | 34 | **352,408** | 145,915 |
| | | **(19,520,649)** | 14,309,792 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்/ (செலவினம்) | | **43,642,759** | 24,346,123 |
| **மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்/ (செலவினம்)** | | **(70,788,055)** | (349,974,850) |

அடைப்புக்குறியினுள் காட்டப்படும் இலக்கங்கள் கழித்தலைக் குறிக்கும்

14ஆம் பக்கம் தொடக்கம் 90ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

# உரிமை மூலதன மாற்றல் கூற்று

**2023 திசெம்பர் 31இல் உள்ளவாறானது**

| | பங்களிக் கப்பட்ட மூலதனம் ரூபா 000 | ஏனைய ஒதுக்கங்கள் ரூபா 000 | பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் ரூபா 000 | மொத்தம் ரூபா 000 |
|---|---|---|---|---|
| 2022 சனவரி 01இல் உள்ளவாறு | 50,000,000 | 315,128,226 | 98,490,818 | 463,619,044 |
| ஆண்டிற்கான தேறிய இலாபம் | - | - | (374,320,973) | (374,320,973) |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவின் கடன் கரைப்பு நிதியத்திற்கான மாற்றல் | - | 438,146 | (438,146) | - |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களின் செலவு | - | - | 14,163,877 | 14,163,877 |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள்மதிப்பீட்டு இலாபத்தின் மாற்றல் | - | (610,149,293) | 610,149,293 | - |
| இலங்கை மத்திய வங்கியின் உள்ளக நிதியங்களுக்கான மாற்றல் | - | - | (355,494) | (355,494) |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் மீதான தேறிய சந்தைப் பெறுமதி இலாபம் | - | (1,189,382) | - | (1,189,382) |
| பிடித்துவைத்திருக்கப்பட்ட வருவாய்களிலிருந்து சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கான நிதியங்களின் மாற்றல் | - | 49,638,590 | (49,638,590) | - |
| பொது ஒதுக்கத்திற்கான நிதியங்களின் மாற்றல் | - | 27,526,076 | (27,526,076) | - |
| 2021ஆம் ஆண்டுக்கான இலாப ஒதுக்கு சபை பத்திரத்தின் படி ஆர்.டீ.டீ செயற்பாடுகளுக்கான எம்.எல்.ரீ.சி.எப். இற்கான நிதியங்களின் மாற்றல் | | 15,000,000 | (15,000,000) | |
| 2021ஆம் ஆண்டிற்கான இலாப ஒதுக்கு - வெளிநின்ற இலங்கை அரச கடப்பாடுகளை 2020ஆம் ஆண்டிலிருந்து அறவிடுதல் | - | - | (31,035,788) | (31,035,788) |
| இலங்கை மத்திய வங்கி ஊழியர் மற்றும் ஓய்வூதியக்காரர் அனர்த்த நிவாரண நிதியத்திற்கான நிதியங்களின் மாற்றல் | - | - | (60) | (60) |
| தொழிலுக்குப் பின்னரான நன்மைகளின் நிதியிடல் தேவைகளுக்கான ஒதுக்கத்திற்கான மாற்றல் | - | 1,051,039 | (1,051,039) | - |
| ஏனைய அனைத்தையுமுள்ளடககிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட பங்குரிமை மூலதன முதலீடுகளின் சந்தை மீள்மதிப்பீடு மீதான இலாபம் | - | 11,225,713 | - | 11,225,713 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட அரச பிணையங்களின் சந்தை மதிப்பீடு மீதான இலாபம் | - | 145,915 | - | 145,915 |
| **2022 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை** | **50,000,000** | **(191,184,970)** | **223,437,822** | **82,252,852** |
| **2023 சனவரி 01இல் உள்ளவாறான நிலுவை** | **50,000,000** | **(191,184,970)** | **223,437,822** | **82,252,852** |
| 2022ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் பகிர்ந்தளிக்கத்தக்க இலாபத்தை மிகைக்கு மாற்றல் | - | 235,034,628 | (235,034,628) | - |
| ஆண்டிற்கான தேறிய இலாபம் | - | - | (114,430,814) | (114,430,814) |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவின் கடன் கரைப்பு நிதியத்திற்கான மாற்றல் | - | 512,228 | (512,228) | - |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களின் செலவு | - | - | (24,625,742) | (24,625,742) |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள்மதிப்பீட்டு இலாபம்/(நட்டம்) (உள்ளக வருவாய் வீதம்) | - | 140,077,201 | (140,077,201) | - |
| இலங்கை மத்திய வங்கியின் உள்ளக நிதியங்களுக்கான மாற்றல் | - | - | (345,219) | (345,219) |
| நிலையான சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கிற்கு மாற்றல் | - | 4,752,685 | - | 4,752,685 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் மீதான தேறிய சந்தைப் பெறுமதி நட்டம் | - | 1,266,198 | - | 1,266,198 |
| இலங்கை மத்திய வங்கி ஊழியர் மற்றும் ஓய்வூதியக்காரர் அனர்த்த நிவாரண நிதியத்திற்கான நிதியங்களின் மாற்றல் | - | - | (51) | (51) |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட அரச பிணையங்களின் சந்தை மதிப்பீடு மீதான நட்டம் | - | 61,897,210 | - | 61,897,210 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட உரிமை மூலதன முதலீடுகளின் சந்தை மீள்மதிப்பீடு மீதான இலாபம் | - | 352,408 | - | 352,408 |
| அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதி முதலீடுகள் மீது எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்கள் | | 65,529 | | 65,529 |
| **2023 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை** | **50,000,000** | **252,773,117** | **(291,588,061)** | **11,185,056** |

அடைப்புக்குறியினுள் காட்டப்படும் எண்தொகைகள் கழித்தலைக் குறிக்கும்.

14ஆம் பக்கம் தொடக்கம் 90ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

# காசுப்பாய்ச்சல் கூற்று

| 2023 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | குறிப்பு | 2023<br>ரூபா 000 | 2022<br>ரூபா 000 |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | |
| **பெறுகைகள்:** | | | |
| பெறப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | **15,104,897** | 1,550,703 |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - மற்றையவை | | **19,813,449** | 3,498,481 |
| திரவ முகாமைத்துவமும் வர்த்தக வருமானமும் | | **37,719,996** | (17,835,915) |
| தேறல் செய்யப்பட்ட செலாவணி நட்டம் | | **60,713,515** | (179,967,468) |
| பெறப்பட்ட ஏனைய வருமானம் | | **1,571,269** | 8,020,273 |
| | | **134,923,125** | (184,733,926) |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| செலுத்தப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | **146,093,995** | 23,170,613 |
| செலுத்தப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் | | **19,520,364** | 40,437,692 |
| ஊழியர்களுக்கான கொடுப்பனவு | | **11,295,646** | 12,435,846 |
| வழங்குநர்களுக்கான கொடுப்பனவு | | **50,131,974** | (31,924,158) |
| | | **227,041,978** | 44,119,993 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல்** | 44 | **(92,118,853)** | **(228,853,919)** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | |
| **பெறுகைகள்:** | | | |
| ஏனைய உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய அதிகரிப்பு | | **(3,508,310)** | (2,431,705) |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களிலிருந்தான முதல் தொகை அறவீடுகள் | | **2,134** | 49,642 |
| செலவிடல்/தொகுதிக் கடன்களிலுள்ள முதலீடுகளை மீட்டுக்கொள்ளுதல் | | **-** | - |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனை மீதான பெறுகைகள் | | **1,923** | (234) |
| மீள்விற்பனை உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் தேறிய அதிகரிப்பு/ (குறைவு) | | **(103,511,000)** | 229,574,179 |
| | | **(107,015,255)** | 227,191,882 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| வெளிநாட்டு நாணயப் பிணையங்களிலான தேறிய குறைவு | | **173,612,101** | 31,403,136 |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய அதிகரிப்பு/ (குறைவு) | | **10,037,550** | (42,189,977) |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களிலான தேறிய அதிகரிப்பு/ (குறைவு) | | **(182,850,778)** | (704,622,720) |
| ஏனைய உள்நாட்டு வைப்புக்கள் மற்றும் செலுத்தத்தக்கவையிலான அதிகரிப்பு/ (குறைவு) | | **(17,173)** | (3,660) |
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவுகள், தேறிய கொடைகள் | | **430,029** | 3,773 |
| அருவச் சொத்துக்களின் கொள்வனவு | | **6,557** | 879,377 |
| குத்தகை ஆதனங்களின் கொள்வனவு | | **-** | - |
| தங்க இருப்புக்களிலான தேறிய குறைவு | | **-** | (26,108,952) |
| ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட (அவற்றிலிருந்து அறவிடப்பட்ட) கடன்களும் முற்பணங்களும் | | **19,370,476** | (61,796,952) |
| | | **20,588,761** | (802,435,975) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல்** | | **(127,604,016)** | 1,029,627,857 |
| **நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| **பெறுகைகள் :** | | | |
| சுற்றோட்ட நாணயத்தின் வழங்கல் | | **469,219,521** | 347,595,479 |
| சுற்றோட்ட நாணயத்தினை எடுப்பனவு செய்தல் | | **(309,283,592)** | (326,127,293) |
| சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வழங்கல் | | **159,935,930** | 21,468,186 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| அரச கொடுக்கல்வாங்கல் தொடர்பில் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் தேறிய வழங்கல்கள் | 45 | **(932,498,697)** | 851,954,489 |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல் தொடர்பில் சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வழங்கல்கள்/ (எடுப்பனவுகள்) | 46 | **180,573,600** | (22,342,019) |
| சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வழங்கல்கள் | | **(751,925,097)** | 829,612,470 |
| **சுற்றோட்ட நாணயத்தின் தேறிய குறைவு** | | **911,861,027** | (808,144,284) |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| வெளிநாட்டு நாணய தவணைப் பொறுப்புக்களின் கொடை/ (மீள்கொடுப்பனவு) | | **54,502,758** | 27,384,295 |
| ஏனைய நிதியங்களுக்கான கொடுப்பனவுகள் | | **51** | 60 |
| ஓய்வூதிய நிதியத்திற்கான கொடுப்பனவுகள் | | **-** | 3,363,735 |
| திரட்டிய நிதியத்திற்கு இலாபங்களை மாற்றல் | | **-** | 30,000,000 |
| | | **54,502,809** | 60,748,090 |
| **நிதியிடல் நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல்** | | **857,358,218** | (868,892,374) |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு/ (குறைவு)** | | **637,635,350** | (68,118,436) |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் மீதான செலாவணி வீதத் தாக்கம் | | **(20,232,669)** | (3,321,000) |
| ஆண்டின் தொடக்கத்தில் உள்ளவாறு காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | | **126,065,050** | 197,504,486 |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்** | 8 | **743,467,730** | 126,065,050 |

அடைப்புக்குறியினுள் காட்டப்படும் இலக்கங்கள் கழித்தலைக் குறிக்கும்

14ஆம் பக்கம் தொடக்கம் 90ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

2023 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

## 1. அறிக்கையிடும் நிறுவனம் மற்றும் நியதிச் சட்டத் தளம்

திருத்தப்பட்டவாறான இலங்கையின் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தினால் நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கி ("வங்கி" அல்லது "இ.ம.வங்கி") நிர்வாகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் மற்றும் ஏனைய தொடர்புடைய விடயங்களுக்குத் தேவையான தத்துவங்கள், தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கு வழங்குதல் மற்றும் சுமத்துதல். எனினும், உலகளாவிய சிறந்த நடைமுறைகளுக்கேற்ப நாணய விதிச் சட்டத்திலுள்ள பல ஏற்பாடுகளை மீளாய்வு செய்யும் நோக்கத்துடன், பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் மத்திய வங்கியின் ஒட்டுமொத்த பரிணாம வளர்ச்சியின் விளைவாக 2023இல் இலங்கை மத்திய வங்கி சட்டம் (ம.வ.ச.) இயற்றப்பட்டது. அதன்படி, நாணய விதிச் சட்டத்தை நீக்கியதுடன் மத்திய வங்கிச் சட்டம் 2023ஆம் ஆண்டு செத்தெம்பர் 15ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

இலங்கையின் நாணய, நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறைமைகளின் நிர்வாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தலுக்குப் பொறுப்பான ஒரு அதிகாரசபையாக இ.ம.வங்கியை மத்திய வங்கி சட்டம் அடையாளங்கண்டுள்ளது. நாணய விதிச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட மத்திய வங்கியின் நாணயச் சபையை நீக்கி மத்திய வங்கிச் சட்டம் மத்திய வங்கியின் ஆளுகைச் சபையையும் மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபையும் நிறுவியுள்ளது. மத்திய வங்கியின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் என்பனவற்றை மேற்பார்வையிடும் பொறுப்பு ஆளுகைச் சபைக்கு விதிக்கப்பட்டுள்ளதுடன் மத்திய வங்கியின் நாணயக் கொள்கையை உருவாக்குதல் மற்றும் உள்நாட்டு விலை உறுதிப்பாட்டை அடைவதற்கும் பேணுவதற்கும் நெகிழ்வுமிக்க பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பினைத் தொடர்ந்து நெகிழ்வுமிக்க செலாவணி வீதக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்தியதுடன் நாணயக் கொள்கை தவிர்ந்த மத்திய வங்கியின் பொதுக் கொள்கையைத் தீர்மானிப்பதற்கும் மத்திய வங்கியின் நாணயக் கொள்கை சபைக்கு விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிதியியல் கூற்றுக்கள் ஆளுநராலும் முதன்மைக் கணக்காளராலும் மற்றும் (கையொப்பமிடப்பட்ட திகதி) ஆளுகைச் சபையின் சார்பாக வெளியிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்டது.

### 1.1 முதன்மை நடவடிக்கைகள்

மத்திய வங்கிச் சட்டமானது, மத்திய வங்கியின் சுதந்திரத்தை மேம்படுத்துவதற்கும் அதன் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை அதிகரிப்பதற்கும் இலங்கையில் தொடர்ந்து விலை உறுதிப்பாட்டைப் பேணுவதற்ம் நாணயக் கொள்கைக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கும் சிறப்பு ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. இ.ம.வங்கியின் நோக்கங்களும் அதற்கேற்ப மேலும் மாற்றப்பட்டன.

மத்திய வங்கிச் சட்டத்தின்படி, உள்நாட்டு விலை உறுதிப்பாட்டை அடைவதும் பேணுவதும் இ.ம.வங்கியின் முதன்மை நோக்கமாகும்.

மேலும், நிதியியல் முறைமை உறுதிப்பாட்டைப் பாதுகாப்பதும் இ.ம.வங்கியின் ஏனைய நோக்கமாகும். மேற்கூறிய முதன்மை மற்றும் ஏனைய நோக்கங்கள் தவிர, வங்கியானது இலங்கையின் நிர்வாகம், மேற்பார்வை, நாணய, நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறைமைகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் அரசாங்கத்தின் அரசிறை முகவராகச் செயற்படுதல் போன்ற முதன்மையான பொறுப்பையும் கூட கொண்டுள்ளது. அதன்படி, வங்கியின் செயற்பாடுகள் பிரதானமாக நாணய மற்றும் செலாவணி வீதக் கொள்கைகளைத் தீர்மானித்தலும் நடைமுறைப்படுத்தலும் இலங்கையின் நாணயத்தை வெளியிடுதலும் முகாமை செய்தலும் இலங்கையின் அலுவல்சார் பன்னாட்டு ஒதுக்குகளை வைத்திருத்தலும் முன்மதியுடை மற்றும் செயற்றிறன் வாய்ந்த முகாமைத்துவத்தை உறுதிசெய்தலும் கொடுப்பனவு முறைமைகளை நிர்வகித்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அத்துடன் அத்தகைய கொடுப்பனவு முறைமைகளின் பாதுகாப்பு, செயற்றிறன் வாய்ந்த தன்மை மற்றும் வினைத்திறன் என்பவற்றை உறுதிசெய்தல், நிதியியல் நிறுவனங்களைப் பதிவுசெய்தல், உரிமமளித்தல், ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல், இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படும் நிதியியல் நிறுவனங்களைத் தீர்த்தல், இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படும் நிதியியல் நிறுவனங்களைத் தீர்த்தல், இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 7(1)ஆம் பிரிவின் விதித்துரைக்கப்பட்டவாறு வேறு சில தத்துவங்கள், கடமைகள், தொழிற்பாடுகள் என்பனவற்றை உள்ளடக்குகிறது.

இ.ம.வங்கியின் 'முதன்மை நோக்கம்' மற்றும் 'ஏனைய நோக்கம்' என்பனவற்றை அடைவதற்காக மேற்கொள்ளப்படும் மேற்கூறிய செயற்படுகள் வெளிநாட்டு நாணயம் மற்றும் உள்ளூர் நாணய நடவடிக்கைகள் என பரவலாகப் பிரிக்க முடியும். இந்தச் செயற்பாடுகளின் விளைவுகள் இ.ம.வங்கியின் நிதிக் கூற்றுக்களின் கீழ் வழங்கப்படுகின்றன.

## 2. நிதியியல் கூற்றுக்களின் சமர்ப்பித்தலின் அடிப்படை

### 2.1. இணக்கக் கூற்று

2023 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் இந்நிதியியல் கூற்றுக்கள் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களுக்கு (ப.நி.அ.நி) இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.2 தயாரித்துலுக்கான அடிப்படை

கீழ்வருவனவற்றிற்குத் தவிர்ந்து, நிதியியல் கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

- தங்கமானது இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளது.
- பெறுதி நிதியியல் சாதனங்கள் மற்றும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் வைத்திருக்கப்பட்ட மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் வைத்திருக்கப்பட்ட பெறுதியல்லா நிதியியல் சாதனங்கள் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டன.
- காணி மற்றும் கட்டிடங்கள் கொள்வனவு செய்யப்பட்ட நேரத்தில் கிரயத்தில் அளவிடப்படுவதுடன் பின்னர் மீள்மதிப்பிட்ட தொகையிலிருந்து ஒன்றுசேர்ந்த தேய்மானம் மற்றும் பெறுமதியிழப்பு நட்டங்களைக் கழித்த தொகையில் அளவிடப்படுகின்றன.
- நிர்ணயிக்கப்பட்ட நன்மைக் கடப்பாட்டிற்கான பொறுப்பானது நிர்ணயிக்கப்பட்ட நன்மைக் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியிலிருந்து திட்டச் சொத்துக்களின் சீர்மதிப்புப் பெறுமதியைக் கழித்த பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

### 2.3 அறிக்கையிடல் வடிவம்

வங்கியானது நிதியியல் சொத்துக்களையும் நிதியியல் பொறுப்புக்களையும் அவற்றுடன் இணைந்த வருமானத்தையும் செலவினத்தையும் வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளிடையே வேறுபடுத்தி காட்டுகின்றது. நிதியியல் நிலைமைக் கூற்றில் சொத்துக்களும் பொறுப்புக்களும் பரந்தளவில் குறிப்பிட்ட வகைகளின் திரவத்தன்மை ஒழுங்குவரிசையில் சமா்ப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கையிடும் அணுகுமுறையானது குறிப்பு 7இல் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ளவாறு, வங்கியின் நடவடிக்கைகளை பொருத்தமான முறையில் அறிக்கையிடுவதாக வங்கி கருதுகின்றது.

### 2.4 தொழிற்பாட்டு மற்றும் சமா்ப்பித்தல் நாணயம்

இந்நிதியியல் கூற்றுக்கள் வங்கியின் தொழிற்பாட்டு நாணயமான இலங்கை ரூபாவிலேயே சமா்ப்பிக்கப்பட்டுள்ளன. இலங்கை ரூபாவில் சமா்ப்பிக்கப்பட்டுள்ள நிதியியல் தகவல்கள் கிட்டிய ஆயிரத்திற்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன. மீளாய்வுக்குரிய ஆண்டில் வங்கியின் சமா்ப்பித்தல் மற்றும் தொழிற்பாட்டு நாணயத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

### 2.5 பொருண்மை மற்றும் ஒன்றுசோ்ப்பு

ஒரே மாதிரியான விடயங்களின் ஒவ்வொரு பொருண்மைப் பிரிவும் நிதியியல் கூற்றுக்களில் வேறுவேறாகச் சமா்ப்பிக்கப்பட்டுள்ளன. ஒரே தன்மையற்ற விடயங்கள் அல்லது தொழிற்பாடுகள், அவை பொருண்மைத்தன்மை அற்றதாக இருந்தாலன்றி வேறு வேறாகச் சமா்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 2.6 எதிரீடு

வங்கியானது அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை எதிரீடு செய்வதற்கான சட்ட ரீதியான உரிமையைக் கொண்டிருந்து ஒன்றில் தேறிய அடிப்படையில் தீா்ப்பதற்கோ அல்லது சொத்துக்களை தேறல் செய்து அதேநேரத்தில் பொறுப்புக்களை தீா்ப்பதற்கோ விரும்பும் சந்தா்ப்பங்களில் மட்டும் நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்பட்டு தேறிய பெறுமதி நிதியியல் நிலைமைக் கூற்றில் சமா்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 2.7 ஒப்பீட்டுத் தகவல்

ஒப்பீட்டுத் தகவலானது நடப்பாண்டின் சமா்ப்பிப்புடன் ஒத்திருக்க வேண்டிய அவசியமேற்படும் சந்தா்ப்பங்களில் மீள்வகைப்படுத்தப்பட்டது.

## 3. மதிப்பீடுகள் மற்றும் திறனாய்வுகளின் பயன்பாடு

வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு முகாமைத்துவத்தின் திறனாய்வு முடிவுகள், மதிப்பீடுகள் மற்றும் கருதுகோள்கள் என்பன தேவைப்படுவதுடன் இவை வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பனவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகைகளின் மீதும் இணைந்த வெளிப்படுத்துகைகள் அதேபோன்று எதிா்பாராத பொறுப்புக்களின் மீதும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.

இக்கருதுகோள்கள் மற்றும் மதிப்பீடுகளின் நிச்சயமற்ற தன்மையானது எதிா்காலத்தில் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் கொண்டு செல்லும் பெறுமதியில் பொருண்மிய சீராக்கத்தினை தேவைப்படுத்தும் தாக்கத்தினை விளைவிக்கக்கூடும்.

மதிப்பீடுகள் மற்றும் அடிப்படையான அனுமானங்கள் தொடா்ச்சியான அடிப்படையில் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் எதிா்கால நோக்கில் இனங்காணப்படுகின்றன. நிதியியல் கூற்றுக்களில் இனங்காணப்பட்ட தொகைகளில் மிக முக்கியமான விளைவுகளினைக் கொண்ட கணக்கீட்டு கொள்கைகளை பயன்படுத்துவதில் செய்யப்பட்ட திறனாய்வு முடிவுகள் பற்றிய தகவல்கள் பின்வரும் குறிப்புகளில் விபரிக்கப்பட்டுள்ளன.

### 3.1 நிதியியல் சொத்துக்களின் வகைப்படுத்தல் மற்றும் பெறுமதி இழப்பு

சொத்துக்கள் வைத்திருக்கப்படும் வியாபார மாதிரியை மதிப்பிடுகையில் வங்கியானது திறனாய்வுகளை மேற்கொண்டதுடன் நிதியியல் சொத்துக்களின் ஒப்பந்த நியதிகள் வெளிநின்ற முதல் தொகையின் மீதான முதல் மற்றும் வட்டியின் கொடுப்பனவு மட்டுமா என்பதை மதிப்பிட்டது. வங்கியானது மேலும் நிதியியல் சொத்துக்கள் மீதான கொடுகடன் இடா்நோ்வானது அது அங்கீகரிக்கப்பட்டதன் பின்னா் அதிகரித்துள்ளதா என்பதை தீா்மானிப்பதற்காக பிரமாணங்களை உருவாக்குதல், எதிா்பாா்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களின் அளவீட்டிற்கு முன்னோக்கிய தகவல்களை உள்ளடக்குவதற்கான வழிமுறையை தீா்மானித்தல் மற்றும் எதிா்பாா்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களை அளப்பதற்கான மாதிரிகளின் தெரிவு மற்றும் ஒப்புதலுக்கும் திறனாய்வுகளைப் பயன்படுத்தியது. வங்கியின் எதிா்பாா்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக் கணப்பீட்டில் பயன்படுத்தப்பட்ட எறிவுகள் மற்றும் திறனாய்வுகள் தொடா்பில் கொவிட்-19இன் தாக்கம் பற்றி குறிப்பு 3.4இல் விளக்கப்பட்டுள்ளது.

### 3.2 ஓய்வூதியமும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நன்மைத் திட்டங்களும்

நிா்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்களின் கிரயமானது ஆயுட்கால மதிப்பீட்டைப் பயன்படுத்தித் தீா்மானிக்கப்படுகின்றது. ஆயுட்கால மதிப்பீடானது, கழிவு வீதங்கள், எதிா்கால இழப்பீட்டுக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பு, இறப்பு வீதங்கள் மற்றும் எதிா்கால ஓய்வூதிய அதிகரிப்புகள் ஆகியவற்றின் கருதுகோள்களின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றது. இத்திட்டங்களின் நீண்டகால இயல்பின் காரணமாக மேற்படி மதிப்பீடுகள் கணிசமான அளவு நிச்சமற்ற நிலைமைக்கு உட்படுகின்றன. ஆயுட்கால மதீப்பீட்டிற்கு பயன்படுத்தப்பட்ட கருதுகோள்கள் நிதியியல் கூற்றுக்களின் குறிப்பு 32இல் தரப்பட்டுள்ளன.

### 3.3 நிதியியல் சாதனங்களின் சீா்மதிப்புப் பெறுமதி

நிதியியல் நிலைமைக் கூற்றில் பதிவு செய்யப்படும் நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புக்களின் சீா்மதிப்புப் பெறுமதிகள் செயற்படும் சந்தைகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட முடியாவிடின் அவை கணித ரீதியான மாதிரிகளை உள்ளடக்கும் வேறுபட்ட மதிப்பீட்டு முறைகளைப் பயன்படுத்தி தீா்மானிக்கப்படுகின்றன. இம்மாதிரிகளுக்கான உள்ளீடுகள் சாத்தியமான இடங்களில் அவதானிக்கக்கூடிய சந்தைத் தரவுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்றன. ஆனால் இத்தரவுகள் கிடைக்கத்தக்கதாக இல்லாதவிடத்து, சீா்மதிப்புப் பெறுமதிகளைக் கணிப்பதற்கு திறனாய்வான முடிவு தேவைப்படுகின்றது. திறனாய்வான முடிவு, திரவத்தன்மையைக் கவனத்திலெடுத்தல் மற்றும் நீண்ட கால பெறுதிகளுக்கான தளம்பல்கள் போன்ற மாதிரி உள்ளீடுகளை உள்ளடக்கியிருக்கும்.

## 4. முக்கியமான கணக்கீட்டு கொள்கைத் தகவல் மாற்றங்கள்

கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள் எதுவும் இல்லையென்பதுடன், பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய நிதியியல் ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

## 5. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைத் தகவல்

### 5.1 வெளிநாட்டு நாணயமாற்று வீதங்கள் மற்றும் நிலுவைகள்

வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல்வாங்கல்கள், அவை இடம்பெற்ற நாளில் நிலவிய நாணயமாற்று வீதத்தில் இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்டன. அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறான வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட நாணயச் சொத்துக்களும் பொறுப்புக்களும் அறிக்கையிடல் திகதியில் நிலவிய நாணயமாற்று வீதத்தில் இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டன. நாணய விடயங்கள் மீதான வெளிநாட்டு நாணயமாற்று வீத இலாபங்களும் நட்டங்களும் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இம்மாற்றங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட முக்கிய நாணயங்களுக்கான அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறான இலங்கை ரூபா நாணயமாற்று வீதங்கள் பின்வருமாறு:

| நாணயம் | 2023<br>ரூபா | 2022<br>ரூபா |
|---|---|---|
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 220.2031 | 247.0237 |
| 1 கனேடிய டொலர் | 245.1179 | 268.4335 |
| 1 யூரோ | 357.4170 | 388.3461 |
| 1 யப்பானிய யென் | 2.2983 | 2.7703 |
| 1 சிறப்பு எடுப்பனவு உரிமை (சி.எ.உ) | 437.9894 | 483.3276 |
| 1 ஸ்டேர்லிங் பவுண் | 412.2896 | 437.4023 |
| 1 ஐக்கிய அமெரிக்க டொலர் | 323.9233 | 363.1100 |
| 1 சீன யுவான் (கரைகடந்த) | 45.6377 | 52.6513 |

வெளிநாட்டு நாணயத்தின் வரலாற்றுக் கிரய அடிப்படையில் அளவிடப்படும் நிதியல்லாத விடயங்கள் கொடுக்கல்வாங்கல் நடைபெற்ற திகதியன்று உள்ளவாறான நாணயமாற்று வீதத்தைப் பயன்படுத்தி மாற்றப்பட்டுள்ளன.

### 5.2 சீர்மதிப்புப் பெறுமதி அளவீடு

வங்கி ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் வெளிநாட்டுப் பிணையங்கள், பெறுதிகள் போன்ற நிதியியல் சாதனங்களையும் தங்கம் போன்ற நிதியல்லாச் சொத்துக்களையும் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடுகின்றது. பதிவழிப்புச் செலவில் அளவிடப்பட்ட நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதி குறிப்பு 50இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சீர்மதிப்புப் பெறுமதி என்பது அளவிடுகின்ற திகதியில் சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையிலான ஒழுங்குமுறையான கொடுக்கல்வாங்கல்களின் போது சொத்தொன்றினை விற்பது தொடர்பில் பெறப்பட்ட அல்லது பொறுப்பொன்றினை மாற்றல் செய்வதற்கு செலுத்தப்பட்ட விலை எனப் பொருள்படும். சீர்மதிப்புப் பெறுமதி அளவீடானது சொத்துக்களை விற்றல் அல்லது பொறுப்புக்களை மாற்றல் செய்தல் தொடர்பாக பின்வரும் இடமொன்றில் இடம்பெறும் கொடுக்கல்வாங்கல்களின் ஊகங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- சொத்து அல்லது பொறுப்பிற்கான முதன்மைச் சந்தை, அல்லது
- முதன்மைச் சந்தை இல்லாத போது சொத்து அல்லது பொறுப்பிற்கு மிக அநுகூலம் நிறைந்த சந்தை

முதன்மை அல்லது மிக அநுகூலம் நிறைந்த சந்தை வங்கியினால் அணுகப்படக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

சொத்தொன்றின் அல்லது பொறுப்பொன்றின் சீர்மதிப்புப் பெறுமதியானது சந்தைப் பங்கேற்பாளர்கள் சொத்து அல்லது பொறுப்பினை விலையிடும் போது தமது சிறந்த பொருளாதார நலனைக் கருத்திற் கொண்டு செயற்படுவர் என்ற கருதுகோளைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது. நிதியல்லாச் சொத்தொன்றின் சீர்மதிப்புப் பெறுமதி சொத்தினை மிக உயர்ந்த விதத்திலும் சிறந்த முறையிலும் பயன்படுத்துவதன் மூலம் அல்லது சொத்தினை மிக உயர்ந்த விதத்திலும் சிறந்த முறையிலும் பயன்படுத்தக்கூடிய இன்னொரு சந்தைப் பங்கேற்பாளருக்கு விற்பதன் மூலம் பொருளாதார நன்மைகளை உருவாக்கக்கூடிய சந்தைப் பங்கேற்பாளர்களின் இயலாற்றலைக் கருத்தில் கொண்டு அளவிடப்படுகிறது.

வங்கி சூழ்நிலைக்குப் பொருத்தமானதும் சீர்மதிப்புப் பெறுமதிகளை அளவிடுவதற்குப் போதுமான தரவுகள் கிடைக்கத்தக்கதாகவுள்ளதும் இதற்காகத் தொடர்பான அவதானிக்கத்தக்க உள்ளீடுகளை உச்சப்படுத்துகின்றதும் அவதானிக்கப்பட முடியாத உள்ளீடுகளை மிகக் குறைப்பதுமான மதிப்பீட்டு நுணுக்கங்களை பயன்படுத்துகின்றது.

நிதியியல் கூற்றுக்களில் அளவிடப்பட்ட அல்லது வெளிப்படுத்தப்பட்ட சீர்மதிப்புப் பெறுமதிகளுக்கான அனைத்துச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், பொதுவாக சீர்மதிப்புப் பெறுமதியின் அளவிடலுக்குப் போதுமானதாக விளங்கும் குறைந்த மட்டத்தின் அடிப்படையில், கீழே விபரிக்கப்பட்டவாறு சீர்மதிப்புப் பெறுமதி படிநிலைக்குள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மட்டம் 1 - ஒரே மாதிரியான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்கான செயற்படுகின்ற சந்தையில் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட (சீராக்கப்படாத) சந்தை விலைகள்

மட்டம் 2 - சீர்மதிப்புப் பெறுமதி அளவீட்டிற்கு குறிப்பிடத்தக்கதான குறைந்தமட்ட உள்ளீட்டினை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அவதானிக்கக் கூடியவற்றிற்கான மதிப்பீட்டு நுட்பங்கள்

மட்டம் 3 - சீர்மதிப்புப் பெறுமதி அளவீட்டிற்கு குறிப்பிடத்தக்கதான குறைந்தமட்ட உள்ளீட்டினை அவதானிக்க முடியாதவற்றிற்கான மதிப்பீட்டு நுட்பங்கள்

மீண்டெழும் அடிப்படையில் நிதியியல் கூற்றுக்களில் இனங்காணப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்காக வங்கியானது ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் முடிவிலும் படிநிலையிலுள்ள மட்டங்களுக்கிடையில் ஏதேனும் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளதாவென வகையிடலை மீளமதிப்பிடுவதன் மூலம் (முழுமையான சீர்மதிப்புப் பெறுமதி அளவீட்டிற்கு குறிப்பிடத்தக்கதாக விளங்கும் குறைந்த மட்ட உள்ளீடுகளின்

அடிப்படையில்) நிர்ணயிக்கிறது.

### 5.3 நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புகள்

வங்கியானது, நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களையும் அத்துடன் இணைந்த வருமானம் மற்றும் செலவினங்களையும், வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளை வேறுபடுத்திக் காட்டுவதன் மூலமே சமர்ப்பிக்கின்றது.

வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவத் தொழிற்பாட்டிலிருந்தே உருவாகின்றன. உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல், நாணயங்களின் வெளியீடு மற்றும் வங்கித்தொழில் நடவடிக்கைகள் என்பவற்றுடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களைப் பிரதிபலிக்கின்றன.

இந்நடவடிக்கைகளைத் தனித்தனியாக அறிக்கையிடுவது வங்கியின் நிதியியல் நிலைமை, நிதியியல் செயலாற்றுகை மற்றும் இடர்நேர்வுத் தோற்றப்பாட்டினை சிறந்த முறையில் முன்வைப்பதாகக் கருதப்படுகின்றது. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயங்களின் நடவடிக்கைகளை இணைத்து அறிக்கையிடுதல் நிதியியல் கூற்றுக்களின் தகவல் பெறுமதியை நலிவுறச் செய்யுமென வங்கி கருதுகின்றது.

#### 5.3.1 அங்கீகரித்தல் மற்றும் ஆரம்ப அளவீடு

அனைத்து நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும் முதலில் கிரயத்தில் அங்கீகரிக்கப்படுவதுடன் இது முதலீட்டுடன் தொடர்புபட்ட கொள்வனவுக் கட்டணங்கள் உள்ளடங்கலாக செலுத்தப்பட்ட விலையின் சீர்மதிப்புப் பெறுமதியாகும். நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் அனைத்து கிரமமான வழி கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் அவற்றிற்குரிய வர்த்தகத் திகதியில் அங்கீகரிக்கப்படுகின்றன. கிரமமான வழி கொள்வனவு அல்லது விற்பனை என்பது பொதுவாக ஒழுங்குமுறைப்படுத்தலினால் அல்லது சந்தையின் மரபினால் உருவாக்கப்பட்ட காலவரம்பிற்குள் சொத்துக்களின் கையளிப்பை தேவைப்படுத்தும் நிதியியல் சொத்துக்களின் கொள்வனவு அல்லது விற்பனையாகும்.

#### 5.3.2 வகைப்படுத்தல்

**நிதியியல் சொத்துக்கள்**

ஆரம்ப அங்கீகரிப்பில், வங்கியானது கீழ்வருவனவற்றில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்களை வகைப்படுத்துகிறது:

- பதிவழிக்கப்பட்ட செலவு
- ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி
- இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி

ஒரு நிதியியல் சொத்தானது கீழ்வரும் இரு நிபந்தனைகளையும் பூர்த்திசெய்து இலாபம் மற்றும் நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் குறித்துரைக்கப்படாத போது பதிவழிக்கப்பட்ட செலவில் அளவிடப்படுகிறது.

- ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களைச் சேகரிப்பதற்காக சொத்துக்களை வைத்திருக்கும் நோக்குடைய வியாபார மாதிரி ஒன்றினுள் சொத்து வைத்திருக்கப்படுதல்; மற்றும்
- நிதியியல் சொத்தின் ஒப்பந்த நியதிகளானவை முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவை மட்டும் உள்ளடக்கிய காசுப்பாய்ச்சலுக்கான குறித்துரைக்கப்பட்ட திகதிகளை வழங்குதல்.

ஒரு நிதியியல் சொத்தானது கீழ்வரும் இரு நிபந்தனைகளையும் பூர்த்தி செய்து இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் குறித்துரைக்கப்படாத போது ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

- ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களைச் சேகரித்தல் மற்றும் நிதியியல் சொத்துகளை விற்றல் இரண்டின் மூலமும் குறிக்கோளை அடைந்துகொள்ளும் வியாபார மாதிரி ஒன்றினுள் சொத்து வைத்திருக்கப்படுதல்; மற்றும்
- நிதியியல் சொத்தின் ஒப்பந்த நியதிகளானவை முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவை மட்டும் உள்ளடக்கிய காசுப் பாய்ச்சலுக்கான குறித்துரைக்கப்பட்ட திகதிகளை வழங்குதல்.

வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்படாத பங்குரிமை முதலீட்டின் ஆரம்ப அங்கீகரிப்பின் போது வங்கியானது சீர்மதிப்புப் பெறுமதியில் அடுத்துவரும் மாற்றங்களை ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் காட்டுவதற்கு மாற்றமுடியாதபடி தெரிவுசெய்யலாம். ஏனைய அனைத்து நிதியியல் சொத்துக்களும் இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டு வகைப்படுத்தப்படுகின்றன.

**வியாபார மாதிரி மதிப்பீடு**

வங்கியானது சொத்தொன்று சொத்துப்பட்டியல் மட்டத்தில் வைத்திருக்கப்படும் வியாபார மாதிரியின் குறிக்கோளின் மதிப்பீடு ஒன்றினை மேற்கொள்கின்றது. ஏனெனில் இது வியாபாரம் முகாமை செய்யப்படும் விதம் மற்றும் முகாமைத்துவத்திற்கு தகவல் வழங்கப்படும் விதம் பற்றி சிறப்பாக பிரதிபலிக்கின்றது. கவனத்திலெடுக்கப்படும் தகவலானது பின்வருவனவற்றை உள்ளடக்கி இருப்பதோடு இது இதற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- வியாபார மாதிரியின் செயலாற்றம் மற்றும் அவ்வியாபார மாதிரியில் வைத்திருக்கப்படும் நிதியியல் சொத்துக்கள் எவ்வாறு மதிப்பிடப்பட்டு நிறுவனத்தின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கு அறிக்கையிடப்படுகின்றன.
- வியாபார மாதிரியின் (மற்றும் அவ்வியாபார மாதிரியினுள் வைத்திருக்கப்படும் நிதியியல் சொத்துக்கள்) செயலாற்றத்தினைப் பாதிக்கும் இடர்நேர்வுகள் மற்றும், குறிப்பாக இவ்வுடர்நேர்வுகள் முகாமை செய்யப்படும் விதம்.
- முன்னைய காலங்களின் விற்பனையின் தடவைகள், அளவு மற்றும் காலக்கிரமம் அத்தகைய விற்பனைக்கான காரணங்கள் மற்றும் எதிர்கால விற்பனை நடவடிக்கை தொடர்பான அதன் எதிர்பார்ப்புகள். எனினும், விற்பனை நடவடிக்கை தொடர்பான தகவலானது தனியாக கருத்திற்கொள்ளப்படுவதில்லை, மாறாக இது நிதியியல் சொத்துக்களை முகாமை செய்வதற்கான வங்கியின் கூறப்பட்ட குறிக்கோள் எவ்வாறு அடையப்படுகின்றது மற்றும் காசுப்பாய்ச்சல்கள் எவ்வாறு தேறல் செய்யப்படுகின்றன என்பது தொடர்பான ஒட்டுமொத்த மதிப்பீட்டின் ஒரு

பகுதியாகும்.

வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்பட்டு அல்லது முகாமைப்படுத்தப்பட்டு சீர்மதிப்புப் பெறுமதியில் அவற்றின் செயலாற்றம் மதிப்பிடப்படும் நிதியியல் சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுவதற்கான காரணம் அவை ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களை சேகரிப்பதற்காகவோ அல்லது ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களை சேகரிப்பதுடன் நிதியியல் சொத்துக்களை விற்பதற்காகவோ வைத்திருக்கப்படாமையாகும்.

**ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்கள் முதல் மற்றும் வட்டியின் தனிக்கொடுப்பனவா என்பதை மதிப்பிடுதல்**

நிதியியல் சொத்துக்கள் முதல் மற்றும் வட்டியின் தனிக்கொடுப்பனவு பரீட்சிப்பை பூர்த்திசெய்வதனை கண்டறிவதற்காக நிதியியல் சொத்துக்களின் ஒப்பந்த ரீதியான நியதிகளை வங்கி மதிப்பிடுகின்றது. இம்மதிப்பீட்டு நோக்கத்திற்காக 'முதல்' என்பது ஆரம்ப அங்கீகரிப்பின் போது நிதியியல் சொத்தின் சீர்மதிப்புப் பெறுமதி எனவும் "வட்டி" என்பது பணத்தின் காலப்பெறுமதி, குறிப்பிட்ட காலப்பகுதியொன்றில் வெளிநின்ற முதல் தொகையுடன் தொடர்புபட்ட கொடுகடன் இடர்நேர்வு மற்றும் ஏனைய அடிப்படை கடன்வழங்கல் இடர்நேர்வுகள் மற்றும் செலவுகள் என்பவற்றுக்கான கைமாறு எனவும் வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது.

ஒரு கடன் வழங்கல் உடன்படிக்கையினுள் காணப்படும் வட்டியினது மிக முக்கியமான கூறாகக் காணப்படுவது பணத்தின் காலப்பெறுமதி மற்றும் கொடுகடன் இடர்நேர்வாகும். முதல் மற்றும் வட்டியின் தனிக்கொடுப்பனவின் மதிப்பீட்டினை மேற்கொள்ளுவதற்கு, வங்கியானது மதிப்பாய்வுகளை பிரயோகிப்பதுடன், நிதியியல் சொத்து குறித்துரைக்கப்பட்டிருக்கும் நாணயம் மற்றும் வட்டிவீதம் தீர்மானிக்கப்பட்டிருக்கும் காலப்பகுதி போன்ற தொடர்புடைய காரணிகளைக் கருத்திற்கொள்கின்றது.

மாறாக, அடிப்படையான கடன்வழங்கல் ஒழுங்கிற்கு தொடர்புபடாத ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களின் இடர்நேர்வு அல்லது தளம்பல்களுக்கு குறைந்தபட்ச வெளிப்படுத்துகையை விட அதிகமாக தேவைப்படுத்தும் ஒப்பந்த ரீதியான நியதிகள் வெளிநின்ற தொகை மீதான முதல் மற்றும் வட்டியின் தனிக்கொடுப்பனவுகளைக் கொண்ட ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சலை தோற்றுவிக்காது. அத்தகைய சந்தர்ப்பங்களில், நிதியியல் சொத்தானது இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றது.

**மீள்வகைப்படுத்தல்**

நிதியியல் சொத்துக்களை முகாமைப்படுத்துவதற்காக வங்கி அதன் வியாபார மாதிரியை மாற்றியதற்கு பின்னரான காலப்பகுதி தவிர, நிதியியல் சொத்துக்கள் அவற்றின் ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் மீள்வகைப்படுத்தப்படுவதில்லை.

**5.3.3 விலக்குதல்**

**நிதியியல் சொத்துக்கள்**

வங்கியானது நிதியியல் சொத்திலிருந்தான காசுப்பாய்ச்சல்களுக்கான ஒப்பந்த ரீதியான உரிமை காலாவதியாகும் போது அல்லது நிதியியல் சொத்தின் உடமையினது குறிப்பிடத்தக்க அனைத்து இடர்நேர்வுகள் மற்றும் வெகுமதிகள் மாற்றல் செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கலில் ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சலினை பெறுவதற்கான உரிமையை மாற்றல்செய்யும் போது அல்லது வங்கி உடமையின் குறிப்பிடத்தக்க அனைத்து இடர்நேர்வுகள் மற்றும் வெகுமதிகளை வைத்திருக்காமல் அல்லது மாற்றல் செய்யாமல் இருப்பதுடன் நிதியியல் சொத்தின் கட்டுப்பாட்டை கொண்டிருக்காத போது நிதியியல் சொத்தொன்றினை அங்கீகரிப்பிலிருந்தும் விலக்குகின்றது.

நிதியியல் சொத்தொன்றின் விலக்கலின்போது சொத்தின் கொண்டு செல்லப்படும் பெறுமதிக்கும் (அல்லது விலக்கப்படும் சொத்தின் பகுதிக்கு ஒதுக்கப்பட்ட கொண்டு செல்லல் பெறுமதிக்கும்) (i) பெறப்பட்ட விலை (பெறப்பட்ட ஏதாவது புதிய சொத்திலிருந்து அனுமானிக்கப்பட்ட ஏதாவது பொறுப்பை கழித்தவை உள்ளடங்கலாக) மற்றும் (ii) ஏனைய அனைத்தையுமுள்ளக்கிய வருமானத்தில் காட்டப்பட்ட ஏதாவது ஒன்றுசேர்ந்த இலாபம் அல்லது நட்டம் என்பவற்றின் கூட்டுத்தொகைக்கு இடையிலான வேறுபாடு இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகிறது.

ஏனைய அனைத்தையுமுள்ளக்கிய வருமானத்தினூடாக சீர்மதிப்பு பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட பங்குரிமை முதலீட்டுப் பிணையங்கள் தொடர்பில் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒன்றுசேர்ந்த இலாபங்கள் அல்லது நட்டங்கள், அத்தகைய பிணையங்கள் விலக்கப்படும்போது இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படமாட்டா. வங்கியினால் உருவாக்கப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட, விலக்கல்களுக்கு தகுதியான மாற்றல் செய்யப்படும் நிதியியல் சொத்தில் இருக்கும் ஏதாவது வட்டியானது தனியான சொத்தொன்றாக அல்லது பொறுப்பொன்றாக காட்டப்படுகின்றது.

வங்கியானது கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதன் மூலம் அதன் நிதியியல் நிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட சொத்துக்களை மாற்றல் செய்கின்றது. எனினும், அது ஒன்றில் மாற்றல் செய்யப்படும் சொத்துக்களின் குறிப்பிடத்தக்க அனைத்து இடர்நேர்வுகள் மற்றும் வெகுமதிகளையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ வைத்துக்கொள்கின்றது. அத்தகைய சந்தர்ப்பங்களில், மாற்றல் செய்யப்பட்ட சொத்துக்கள் விலக்கப்படுவதில்லை. அத்தகைய கொடுக்கல்வாங்கல்களுக்கு உதாரணங்களாக பிணையங்களின் கடன்வழங்கல் மற்றும் விற்பனை மற்றும் மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களை குறிப்பிடலாம். வங்கியானது நிதியியல் சொத்தொன்றின் உடமையின் குறிப்பிடத்தக்க அனைத்து இடர்நேர்வுகள் மற்றும் வெகுமதிகளை வைத்திருக்காமலோ அல்லது மாற்றல் செய்யாமலோ இருந்து அச்சொத்தின் கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும் கொடுக்கல்வாங்கல்களில், மாற்றல் செய்யப்பட்ட சொத்தின் பெறுமதியிலான மாற்றங்களுக்கு அது வெளிப்படுத்தப்படும் அளவினால் தீர்மானிக்கப்பட்டவாறு அதன் தொடர்ச்சியான ஈடுபாட்டின் அளவிற்கு வங்கி தொடர்ந்து அங்கீகரிக்கும்.

**நிதியியல் பொறுப்புக்கள்**

நிதியியல் பொறுப்பின் ஒப்பந்த ரீதியான கடப்பாடுகள் இடைநிறுத்தப்படுகையில் அல்லது நிறுத்தப்படுகையில் அல்லது காலாவதியாகையில் வங்கி நிதியியல் பொறுப்பொன்றினை அங்கீகரிப்பில் இருந்தும் விலக்கும்.

**5.3.4 நிதியியல் சொத்துக்களின் பெறுமதியிழப்பு**

இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படாத பின்வரும் நிதியியல் சாதனங்கள் தொடர்பிலான எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிற்கான நட்ட படிகளை வங்கி அங்கீகரிக்கின்றது.

- ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான நிதியியல் சொத்துக்கள்
- பதிவழிக்கப்பட்ட செலவிலான நிதியியல் சொத்துக்கள்
- பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தின் கொடுகடன் உத்தரவாத ஒப்பந்தங்கள்

பங்குரிமை முதலீடுகள் தொடர்பில் பெறுமதியிழப்பு அங்கீகரிக்கப் படுவதில்லை.

வங்கியானது முதலீட்டுத் தரத்திலுள்ள (Baa3/BBB- மற்றும் மேற்பட்ட தரமிடப்பட்டவை) முதலீடுகளுக்காக 12 மாத எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிற்குச் சமமான தொகையில் நட்டப்படியை அளவிடுகின்றது. ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலும் பதிவழிக்கப்பட்ட செலவிலும் வகைப்படுத்தப்படும் வங்கியின் பெரும்பாலான முதலீடுகள் Baa3/BBB- தரத்திற்கு மேற்பட்டவையாகவே இருக்கின்றன. 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு அங்கீகரிக்கப்பட்ட நிதியியல் சாதனங்கள் "கட்டம் 1 நிதியியல் சாதனங்கள்" எனக் குறிப்பிடப்படுகின்றன.

ஆரம்ப அங்கீகரிப்பின் போது முதலீட்டுத் தரத்திற்கு கீழ் இருக்கும் அல்லது Baa3/BBB- இற்கு கீழ் அவற்றின் கொடுகடன் இடர்நேர்வு தேய்வடையும் அல்லது ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் தவணை தவறுதல் நிகழ்தகவு இரட்டிப்பாகிய சாதனங்களுக்கு ஆயுட்கால எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு கணிக்கப்படுகின்றது. ஆயுட்கால எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு அங்கீகரிக்கப்பட்டு கொடுகடன் பெறுமதியிழக்காத நிதியியல் சாதனங்கள் 'கட்டம் 2 நிதியியல் சாதனங்கள்' எனக் குறிப்பிடப்படுகின்றன. "கட்டம் 3 நிதியியல் சாதனங்கள்" எனக் குறிப்பிடப்படும் கொடுகடன் பெறுமதியிழந்த நிதியியல் சாதனங்களுக்கும் ஆயுட்கால எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு கணிக்கப்படும்.

**எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பின் அளவீடு**

எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு கணிப்பீட்டின் பொறிமுறையானது முக்கிய கூறுகளுடன் கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

**தவணை தவறுதல் நிகழ்தகவு:** தவணை தவறுதல் நிகழ்தகவு என்பது தரப்பட்ட காலப்பகுதியொன்றில் தவணை தவறுதல்களின் சாத்தியத்தன்மையின் மதிப்பீடொன்றாகும். வசதியானது முன்னர் விலக்கப்படாமலிருந்து இன்னமும் சொத்துப்பட்டியலில் காணப்படுமாயின், தவணை தவறுதலானது மதிப்பிடப்படும் காலப்பகுதியில் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் மாத்திரம் ஏற்பட முடியும். வங்கியானது ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி மற்றும் பதிவழிக்கப்பட்ட செலவிலான அதன் அனைத்து வெளிநாட்டு முதலீடுகளுக்காக புளூம்போர்க்கிடமிருந்தான வழங்குநர்கள் அல்லது இணைத்தரப்பினரின் குறிப்பிட்ட பங்குரிமை தவணை தவறல் நிகழ்தகவைப் பயன்படுத்துவதுடன், பங்குரிமை தவணை தவறல் நிகழ்தகவு காணப்படாத சந்தர்ப்பத்தில் தரப்பட்ட அறிக்கையிடல் திகதியில் புளூம்போர்க் பொதுவான தவணை தவறல் நிகழ்தகவிலிருந்து குறிப்பிட்ட வழங்குநர் அல்லது இணைத்தரப்பின் தரமிடலுக்கு பிரியோகிக்கத்தக்க தவணை தவறல் நிகழ்தகவைப் பயன்படுத்துகின்றது.

**செலுத்தத் தவறும் போது இடர்நேர்விற்குள்ளாகும் தன்மையின் அளவு:** செலுத்தத் தவறும் போது இடர்நேர்விற்குள்ளாகும் தன்மையின் அளவு என்பது ஒப்பந்தத்தின் அல்லது வேறு ஏதாவது ஒன்றின் மூலம் அட்டவணையிடப்பட்டுள்ள முதல் மற்றும் வட்டியின் மீள்கொடுப்பனவு, ஒப்புக்கொண்ட வசதிகள் மீது எதிர்பார்க்கப்படும் குறைப்புக்கள் மற்றும் தவறவிடப்பட்ட கொடுப்பனவுகளிலிருந்தான அட்டுறு வட்டி போன்றவை உள்ளடங்கலாக அறிக்கையிடப்பட்ட திகதிக்குப் பின்னர் வெளிப்படுத்துகையில் எதிர்பார்க்கப்படும் மாற்றங்களை கவனத்திற்கொண்டு எதிர்கால தவணை தவறுதல் திகதியில் வெளிப்படுத்துகையின் மதிப்பீடொன்றாகும்.

**இழப்பினைத் தருகின்ற தவணை தவறுதல்கள்:** இழப்பினைத் தருகின்ற தவணை தவறுதல்கள் என்பது குறிப்பிட்டதொரு நேரத்தில் தவணை தவறுதல் ஒன்று இடம்பெறுவதினால் ஏற்படும் இழப்பின் மதிப்பீடொன்றாகும். இது வரவேண்டிய ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சலுக்கும் ஏதாவது பிணையத்திலிருந்து தேறப்படும் தொகையுட்பட கடன்வழங்குநர் பெறுவதற்கு எதிர்பார்க்கும் தொகைக்குமிடையிலான வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டதாகும். வங்கியானது நிதியியல் சொத்துக்களின் வேறுபட்ட வகைகளுக்கு இழப்பினைத்தருகின்ற தவணைத் தவறல்களைப் பிரயோகிக்கையில் அவற்றின் வங்கிக்கான இடர்நேர்வு வெளிப்படுத்துகையின் அடிப்படையில் ஒப்புதலளிக்கப்பட்ட உள்ளகக் கொள்கையைக் கொண்டிருக்கின்றது.

**பொருளியல் காரணி சீராக்கம்:** வங்கியானது சுழற்சி முழுவதுக்குமான தவணை தவறுதல் நிகழ்தகவிலிருந்து குறிப்பிட்ட நேரத்திலுள்ள தவணை தவறுதல் நிகழ்வுகளுக்கு மாற்றுவதற்காக பொருளியல் காரணி சீராக்கத்தைப் பயன்படுத்துவதுடன் தவணை தவறுதல் நிகழ்தகவினை சீராக்கும் முக்கிய பொருளியல் காரணியாக வங்கி மொத்த உள்நாட்டு உற்பத்தித் தரவைப் பயன்படுத்துகின்றது.

**கொடுகடன் இடர்நேர்விலான குறிப்பிடத்தக்க அதிகரிப்பை மதிப்பிடல்**

வங்கியானது ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் தவணை தவறுதல் நிகழ்தகவு இரட்டிப்பாகும் போதும் ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் BBB- இற்குக் கீழான ஏதாவது தரமிடலில் கீழ்நோக்கிய திருத்தம் மேற்கொள்ளப்படுகையிலும் நிதியியல் சாதனம் குறிப்பிடத்தக்க அதிகரித்த இடர்நேர்வைக் கொண்டிருப்பதாகக் கருதுகின்றது. இது தவணை தவறுதல் நிகழ்தகவின் இரண்டு மடங்கு அல்லது அதற்கு அதிகமான அதிகரிப்பை தோற்றுவிக்கும் Baa3 இலிருந்து Ba1 இற்கான மிகச் சிறிய கீழ்நோக்கிய தரமிடல் உட்பட, முதலீட்டுத்தரத் தரமிடலிருந்து முதலீட்டுத் தரமல்லாத கீழ்நோக்கிய தரமிடல்களின் அவதானிப்புக்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

**கொடுகடன் பெறுமதியிழந்த நிதியியல் சொத்துக்கள்**

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் பதிவழிக்கப்பட்ட செலவிலும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலும் கொண்டு செல்லப்படுகின்ற நிதியியல் சொத்துக்கள் மற்றும் கொடுகடன் உத்தரவாதங்கள் கொடுகடன் பெறுமதியிழந்திருக்கின்றனவா ("கட்டம் 3 நிதியியல் சொத்துக்கள்" எனக் குறிப்பிடப்படும்) என்பது தொடர்பில் வங்கி மதிப்பிடும். ஒரு நிதியியல் சொத்தானது, நிதியியல் சொத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களுக்கு தீங்கான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒன்று அல்லது மேற்பட்ட நிகழ்வுகள் இடம்பெறும் சந்தர்ப்பத்தில் "கொடுகடன் பெறுமதி இழந்ததாக" கருதப்படும். நிதியியல் சொத்தொன்று கொடுகடன் பெறுமதி இழந்தற்கான சான்றுகள் பின்வரும் அவதானிக்கத்தக்க தரவுகளை உள்ளடக்கும்:

- கடன்பெறுநர் அல்லது வழங்குநரின் குறிப்பிடத்தக்க நிதியியல் இடர்ப்பாடு;
- தவணை தவறல் அல்லது காலந்தவறல் நிகழ்வு போன்ற ஒப்பந்த மீறல்;
- கடன்பெறுநர் வங்குரோத்துக்கு அல்லது ஏனைய நிதியியல் மீள்கட்டமைப்பிற்குள்ளாகப் போகிறார் என சாத்தியமாகத் தெரிதல்.

**நிதியியல் நிலைமைக் கூற்றில் எதிர்பார்க்கும் கொடுகடன் இழப்பிற்கான படியை சமர்ப்பித்தல்**

எதிர்பார்க்கும் கொடுகடன் இழப்பிற்கான நட்டப்படியானது நிதியியல் நிலைமைக்கூற்றில் பின்வருமாறு காட்டப்படுகின்றது:

- பதிவழிக்கப்பட்ட செலவில் அளவிடப்படும் நிதியியல் சொத்துக்கள்: சொத்துக்களின் மொத்த கொண்டு செல்லல் பெறுமதியிலிருந்தான குறைப்பொன்றாக;
- ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படும் முதலீடுகள்: நிதியியல் நிலைமைக்கூற்றில் நட்டப்படி அங்கீகரிக்கப்படுவதில்லை ஏனெனில் இச்சொத்துக்களில் கொண்டுசெல்லல் பெறுமதி அவற்றின் சீர்மதிப்புப் பெறுமதியாகும். எனினும், நட்டப்படி வெளிப்படுத்தப்படுவதுடன் இது ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது;
- கொடுகடன் உத்தரவாத ஒப்பந்தங்கள்: பொதுவான ஏற்பாடொன்றாக.

**பதிவழிப்பு**

நிதியியல் சொத்தினை முழுமையாகவோ அல்லது அதன் பகுதியொன்றினையோ அறவிடுவதற்குப் போதுமான எதிர்பார்ப்புக்கள் இல்லாதவிடத்து கடன்கள் மற்றும் படுகடன் பிணையங்கள் பதிவழிக்கப்படுகின்றன (ஒன்றில் பகுதியளவில் அல்லது முழுமையாக). பதிவழித்தலுடன் தொடர்புபட்ட தொகையை மீளச்செலுத்துவதற்கு போதுமான காசுப்பாய்ச்சல்களை உருவாக்கக்கூடிய வருமான மூலங்களையோ அல்லது சொத்துக்களையோ கடன்பெறுநர் கொண்டிருக்கவில்லை என வங்கி தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தில் இது பொதுவான வழமையாகும். இம்மதிப்பீடானது தனிப்பட்ட சொத்து மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. முன்னர் பதிவழிக்கப்பட்ட தொகைகளின் அறவிடலானது இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக்கூற்றின் 'நிதியியல் சாதனங்கள் மீதான பெறுமதி இழப்பு நட்டம்' இல் உள்ளடக்கப்படுகின்றன.

**5.4 இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான நிதியியல் சொத்துக்கள்**

வர்த்தகப்படுத்தலுக்காக வைத்திருக்கப்படுபவையினுள் வகைப்படுத்தப் பட்டுள்ள நிதியியல் சொத்துக்கள் "இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள்" வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆரம்ப அங்கீகரிப்பின் போது தொடர்புடைய கொடுக்கல்வாங்கல் செலவுகள் இலாபம் அல்லது நட்டத்தில் அவை இடம்பெறும் பொழுது அங்கீகரிக்கப்படுகின்றன. பின்னர் மேற்படி பிணையங்கள் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் பெறுமதியிடப்படுகின்றன. சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள் நிதியியல் நிலைமைக் கூற்றில் பிணையங்களின் பெறுமதியிலான அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ காட்டப்படுகின்ற அதேநேரம் இதன் மூலம் எழும் இலாபங்களும் நட்டங்களும் வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

பிணையம் இப்பொழுதும் சொந்தமாக இருக்குமிடத்து இலாபம/(நட்டமானது) "தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீட்டிலிருந்தான இலாபமாக/ (நட்டமாக)" அறிக்கையிடப்படும். இலாபமோ/ நட்டமோ தேறப்படுமிடத்து (பிணையத்தினை விற்பதன் மூலம்) அது "தேறல் செய்யப்பட்ட மீள்மதிப்பீட்டிலிருந்தான இலாபமாக/ (நட்டமாக)" அறிக்கையிடப்படும்.

**5.5 ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான நிதியியல் சொத்துக்கள்**

ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான முதலீடுகள், ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியாக குறித்துரைக்கப்பட்ட பெறுதியல்லா முதலீடுகள் அல்லது நிதியியல் சொத்துக்களின் ஏனைய வகையொன்றாக வகைப்படுத்தப்படாதவையாகும். ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான முதலீடுகள் பங்குரிமைப் பிணையங்களையும் படுகடன் பிணையங்களையும் உள்ளடக்கியிருக்கும்.

ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான வெளிநாட்டு நாணயப் படுகடன் பிணையங்கள் பின்னர் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் பெறுமதியிடப்படுகின்றன. சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள் நிதியியல் நிலைமைக்கூற்றில் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியில் உள்ள முதலீடுகளின் பெறுமதியிலான அதிகரிப்பொன்றாக அல்லது குறைவொன்றாக அங்கீகரிக்கப்படுகின்றன.

ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான பங்குரிமை முதலீடுகள் பின்னர் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிகளின் கிடைப்பனவின்மை காரணமாக தொடர்பான நிறுவனங்களின் தேறிய சொத்துக்களின் அடிப்படையில் பெறுமதியிடப்படுகின்றன.

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயப் படுகடன் பிணையங்கள் மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பங்குரிமை முதலீடுகளிலான சந்தைப் பெறுமதி மாற்றங்களிலிருந்து எழுகின்ற இலாபங்களும் நட்டங்களும் நேரடியாக பங்குரிமையில் (ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்) அங்கீகரிக்கப்படுவதுடன் இது முதலீடு விற்கப்படும் வரை, சேகரிக்க அல்லது வேறுவகையில் அகற்றப்படும் வரை அல்லது முதலீடு பெறுமதியிழக்கப்பட்டது என்று தீர்மானிக்கப்படும் வரை நிதியியல் நிலைமைக் கூற்றில் ஏனைய ஒதுக்கங்களின் கீழ் காட்டப்படுவதுடன் முன்னர் கூறப்பட்ட நிகழ்வுகளில் ஒன்று இடம்பெறும் நேரத்தில், அகற்றப்படுகையில் வருமானக்கூற்றுக்கு சுழற்சிப்படுத்தப்படாத பங்குரிமை முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதி மாற்றங்களின் விதிவிலக்குடன், முன்னர் பங்குரிமையில் அறிக்கையிடப்பட்ட ஒன்றுசேர்ந்த இலாபம் அல்லது நட்டம் வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது. வட்டி வருமானமானது பயனுறு வட்டி முறைமையைப் பயன்படுத்தி வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**5.6 பதிவழிப்புச் செலவில் வைத்திருக்கப்படும் சாதனங்கள்**

ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களைச் சேகரிக்கும் பொருட்டு நிதியியல் சொத்துக்களை வைத்திருக்கும் நோக்குடனான வியாபார மாதிரியினுள் இருப்பதுடன் ஒப்பந்த நியதிகள் முதல் மற்றும் வட்டியை மட்டும் கொண்ட காசுப்பாய்ச்சலை ஏற்படுத்தக்கூடிய விடயங்கள் பதிவழிப்புச் செலவில் வைத்திருக்கப்படும் சாதனங்கள் என வகைப்படுத்தப்படுகின்றன. இச்சாதனங்கள் பின்னர் பயனுறு வட்டி முறையைப் பயன்படுத்தி பதிவழிப்புச் செலவில் அளவிடப்படுகின்றன.

**5.7 பெறுதிச் சாதனங்கள்**

வங்கி, குறுக்கு நாணய பரஸ்பர பரிமாற்றல், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்கள் போன்ற பெறுதிகளை இடர்நேர்வு முகாமைத்துவ நோக்கங்களுக்காக பயன்படுத்துகின்றதேயொழிய ஊக நோக்கங்களுக்காக அல்ல. பெறுதிகள் சீர்மதிப்புப் பெறுமதியில் குறிப்பிடப்படுவதுடன், சீர்மதிப்புப் பெறுமதி நேர்க்கணியமாக இருக்குமிடத்தில் சொத்தாகவும், எதிர்க்கணியமாக இருக்குமிடத்தில் பொறுப்பாகவும் கொண்டு செல்லப்படும்.

பெறுதிகளின் சீர்மதிப்புப் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் “தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீட்டிலிருந்தான இலாபத்தில்/ (நட்டத்தில்)” உள்ளடக்கப்படுகின்றன.

கொடுக்கல்வாங்கல் விலையானது அதே சாதனத்தின் இன்னொரு அவதானிக்கக்கூடிய நடைமுறைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் சீர்மதிப்புப் பெறுமதியிலிருந்து அல்லது அவதானிக்கக்கூடிய சந்தைகளிலிருந்தான தரவை மட்டும் கொண்டிருக்கும் மாறிகளை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டு முறைகளிலிருந்து வேறுபடுமாயின், வங்கியானது உடனடியாக கொடுக்கல்வாங்கல் விலைக்கும் சந்தைப் பெறுமதிக்குமிடையிலான வேறுபாட்டை (1 நாள் வேறுபாடு) “தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீடுகளிலிருந்தான இலாபம்/ (நட்டம்)” ஆக அங்கீகரிக்கும். அவதானிக்க முடியாத தரவுகளைப் பயன்படுத்தி சீர்மதிப்புப் பெறுமதியானது தீர்மானிக்கப்படும் சந்தர்ப்பங்களில், கொடுக்கல்வாங்கல் விலைக்கும் மாதிரிப் பெறுமதிக்குமிடையிலான வேறுபாடு, உள்ளீடுகள் அவதானிக்கக்கூடியதாக மாறும் போது, அல்லது சாதனத்தின் பதிவு நீக்கப்படும் போது மட்டுமே வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

### 5.8 பன்னாட்டு நாணய நிதியத்துடன் (ப.நா.நி.) தொடர்புடைய நிலுவைகள்

வங்கியானது இலங்கை அரசின் வைப்பாளர் என்ற அடிப்படையைக் காட்டிலும் அதன் சொந்த உரிமையுடன் பன்னாட்டு நாணய நிதியத்துடன் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்றது. அந்த அடிப்படையிலேயே ப.நா.நிதியத்துடனான வங்கியின் அனைத்து கொடுக்கல்வாங்கல்களும் இந்நிதியியல் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ப.நா. நிதியத்துடனான அனுமதிப் பங்கு ஒரு சொத்தாக வங்கியினால் பதிவு செய்யப்படுவதுடன், அனுமதிப் பங்கிற்காக ப.நா. நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை வங்கியின் பொறுப்பாகப் பதிவு செய்யப்படுகிறது. ப.நா. நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒன்றுசேர்ந்த ஒதுக்குகள் பொறுப்பாகக் கணிக்கப்படுகின்றன. பன்னாட்டு நாணய நிதிய அனுமதிப் பங்கு சொத்தும் சிறப்பு எடுப்பனவு உரிமை வைத்திருப்பும் இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்படுவதுடன் ஏனைய அனைத்து பன்னாட்டு நாணய நிதியத்துடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பயனுறு வட்டிவீத முறையைப் பயன்படுத்தி பதிவழிப்புச் செலவில் அங்கீகரிக்கப்படுகின்றன. ப.நா. நிதியத்தினால் வெளியிடப்பட்டவாறு அறிக்கையிடல் திகதியிலுள்ள நாணயமாற்று வீதத்தினைப் பிரயோகித்து பன்னாட்டு நாணய நிதியச் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் மீள்மதிப்பீட்டிலிருந்து எழும் செலாவணி இலாபங்களும் நட்டங்களும் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

ப.நா. நிதியத்துடனான நிலுவைகள் தொடர்பான ஏனைய அனைத்துக் கட்டணங்களும் வட்டியும் வருமானக் கூற்றில் உடனடியாகப் பதிவு செய்யப்படுகின்றன.

### 5.9 காசும் காசுக்குச் சமமானவைகளும்

காசும் காசுக்கு சமமானவையும் வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களிலுள்ள காசு, குறுங்கால வைப்புகள் மற்றும் சந்தைப் பெறுமதி மாற்றங்களால் குறிப்பிடத்தக்க இடர்நேர்வில்லாததும் மூன்று மாதங்களுக்கு குறைந்த ஆரம்ப முதிர்ச்சியைக் கொண்ட உயர்ந்தளவு திரவத்தன்மையான நிதியியல் சொத்துக்கள் என்பவற்றை உள்ளடக்குவதுடன் இவை குறுங்கால கடப்பாடுகளை முகாமைப்படுத்துவதற்காக வங்கியினால் பயன்படுத்தப்படுகின்றன. காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் நிதியியல் நிலைமைக் கூற்றில் பதிவழிப்புச் செலவில் கொண்டு செல்லப்படுகின்றன.

உள்நாட்டு நாணய நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டதொரு வருமானத்தினை உருவாக்குவதுடன் செலவுகளையும் ஏற்கின்ற போதிலும் இவை காசின் நகர்வுடன் தொடர்புபட்டவையல்ல. இந்நடவடிக்கைகள் குறிப்பிட்ட சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தோற்றுவிப்பதுடன், முக்கியமாக இலங்கை அரசாங்கத்துடனான கொடுக்கல்வாங்கல்களையும் உள்நாட்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்களையும் உள்ளடக்குகின்றன. அரசாங்கத்துடனான கொடுக்கல்வாங்கல்கள் நாணயக் கொள்கைப் பொறிமுறையொன்றாக அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் கொள்வனவை உள்ளடக்குகின்றன. அத்தகைய கொள்வனவுகள், விற்பனைகள் மற்றும் அவற்றின் மீதான வட்டி என்பன இலங்கை மத்திய வங்கியின் பதிவுகளில் தனியே ஏட்டுப் பதிவுகளாகப் பிரதிபலிக்கப்படுகின்றன. இவை இந்நிதியியல் கூற்றில் 45 மற்றும் 46ஆம் இலக்கக் குறிப்புகளில் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

தனி அதிகாரம் கொண்ட சட்டபூர்வமான நிறுவனமாக விளங்கும் இலங்கை மத்திய வங்கியானது நாணய விதிச் சட்டத்திற்கிணங்க பொதுமக்களுக்கான நாணயத்தினை வெளியிடுகின்றது. மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் உடமையாளரின் பெயரில் மத்திய வங்கியின் மீதான கோரலாக இருப்பதனைப் பிரதிபலிக்கிறது. இது மத்திய வங்கியின் பொறுப்பொன்றாக இருக்கின்ற அதேநேரம் உடமையாளரின் கையிலுள்ள காசாகவும் இருக்கின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் அசைவு, காசுப்பாய்ச்சல் கூற்றுக்களை சமர்ப்பித்தலில் மத்திய வங்கிகளிடையே காணப்படும் தற்போதைய தொழிற்துறை நடைமுறைகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் நிதியிடல் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி காசு/ கொடுப்பனவுக் கட்டளைகளூடாக நாணயத் தாள்கள் மற்றும் குத்திகள் அல்லது மத்திய வங்கியின் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் என்பன வடிவில், பெறப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளுக்காக வழங்குநர்கள் மற்றும் ஊழியர்கள் என்போரை உள்ளடக்கிய பல்வேறுபட்ட பணம் கொடுபட வேண்டியோருக்கு காசு பகிர்ந்தளிக்கிறது. இது ஒன்றில் சுற்றோட்டத்திலுள்ள நாணயப் பொறுப்புடன் அல்லது வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களினால் வைத்திருக்கப்படும் வைப்புக்களுடன் சேர்க்கப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு நோக்கங்களுக்கான நாணயப் பயன்பாட்டின் அத்தகைய வடிவங்கள் இலங்கை மத்திய வங்கியின் காசு வெளிப்பாய்ச்சலில் ஒரு பகுதியை உருவாக்குகிறது.

காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக, காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் மேலே வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, காசு/ கொடுப்பனவுக் கட்டளைகளின் வெளிப்பாய்ச்சல் நீங்கலான, காசு மற்றும் காசிற்குச் சமமானவற்றை உள்ளடக்கியுள்ளன.

### 5.10 மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள்

மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் நிதியியல் நிலைமைக் கூற்றில் சொத்துக்களாகத் தொடர்ந்தும் பதிவு செய்யப்படுகின்றன. மீள்கொள்வனவு செய்வதற்கான கடப்பாடு (மீள்கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கையின் கீழ் விற்கப்பட்ட

துணைத் தகவல்கள்
ஆளுகை
வங்கியை முகாமைசெய்தல்
வங்கியின் வகிபாகம்
நிதியியல் அறிக்கைகள்

பிணையங்கள்) பொறுப்பொன்றாக அங்கீகரிக்கப்படுகின்றது. மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களில் விற்பனை விலைக்கும் மீள்கொள்வனவு விலைக்குமிடையேயான வேறுபாடும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களில் கொள்வனவு விலைக்கும் விற்பனை விலைக்குமிடையேயான வேறுபாடும் முறையே செலவினத்தையும் வருமானத்தையும் பிரதிபலிப்பதுடன் இது வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் (மீள்விற்பனை செய்வதற்கான உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்) நிதியியல் நிலைமைக் கூற்றில் ஒரு சொத்தாகப் பதிவு செய்யப்படுகின்றன. மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஆகிய இரண்டு கொடுக்கல்வாங்கல்களும் அட்டுறு வருமானம் அல்லது செலவினம் ஏதுமிருப்பின் அவற்றை உள்ளடக்கி பதிவழிக்கப்பட்ட செலவில் அறிக்கையிடப்படுகின்றன.

**5.11 துணைநில் வைப்பு மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதிகள்**

2014 பெப்புருவரி 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் துணைநில் வைப்பு வசதியானது [முன்னர் துணைநில் மீள்கொள்வனவு வசதி (மீள்கொள்வனவு)] பிணை ஒதுக்கங்கள் இல்லாத “தூய வைப்புக்கள்” ஆக மாற்றப்பட்டன. எனவே, பங்கேற்கின்ற நிறுவனங்கள் அவற்றின் மிகையான நிதியங்களை தூய வைப்புக்களாக துணைநில் வைப்பு வசதி வீதத்தில் துணைநில் வைப்பு வசதியின் நாளாந்த அடிப்படையில் முதலிடுகின்றன.

துணைநில் கடன்வழங்கல் வசதியின் [முன்னர் துணைநில் நேர்மாற்று மீள்கொள்வனவு (நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி)] நடைமுறைகள் துணைநில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியினை ஒத்ததாகவே காணப்படுகின்றதுடன் இரண்டும் நிதியியல் நிலைமைக்கூற்றில் பதிவழிக்கப்பட்ட செலவில் அங்கீகரிக்கப்படுகின்றன.

**5.12 இலங்கை மத்திய வங்கிப் பிணையங்கள்**

வங்கியானது அதன் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளின் கீழ் சந்தையிலுள்ள மேலதிகத் திரவத் தன்மையை உள்ளீர்த்துக் கொள்ளும் பொருட்டு காலத்திற்குக் காலம் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குகின்றது. வழங்கப்படும் பிணையங்கள் பொறுப்புகளாகப் பதிவு செய்யப்படுகின்றன.

**5.13 இலங்கை அரச பிணையங்கள்**

இலங்கை அரச பிணையங்கள் இலங்கை அரசிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களையும் முறிகளையும் உள்ளடக்குகின்றன. இலங்கை அரச பிணையங்களிலான முதலீடுகள் நிதியியல் நிலைமை கூற்றில் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியில் பதியப்படுகிறது.

**5.14 அரசிற்கான தற்காலிக முற்பணங்கள்**

திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 89இன் கீழ் இலங்கை அரசிற்கு வழங்கப்பட்ட நேரடி தற்காலிக முற்பணங்களை அரசிற்கான கடன்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இவை பின்னர் பதிவழிக்கப்பட்ட செலவில் அளவிடப்படுகின்றன.

**5.15 ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள்**

ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் பதிவழிக்கப்பட்ட செலவில் அங்கீகரிக்கப்பட்டு கொண்டு செல்லப்படுகின்றன.

**5.16 பிணையங்களின் கடன்பாடுகளும் பிணையங்களின் கடன் வழங்குதலும்**

வங்கி அதன் நாணயக் கொள்கை தொழிற்பாடுகளின் கீழ் காலத்திற்குக் காலம் முக்கிய நிறுவன ரீதியான முதலீட்டாளர்களிடமிருந்து அரச பிணையங்களைக் கடன்படுகிறது. இவ்வாறு கடன்பட்ட பிணையங்கள் சந்தையில் காணப்படும் மிகையான திரவத்தன்மையினை ஈர்ப்பதற்கு மீள்கொள்வனவு தொழிற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

பிணையங்களின் கடன்பாடுகள் என்பது பிணையங்களைத் திருப்புவது, இணங்கப்பட்ட கட்டணத்தினை செலுத்துவது, வழங்கலின் போது ஏதேனும் தவறு இடம் பெறும் சந்தர்ப்பத்தில் சந்தை வீதங்களில் இழப்பீட்டினைச் செலுத்துவது (வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் முதனிலைச் சந்தை பங்கேற்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட சந்தை வீதங்களின் படி) என்பனவற்றிற்காக வங்கியிடமிருந்து பெறப்படும் நிபந்தனையற்ற பூரணமான உத்தரவாதமெனப்படும்.

குறிப்பிட்ட நேரத்தில் மீள்கொள்வனவு தொழிற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படாத கடன்பட்ட பிணையங்களினது சந்தைப் பெறுமதி எதிர்பாராத பொறுப்புக்களாக பதிவு செய்யப்படுகின்றன. செலுத்தப்பட்ட தரகு அட்டுறு அடிப்படையில் செலவிடப்படுகின்றது.

கடன் வழங்கும் கொடுக்கல்வாங்கல்களின் கீழ் இணைத்தரப்பினருக்கான பிணையங்களின் மாற்றல், சொத்தாண்மையின் இடர்நேர்வும் வெகுமதியும் மாற்றல் செய்யப்பட்டால் மட்டுமே நிதியியல் நிலைமைக் கூற்றில் பிரதிபலிக்கப்படும்.

**5.17 அலுவலர்களுக்கான கடன்கள்**

வங்கியின் அலுவலர்கள் சலுகை வட்டி வீதத்தின் கீழ் கடன் வசதிகளைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாவர். 2008ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்ட இக்கடன்கள் ப.நி.அ.நி. 9 இன்படி “கழிவிடப்பட்ட காசுப்பாய்ச்சலைப் பயன்படுத்தி சீர்மதிப்புப் பெறுமதியில்” பெறுமதியிடப்பட்டுள்ளன.

**கழிவு வீதம்** - நிறையேற்றப்பட்ட சராசரி வைப்பு வீதம் மீதான நீண்ட காலப் பணவீக்க இலக்கிடலை அடிப்படையாகக் கொண்டு இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் தொகுக்கப்படும் வீதத்துடன் வங்கியின் கணக்காய்வுக் குழுவினால் இணங்கப்பட்டவாறு இடர்நேர்வுக் கட்டணத்திற்காக 1 சதவீதத்தைச் சேர்த்த வீதம் கழிவு வீதமாகப் பயன்படுத்தப்படுவதோடு, கடன் காலத்தைப் பொறுத்து இது வேறுபடுகின்றது.

ஆண்டின் இறுதியிலுள்ளவாறான அலுவலர்களுக்கான கடன்களின் தற்போதைய பெறுமதிக்கும் ஆண்டின் ஆரம்பத்திலுள்ளவாறான அலுவலர்களுக்கான கடன்களின் தற்போதைய பெறுமதிக்கும் இடையிலுள்ள வித்தியாசமானது, சலுகை வீதத்தில் மேற்படி கடன் வழங்கப்படுவதால் வங்கிக்கு ஏற்க நேரிடுகின்ற செலவைப் பதிவதற்காக வருடாந்தம் பதிவழிக்கப்படும் என்பதோடு, சந்தை வீதத்தில் இக்கடன் வழங்கப்பட்டிருப்பின் வங்கியினால் ஈட்ட

முடியுமாயிருக்கும் வருமானத்தைப் பதிவு செய்யும் பொருட்டு, அதற்குச் சமமான தொகை ஏனைய வருமானத்தில் பதியப்படும்.

**சீர்மதிப்பு பெறுமதியைக் கணிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் கருதுகோள்கள்**

- பணியாளர்களுக்கான கடன்கள் வழங்கப்பட்ட திகதியாக சனவரி 01 ஆம் திகதியைக் கருதுதல்.
- மேற்படி கடன்களில் எவ்விதத் திருத்தமும் அல்லது முன்கூட்டிய தீர்ப்பனவு எதுவும் செய்யப்படவில்லை எனக் கருதுதல்.

**5.18 தங்கம்**

பன்னாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவத்தினைக் குறித்துரைக்கின்ற மத்திய வங்கிச் சட்டத்தின் 40(2)ஆம் பிரிவு அத்தகைய தங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கொடுகடன் நிலுவைகள் உட்பட தங்கத்தை பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக இ.ம.வங்கி வைத்திருக்கலாம் எனக் கூறுகிறது. 94(3) பிரிவானது, இலாபங்களைப் பகிர்ந்தளிப்பதற்கு முன்னர், ஆளுகைச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறு சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட நிதியியல் அறிக்கை கட்டமைப்பிற்கிணங்க வருமானக் கூற்றில் பதிவுசெய்யப்பட்ட தங்கத்தின் நிலைகள் காரணமாக சந்தை விலை மறுமதிப்பீட்டால் எழுகின்ற தேறாத இலாபங்களை விதித்துரைக்கிறது. மேற்படி தங்கமானது பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக இருப்பதோடு பொதுவான வர்த்தக நடவடிக்கைகளின் போது ஒரு வர்த்தகப் பண்டமாகப் பயன்படுத்தப்படாததால் தங்கமானது சீர்மதிப்புப் பெறுமதியில் மதிப்பிடப்பட்டு இலாபங்கள் அல்லது நட்டங்கள் வருமானக் கூற்றுக்கு மாற்றப்படுகின்றன. இலாப ஒதுக்கீடுகளுக்கு முன்னர் தங்கத்திலிருந்தான தேறல் செய்யப்படாத இலாபங்கள் தொடர்புபட்ட ஒதுக்குக் கணக்குகளுக்கு மாற்றப்படுகின்றன.

**5.19 நாணய இருப்பு**

வங்கியின் இருப்புக்களானது, சுற்றோட்டத்திற்கு இன்னும் வழங்கப்படாத புதிய நாணயங்களை உள்ளடக்கியுள்ளது. புதிய நாணயத்தாள்கள் மற்றும் குத்திகளின் உற்பத்தி மற்றும் வடிவமைப்புடன் தொடர்பான செலவுகள் ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. சுற்றோட்டத்திற்கு வழங்கப்பட்ட புதிய நாணயத்தாள்கள் மற்றும் குத்திகளிற்கான செலவானது நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் நிர்ணயிக்கப்படுவதுடன், வழங்கப்படும் வேளையில் வருமானக்கூற்றில் பதியப்படுகின்றது. மெதுவாக அசையும் இருப்புக்களுக்கு படி மேற்கொள்ளப்படுகின்றது.

**5.20 ஏனைய இருப்புக்கள்**

ஏனைய இருப்புக்கள் கிரயத்தில் அல்லது தேறிய விற்றுப் பெறக்கூடிய பெறுமதி இவற்றில் குறைவான பெறுமதியில் வைத்திருக்கப்படுகின்றது. கிரயமானது நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது.

**5.21 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

காணி மற்றும் கட்டடம் தவிர்ந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணம், கிரயத்திலிருந்து ஒன்றுசேர்ந்த பெறுமானத் தேய்வு ஏற்பாடு மற்றும் பெறுமதி இழப்பு கழித்த தொகையில் கூறப்பட்டுள்ளது. அங்கீகரிப்பு பிரமாணம் பூர்த்தி செய்யப்படும் பொழுது இந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பகுதிகளை மாற்றீடு செய்யும் போது ஏற்படும் செலவினங்களையும் இந்தக் கிரயம் உள்ளடக்கியிருக்கிறது.

காணி மற்றும் கட்டடங்கள் மீள்மதிப்பிடப்படும் திகதியில் சீர்மதிப்புப் பெறுமதியிலிருந்து பின்னர் ஒன்றுசேர்ந்த பெறுமானத் தேய்வுகளும், பின்னர் ஒன்றுசேர்ந்த பெறுமதி இழப்பு நட்டங்களும் கழித்த தொகையான மீள்மதிப்பீட்டுப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

இறையிலி காணி நீங்கலாக, பின்வரும் மதிப்பிடப்பட்ட பயன்மிக்க காலத்தைப் பயன்படுத்தி தேய்மானம் நேர்கோட்டு முறையில் கணிக்கப்பட்டிருக்கிறது.

| சொத்தின் வகை | பயனுள்ள ஆயுட்காலம் |
|---|---|
| இறையிலி காணியிலுள்ள கட்டடங்கள் | 50 ஆண்டுகளுக்கு மேல் |
| குத்தகைக் காணிகளிலுள்ள கட்டடங்கள் | 50 ஆண்டுகள் அல்லது குத்தகைக் காலம் இவற்றில் குறைந்தது |
| பொறியும் பொறியின் முக்கிய பகுதிகளும் | 20 ஆண்டுகள் |
| தளபாடங்கள் மற்றும் கருவிகள் | 10 ஆண்டுகள் |
| உந்து ஊர்திகள் | 5 ஆண்டுகள் |
| 2014 இலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட உந்து ஊர்திகள் | 10 ஆண்டுகள் |
| கணனி வன்பொருள் | 4 ஆண்டுகள் |
| ஏனையவை | 3 ஆண்டுகள் |

நிகழ்வுகள் அல்லது சூழ்நிலை மாற்றங்கள் எடுத்துச் செல்லும் பெறுமதியானது மீளப்பெற முடியாதென சுட்டிக்காட்டும் பொழுது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் எடுத்துச் செல்லும் பெறுமதிகள் பெறுமதி இழப்புக்காக மீளாய்வு செய்யப்படுகின்றன.

வங்கியின் காணி மற்றும் கட்டடம் என்பனவற்றை மீள்மதிப்பிடுவதற்கான கொள்கை யாதெனில் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தடவை அல்லது குறிப்பிடத்தக்க பெறுமதிச் சீராக்கம் தேவையென தெரியவரும் பொழுது ஏதேனும் குறுகிய காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதாகும். எந்த மீள்மதிப்பீட்டு மிகையும் வருமானக்கூற்றிலே முன்னர் அங்கீகரிக்கப்பட்ட அதே சொத்தின் மீள்மதிப்பீட்டு வீழ்ச்சியை மறுதலையாக்கும் சந்தர்ப்பம் நீங்கலாக நிதியியல் நிலைமைக் கூற்றின் பங்குரிமையில் உள்ளடக்கப்பட்டுள்ள மீள்மதிப்பீட்டு ஒதுக்கிற்கு வரவு வைக்கப்படும். அவ்வாறு மறுதலையாக்கும் சந்தர்ப்பத்தில் அந்த அதிகரிப்பானது வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகிறது. மீள்மதிப்பீட்டுப் பற்றாக்குறையானது, அப்பற்றாக்குறை அதே சொத்தின் முன்னைய மிகையை நேரடியாக எதிரீடு செய்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கிலுள்ள மதிப்பீட்டு மிகையை நேரடியாக எதிரீடு செய்யும் சந்தர்ப்பங்கள் தவிர்த்து, வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. விற்கப்படுகையில், குறிப்பிட்ட விற்கப்படுகின்ற சொத்தோடு தொடர்புடைய எந்த மீள்மதிப்பீட்டு மிகையும், பிடித்துவைக்கப்படும் வருவாய்களுக்கு மாற்றப்படுகின்றது.

ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் விடயமொன்று விற்கப்படுகையில் அல்லது அதன் பாவனை அல்லது விற்பனையின் மூலம் எதிர்கால பொருளாதார நன்மைகளை வழங்காது என எதிர்பார்க்கப்படும் போது அது அங்கீகரிப்பிலிருந்தும் நீக்கப்படுகின்றது. அச்சொத்தின் அங்கீகரிப்பு

நீக்கப்படுவதன் மூலம் உருவாகின்ற ஏதாவது இலாபம் அல்லது நட்டம் (தேறிய விற்பனைப் பெறுகைக்கும் சொத்தின் எடுத்துச் செல்லும் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாகக் கணிக்கப்பட்டது) சொத்தின் அங்கீகரிப்பு நீக்கப்பட்ட ஆண்டின் வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படுகிறது. பொருத்தமானவிடத்து சொத்தின் எஞ்சிய பெறுமதிகள், பயனுள்ள ஆயுட் காலங்கள் மற்றும் முறைகள் கிரமமாக மீளாய்வு செய்யப்படுகின்றன.

மூலதன நடப்பு வேலைகள் கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன. இவை கட்டிடங்கள், பாரிய பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் முறைமை அபிவிருத்திகளின் கட்டுமானத்தின் போது நேரடியாக ஏற்படும் மூலதனத்தன்மை கொண்ட செலவுகளாகவும் மூலதனவாக்கத்தை எதிர்நோக்கியிருப்பனவாகவும் காணப்படுகின்றன.

### 5.22 குத்தகைகள்

ஒப்பந்தமொன்றை ஆரம்பிக்கும் போது வங்கியானது அவ்வொப்பந்தம் குத்தகையா அல்லது அவ்வொப்பந்தம் குத்தகையைக் கொண்டிருக்கின்றதா என்பதை மதிப்பிடுகின்றது. ஒரு ஒப்பந்தமானது, வெகுமதி ஒன்றிற்கு பரிமாற்றாக, குறிப்பிட்ட சொத்தொன்றின் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான உரிமையை குறிப்பிட்ட காலப்பகுதிக்குக் கொண்டிருக்குமாயின், அது குத்தகையாக அல்லது குத்தகையைக் கொண்டிருப்பதாகக் கருதப்படும். ஒரு ஒப்பந்தமானது குறிப்பிட்ட சொத்தொன்றின் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான உரிமையைக் கொண்டிருக்கின்றதா என்பதனை மதிப்பிடுவதற்கு, வங்கியானது ப.நி.அ.நி 16இிலுள்ள குத்தகையின் வரைவிலக்கணத்தைப் பயன்படுத்துகின்றது.

#### குத்தகையாளராக வங்கி செயற்படுதல்

வங்கியானது சொத்துப் பாவனை உரிமை மற்றும் குத்தகைப் பொறுப்பினை குத்தகையை ஆரம்பிக்கும் திகதியில் அங்கீகரிக்கிறது. சொத்துப் பாவனை உரிமையானது ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுவதுடன் இது ஆரம்பத் திகதியில் அல்லது அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஏதாவது குத்தகைக் கொடுப்பனவிற்கான குத்தகைப் பொறுப்புச் சீராக்கத்தின் ஆரம்பத் தொகையுடன் ஏற்பட்ட ஏதாவது ஆரம்ப நேரடிச் செலவுகள் மற்றும் அகற்றுவதற்கான செலவின் மதிப்பீட்டைக் கூட்டி காணி அல்லது அலுவலகப் பணிமனைக்கு மேற்கொள்ளப்பட்ட மேமம்படுத்தல்களை நீக்கிய தொகையை உள்ளடக்கியிருக்கும்.

சொத்துப் பாவனை உரிமையானது பின்னர், ஆரம்பத் திகதியிலிருந்து குத்தகைக் கால முடிவு வரைக்கும் நேர்கோட்டு முறையைப் பயன்படுத்தி பெறுமானத்தேய்வு செய்யப்படும். மேலும், சொத்துப் பாவனை உரிமையானது காலக்கிரமத்தில் பெறுமதியிழப்பு நட்டங்களினால், ஏதுமிருப்பின், குறைவதுடன் குத்தகைப் பொறுப்பின் சில மீள்மதிப்பீடுகளுக்காகச் சீராக்கப்படுகிறது.

ஆரம்பத்தில் பொறுப்பானது, ஆரம்பத் திகதியில் செலுத்தப்படாத குத்தகைக் கொடுப்பனவுகளை குத்தகையில் குறிப்பிடப்பட்டிருக்கும் வட்டி வீதத்தினால், அல்லது அந்த வீதம் தீர்மானிக்கப்பட முடியாதவிடத்து, வங்கியின் அதிகரித்துச் செல்லும் கடன்பாட்டு வீதத்தினால் கழிவிட்ட தற்போதைய பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

குத்தகை பொறுப்பின் அளவீட்டில் உள்ளடக்கப்பட்ட குத்தகைக் கொடுப்பனவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்:

- தவிர்க்க முடியாத நிலையான கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக நிலையான கொடுப்பனவுகள்;
- சுட்டெண் ஒன்றில் அல்லது ஒரு வீதத்தில் தங்கியிருக்கும் மாறுபடக்கூடிய குத்தகைக் கொடுப்பனவுகள் ஆரம்பத் திகதியிலுள்ளவாறான சுட்டெண் அல்லது வீதத்தைப் பயன்படுத்தி ஆரம்பத்தில் அளவிடப்படுகின்றன;
- எஞ்சியிருக்கும் பெறுமதி உத்தரவாதத்தின் கீழ் செலுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகைகள்; அத்துடன்
- செயற்படுத்துவதற்கு உறுதியான போதுமான ஆதாரங்களை வங்கி கொண்டிருக்கும் போது கொள்வனவுத் தெரிவின் கீழ் செயற்பாட்டு விலை, நீட்டிப்பதற்குரிய தெரிவை செயற்படுத்துவதற்கு உறுதியான போதுமான ஆதாரங்களை வங்கி கொண்டிருக்கும் போது தெரிவுக்குரிய புதுப்பித்தல் காலப்பகுதியிலான குத்தகைக் கொடுப்பனவுகள் மற்றும் வங்கி உரிய காலத்திற்கு முன்னர் முடிவுறுத்தாதென உறுதியாக நம்புவதற்குரிய போதுமான ஆதாரங்கள் இருந்தாலொழிய, குத்தகையினை உரிய காலத்திற்கு முன்னர் முடிவுறுத்துவதற்கான தண்டப் பணம்

குத்தகைப் பொறுப்பானது பயனுறு வட்டி முறையைப் பயன்படுத்தி பதிவழிக்கப்பட்ட செலவில் அளவிடப்படுகின்றது. இது, சுட்டெண் அல்லது வீதத்திலான மாற்றத்தினால் எதிர்காலக் குத்தகைக் கொடுப்பனவுகளில் மாற்றமொன்று ஏற்படுகையில், எஞ்சிய பெறுமதி உத்தரவாதத்தின் கீழ் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகை தொடர்பில் வங்கியின் மதிப்பீட்டில் மாற்றமொன்று ஏற்படுகையில், வங்கி நீட்டிப்புத் தெரிவைச் செயற்படுத்துவது தொடர்பில், அதன் மதிப்பீட்டை மாற்றுகையில் மற்றும் உரிய காலத்திற்கு முன்னர் முடிவுறுத்துவதற்கான தெரிவிற்கான தண்டப்பணம் தொடர்பிலான வங்கியின் மதிப்பீடுகளில் மாற்றங்கள் ஏற்படுகையில் அல்லது தவிர்க்க முடியாத நிலையான குத்தகைக் கொடுப்பனவுகள் திருத்தப்படுகையில் மீள அளவிடப்படுகின்றது.

குத்தகைப் பொறுப்பு இம்முறையில் மீளஅளவிடப்படும் போது, இதற்கு ஒத்திசைவான சீராக்கமானது சொத்துப் பாவனை உரிமையின் கொண்டு செல்லும் பெறுமதிக்கு மேற்கொள்ளப்படுகின்றது, அல்லது சொத்துப் பாவனை உரிமை கொண்டு செல்லும் பெறுமதி பூச்சியத்திற்குக் குறைவடைந்திருப்பின் வருமானக் கூற்றில் பதியப்படுகிறது.

வங்கியானது நிதியியல் நிலைமைக் கூற்றில் சொத்துப் பாவனை உரிமையினை "ஆதனம், பொறி மற்றும் உபகரணம்" (குறிப்பு 20) இனுள்ளும் குத்தகைப் பொறுப்புக்களை "நானாவிதப் பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள்" (குறிப்பு 33) இனுள்ளும் சமர்ப்பிக்கிறது.

### 5.23 அருவச் சொத்துக்கள்

கணனி வன்பொருள்களில் ஒருங்கிணைந்த பகுதியாக உள்ளடங்காதுள்ள கணனி மென்பொருட்கள் அருவச் சொத்துக்களாகக் காட்டப்பட்டு கிரயத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. ஆரம்ப அங்கீகரிப்பைத் தொடர்ந்து இவ்வருவச் சொத்துக்கள் கிரயத்திலிருந்து ஒன்றுசேர்ந்த பதிவழிப்பு மற்றும் ஒன்றுசேர்ந்த பெறுமதியிழப்பு கழிக்கப்பட்ட தொகையில் கொண்டு செல்லப்படுகின்றன. கணணி மென்பொருள் சொத்துக்கள் மீதான தொடர்ந்துவரும் செலவுகள், அவை குறித்த சொத்துடன் தொடர்புடைய எதிர்காலப் பொருளாதார நன்மைகளை அதிகரித்தால் மட்டுமே மூலதனமாக்கப்படுகின்றன. ஏனைய அனைத்துச் செலவுகளும் ஏற்படும்போது செலவாக அங்கீகரிக்கப்படுகின்றன.

சொத்துக்களில் திகழ்கின்ற எதிர்கால பொருளாதார நன்மைகளின் எதிர்பார்க்கப்பட்ட நுகர்வு வடிவத்தை மிகமுக்கியமாக பிரதிபலிக்கின்றது. பயன்பாட்டிற்கு கிடைப்பனவாகவிருக்கும் திகதியிலிருந்து கடன்பதிவழிப்பு என்பது நேர் கோட்டு அடிப்படையில் 4 வருட பயன்பாட்டு காலத்தின்

வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

பின்வரும் ஏதேனுமிருப்பின் அனைத்தையும் மாத்திரம் நிறுவனம் பிரதிபலிக்கலாம் உள்ளக கருத்திட்டத்தின் அபிவிருத்தி கட்டத்திலிருந்து அபிவிருத்தியிலிருந்து தோன்றுகின்ற அருவச் சொத்தென்பது அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

(அ) அருவச் சொத்தை நிறைவுசெய்வதின் தொழில்நுட்பச் சாத்தியம் ஆகவே, இது பயன்பாட்டிற்கு அல்லது விற்பனைக்கு கிடைப்பனவாகவிருக்கும்.

(ஆ) அருவச் சொத்தை பூர்த்தி செய்வதற்கான அதனை பயன்படுத்துவதற்கு அல்லது விற்பனை செய்வதற்கான அதன் உள்ளார்ந்தம்.

(இ) அருவச் சொத்தை பயன்படுத்துவதற்கான அல்லது விற்பனை செய்வதற்கான அதன் ஆற்றல்

(ஈ) அருவச் சொத்து எவ்வாறு சாத்தியமான எதிர்கால பொருளாதார நன்மைகளை உருவாக்கும். ஏனையவற்றிற்கு மத்தியில், அருவச் சொத்தின் வெளியீட்டிற்கான ஏற்கனவேயுள்ள சந்தைப்படுத்தலை அல்லது அருவச் சொத்தின் இருப்பை அல்லது அருவச் சொத்து உள்ளார்ந்த ரீதியில் பயன்படுத்தப்படுவதை, அருவச் சொத்தின் பயன்பாட்டை எடுத்துரைக்கலாம்.

(உ) அருவச் சொத்தின் உருவாக்கத்திற்கு, பயன்பாட்டிற்கு, அல்லது விற்பனைக்கு போதுமான தொழில்நுட்ப, நிதியியல் மற்றும் ஏனைய மூலங்களின் கிடைப்பனவு.

(ஊ) அதன் அபிவிருத்திக் காலப்பகுதியில் அருவச் சொத்திற்கான நம்பகத்தன்மையையும் செலவிடுதலையும் அளவிடுவதற்கான அதன் இயலாற்றல்.

### 5.24 ஏனைய சொத்துக்கள்

ஏனைய சொத்துக்கள் எதிர்பார்க்கப்பட்ட தேறத்தக்க பெறுமதியில் முன்கொண்டு செல்லப்படுகின்றன.

### 5.25 நிதியியல்லாச் சொத்துக்களின் பெறுமதியிழப்பு

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் வங்கி அதன் நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதியிழந்திருக்கலாம் என்பதற்கான அறிகுறிகள் உள்ளதா என்பதைத் தீர்மானிப்பதற்காக அவற்றின் முன்கொண்டு செல்லும் பெறுமதியை மீளாய்வு செய்கின்றது. அத்தகைய அறிகுறிகள் காணப்படின், சொத்துக்களின் மீளப் பெறக்கூடிய தொகையின் மதிப்பீடொன்றை வங்கி மேற்கொள்கின்றது.

பெறுமதியிழப்பு பரீட்சிப்பிற்காக, ஏனைய சொத்துக்களின் காசுப்பாய்ச்சல்களினால் பெருமளவிற்குப் பாதிக்கப்படாத, தொடர்ச்சியான பாவனையின் மூலம் காசுப்பாய்ச்சல்களை உருவாக்கக்கூடிய சொத்துக்களின் மிகச் சிறிய வகைக்குள் சொத்துக்கள் ஒன்று திரட்டப்பட்டன.

ஒரு சொத்தின் “மீளப்பெறக்கூடிய பெறுமதி” என்பது அதன் “பயன்பாட்டிலுள்ள பெறுமதி” மற்றும் அதன் சீர்மதிப்புப் பெறுமதியிலிருந்து விற்பதற்கான செலவைக் கழித்த பெறுமதி என்பவற்றில் கூடிய பெறுமதியாகும். பயன்பாட்டிலுள்ள பெறுமதியானது பணத்தின் காலப்பெறுமதியின் தற்போதைய சந்தை மதிப்பீடு மற்றும் சொத்துக்கு உரித்தான இடர்நேர்வுகளைப் பிரதிபலிக்கும் வரிக்கு முன்னரான கழிவு வீதம் ஒன்றைப் பயன்படுத்தி தற்போதைய பெறுமதிக்கு கழிவிடப்பட்ட மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச்சல்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

ஒரு சொத்தின் கொண்டு செல்லல் பெறுமதி அதன் மீளப்பெறத்தக்க தொகையை விஞ்சும் சந்தர்ப்பத்தில் பெறுமதியிழப்பு நட்டம் அங்கீகரிக்கப்படுகின்றது.

பெறுமதியிழப்பு நட்டமானது, சொத்தின் கொண்டு செல்லும் பெறுமதியானது, பெறுமதியிழப்பு நட்டம் அங்கீகரிக்கப்படாத சந்தர்ப்பத்தில், தேய்மானம் அல்லது பெறுமதியிழப்பு நீங்கலாக தீர்மானித்திருக்கக்கூடிய கொண்டு செல்லும் பெறுமதியை விஞ்சாத அளவுக்கு மாத்திரமே மறுதலையாக்கப்படுகின்றது.

### 5.26 ஏற்பாடுகள்

கடந்த கால நிகழ்வொன்றின் விளைவாக, வங்கி தற்போதைய கடப்பாடொன்றினை (சட்ட ரீதியான அல்லது அமைப்பு ரீதியான) கொண்டிருந்து அக்கடப்பாட்டைத் தீர்ப்பதற்காக பொருளாதார நன்மைகளை உள்ளடக்கியிருக்கும் வளங்களின் வெளிப்பாய்ச்சல் தேவைப்படுவதுடன், இக்கடப்பாட்டுத் தொகையை நம்பத் தகுந்த மதிப்பீடொன்று மூலம் அறிய முடியுமாயின் ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. ஏற்பாடொன்று மீளளிக்கப்படும் என வங்கி எதிர்பார்க்குமிடத்து அந்த மீளளிப்பு இறுதியில் நிச்சயமாக ஏற்படும் வேளையில் மட்டும் தனியான சொத்தாக அங்கீகரிக்கப்படுகின்றது.

### 5.27 சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் அதனை வைத்திருப்பவரின் சார்பாக வங்கி மீதான கோரலைக் கொண்டிருப்பதனைக் காட்டுகின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்துக்கான பொறுப்பு நிதியியல் நிலைமைக் கூற்றில் முகப்புப் பெறுமதியில் பதியப்பட்டுள்ளது.

### 5.28 நிர்ணயிக்கப்பட்ட நன்மைத்திட்டங்கள்

நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்களானவை, நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பு திட்டங்கள் தவிர்ந்த ஏனைய தொழிலுக்கு பின்னரான நன்மைத் திட்டங்களாகும். ஓய்வூதியம், விதவைகள் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியம், விதுரர் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியம், இளைப்பாற்றுப் பணிக்கொடை மற்றும் வேலைக் காலத்திற்குப் பின்னரான மருத்துவ நலன்கள் போன்ற நிர்ணயிக்கப்பட்ட நன்மைகள் திட்டங்களை வங்கி தொழிற்படுத்துகின்றது. முதல் மூன்று திட்டங்களையும் பொறுத்தவரையில் வங்கியும் தகுதியுள்ள பயனாளிகளும் தனித்தனியாக நிர்வகிக்கப்படும் நிதியங்களுக்குப் பங்களிப்பினைச் செய்கின்றனர்.

நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் நன்மைகளின் கிரயமானது எறிவு செய்யப்பட்ட அலகு கொடுகடன் ஆயுட்கால மதிப்பீட்டு முறையை உபயோகித்து ஒவ்வொரு திட்டத்திற்கும் தனித்தனியாகத் தீர்மானிக்கப்படுகின்றது. நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள் தொடர்பாக வங்கியின் கடப்பாடு, ஒவ்வொரு திட்டத்திற்கும் தனித்தனியாக, ஊழியர்கள் அவர்களுடைய தற்போதைய மற்றும் முன்னைய காலங்களில் வழங்கிய பணிகளுக்கு பிரதிபலனாக ஈட்டிய எதிர்கால நன்மைகளை மதிப்பீடு செய்வதன் மூலம் கணிக்கப்படுவதுடன், அந்நன்மை அதன் தற்போதைய மதிப்பினை நிர்ணயம் செய்வதற்காக கழிவீடு செய்யப்படுகின்றது. அங்கீகரிக்கப்படாத ஏதாவது கடந்த காலச் பணி செலவுகள் மற்றும் திட்டச் சொத்துக்களின் சீர்மதிப்புப் பெறுமதி என்பன கழிக்கப்படும். கழிவீடு செய்யப்படும் வீதமானது, சராசரி மீதமுள்ள பணிக் காலத்திற்கு ஏறத்தாழ முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட அரச பிணையங்களின் மதிப்பீட்டுத் திகதியன்றுள்ள விளைவு வீதமாகும். குறிப்பு 32இல் வெளிப்படுத்தப்பட்டுள்ள

அனைத்து முதன்மையான ஆயுட்கால மதிப்பீட்டு அநுமானங்களும் வருடாந்தம் திருத்தப்படும்.

**5.29 நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள்**

ஊழியர்கள், ஏற்புடைய நியதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கிணங்க ஊழியர் சேம நிதியப் பங்களிப்புக்களுக்கும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புக்களுக்கும் தகுதியுடையவர்களாவர். வங்கியானது ஊழியர்களின் மொத்தச் சம்பளத்தில் ஊழியர் சேம நிதியத்திற்கு 24 சதவீதத்தினையும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3 சதவீதத்தினையும் முறையே பங்களிப்புச் செய்கிறது. இவை தனித்தனியாக நிருவகிக்கப்பட்டு வரும் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களாகும்.

நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களின் பங்களிப்பிற்கான கடப்பாடுகள், வருமானக் கூற்றில் அவை ஏற்படும் போது செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றன.

**5.30 கொடைகள்**

கொடைகள் (பெறப்படும் என்பதற்கும் அத்துடன் அவற்றுடன் இணைந்த நிபந்தனைகள் ஏதுமிருப்பின் அவை இணங்கியொழுகப்படும் என்பதற்குமான உறுதிப்பாடு இருக்குமிடத்து) அவற்றின் சீர்மதிப்புப் பெறுமதியில் அங்கீகரிக்கப்பட்டு, பங்குரிமை மூலதனத்தின் கீழ் காட்டப்படும். கொடைகள் செலவின விடயங்களுடன் தொடர்பானதாக இருக்கும் பொழுது, ஒழுங்குமுறையானதொரு அடிப்படையில் இழப்பீடு செய்வதற்கெனக் கருதப்பட்ட செலவினங்களுக்கு அவற்றை ஈடுசெய்வதற்குத் தேவையான காலப்பகுதிக்கு வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும். கொடைகள் சொத்தொன்றுடன் தொடர்பானதாக இருக்குமிடத்து, சீர்மதிப்புப் பெறுமதி பிற்போடப்பட்ட அரச கொடைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு ஏற்புடைய சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக் காலம் வரை, ஏற்புடைய சொத்தின் தேய்மானக் கொள்கையுடன் இசைந்த விதத்தில் ஒழுங்குமுறையான அடிப்படையில் வருமானக்கூற்றுக்கு விடுவிக்கப்படும்.

**5.31 எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்**

எதிர்பாரா பொறுப்புக்களானவை, நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிகழ்காலக் கடப்பாடுகளின் மூலம் மட்டும் உறுதி செய்யப்படுகின்ற சாத்தியமான கடப்பாடுகளாகக் காணப்படுவதுடன், இங்கு எதிர்காலப் பொருளாதார நன்மைகளின் மாற்றல் நிச்சயமற்றதாக அல்லது நம்பத்தகுந்த முறையில் அளவிடமுடியாததாகக் காணப்படுகின்றது. நிதியியல் நிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்படாத படுகடன்களின் அனைத்து உத்தரவாதங்கள், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் ஏனைய கடப்பாடுகள் என்பன எதிர்பாராத பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளாக உரிய தலைப்புகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. தேவைப்படுமிடத்து அவ்வாறான தொகைகள் மிகச்சிறந்த மதிப்பீடுகளில் அளவிடப்படுகின்றன.

**வருமானக்கூற்று மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று**

**5.32 வருமானங்களும் செலவினங்களும்**

வங்கிக்குப் பொருளாதார நன்மைகளைக் கொண்டு வரக்கூடிய சாத்தியம் காணப்பட்டு அவ்வருமானத்தினை நம்பகமான முறையில் அளவிடக்கூடியதாகவுள்ள போது வருமானமானது அங்கீகரிக்கப்படுகின்றது. மேற்கொள்ளப்பட்ட செலவிற்கும் வருமானத்தின் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் வருவாய்க்குமிடையிலான நேரடி இணைப்பொன்றின் அடிப்படையில் வருமானக்கூற்றில் செலவுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. வியாபாரத்தைக் கொண்டு நடத்துவது தொடர்பாகவும் ஆதனம், பொறி, உபகரணங்களை வினைத்திறனுள்ள விதத்தில் பேணுவதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட அனைத்துச் செலவினங்களும் ஆண்டிற்கான பெறுபேற்றினைக் கணிக்கும் போது வருமானத்தில் கழிக்கப்படுகின்றன.

வருமானத்தையும் செலவினத்தையும் அங்கீகரிப்பதற்கு முன்னர் பின்வரும் குறித்துரைக்கப்பட்ட பிரமாணங்களும் நிறைவேற்றப்பட வேண்டும்:

**5.32.1 வட்டி வருமானம் மற்றும் செலவினங்கள்**

சேகரித்தல் ஐயத்திற்கிடமில்லாதவிடத்து உண்மைக் கொள்வனவு விலையை அடிப்படையாகக் கொண்ட பயன்தரு விளைவு முறையைப் பயன்படுத்தி அட்டுறு அடிப்படையில் அனைத்து வட்டி உழைக்கும் சாதனங்களுக்கான வட்டி வருமானமும் செலவினங்களும் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. வட்டி வருமானமானது, நிலையான வருமான முதலீடு மற்றும் பிணையங்கள் என்பன மீதான வட்டி வருவாய்களையும் திறைசேரி உண்டியல் மற்றும் ஏனைய கழிவிடப்பட்ட கருவிகளின் அட்டுறு கழிவுகள் மற்றும் வட்டங்களையும் உள்ளடக்குகிறது. கடன்களின் சேகரிப்பு ஐயத்திற்கிடமாகும் பொழுது வட்டி வருமானம் இடைநிறுத்தப்படுகிறது. அத்தகைய வருமானம் பெறப்படும் வரை வட்டி வருமானத்திலிருந்து நீக்கப்படுகிறது.

**5.32.2 பங்குலாபங்கள்**

வங்கியின் கொடுப்பனவைப் பெறுவதற்கான உரிமை நிறுவப்படும் போது பங்குலாப வருமானம் அங்கீகரிக்கப்படுகிறது.

**5.32.3 நானாவித வருமானம் மற்றும் செலவினங்கள்**

நானாவித வருமானமும் செலவினங்களும் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

ஆதனம், பொறி, உபகரணங்களின் விற்பனை மீதான வருமானத் தன்மையான தேறிய இலாபங்களும், நட்டங்களும் விற்பனை மூலம் பெற்ற பெறுகைகளிலிருந்து சொத்தின் கொண்டு செல்லும் பெறுமதியையும் அது சார்ந்த விற்பனைச் செலவுகளையும் கழித்த பின்பு வருமானக்கூற்றில் காட்டப்பட்டுள்ளன.

முக்கிய வருமானத்தை உருவாக்குகின்ற நடவடிக்கைகளுக்கான தற்செயலான நடவடிக்கை மூலம் எழும் இலாபங்களும் நட்டங்களும் மற்றும் பொருண்மைத்தன்மை இல்லாத ஒரேமாதிரியான கொடுக்கல்வாங்கல் தொகுதியிலிருந்து எழும் இலாபங்களும் நட்டங்களும் தேறிய அடிப்படையில் திரட்டப்பட்டு அறிக்கையிடப்பட்டு சமர்ப்பிக்கப்படுகின்றது.

**5.32.4 ஆளணிச் செலவுகள்**

ஆளணிச் செலவுகள் அனைத்து அலுவலர் நன்மைகளினதும் முழுச் செலவினையும் உள்ளடக்குகின்றது. ஆண்டின் இறுதியில் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்கள் மற்றும் தொடர்பான செலவுகள் என்பன மற்றைய உள்நாட்டு கொடுபடத்தக்கனவற்றுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**5.32.5 வருமான வரிச் செலவு**

வங்கியின் வருமானமானது மத்திய வங்கிச் சட்டத்தின் 116ஆம் பிரிவின் கீழும் 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கமைவாகவும் அதனைத்தொடர்ந்து 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்த) சட்டத்திற்கமைவாகவும், 2022ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கமைவாகவும், 2023ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கமைவாகவும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. 2017ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டண (திருத்தச்) சட்ட நியதிகளில், வங்கியானது 2017 ஏப்பிறல் 01இலிருந்து ஆரம்பமாகின்ற பொருளாதாரச் சேவைக் கட்டணத்திற்கும் பொறுப்பாகவிருக்கின்றது. எவ்வாறாயினும், 2018ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க பொருளாதாரச் சேவைக் கட்டணத்திற்கமைவாக 2018 ஒத்தோபரிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் விலக்களிக்கப்படுகின்றன. மேலும், வங்கியானது 2013ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க பெறுமதி சேர் (திருத்தம்) வரிக்கமைவாக நிதியியல் பணிகளின் வழங்கல் மீதான பெறுமதி சேர் வரி விலக்களிக்கப்படுகின்றது.

பொருளாதாரப் பணிக் கட்டணம் 2020 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இடைநிறுத்தப்பட்டது.

**5.33 அறிக்கையிடும் திகதிக்குப் பின்னர் இடம்பெறும் நிகழ்வுகள்**

அறிக்கையிடும் திகதிக்குப் பின்னர் நிகழும் அனைத்து பொருண்மைத் தன்மை வாய்ந்த நிகழ்வுகளும் கருத்தில் எடுக்கப்படுவதுடன், பொருத்தமானவிடத்து நிதியியல் கூற்றுக்களுக்கான தொடர்பான குறிப்புக்களில் சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**காசுப்பாய்ச்சல் கூற்று**

காசுப்பாய்ச்சல் கூற்றானது பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 7 - காசுப்பாய்ச்சல் கூற்றிற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்றின் தயாரிப்பில் “நேரடி முறை” யைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டுள்ளது.

காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக, காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் மேலே வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, காசு/ கொடுப்பனவுக் கட்டளைகளின் வெளிப்பாய்ச்சல் நீங்கலான, காசு மற்றும் காசிற்குச் சமமானவற்றை உள்ளடக்கியுள்ளன.

## 6. புதிதாக வெளியிடப்பட்ட கணக்கீட்டு நியம திருத்தங்களும் பொருள்கோடல்களும் அறிக்கையிடும் திகதிவரை நடைமுறைக்கு வரவில்லை

2023 சனவரி 1 ஒன்றிற்குப் பின்னர் ஆரம்பமாகின்ற காலப்பகுதிக்கான புதிய நியமங்களும் நியமங்களுக்கான திருத்தங்களும் நடைமுறைக்கு வந்ததுடன் முன்னைய பிரயோகம் அனுமதிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், இந்த நிதி நிலை அறிக்கைகளை தயாரிப்பதில் வங்கியானது புதிய மற்றும் திருத்திய கணக்கீட்டு நியமங்களை கவனத்தில் கொள்ளவில்லை. மேலும், இத்தகைய நியமங்களும் பொருள்கோடல்களும் வங்கியின் நிதியியல் கூற்றுக்களில் பொருண்மிய தாக்கத்தைக் கொண்டிருக்கவில்லை.

## 7. நடவடிக்கைகளின் தன்மை மற்றும் அளவு

**7.1 வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள்**

வெளிநாட்டு நாணயத் தொழிற்பாடுகள் முக்கியமாக மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களை வைத்திருப்பதன் மூலமாக ஏற்படுகின்றது. வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ சொத்துப்பட்டியலானது வெளிநாட்டுச் செலாவணி தலையீட்டு நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் வர்த்தக நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் ஏனைய வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் உள்ளடக்குகிறது.

வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் பல்வேறு நாணயங்களில் வைத்திருக்கப்படுகின்றன. முக்கியமான நாணயங்களாக ஐக்கிய அமெரிக்க டொலர், அவுஸ்திரேலிய டொலர், யூரோ, ஸ்டேர்லிங் பவுண், யப்பானிய யென் மற்றும் நியூசிலாந்து டொலர் என்பன காணப்பட்டன. இவ்வெளிநாட்டு நாணயச் சொத்துக்களில் வைத்திருக்கப்பட்ட நிதியியல் சாதனங்கள் முக்கியமாக இறைமைப் பிணையங்கள், நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் அல்லது ஏனைய மத்திய வங்கிகள், வர்த்தக வங்கிகள் மற்றும் கட்டுக்காப்பு நிறுவனங்களுடன் வைத்திருக்கப்படும் நிலுவைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

இலங்கை மத்திய வங்கி காலத்திற்குக் காலம் பன்னாட்டுச் சந்தைத் தொழிற்பாடுகளிலிருந்து எழும் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கூட வைத்திருக்கின்றது.

**7.2 உள்நாட்டு நாணய நடவடிக்கைகள்**

உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் பின்வருமாறு தோன்றுகின்றன.

(i) திரவத்தன்மை முகாமைத்துவத் தொழிற்பாடுகள்: திரவத்தன்மை முகாமைத்துவமானது வங்கித்தொழில் முறைமைக்கு நிதியங்களை முற்பணமாக வழங்குதல் மூலம் அல்லது வங்கித்தொழில் முறைமையிலிருந்து நிதியங்களை மீளப்பெறல் மூலம் அரசுக்கான அல்லது சந்தைக்கான நாளாந்த தேறிய பாய்ச்சல்களையும் அல்லது அரசிடமிருந்து அல்லது சந்தையிடமிருந்து தேறிய நாளாந்தப் பாய்ச்சல்களையும் இலங்கை மத்திய வங்கி நாளாந்தம் எதிரீடு செய்வதுடன் பெருமளவிற்கு தொடர்புடையதாகவுள்ளது. இத்தொழிற்பாடுகளில் பெரும்பாலானவை நாளாந்த திறந்த சந்தைத் தொழிற்பாடுகளூடாக மேற்கொள்ளப்படுகின்றன.

(ii) சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் பொறுப்பிற்கு உதவுவதற்காக இலங்கை அரசாங்கத்தின் பிணையங்களை உள்ளடக்கியதாக முதலீட்டுப் பட்டியலொன்றை வைத்திருத்தல். வர்த்தக நோக்கத்திற்கன்றி நாணயத் தொழிற்பாடுகளுக்காக இம்முதலீடுகளை வைத்திருப்பதே வங்கியின் கொள்கையாகும்.

**7.3 நம்பிக்கை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள்**

கட்டுக்காப்பு மற்றும் நிர்வாக ஒழுங்குமுறைகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் நிர்வகிக்கப்பட்ட தொகை, அவை வங்கியின் நிதியியல்

கூற்றுக்களின் ஆக்கக் கூறுகளில் ஒரு பகுதியாக அமையாததால் இந்நிதியியல் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை.

## 8. காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்

| | 2023 ரூ. 000 | 2022 ரூ. 000 |
|---|---|---|
| வங்கியிலுள்ள காசு நிலுவைகள் | **239,279,034** | 7,626,592 |
| வங்கிகளுடனான கால வைப்புக்கள் | **486,868,385** | - |
| ஓரிரவு வைப்புக்கள் | **16,422,911** | 118,410,171 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் மீது பெறவேண்டிய வட்டி | **897,400** | 28,287 |
| **காசுப்பாய்ச்சல் நோக்கத்திற்கான காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்** | **743,467,730** | 126,065,050 |
| மட்டுப்படுத்தப்பட்ட பாவனைக்காக கிடைப்பனவாகவுள்ள காசு மற்றும் காசுக்கு சமமானவை (குறிப்பு 8.1) | **456,377,841** | 526,467,646 |
| **கழிக்குக:** காசு மற்றும் காசுக்கு சமமானவை மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புகள் (குறிப்பு 8.2) | **(866,001)** | (844,832) |
| **மொத்தம்** | **1,198,979,570** | **651,687,864** |

8.1 குறிப்பு 25.5 இல் விளக்கப்பட்டவாறான இலங்கை மத்திய வங்கிக்கும் சீனா மக்கள் வங்கிக்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட இருபுடை நாணய பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையின் கீழ் பெறப்பட்ட ரென்மென்பி 10 பில்லியன் தொகையை மட்டுப்படுத்தப்பட்ட பயன்பாட்டிற்கு கிடைப்பனவாகவுள்ள காசு மற்றும் காசுக்கிற்குச் சமமானவை பிரதிபலிக்கின்றன. இவ்வுடன்படிக்கையின் கீழ் பெறப்பட்ட தொகையை இரண்டு நாடுகளுக்குமிடையிலான நிதியியல் வியாபாரம் மற்றும் நேரடி முதலீடு என்பவற்றிற்கும் அத்துடன் இரு தரப்பினர்களும் ஒப்புக்கொண்டதற்கமைய வேறு நோக்கங்களுக்கும் பயன்படுத்த முடியும்.

### 8.2 காசு மற்றும் காசுக்கு சமமானவை மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களிலான அசைவு

| | 2023 | | | 2022 | | |
|---|---|---|---|---|---|---|
| | கட்டம் 1 ரூ. 000 | கட்டம் 2 ரூ. 000 | மொத்தம் ரூ. 000 | கட்டம் 1 ரூ. 000 | கட்டம் 2 ரூ. 000 | மொத்தம் ரூ. 000 |
| சனவரி 1இல் உள்ளவாறான நிலுவை | 841,441 | 3,392 | 844,833 | 52,009 | 33,359 | 85,368 |
| ஆண்டு காலப்பகுதியிலான விதிப்பு/ (மீளளித்தல்) | (206,032) | 227,200 | 21,168 | 789,432 | (29,967) | 759,465 |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை** | 635,409 | 230,592 | 866,001 | 841,441 | 3,392 | 844,833 |

## 9. வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடுகள்

| | 2023 ரூ. 000 | 2022 ரூ. 000 |
|---|---|---|
| **ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்பு பெறுமதியிலான பிணையங்கள்** | | |
| - வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடுகள் | **223,406,791** | 10,867,425 |
| **வெளிநாட்டுப் பிணையங்களிலான மொத்த முதலீடுகள்** | **223,406,791** | 10,867,425 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான பிணையங்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்கள் (குறிப்பு 9.1) | **70,273** | 4,744 |

### 9.1 ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் மீதான எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களிலான அசைவு

| | 2023 | | | 2022 | | |
|---|---|---|---|---|---|---|
| | கட்டம் 1 ரூ. 000 | கட்டம் 2 ரூ. 000 | மொத்தம் ரூ. 000 | கட்டம் 1 ரூ. 000 | கட்டம் 2 ரூ. 000 | மொத்தம் ரூ. 000 |
| சனவரி 1இல் உள்ளவாறான நிலுவை | **4,744** | **-** | **4,744** | 995 | - | 995 |
| ஆண்டு காலப்பகுதியிலான விதிப்பு/ (மீளளித்தல்) | **65,529** | **-** | **65,529** | 3,749 | - | 3,749 |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை** | **70,273** | **-** | **70,273** | **4,744** | **-** | **4,744** |

## 10. பெறுதி நிதியியல் சாதனங்கள்

10.1 கீழேயுள்ள அட்டவணை, சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களாக அவற்றின் பெயரளவுத் தொகையுடன் சேர்த்து பதிவு செய்யப்பட்டுள்ள பெறுதி நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதியினைத் தருகின்றது. மொத்தமாகப் பதிவு செய்யப்பட்ட பெயரளவுத் தொகையானது பெறுதியின் அடிப்படையான சொத்து, குறிப்பீட்டு வீதம் அல்லது சுட்டெண்ணின் தொகையாகும் என்பதுடன் பெறுதிகளின் பெறுமதிகளில் ஏற்படும் மாற்றங்களை அளவிடுவதற்கான அடிப்படையாகவும் காணப்பட்டது. பெயரளவுத் தொகை ஆண்டின் இறுதியில் வெளிநின்ற

கொடுக்கல்வாங்கல்களின் அளவினை எடுத்துக்காட்டியதுடன் இது சந்தை இடர்நேர்வுகளையோ அல்லது கொடுகடன் இடர்நேர்வுகளையோ எடுத்துக்காட்டவில்லை.

| | 2023 | | | 2022 | | |
|---|---|---|---|---|---|---|
| | சொத்துக்கள் ரூ. 000 | பொறுப்புக்கள் ரூ. 000 | கருத்துத் தொகை ரூ. 000 | சொத்துக்கள் ரூ. 000 | பொறுப்புக்கள் ரூ. 000 | கருத்துத் தொகை ரூ. 000 |
| நாணய பரஸ்பர பரிமாற்றல்கள் | 5,775,226 | 46,740,483 | 396,845,081 | 401,580 | 71,669,551 | 208,591,719 |
| முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி | - | 2,207,417 | 72,882,743 | - | 28,443 | 1,724,773 |
| மொத்தம் | 5,775,226 | 48,947,900 | 469,727,824 | 401,580 | 71,697,994 | 210,316,492 |

10.2 மேலே குறிப்பிட்ட பெறுதிகளானது வெளிநாட்டு ஒதுக்குகளை பேணும் நியதிச்சட்ட குறிக்கோள்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் வங்கியினால் வைத்திருக்கப்படும் சந்தை மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வுகளை முகாமை செய்யும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் நாணய பரஸ்பர பரிமாற்றல்களையும் வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய ஒப்பந்தங்களையும் உள்ளடக்குகின்றன. இலங்கை ரூபாவின் பன்னாட்டு உறுதிப்பாட்டை பேணுவதற்கும், நாட்டின் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை வலுப்படுத்துவதற்கும், பிராந்திய நாடுகளிற்கு மத்தியில் பொருளாதாரத்தையும் நிதியியல் ஒத்துழைப்பையும் மேம்படுத்துவதற்கும் நாட்டிற்குள் வெளிநாட்டு செலாவணி உட்பாய்ச்சல்களை அதிகரிப்பதற்கும் வங்கியானது உரிமம்பெற்ற வங்கிகள், வெளிநாட்டு மத்திய வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடன் பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொண்டது.

10.3 பெறுதிகள் என்பது வட்டி வீதங்கள், நிதியியல் சாதனங்களின் விலைகள், பண்ட விலைகள், வெளிநாட்டுச் செலாவணி வீதங்கள், கொடுகடன் இடர்நேர்வு மற்றும் சுட்டெண்களில் ஏற்படும் மாற்றங்களுக்குப் பதிலிறுத்தும் விதத்தில் அவற்றின் பெறுமதியினைப் பெற்றுக்கொள்ளும் நிதியியல் உடன்படிக்கைகளாகும்.

10.4 வங்கியின் பெறுதிகளினது சொத்துப்பட்டியலின் குறிப்பிடத்தக்க பகுதி செலாவணி வீத இடர்நேர்வு மற்றும் குறுங்கால திரவத்தன்மை தேவைப்பாடுகள் என்பனவற்றை முகாமைப்படுத்துவதற்கானதொரு உபாயமாக மேற்கொள்ளப்பட்ட நாணய பரஸ்பரபரிமாற்றத்தினை உள்ளடக்குகின்றது. நாணய பரஸ்பர பரிமாற்றலில் வங்கியானது இணங்கப்பட்ட வீதங்களில் மற்றொரு நாணயத்தின் பரிவர்த்தனையாக இணங்கப்பட்ட திகதியில் நாணயத்தின் குறிப்பிட்ட தொகையினை செலுத்துகிறது/ பெறுகிறது.

10.5 வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய ஒப்பந்தத்திலிருந்து, வங்கியானது இணங்கப்பட்ட எதிர்காலத் திகதியொன்றில் இணங்கப்பட்ட வீதமொன்றில் வெளிநாட்டு நாணயத்தின் குறிப்பிட்டதொரு தொகையினை வாங்குவதற்கு அல்லது விற்பதற்கான கடப்பாடுகளை பெற்றிருக்கிறது.

**10.6** பெறுதி உடன்படிக்கைகளுக்கு வங்கியின் வெளிப்படுத்துகைத் தன்மையானது, அத்தகைய பெறுதிகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் நன்மைகள் வங்கிக்கு திடமாகக் கிடைக்கும் தன்மை கொண்டவை என்பதனை உறுதிப்படுத்துவதற்காக வங்கியின் ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவத்தின் ஒரு பகுதியாக நெருக்கமாகக் கண்காணிக்கப்படுகிறது.

**10.7 நீண்ட கால ஐக்கிய அமெரிக்க டொலர்/ரூபாய் கொள்வனவு விற்பனை பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தங்களின் கீழ் இலங்கை வங்கி, டிஎப்சிசி பாங்க் பிஎல்சி, கொம்ஷல் பாங்க ஒப் சிலோன் பிஎல்சி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி பிஎல்சி ஆகியவற்றிற்கு செலுத்தவேண்டிய தொகைகள்**

வங்கியானது வெளிநாட்டு ஒதுக்குகளை அதிகரிக்கும் நோக்கத்திற்காக ஐக்கிய அமெரிக்க டொலர்/ரூபாய் கொள்வனவு விற்பனை பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தங்களை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுடன் ஏற்படுத்தியிருந்தது. 2023 திசெம்பர் 31இல் உள்ளவாறு, வங்கி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுடன் மேற்கொண்ட நீண்ட கால ஐக்கிய அமெரிக்க டொலர்/ரூபாய் கொள்வனவு-விற்பனை பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தங்களின் நிலுவைகள் வருமாறு:

| வங்கி | ஒப்பந்த திகத | நிலுவைத் தொகை (ஐ.அ.டொ. மில்) | பகுதி வாரியாக இறுதி முதிர்வுத் திகதி | தவணைகள்/ நிபந்தனைகள் | கொடுக்கல் வாங்கல்களின் அபடிப்படை |
|---|---|---|---|---|---|
| இலங்கை வங்கி | 15.08.2023 | 225.00 | 12.08.2025 | • இலங்கை வங்கியிலிருந்து ஐ.அ.டொலர் 225 மில்லியனை கொள்வனவு செய்வதற்கு முறிகளை பரிமாற்றம் செய்யும் திகதியிலிருந்து 2- ஆண்டு உடடினக் கொடுக்கல் வாங்கலை நிறைவேற்றுதல். இங்கு, பார் லெக் திகதியும் பார் லெக் பரிமாற்று வீதமும் மேலே குறிப்பிட்ட பரஸ்பர கொடுக்கல் வாங்கலின் பார் லெக் வீதத்துடனும் பார் லெக் பரிமாற்று வீதத்துடனும் இரு பார் லெக் கொடுக்கல் வாங்கல்களின் ஐக்கிய அமெரிக்க டொலர் மற்றும் இலங்கை ரூபாவின் தொகைகள் தேறியளவில் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய விதத்திலும் ஒத்ததாகவுள்ளன. | வெளிநாட்டு படுகடன் மேம்படுத்துகை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அவற்றின் இலங்கை அபிவிருத்தி முறிகளை ரூபாவில் குறித்துரைக்கப் பட்ட அரச முறிகளாக பரிமாற்றம் செய்ய வசதிப்படுத்தப் பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இலங்கை வங்கி | 22.04.2021 | 35.00 | 15.12.2027 | •பூச்சிய செலவு அடிப்படையில் 6 ஆண்டுகள்<br>•5 தவணைகளில் மீளச்செலுத்தப் படுவதுடன் ஒவ்வொரு 6 மாதங்களுக்கும் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 10 மில். செலுத்தப்படும் | ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் (AIIB) கொவிட்-19 அவசரநிலை மற்றும் நெருக்கடி நிலைப் பணித் திட்டத்தின் கீழ் கடன் பெறப்பட்டது |
| இலங்கை வங்கி | 29.06.2021 | 44.78 | | | |
| மக்கள் வங்கி | 23.04.2021 | 35.00 | | | |
| மக்கள் வங்கி | 30.09.2021 | 44.78 | | | |
| டிஎவ்சிசி வங்கி பி.எல்.சி | 15.11.2021 | 118.75 | 15.05.2028 | • பூச்சிய செலவு அடிப்படையில் 7 வருடங்கள்<br>• 20 தவணைகளில் மீளச்செலுத்தப் படுவதுடன் ஒவ்வொரு 3 மாதங்களுக்கும் 6.25 மில். ஐ.அ.டொலர் செலுத்த எதிர்பார்க்கப் படுகின்றது. | ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத் திடமிருந்து கடன் பெறப்பட்டது |
| கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பி.எல்.சி | 17.11.2021 | 35.00 | 23.11.2026 | • 5 வருடங்களில் முதல் 18 மாதங்கள் பூச்சிய செலவு அடிப்படையிலும் அதனைத் தொடர்ந்து அரை ஆண்டு மிகையாக ஒரு ஐ.அ.டொலருக்கு தலா ரூ.1.00 யும்<br>• முதிர்வின் போது முழுமையாக மீளச்செலுத்தபடும் | ஐக்கிய இராச்சியத்தின் சீடிசி பி.எல்.சி இடமிருந்து கடன் பெறப்பட்டது |
| தேசிய அபிவிருத்தி வங்கி பி.எல்.சி | 18.03.2021 | 33.00 | 19.03.2029 | • 7 வருடங்களில் முதல் 18 மாதங்கள் ஆண்டு மிகையாக ஒரு ஐ.அ. டொலருக்கு தலா ரூ.1.00 யும் அதனைத் தொடர்ந்து எஞ்சியுள்ள ஐந்தரை ஆண்டுகள் ஆண்டு மிகையாக ஒரு ஐ.அ.டொலருக்கு தலா ரூ.1.00 யும்<br>• 12 தவணைகளில் மீளச்செலுத்தப் படுவதுடன் ஒவ்வொரு 6 மாதங்களுக்கும் 3 மில். ஐ.அ.டொலர் செலுத்த எதிர்பார்க்கப் படுகின்றது. | டி.எப்.சி இடமிருந்து கடன் பெறப்பட்டது |

## 11. ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள்

| | 2023<br>ரூ. 000 | 2022<br>ரூ. 000 |
|---|---|---|
| **இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டவை** | | |
| ப.நா.நிதிய அனுமதிப் பங்கு (குறிப்பு 11.1) | **253,508,295** | 279,779,554 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் உடமைகள் (குறிப்பு 11.2) | **10,991,665** | 626,461 |
| | **264,499,960** | 280,406,015 |
| **பதிவழிக்கப்பட்ட பெறுமதியில் அளவிடப்பபட்டவை** | | |
| ப.நா.நிதியத்துடனான வைப்புக்கள் (குறிப்பு 11.3) | **345,479** | 377,081 |
| முற்செலுத்தப்பட்ட விதிப்புக்கள் - ப.நா.நிதியக் கடன்கள் | **493,765** | 637,986 |
| **கழிக்குக:** ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்கள் (குறிப்பு 11.4) | **(7)** | (8) |
| | **839,237** | 1,015,059 |
| | **265,339,197** | 281,421,074 |

### 11.1 ப.நா. நிதிய அனுமதிப் பங்கு

ப.நா.நிதிய அனுமதிப் பங்கானது (மூலதன சந்தாக்கள்) அதன் அங்கத்துவ நாடுகளிலிருந்து கிடைக்கின்ற ப.நா.நிதிய வளங்களின் முதன்மை மூலமாகும். பரந்தளவில் ஒரு நாட்டின் ஒப்பீட்டளவிலான பொருளாதார நிலைமை கருத்தில் கொள்ளப்பட்டு ஒவ்வொரு நாட்டினதும் அனுமதிப் பங்கு தீர்மானிக்கப்படுகின்றது. ப.நா. நிதியத்தில் இணைகின்ற சந்தர்ப்பத்தில் ஒரு நாடு அதற்குரிய அனுமதிப் பங்குத் தொகையில் நூற்றுக்கு 25 வீதத்தினை பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டு நாணயத்தின் மூலம் அல்லது சிஎஉ யில் செலுத்துதல் வேண்டுமென்பதோடு, எஞ்சிய 75 வீதத்தினையும் தம் நாட்டுப் பணத்தின் மூலம் செலுத்துதல் வேண்டும். வங்கியொன்றின் ப.நா.நிதியத்துடனான அதன் கொடுக்கல்வாங்கல்கள், ப.நா.நிதியத்தின் உறுப்புரையின்படி, அரசாங்கத்தின் சார்பில் அதன் சொந்தக் கணக்கின் மீது இடம்பெறுவதனால் ப.நா.நிதியத்தின் அனுமதிப் பங்கு வங்கியின் சொத்துக்களைப் பிரதிபலிக்கிறது.

ப.நா. நிதியம், பொது அனுமதிப் பங்கு மீளாய்வு உடன்படிக்கைக்கு அமைவாக, ப.நா. நிதியத்தின் 189 அங்கத்தவர்களினதும் அனுமதிப் பங்கினையும் 2016 சனவரியில் அதிகரிக்க முடிவு செய்தது (தற்பொழுது இதில் 190 ப.நா.நிதிய அங்கத்துவ நாடுகளுள்ளன). இதன் விளைவாக, இலங்கையின் ப.நா. நிதிய அனுமதிப்பங்கு 2016 பெப்புருவரி 17இல் முன்னைய அனுமதிப்பங்கு தொகையான சிஎஉ 413.40 மில்லியனிலிருந்து சிஎஉ 578.80 மில்லியனுக்கு அதிகரித்தது.

ப.நா. நிதியத்திலிருந்து ஒரு உறுப்பினர் விலகினால், ப.நா. நிதியத்திற்கான நிகரப் பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கு தேவையில்லாத அளவிற்கு அதன் ஒதுக்கீட்டு சந்தை மீளப்பெறப்படும். எவ்வாறாயினும் ப.நா. நிதிய ஒதுக்கீட்டின் மீதான வட்டியானது உறுப்பினர்களுக்கு உரிமையில்லை. எனவே, பணத்தின் நேர மதிப்பிற்கு இழப்பீடு எதுவுமில்லை. எனவே, ப.நி.அ.நியமம் 9 இன் கீழ் இது இலாபம்/ நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்படுகின்றது. சீர்மதிப்பு பெறுமதியினைக் கணக்கிடுவதற்கு முதிர்வுக் காலம் எதுவுமில்லாததால் சீர்மதிப்புப் பெறுமதி மதிப்பிறக்கத்திற்குச் சமமாக இருக்கும்.

(i) **சந்தாக்கள்:** ப.நா. நிதியத்திற்கான அங்கத்தவரின் சந்தாவானது அங்கத்தவரின் அனுமதிப் பங்குக்குச் சமமாகும் என்பதோடு அதன் மூலம் அங்கத்தவர் ப.நா. நிதியத்திற்கு வழங்குவதற்கு கடப்பாடுடைய அதிகபட்ச நிதி வளங்களின் தொகை தீர்மானிக்கப்படுகிறது. அங்கத்தவர் பங்களிப்பை முழுமையாகச் செலுத்துதல் வேண்டும். 25 சதவீதத்தினை ப.நா.நிதியம் தீர்மானிக்கின்ற ஒதுக்குச் சொத்துக்களிலிருந்தும் (சிஎஉ அல்லது பயன்படுத்தக்கூடிய நாணயங்களில்) மற்றும் எஞ்சிய தொகையை அங்கத்தவரின் சொந்த நாணயத்தின் மூலமும் செலுத்துதல் வேண்டும்.

(ii) **வாக்களிக்கும் அதிகாரம்:** ப.நா.நிதியத்தின் தீர்மானங்களின் போது அங்கத்தவரின் வாக்களிக்கும் அதிகாரமானது அனுமதிப் பங்கின் மூலம் தீர்மானிக்கப்படுகிறது. ஒவ்வொரு ப.நா.நி. அங்கத்தவரும் அடிப்படை வாக்குகளுடன், அனுமதிப் பங்கின் ஒவ்வொரு சிஎஉ 100,000 க்கு ஒரு மேலதிக வாக்கு வீதமும் உரித்துடையவராவர். 2008 சீர்திருத்தமானது மொத்த வாக்குகளின் 5.50 சதவீதத்தில் அடிப்படை வாக்குகளின் எண்ணிக்கையினை நிர்ணயித்துள்ளது.

(iii) **நிதியிடலை பெறுவதற்கான வசதி:** அங்கத்தவரால் ப.நா. நிதியத்திடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய நிதி வசதிகளுக்கு (வசதியின் எல்லை) அங்கத்தவருடைய அனுமதிப் பங்கு அடிப்படையாய் அமைகிறது. துணைநில் ஒழுங்குகள் மற்றும் நீடிக்கப்பட்ட ஒழுங்குகளுக்கேற்ப அங்கத்தவரால் தற்காலத்தில் வருடாந்த அனுமதிப் பங்கின் 145 சதவீதமும் (கொவிட் -19 பதிலிறுப்பு நிதியத்தின் பகுதியாக 2021ஆம் ஆண்டின் இறுதியை நோக்கி பங்கின் 245 சதவீதத்திற்கு தற்காலிகமாக அதிகரித்தது) திரண்ட ரீதியில் 435 சதவீதம் வரையிலும் கடன் பெறலாம். அசாதாரணமான சந்தர்ப்பங்களில் இவ்வசதி இதை விட அதிகரிக்கலாம்.

(iv) **சிஎஉ ஒதுக்கல்:** அங்கத்தவருடைய அனுமதிப் பங்குகளின் விகிதாசாரப்படி இவர்களுக்கான சிஎஉ ஒதுக்குகளின் பங்கு தீர்மானிக்கப்படுகிறது. ஐ.அ டொலர் 650 பில்லியனுக்குச் சமமான பொது சிறப்பு எடுப்பனவு உரிமை ஒதுக்கீடானது பன்னாட்டு நாணய நிதியத்தில் 2021 ஓகத்து 23 அன்று நடைமுறைக்கு வந்த சிறப்பு எடுப்பனவு உரிமைகள் திணைக்களத்திலுள்ள பங்கேற்பாளர்களின் தற்போதுள்ள பங்குகளின் விகிதத்தில் பன்னாட்டு நாணய நிதிய உறுப்பினர்களுக்கு மேற்கொள்ளப்பட்டது. இதில் பொது சிறப்பு எடுப்பனவு உரிமைப் பங்கில் இலங்கையின் சிறப்பு எடுப்பனவு உரிமைப் பங்காக 554.8 மில்லியன் காணப்பட்டது.

**11.2 சிறப்பு எடுப்பனவு உரிமை உடமைகள்**

சிறப்பு எடுப்பனவு உரிமை (சிஎஉ) என்பது ப.நா.நி. அங்கத்தவர்களின் எவ்விதத் தடைகளுமின்றிப் பயன்படுத்தக்கூடிய நாணயங்கள் மீதான கோரலாக இருப்பதுடன், இதில் சிஎஉ உடமையாளர்கள் தமது சிஎஉரிமைகளை இந்நாணயங்களுக்காகப் பரிமாறிக் கொள்ள முடியும். ஒதுக்குச் சொத்தொன்றாக சிஎஉரிமையின் பெறுமதியானது சிஎஉரிமையை வைத்திருப்பதற்கும் ஏற்றுக்கொள்வதற்குமான அங்கத்தவர்களின் கடப்பாடுகள் மற்றும் சிஎஉரிமை முறைமையின் தொழிற்பாடுகளுடன் தொடர்புபட்ட பல்வேறுபட்ட கடப்பாடுகளுக்கு மதிப்பளிக்க வேண்டிய பொறுப்பு என்பவற்றிலிருந்து தோன்றுகின்றது. தடையின்றிப் பயன்படுத்தக்கூடியதான நாணயங்கள் மீதான சிஎஉ கோரலானது மதிப்பளிக்கப்படுவதை ப.நா. நி. இரண்டு விதங்களில் உறுதி செய்கின்றது. அதாவது, பலவீனமான வெளிநாட்டு நிலைமையிலுள்ள அங்கத்தவர்களிடமிருந்து சிஎஉ வைக் கொள்வனவு செய்வதற்குப் பலம் வாய்ந்த வெளிநாட்டு நிலைமையைக் கொண்ட ப.நா.நி அங்கத்தவர்களைப் பெயர் குறித்துரைப்பதன் மூலமும் அத்துடன் முகாமைக்குட்படுத்தப்பட்ட சந்தையினுள் பங்கேற்கும் அங்கத்தவர்களுக்கிடையிலான தாமாக முன்வந்து பரிமாற்றிக் கொள்ளும் ஒழுங்கின் மூலமுமாகும். மேலே காட்டப்பட்ட தொகையானது தொடர்பான அறிக்கையிடும் திகதிகளிலுள்ளவாறான வங்கியின் மொத்த உடமைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

சி.எ.உ. குணாதிசயங்கள் பணத்திற்கு ஒத்த பண்புகளைக் கொண்டுள்ளன. எனவே ப.நி.அ.நி. 9இன் கீழ் இலாபம்/ நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்படுகின்றது. சீர்மதிப்புப் பெறுமதியினைக் கணிப்பிடுவதற்கு முதிர்ச்சிக் காலம் எதுவுமில்லாததால் சீர்மதிப்புப் பெறுமதியானது மதிப்பிறக்கத்திற்குச் சமமாக இருக்கும்.

**11.3 ப.நா. நிதியத்துடனான வைப்புக்கள் - பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கை நிதிய வைப்பு**

பன்னாட்டு நாணய நிதியத்தில் நிர்வகிக்கப்படும் விசேட எதிர்பாரா நிகழ்வுக் கணக்கு-2 (வி.எ.நி.கணக்கு-2) இற்குப் பிந்திய கணக்கில் இலங்கையின் வைப்பிலிருந்து சிஎஉ 788,783 இனை மாற்றியதன் மூலம் 2000 ஏப்பிறல் 21ஆம் திகதி இலங்கை அரசாங்கத்திற்கும் பன்னாட்டு நாணய நிதியத்திற்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் கீழ் பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கை வைப்பு மேற்கொள்ளப்பட்டது. வி.எ.நி. கணக்கு-2 ஐ முடிவுறுத்துவதற்கு பன்னாட்டு நாணய நிதியத்தினால் தீர்மானிக்கப்பட்ட போது, இலங்கைக்கெதிராக வி.எ.நி. கணக்கு-2 இல் வைக்கப்பட்டிருந்த மீதியை மாற்றியதன் மூலம் பன்னாட்டு நாணய நிதியத்தின் வழிகாட்டலின் கீழ் இந்தக் கணக்கு உருவாக்கப்பட்டது. வி.எ.நி. கணக்கு-2 இற்குப் பிந்திய கணக்கிலுள்ள மீதிகளை முழுமையான நன்கொடையாக அல்லது பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி கடனுக்கு மானியம் வழங்கும் ஒரு வழியாக பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கைப் பொறுப்புக்கு வழங்குவதற்கு கவனத்தில் கொள்ளுமாறு அந்தக் கணக்கில் மீதிகளைக் கொண்டிருந்த நாடுகளை பன்னாட்டு நாணய நிதியம் கேட்டுக் கொண்டது. அதற்கிணங்க இலங்கை அரசாங்கம், வி.எ.நி. கணக்கு- 2இற்குப் பிந்திய கணக்கிலுள்ள நிதிகளை முழுமையான நன்கொடையாகவன்றி 2018 வரையிலான வட்டியில்லா வைப்பாக பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கைப் பொறுப்புக் கணக்குக்கு மாற்றுவதற்கு இணங்கியது. இது பின்னர் 2024 வரை நீடிக்கப்பட்டது.

11.4 பா.நிதியத்துடன் தொடர்புபட்ட சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களிலான அசைவு

| | 2023<br>ரூ. 000 | 2022<br>ரூ. 000 |
|---|---|---|
| கட்டம் 1 | | |
| சனவரி 1இல் உள்ளவாறான நிலுவை | **8** | 3 |
| ஆண்டு காலப்பகுதியிலான விதிப்பு/ (மீளளித்தல்) | **(1)** | 5 |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை** | **7** | 8 |

## 12. இலங்கை அரச பிணையங்கள்

2023ஆம் ஆண்டின் இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 86(4) ஆம் பிரிவிற்கமைவாக இரண்டாந்தரச் சந்தையிலும் 86(4) ஆம் பிரிவிற்கமைவாக முதலாந்தரச் சந்தையிலும் அரசாங்கப் பிணையங்களை மத்திய வங்கி கொள்வனவு செய்கின்றது.

| | 2023<br>ரூ. 000 | 2022<br>ரூ. 000 |
|---|---|---|
| திறைசேரி உண்டியல்கள் | **208,344,310** | 2,480,822,291 |
| திறைசேரி முறிகள் | **1,804,175,760** | 17,708,352 |
| பெறத்தக்க வட்டி | **31,827,522** | 464,372 |
| | **2,044,347,592** | 2,498,995,015 |

வங்கியின் உள்நாட்டு அரச பிணைய சொத்துப்பட்டியலானது ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானச் சாதனங்களினூடாக சீர்மதிப்புப் பெறுமதியாக வகைப்படுத்தப்பட்டு 2023 செத்தெம்பர் 21 அன்று உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகைக்குட்படுத்தப்பட்டது. பூர்வாங்க அங்கீகரிப்பன்று புதிய சாதனங்கள் சீர்மதிப்பு பெறுமதியாக்கப்பட்டதுடன் ரூ.776.5 பில்லியன் கொண்ட முதலாம் நாள் இழப்பு வருமானக் கூற்றிற்குள் விதிக்கப்பட்டது. சந்தை இடர்நேர்வு, கொடுகடன் இடர்நேர்வு என்பவற்றையும் சீர்மதிப்புப் பெறுமதி கருத்திற்கொள்ளப்பட்டது எனவே அரசாங்கப் பிணையங்கள் சொத்துப்பட்டியலுடன் தொடர்புடைய ஏதேனும் கொடுகடன் இழப்புக்கள் ஏதுமிருப்பின் அவை முதலாம் நாள் இழப்பினூடாக கவனத்திற்கொள்ளப்பட்டு 2023ஆம் நிதியியல் ஆண்டுக்கான வருமானக் கூற்றில் கணக்கீடு செய்யப்பட்டன.

### 12.1 இலங்கை அரச பிணையங்களின் மீது உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகையின் தாக்கம்

உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகையின் பகுதியாக, முறையே ரூ. 345 பில்லியன் தொகையாகவும் ரூ. 2,368 பில்லியன் தொகையாகவுமிருந்த இலங்கை அரசாங்கத்திற்கான இலங்கை மத்திய வங்கியின் தற்காலிக முற்பணங்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மீள்கட்டமைக்கப்பட்டு முன்னெடுக்கப்படாத நறுக்கு வட்டி விபரங்களைக் கொண்ட புதிய திறைசேரி முறிகளாகவும் திறைசேரி உண்டியல்களாகவும் 2023 செத்தெம்பர் 21 அன்று மாற்றப்பட்டன.

2024 பெப்புருவரி - 2024 செத்தெம்பர் மாதங்களுக்கிடையில் வேறுபடும் முதிர்ச்சித் திகதிகளை உள்ளடக்கிய திறைசேரி உண்டியல்கள் பெறப்பட்டதுடன் 2024 வரை 12.4 சதவீதம் (உள்ளடக்கப்படுகின்றது), 2026 வரை 7.5 சதவீதம் (உள்ளடக்கப்படுகின்றது) அத்துடன் முதிர்ச்சி வரை 5 சதவீதம் கொண்ட முன்னெடுக்கப்பட்ட நறுக்கு வட்டி வீதத்தில் 6 ஆண்டுகள் தொடக்கம் 15 ஆண்டுகள் வரையான முதிர்ச்சிகளை உள்ளடக்கி திறைசேரி முறிகள் பெறப்பட்டன.

மேற்குறிப்பிட்ட மறுசீரமைப்பானது கொடுக்கல்வாங்கல் விலை புதிய சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதியிலிருந்து வேறுபடுவதனால் ரூ.766.4 பில்லியன் கொண்ட முதலாம் நாள் இழப்பைத் தோற்றுவித்தது.

புதிய சாதன சீர்மதிப்புப் பெறுமதியை பெறுகையில், பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 13 உடன் இசைந்து செல்லும் விதத்தில் 2ஆம் மட்ட உள்ளீடு பயன்படுத்தப்பட்டது. 2ஆம் மட்ட உள்ளீடுகள் என்பது சொத்துக்களுக்காக அவதானிக்கப்படுகின்ற முதலாம் மட்டத்துற்குள் உள்ளடக்கப்படும் குறித்துரைக்கப்படும் விலைகளைத் தாண்டிய 2ஆம் மட்ட உள்ளீடுகளை குறிக்கின்றது. முன்னெடுக்கப்பட்ட நறுக்கு சாதனத்திற்கும் நிலையான நறுக்குச் சாதனத்திற்கும் இடையிலான வட்டி வீத விபரங்கள் போன்று அறியப்பட்ட மாற்றங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட முறி மற்றும் சீராக்கங்களின் நியதிகளை அடிப்படையாகக் கொண்டு அவதானிக்கப்பட்டவையாக வட்டி வீத விளைவு வளையிகள் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளன.

முதலாம் நாள் இழப்பு கணிப்பிடுதலில் வைத்திருக்கப்படும் அனைத்து வேறு மாறிகளுடன் தொழிற்படும் முக்கிய அனுமானங்களில் ஏற்பட்ட நியாயமான சாத்தியமான மாற்றங்களை பின்வரும் அட்டவணை எடுத்துரைக்கின்றது.

வருமானக் கூற்றின் நுண்மம் என்பது கீழே எடுத்துரைக்கப்பட்டவாறு கழிவு வீதத்தில் ஊகிக்கப்பட்ட மாற்றங்களின் விளைவாகும்.

**உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகையின் முதலாம் நாள் இழப்பு மீது 1 சதவீதத்தில் நுண்மப் பகுப்பாய்வு**

கழிவு வீதத்தில் "-" மாற்றத்தின் விளைவு - ரூ. 652.8 பில்லியன்

கழிவு வீதத்தில் "+" மாற்றத்தின் விளைவு - ரூ. 869.7 பில்லியன்

### 13. மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்

| | 2023<br>ரூ. 000 | 2022<br>ரூ. 000 |
|---|---|---|
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | **332,862,000** | 691,637,000 |
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் மீது பெறத்தக்க வட்டி | **1,089,940** | 6,432,219 |
| | **333,951,940** | 698,069,219 |

### 14. அரசுக்கான தற்காலிக முற்பணங்கள்

2023இன் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தினால் எடுத்துரைக்கப்பட்டவாறு, 127ஆம் பிரிவின் கீழ், இலங்கை மத்திய வங்கியானது நிதியியல் ஆண்டின் முதலாவது மாதத்திற்குள் ஒன்றுதிரட்டப்பட்ட நிதியத்திலிருந்து உறப்பட வேண்டிய அதிகாரமளிக்கப்பட்ட செலவினங்களுக்கு நிதியிடுவதற்கு அரசாங்கத்திற்கான புதிய நேரடி தற்காலிக முற்பணங்களை உருவாக்கலாம். ஒவ்வொரு அத்தகைய புதிய முற்பணத்தையும் ஆறு மாதங்களை விஞ்சாத விதத்தில் மீள்செலுத்தப்பட வேண்டும். அத்தகைய வெளிநின்ற முற்கொடுப்பனவுகளின் மொத்தத் தொகையும் தொடர்பான காலப்பகுதிக்கு 2003ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க இறை முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் கீழான அமைச்சின் அமைச்சரால் வெளியிடப்படும் அரையாண்டு அறிக்கையில் அறிக்கையிடப்பட்டவாறு முன்னைய நிதியியல் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் வருமானத்தின் பத்து சதவீதத்தை விஞ்சாதிருத்தல் வேண்டும். அத்தகைய புதிய முற்பணங்கள் மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட நிலவும் சந்தை வட்டி வீதங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

### 15. நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள்

மத்திய வங்கிச் சட்டத்தின் 114(2)(அ)ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய இத்தகைய முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பிரிவின் கீழ், ஏதேனும் கம்பனியில் வைப்புக்களை கையகப்படுத்துவதற்கும் பேணுவதற்கும் பொறுப்பளிக்கப்படுகின்றது. இக்கம்பனியானது வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறையில் ஏற்பட்ட மனித வளங்களினதும் தொழில்நுட்ப அபிவிருத்தியினதும் முன்னேற்றத்திற்காக அல்லது இலங்கையில் வர்த்தக வங்கிகளுக்கு மத்தியில் கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளிப்பதற்காக உருவாக்கப்பட்டது.

#### 15.1 முதலீட்டு நிலைமை

| கம்பனி | வியாபாரத்தின் தன்மை | 2023 | | | 2022 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பங்குகளின் எண்ணிக்கை | சீர்மதிப்புப் பெறுமதி ரூ. 000 | பங்கு ஒன்றிற்கான சீர்மதிப்புப் பெறுமதி ரூ. | பங்குகளின் எண்ணிக்கை | சீர்மதிப்புப் பெறுமதி ரூ. 000 | பங்கு ஒன்றிற்கான சீர்மதிப்புப் பெறுமதி ரூ. |
| லங்கா கிளியர் (பிறைவேட்)லிமிடெட் | தன்னியக்கத் தீர்ப்பனவு | **2,986,824** | **938,965** | **314.37** | 2,986,824 | 769,866 | 257.75 |
| வரையறுக்கப் பட்ட லங்கா நிதியியல் பணிகள் பணியகம் | தன்னியக்க நிதிய மாற்றல் | **500,000** | **-** | **(0.81)** | 500,000 | - | (4.60) |
| வரையறுக்கப் பட்ட இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் | கொடுகடன் தகவல் வழங்கல் | **48,244** | **1,230,576** | **25,507.33** | 48,244 | 1,047,266 | 21,707.69 |
| | | | **2,169,541** | | | 1,817,132 | |

2023 திசெம்பர் 31இல் உள்ளவாறு பங்குரிமை முதலீடுகள் சீர்மதிப்புப் பெறுமதியில் கொண்டுசெல்லப்பட்டன.

### 16. வங்கிகளுக்கான கடன்கள்

| | 2023<br>ரூ. 000 | 2022<br>ரூ. 000 |
|---|---|---|
| வங்கிகளுக்கான கடன்கள் (குறிப்பு 16.1) | **47,931,158** | 28,601,832 |
| **கழிக்குக:** வங்கிகளுக்கான கடன்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு (குறிப்பு 16.2) | **(135,471)** | (343,930) |
| | **47,795,687** | 28,257,902 |

#### 16.1 வங்கிகளுக்கான கடன்கள்

உற்பத்தித்திறன் நோக்கங்களுக்காக கடன்களுக்கு வசதியளிப்பதற்கு 1949ஆம் இலக்க 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் Vஆம் அத்தியாயத்தின் IIIA பிரிவின் நியதிகளில் இத்தகைய கடன்கள் வழங்கப்படுகின்றன. எவ்வாறாயினும், 2023இன் 16ஆம் இலக்க புதிய மத்திய வங்கிச் சட்டத்தின் சட்டமாக்குதலுடன் புதிய ஏற்பாடுகளின் கீழ் அதாவது புதிய சட்டத்தின் 134ஆம் பிரிவின் சேமிப்புக்களின் கீழ் ஆளுகை செய்யப்படும்.

| | 2023 ரூ. 000 | 2022 ரூ. 000 |
|---|---|---|
| நடுத்தர மற்றும் நீண்ட கால கொடுகடன் திட்டம் | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | **16,039** | 18,173 |
| வடக்கு மற்றும் கிழக்கில் பாதிக்கப்பட்ட வீடுகளின் திருத்தம் | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | **8,448** | 42,260 |
| சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி (குறிப்பு 16.1.1) | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | **34,612** | 1,337,217 |
| - ஏனையோர் | **38,215** | 484,532 |
| சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் மீள்நிதியிடல் வசதி (குறிப்பு 16.1.2) | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | **576,334** | 11,207,691 |
| - ஏனையோர் | **212,185** | 2,570,533 |
| சௌபாக்கியா கடன் திட்டம் (குறிப்பு 16.1.3) | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | **12,356,860** | 10,469,090 |
| - ஏனையோர் | **1,455,216** | 2,087,594 |
| இம வங்கியின் கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கடன்கள் | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | **101,226** | 86,307 |
| உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி முன்னோடிக் கட்ட கடன் திட்டம் (குறிப்பு 16.1.4) | **9,091** | - |
| - தொடர்பான தரப்பினர்கள் | | |
| - ஏனையோர் | **508,007** | 227,305 |
| வங்கிகளுக்கான திரவத்தன்மை ஆதரவு வசதி (குறிப்பு 16.1.5) | **32,500,000** | - |
| | **47,931,158** | 28,601,832 |

**16.1.1** சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளிப்பு வசதி: கொவிட்-19 நோய்ப்பரம்பலினால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தின் மீட்சிக்கு ஆதரவளிப்பதற்காக, கொவிட்-19 நோய்ப்பரம்பலினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு கடன் வழங்கப்பட வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில், 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 83இன் கீழ் இப்புதிய கொடுகடன் திட்டத்தை இலங்கை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியது.

**16.1.2** சௌபாக்கியா புத்துயிரளிப்பு மீள்நிதியிடல் வசதி: கொவிட்-19 நோய்ப்பரம்பலினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர துறை தொழில்முயற்சிகளை மீட்டெடுப்பதற்காகவும் நாட்டில் பொருளாதார நடவடிக்கையை ஊக்குவிப்பதற்காகவும் சௌபாக்கியா கடன் திட்டத்தின் கீழ் ஒரு புதிய மீள்நிதியிடல் வசதியை இலங்கை மத்திய வங்கி ஆரம்பித்தது.

**16.1.3** சௌபாக்யா கடன் திட்டம்: நாணய விதிச் சட்டத்தின் 88அ பிரிவின் அடிப்படையில், இது வேளாண்மை, விலங்குவளர்ப்பு, சிறிய மற்றும் நடுத்தரளவிலான நிறுவனங்கள் (சி.ந.நி) மற்றும் சி.ந.நி இலங்கையில் ஏற்பட்ட பேரழிவால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தரளவிலான நிறுவனங்களுக்கு கடன் வசதிகளை வழங்கும் நோக்கில் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் 2010ஆம் ஆண்டில் சௌபாக்யா (புத்துயிரளித்தல்) கடன் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது.

**16.1.4** உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி முன்னோடி கட்ட கடன் திட்டம்: நாணய விதிச் சட்டத்தின் 88அ பிரிவின் அடிப்படையில், பல்வேறு தொழில்நுட்ப உதவிகள் மற்றும் சிறந்த சந்தை வாய்ப்புக்களுடன் மதிப்பு சங்கிலிகள் மூலம் நன்கு இணைக்கப்பட்ட சிறு வேளாண்மையாளர் சமூகத்திற்கு குறைந்த செலவு அடிப்படையில் நிதி வசதிகளை வழங்குவதன் மூலம் இலங்கையில் வேளாண்மைத் துறையின் அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்காக பிராந்திய அபிவிருத்தி திணைக்களம் 2021ஆம் ஆண்டில் உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி முன்னோடி கட்ட கடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்தியது.

**16.1.5** நாணய விதிச் சட்டத்தின் 83(1) ஆம் பிரிவின் கீழ் அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும் தேசிய சேமிப்பு வங்கிகளுக்கும் திரவத்தன்மை வசதியை வழங்குவதில் நாணயச் சபை அதன் கூட்டத்தில் 2022.12.20 அன்று விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில் ஒப்புதலளித்தது. மேலும், மத்திய வங்கிச் சட்டத்தின் 36ஆம் பிரிவின் கீழ் இந்நிலைமை மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

### 16.2 வங்கிகளுக்கான கடன்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களிலான அசைவு

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கட்டம் 1 ரூ. 000 | கட்டம் 2 ரூ. 000 | கட்டம் 3 ரூ. 000 | மொத்தம் ரூ. 000 | கட்டம் 1 ரூ. 000 | கட்டம் 2 ரூ. 000 | கட்டம் 3 ரூ. 000 | மொத்தம் ரூ. 000 |
| சனவரி 1 இல் உள்ளவாறான நிலுவை | 6,057 | 251,565 | 86,307 | 343,929 | 14,435 | 21,477 | 13,016 | 48,928 |
| ஆண்டு காலப்பகுதியிலான விதிப்பு/ (மீளளித்தல்) | 8,639 | (241,108) | 24,011 | (208,458) | (8,378) | 230,088 | 73,291 | 295,001 |
| **திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை** | **14,696** | **10,457** | **110,318** | **135,471** | 6,057 | 251,565 | 86,307 | 343,929 |

## 17. ஏனைய சொத்துக்கள்

| | 2023 ரூ. 000 | 2022 ரூ. 000 |
|---|---|---|
| **நிதியியல் சொத்துக்கள்** | | |
| உள்ளக நிதியங்களின் முதலீடுகள் | **21,441,883** | 18,557,124 |
| **கழிக்குக:** சொத்துக்களின் மீதான பெறுமதியிழப்பிற்கான ஏற்பாடு (குறிப்பு 17.1) | **(236)** | (405) |
| உள்ளக நிதியங்களின் தேறிய முதலீடு | **21,441,647** | 18,556,719 |
| பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் திட்டங்களின் முதலீடுகள் | - | - |
| **கழிக்குக:** பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் முதலீடுகள் மீதான எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு (குறிப்பு 17.2) | - | - |
| | - | - |
| பதிவழிக்கப்பட்ட செலவில் அலுவலர் கடன்கள் | **5,778,336** | 5,355,855 |
| திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களிலிருந்து பெறத்தக்கவை | **8,698,715** | 3,540,585 |
| ஏனைய பெறத்தக்கவைகள் | **5,487,471** | 2,258,723 |
| **கழிக்குக:** ஏனைய பெறத்தக்கவைகள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு (குறிப்பு 17.3) | **(2,226,887)** | (2,226,887) |
| | **17,737,635** | 8,928,276 |
| | **39,179,282** | 27,484,994 |
| **நிதியல்லாச் சொத்துக்கள்** | | |
| அலுவலர் கடன் தொடர்பான பிற்போடப்பட்ட சொத்து | **3,005,439** | 2,697,566 |
| | **42,184,721** | 30,182,560 |

### 17.1 உள்ளக நிதியங்களின் முதலீடுகளின் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிலான அசைவு

| | 2023 | | | 2022 | | |
|---|---|---|---|---|---|---|
| | கட்டம் 1 ரூ. 000 | கட்டம் 2 ரூ. 000 | மொத்தம் ரூ. 000 | கட்டம் 1 ரூ. 000 | கட்டம் 2 ரூ. 000 | மொத்தம் ரூ. 000 |
| சனவரி 1இலுள்ளவாறான நிலுவை | **86** | **319** | **405** | 39 | 241 | 280 |
| ஆண்டு காலப் பகுதியிலான விதிப்பு/ (மீளளித்தல்) | **(23)** | **(146)** | **(170)** | 47 | 78 | 125 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை | **63** | **173** | **235** | 86 | 319 | 405 |

### 17.2 பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் முதலீட்டுத் திட்டங்கள் மீதான எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிலான அசைவு

| | 2023 கட்டம் 1 ரூ. 000 | 2022 கட்டம் 1 ரூ. 000 |
|---|---|---|
| சனவரி 1 இல் உள்ளவாறான நிலுவை | - | 150 |
| ஆண்டு காலப்பகுதியிலான விதிப்பு | - | (150) |
| **திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை** | - | - |

### 17.3 ஏனைய பெறத்தக்கவைகள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு

| | 2023 கட்டம் 3 ரூ. 000 | 2022 கட்டம் 3 ரூ. 000 |
|---|---|---|
| சனவரி 1 இல் உள்ளவாறான நிலுவை | **2,226,887** | 2,226,887 |
| ஆண்டு காலப்பகுதியிலான விதிப்பு | - | - |
| பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் திட்டங்களிலிருந்து மாற்றல் செய்யப்பட்டவை | - | - |
| **திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை** | **2,226,887** | 2,226,887 |

## 18. தங்கம்

பன்னாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவத்தை குறித்துரைக்கின்ற இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 40(2)ஆம் பிரிவானது அத்தகைய தங்கத்தைப் பிரதிபலிக்கின்ற கொடுகடன் நிலுவைகள் உட்பட்ட தங்கம் பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக இலங்கை மத்திய வங்கியால் வைத்திருக்கப்படலாம் என்பதைக் குறிப்பிடுகின்றது.

## 19. இருப்புக்கள்

| | 2023 ரூ. 000 | 2022 ரூ. 000 |
|---|---|---|
| சுற்றோட்டத்திலுள்ள நாணயத் தாள்கள் | **3,433,564** | 2,485,880 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயக் குத்திகள் | **1,657,594** | 2,074,163 |
| வழங்குநரிடமிருந்தான இடைப்போக்கிலுள்ள நாணயக் குத்திகள் | **239,803** | 144,188 |
| வழங்குநரிடமிருந்தான இடைப்போக்கிலுள்ள நாணயத் தாள்கள் | **3,344** | - |
| | **5,334,305** | 4,704,231 |
| **கழிக்குக:** மெதுவாக அசையும் இருப்புக்களுக்கான ஏற்பாடு | **(415)** | (2,446) |
| | **5,333,890** | 4,701,785 |
| எழுதுகருவிகளும் நானாவித இருப்புகளும் | **99,948** | 86,622 |
| **மொத்த இருப்புக்கள்** | **5,433,838** | 4,788,407 |

2023 காலப்பகுதியில் ரூ.2,108.58 மில்லியன் (2022இல் ரூ.2,339.65 மில்லியன்) செலவொன்றாக அங்கீகரிக்கப்பட்டு வருமானக்கூற்றில் "இருப்புக்களின் கிரயம் (புதிய நாணய வெளியீட்டின் செலவில்)" உள்ளடக்கப்பட்டன.

## 20. ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| செலவு/ மதிப்பீடு | காணியும் கட்டடமும் | பொறி மற்றும் பொறி ஒருங்கிணைப்புக்கள் | தள பாடங்களும் உபகர ணங்களும் | உந்து ஊர்திகள் | கணனி கள் | சொத்துக் களின் பாவனை உரிமை | ஏனையவை | நடை பெற்று வரும் கட்டுமானம் | 2023 மொத்தம் | 2022 மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **சனவரி 1இல் உள்ளவாறு** | **18,176,536** | **1,629,425** | **1,611,293** | **611,793** | **1,149,356** | **69,049** | **57,703** | **193,083** | **23,498,238** | 23,218,062 |
| ஆண்டு காலப்பகுதியில் சேர்க்கப்பட்டவை | **-** | **9,119** | **141,422** | **-** | **351,755** | **9,378** | **33** | **237,369** | **749,076** | 465,348 |
| ஆண்டு காலப்பகுதியில் அகற்றப்பட்டவை | **-** | **-** | **(3,523)** | **-** | **(39,043)** | **-** | **-** | **-** | **(42,566)** | (7,477) |
| ஆண்டு காலப்பகுதியில் மாற்றல் செய்யப்பட்டவை | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **(327,335)** | **(327,335)** | (177,699) |
| மீள்மதிப்பிடப்பட்ட சொத்துக்கள் மீதான ஒன்றுசேர்ந்த பெறுமானத்தேய்வை மாற்றம் செய்தல் | **(657,379)** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **(657,379)** | - |
| ஆண்டு காலப்பகுதியில் ஈட்டப்பட்ட மீள்மதிப்பு | **4,760,946** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **4,760,946** | - |
| சொத்துரிமைப் பயன்பாட்டை மீள்அளவிடல் | **-** | **-** | **-** | **-** | **-** | **(21,728)** | **-** | **-** | **(21,728)** | - |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **22,280,103** | **1,638,544** | **1,749,192** | **611,793** | **1,462,068** | **56,699** | **57,736** | **103,117** | **27,959,252** | 23,498,234 |

| ஒன்றுசேர்ந்த தேய்மானம் | காணியும் கட்டடமும் | பொறி மற்றும் பொறி ஒருங்கிணைப்புக்கள் | தள பாடங்களும் உபகர ணங்களும் | உந்து ஊர்திகள் | கணனி கள் | சொத்துக் களின் பாவனை உரிமை | ஏனையவை | நடை பெற்று வரும் கட்டுமானம் | 2023 மொத்தம் | 2022 மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **சனவரி 1இல் உள்ளவாறு** | **438,228** | **1,219,435** | **1,210,502** | **494,359** | **1,045,251** | **15,355** | **39,826** | **-** | **4,462,956** | 3,982,068 |
| ஆண்டுகாலப்பகுதியில் சேர்க்கப்பட்டவை | **219,150** | **30,062** | **99,115** | **30,973** | **86,184** | **7,172** | **191** | **-** | **472,847** | 488,051 |
| ஆண்டுகாலப்பகுதியில் அகற்றப்பட்டவை | **-** | **-** | **(3,487)** | **-** | **(38,942)** | **-** | **-** | **-** | **(42,429)** | (7,163) |
| மீள்மதிப்பிடப்பட்ட சொத்துக்கள் மீதான ஒன்றுசேர்ந்த தேய்மானத்தின் மாற்றல் | **(657,378)** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **(657,378)** | - |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **-** | **1,249,497** | **1,306,130** | **525,332** | **1,092,493** | **22,527** | **40,017** | **-** | **4,235,997** | 4,462,956 |
| **தேறிய ஏட்டுப் பெறுமதி** | **22,280,103** | **389,047** | **443,062** | **86,461** | **369,575** | **34,172** | **17,719** | **103,117** | **23,723,255** | 19,035,278 |

காணி மற்றும் கட்டடங்களின் கொண்டுசெல்லும் பெறுமதிகள் சீர்மதிப்புப் பெறுமதியில் பதிவுசெய்யப்படுகின்றன. திரு. ஏ.ஏ.எம் பாத்திகு, பட்டய மதிப்பீட்டாளரினால் அண்மைய சுயாதீனமான மதிப்பீடு 2023 திசெம்பர் 31இல் செயலாற்றப்பட்டது. இது, 2023 திசெம்பர் 31இல் உள்ளவாறு பதிவுசெய்யப்பட்டது.

நிதியியல் ஆண்டுக் காலப்பகுதியில், வங்கியானது ரூ. 412.36 மில்லியன் (2022- ரூ. 617.28 மில்லியன்) கொண்ட ஒட்டுமொத்தச் செலவைக் கொண்ட பணத்தின் மூலம் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தை கையகப்படுத்தியுள்ளது.

2023 திசெம்பர் 31இல் உள்ளவாறு இதுவரையிலும் பயன்பாட்டிலுள்ள முற்றாக பெறுமானத்தேய்வேற்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூ.3,399.34 மில்லியனாக காணப்பட்டது. (2022 - ரூ. 2,939.00 மில்லியன்).

**வங்கியின் இறையிலி காணியிலுள்ள கட்டடங்கள் மற்றும் குத்தகைக் காணியிலுள்ள கட்டடங்கள் என்பனவற்றின் மதிப்பீட்டில் பயன்படுத்தப்பட்ட மதிப்பீட்டு அணுகுமுறை மற்றும் முக்கியமான அவதானிக்க முடியாத உள்ளீடுகள்**

| ஆதனம் | பட்டயம் பெற்ற மதிப் பீட்டாளரின் பெயர் | மதிப்பீட்டு அணுகுமுறை | பேர்ச் ஒன்றிற்கான மதிப்பிடப்பட்ட விலை (ரூபா) | சதுர அடி ஒன்றுக்கான மதிப்பிடப் பட்ட விலை (ரூபா) | மாத மொன்றுக் கான மதிப்பிடப் பட்ட வாடகை (ரூபா) | வெளிச் செல்லும் செலவுகள் | கொள்வனவு ஆண்டுகள் | 2023 திசெம்பர் 31 இலுள்ள வாறு சீர்மதிப்புப் பெறுமதி (ரூ.000) |
|---|---|---|---|---|---|---|---|---|
| **காணி மற்றும் கட்டடம்** | | | | | | | | |
| தலைமை அலுவலகம் - கொழும்பு 01 | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 21,000,000 | 14,000-23,500 | - | - | - | 12,914,256 |
| வைற்எவேய்ஸ் கட்டடம் - கொழும்பு 01 | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் வருமான அணுகுமுறை | 18,500,000 | - | 7,596,000 | 40% | 16.66 | 876,986 |
| சென்றல் பொயின்ற் கட்டடம் - கொழும்பு 01 | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் வருமான அணுகுமுறை | 21,000,000 | - | 10,800,000 | 40% | 16.66 | 1,196,644 |
| வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் - இராஜகிரிய | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை | 5,000,000 | 4,000 - 15,000 | - | - | - | 3,507,578 |
| வங்கி இல்லம் - கொழும்பு 07 | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 12,000,000 | 5,000 - 13,500 | - | - | - | 2,047,831 |
| பிரதேச அலுவலகம் - மாத்தறை | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 2,250,000 - 4,500,000 | 5,000 - 12,000 | - | - | - | 445,062 |
| பிரதேச அலுவலகம் - மாத்தளை | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 200,000 - 1,000,000 | 4,000 - 12,000 | - | - | - | 308,500 |
| விடுமுறை இல்லம் - நுவரெலியா | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 2,000,000 | 6,000 - 18,000 | - | - | - | 446,400 |
| விடுமுறை இல்லம் - கதிர்காமம் | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 400,000 | 5,000 - 15,500 | - | - | - | 272,891 |
| **குத்தகைக் காணியிலுள்ள கட்டடங்கள்** | | | | | | | | |
| பிரதேச அலுவலகம் - அநுராதபுரம் | ஏ.ஏ.எம். பாதிகு | கிரய அணுகுமுறை | - | 5,800 - 12,500 | - | - | - | 53,625 |
| விடுமுறை இல்லம் - அநுராதபுரம் | ஏ.ஏ.எம். பாதிகு | கிரய அணுகுமுறை | - | 9,050 | - | - | - | 18,953 |
| பிரதேச அலுவலகம் - கிளிநொச்சி | ஏ.ஏ.எம். பாதிகு | கிரய அணுகுமுறை | - | 2,500 - 10,500 | - | - | - | 135,850 |
| விடுமுறை இல்லம் - சோமாவதிய | ஏ.ஏ.எம். பாதிகு | கிரய அணுகுமுறை | - | 15,900 - 16,000 | - | - | - | 55,529 |

| காணி, கட்டடங்களின் உள்ளடக்கம் | கொண்டு செல்லும் பெறுமதி 2023 ரூ. 000 | கொண்டு செல்லும் பெறுமதி 2022 ரூ. 000 |
|---|---|---|
| இறையிலி காணி | **14,197,619** | 10,855,725 |
| இறையிலி காணிகளிலுள்ள கட்டடங்கள் கட்டடங்கள் | **7,874,058** | 6,593,850 |
| குத்தகைக் காணிகளிலுள்ள கட்டடங்கள் | **208,429** | 288,733 |
| | **22,280,105** | 17,738,308 |

காணி மற்றும் கட்டடங்களை மீள் மதிப்பீடுசெய்தலின் கீழ்கொண்டுவரப்பட்ட தொகை கிரயம் கழிக்கப்பட்ட பெறுமானத்தேய்வாக கொண்டு செல்லப்பட்டிருப்பின் நிதியியல் கூற்றுக்களில் ரூ. 6,991.47 மில் (2022- ரூ, 7,133.73 மில்லியன்) உள்ளடக்கப்பட்டிருக்கும்.

## 21. அருவச் சொத்துக்கள்

| | 2023 | | | 2022 |
|---|---|---|---|---|
| | அருவச் சொத்துக்கள் | அருவச் சொத்துக்கள் - முன்னெடுக் கப்பட்டவை | மொத்தம் | |
| | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 |
| **கணனி மென்பொருட்கள்:** | | | | |
| **கிரயம்:** | | | | |
| சனவரி 1இல் உள்ளவாறு | 1,962,918 | 197,500 | 2,160,418 | 1,564,916 |
| ஆண்டுகாலப்பகுதியில் சேர்க்கப்பட்டவை | 6,557 | 23,434 | 29,991 | 1,209,009 |
| ஆண்டுகாலப்பகுதியில் மாற்றல் செய்யப்பட்டவை | - | (6,000) | (6,000) | (613,507) |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | 1,969,475 | 214,934 | 2,184,409 | 2,160,418 |
| **பதிவழிப்பு:** | | | | |
| சனவரி 1இல் உள்ளவாறு | 1,252,281 | - | 1,252,281 | 1,003,284 |
| ஆண்டிற்கான பதிவழிப்புக் கட்டணம் | 242,245 | - | 242,245 | 248,997 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | 1,494,526 | - | 1,494,526 | 1,252,281 |
| **தேறிய ஏட்டுப் பெறுமதி:** | | | | |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | **474,949** | **214,934** | **689,883** | 908,137 |

ஆண்டுக் காலப்குதியில் ரூ. 23.99 மில்லியன் ஒன்றுசேர்ந்த செலவுடன் கூடிய பணத்தின் மூலம் அருவச் சொத்துக்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளது. (2022 - ரூ.879.38 மில்லியன்).

2023 திசெம்பர் 31 வரை பயன்பாட்டிலுள்ள முற்றாகப் பதிவழிக்கப்பட்ட அசையாச் சொத்துக்களின் பெறுமதி ரூ.1,004.92 மில்லியனாகும். (2022 - ரூ.982.69 மில்லியன்).

## 22. வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள்

| | 2023 ரூ. 000 | 2022 ரூ. 000 |
|---|---|---|
| வெளிநாட்டு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை | **53,459,271** | 146,381,827 |
| ஏனைய வெளிநாட்டு நிதியியல் நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டியவை | **654,521** | 26,201 |
| | **54,113,792** | 146,408,028 |

## 23. ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம்

| | 2023 ரூ. 000 | 2022 ரூ. 000 |
|---|---|---|
| ஆ.தீ.ஒ பொறுப்புக்கள் | - | 731,375,677 |
| அட்டுறு வடடிகள் | - | 4,882,452 |
| | - | 736,258,129 |

ஆசிய மற்றும் பசுபிக்கான ஐக்கிய நாடுகளின் தேசிய பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவின் முயற்சியில் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் 1974 இல் தாபிக்கப்பட்டது. ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியமானது பங்கேற்கும் நாடுகளின் மத்திய வங்கிகளுக்கு மத்தியில் பிராந்தியத்திற்குள்ளேயான கொடுப்பனவுகளை பல்புடை தேறிய அடிப்படையொன்றில் தீர்ப்பனவு செய்வதற்கான பொறிமுறையொன்றாக தாபிக்கப்பட்டது. ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பங்கேற்பாளர்களாக இலங்கை, வங்காளதேசம், பூட்டான, இந்தியா, ஈரான், மாலைதீவுகள், மியன்மார், நேபால் மற்றும் பாகிஸ்தான என்பன காணப்படுகின்றன. ஒவ்வொரு ஆசியத் தீர்ப்பனவு பங்கேற்பாளரின் தேறிய தீர்ப்பனவு நிலைமை (தேறிய நிலைமை மற்றும் அட்டுறு வட்டி) ஒவ்வொரு இரு மாதங்களின் தீர்ப்பனவுக் காலப்பகுதியில் தீர்ப்பனவு செய்யப்படுகின்றது. வட்டியானது ஒவ்வொரு வெளிநின்ற நிலுவையிலும் கணிப்பிடப்படுகின்றது என்பதுடன் ஒவ்வொரு தீர்ப்பனவு காலப்பகுதியின் இறுதியில் பங்கேற்பாளர்களின் கணக்குகளிற்கு வரவு வைக்கப்படுகின்றது அல்லது செலவு வைக்கப்படுகின்றது. தீர்ப்பனவானது அடுத்துவரும் மாதத்தின் நான்கு தொழில் நாட்களிற்குள் மேற்கொள்ளப்படுகின்றது. ஏற்புடைத்தான வட்டி வீதமானது 2022இன் 0.10 சதவீதம் தொடக்கம் 4.09 சதவீதம் வரையான வீச்சுடன் ஒப்பிடுகையில் 2023ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் 4.23 சதவீதம் தொடக்கம் 5.35 சதவீதம் வரையான வீச்சில் வேறுபட்டது.

இலங்கை மத்திய வங்கியும் இந்திய றிசேர்வ் வங்கியும் 2023 ஒத்தோபரில் சார்க் நிதிய இருபுடை நாணய பரஸ்பர உடன்படிக்கையின் கீழான வெளிநின்ற தொகையையும் (ஐ.அமெரிக்க டொலர் 0.4 பில்லியன்) ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்களின் பிற்போடப்பட்ட தீர்ப்பனவுப்

பொறுப்புக்களில் (ஐ.அ.டொலர் 2.6 பில்லியன்) ஐ.அ.டொலர் 2.6 பில்லியன் கொண்ட மொத்த வெளிநின்ற பொறுப்புத் தொகையையும் ஒன்றிணைக்கும் விதத்தில் சிறப்பு பரஸ்பர உடன்படிக்கை ஒப்பந்தத்திற்குள் நுழைந்தது. 2023.12.31இல் உள்ளவாறு இத்தகைய விசேட பரஸ்பர வசதியின் நிலைமை குறிப்புகள் 25 மற்றும் 25.6 கீழ் தெளிவுபடுத்தப்படுகின்றது.

## 24. பன்னாட்டு நாணய நிதியம்

| | 2023<br>ரூ. 000 | 2022<br>ரூ. 000 |
|---|---|---|
| வட்டியுடனான கடன்கள் (குறிப்பு 24.1) | **292,928,957** | 385,639,212 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கு (குறிப்பு 24.2) | **416,183,699** | 459,264,653 |
| அனுமதிப் பங்குப் பொறுப்பு (குறிப்பு 24.3) | **117,593,131** | 129,765,698 |
| ப.நா. நிதியத்துக்குச் செலுத்த வேண்டிய ஏனைய தொகை (குறிப்பு 24.4) | **140,619,425** | 153,255,529 |
| | **967,325,212** | 1,127,925,092 |

24.1 **வட்டியைக் கொண்ட கடன்கள்** பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்து பெறப்பட்டது விரிவாக்கப்பட்ட நிதிய வசதியை உள்ளடக்குகின்றது. விரிவாக்கப்பட்ட நிதிய வசதி என்பது சென்மதி நிலுவைக்கும் அரசாங்கத்தின் பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சிநிரலுக்கும் ஆதரவளிப்பதற்கு பன்னாட்டு நாணய நிதியத்தால் வழங்கப்படும் மூன்று வருட வசதியாகும். 2016இல் 1.10 பில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.50 பில்லியன்) சிறப்பு எடுப்பனவு உரிமை கொண்ட விரிவாக்கப்பட்ட நிதிய வசதிக்கு பன்னாட்டு நாணய நிதியம் ஒப்புதலளித்தது. இது பன்னாட்டு நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்ட நாட்டின் தற்போதைய ஒதுக்கீட்டின் 185 சதவீதத்திற்குச் சமமானதாகும். சிறப்பு எடுப்பனவு உரிமை 119.89 மில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 168.10 மில்லியன்) கொண்ட தொகை விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் முதலாவது தொகுதி 2016 யூனில் கிடைப்பனவாக்கப்பட்டது. சிறப்பு எடுப்பனவு உரிமை 119.89 மில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 162.56 மில்லியன்) கொண்ட இரண்டாவது தொகுதி, சிறப்பு எடுப்பனவு உரிமை 119.89 மில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 167.20 மில்லியன்) கொண்ட மூன்றாவது தொகுதி, சிறப்பு எடுப்பனவு உரிமை 177.77 மில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 251.40 மில்லியன்) கொண்ட நான்காவது தொகுதி, சிறப்பு எடுப்பனவு உரிமை 177.77 மில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 252.00 மில்லியன்) கொண்ட ஐந்தாவது தொகுதி, சிறப்பு எடுப்பனவு உரிமை 118.50 மில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 164.10 மில்லியன்) கொண்ட ஆறாவது தொகுதி மற்றும் சிறப்பு எடுப்பனவு உரிமை 118.50 மில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 164.00 மில்லியன்) கொண்ட ஏழாவது தொகுதி என்பன முறையே 2016 நவெம்பர், 2017 யூலை, 2017 திசெம்பர், 2018 யூன், 2019 மே மற்றும் 2019 நவெம்பர் ஆகிய மாதங்களில் பகிர்ந்தளிக்கப்பட்டன. ஏழாவது தொகுதியின் பகிர்ந்தளிப்புடன் மொத்தமாக ஐ.அ.டொலர் 1.31 பில்லியன் இலங்கையின் மூலம் பன்னாட்டு நாணய நிதியக் கணக்கில் பெறப்பட்டுள்ளது. விரிவாக்கப்பட்ட நிதிய வசதி மீது ஏற்புடைத்தான வட்டி வீதமானது சிறப்பு எடுப்பனவு உரிமை வட்டி வீதத்துடன் சேர்த்து 100 அடிப்படைப் புள்ளிகளுக்குச் சமமானதாக காணப்படும்.

இலங்கையின் நேரடி வரவுசெலவுத்திட்ட நிதியிடலுக்காக சிறப்பு எடுப்பனவு உரிமை 2.3 பில்லியன் (ஐ.அ.டொலர் 3 பில்லியன்) கொண்ட தொகை 2023 மாச்சு 20 அன்று விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டிற்கு பன்னாட்டு நாணய நிதிய நிறைவேற்றுச் சபை ஒப்புதலளித்தது. மத்திய வங்கிக்கும் நிதி அமைச்சிற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கமைவாக, நேரடி வரவுசெலவுத்திட்ட நிதியிடலுடன் தொடர்புடைய பன்னாட்டு நாணய நிதியத்திற்கு கடப்பாடுகளை தீர்ப்பனவு செய்தலென்பது இலங்கை மத்திய வங்கிக்கு நிதியியல் சுமையொன்றல்லாமல் நிறைவுசெய்யப்படுகின்றமையால் இது இலங்கை மத்திய வங்கியின் ஐந்தொகையில் பதிவுசெய்யப்படவில்லை. வட்டி மற்றும் ஏனைய விதிப்புக்கள் உள்ளடங்கலான பன்னாட்டு நாணய நிதியத்தின் கீழான நிதியியல் உதவியுடன் தொடர்புடைய மீள்கொள்வனவுகளுக்கும் அனைத்துச் செலவுகளுக்கும் இலங்கை அரசாங்கம் பொறுப்பாகவுள்ளது என்பதுடன் அதன் சார்பில் நிதி அமைச்சினால் செலுத்தப்பட வேண்டும்.

2023ஆம் ஆண்டில் பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்து விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் இரு கடன் தொகுதிகள் பெறப்பட்டுள்ளன. சிறப்பு எடுப்பனவு உரிமை 254 மில்லியனின் முதலாவது கடன் தொகுதி 2023 மாச்சு 22 அன்று பெறப்பட்டது. ஐ.அ.டொலர் 331,626,865.25 கொண்ட தொகைக்குச் சமமான மொத்த ஐ.அ.டொலர் திறைசேரிக்கான பிரதிச் செயலாளர் கணக்கிலிருந்து மாற்றப்பட்டதுடன் சிறப்பு எடுப்பனவு உரிமை 254 மில்லியன் தொகை கொண்ட இரண்டாவது கடன் தொகுதி 2023 திசெம்பர் 14 அன்று பெறப்பட்டு ஐ.அ.டொலர் 337,800,661.18க்குச் சமமான தொகை திறைசேரிக்கான பிரதிச் செயலாளர் கணக்கிற்கு மாற்றப்பட்டது.

பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து ஒவ்வொரு கடன் தொகுதியையும் பெறும் போது நிதி அமைச்சின் செயலாளரினால் ஒப்பமிடப்பட்ட வாக்குறுதிப் பத்திரங்கள் பன்னாட்டு நாணய நிதியத்தின் சார்பில் வழங்கப்பட்டுள்ளன. புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கமைவாக, இரு வாக்குறுதிப் பத்திரங்கள் 2023 மாச்சு மற்றும் 2023 திசெம்பர் ஆகிய மாதங்களில் வழங்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியின் பாதுகாப்பின் கீழ் வைக்கப்பட்டுள்ளன.

| | 31.12.2023 இல் உள்ளவாறு விளைவு சிறப்பு எடுப்பனவு உரிமை வட்டி வீதம் % | முதிர்ச்சி | 2023<br>ரூ. 000 | 2022<br>ரூ. 000 |
|---|---|---|---|---|
| நீடிக்கப்பட்ட நிதிய வசதி | 5.103 | 2029 | **92,928,957** | 385,639,212 |
| **வட்டி உழைக்கும் மொத்தக் கடன்கள்** | | | **292,928,957** | 385,639,212 |

24.2 **சிறப்பு எடுப்பனவு உரிமை (சிஎஉ)** என்பது கைவசமுள்ள ஒதுக்குச் சொத்துக்களுக்கு குறைநிரப்பாக நீண்டகால உலகத் தேவைப்பாடுகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு ப.நா. நிதியத்தால் நிறுவப்பட்டுள்ள ஒதுக்குச் சொத்தாகும். அங்கத்துவ நாடுகளுக்கு அவற்றின் ப.நா. நி. அனுமதிப் பங்கின் பிரகாரம் சிஎஉ ஒதுக்கப்படுகின்றது. ப.நா. நிதியத்தின் சிஎஉ திணைக்களத்தில் (ப.நா. நிதியத்தினுள் அமைந்துள்ள கணக்குப் பிரிவு) பங்குபற்றுகின்ற நாடுகளுக்கு மாத்திரம் சிஎஉ ஒதுக்கலாம். ப.நா. நிதியத்திற்கு உரித்தாயுள்ள தங்கம், வெளிநாட்டுச் செலாவணி மற்றும் ஒதுக்குகளின் நிலைமைகளுக்குக் குறைநிரப்பாக ப.நா. நிதியத்தால் சிஎஉ உருவாக்கப்பட்டது. வங்கியினால் இலங்கை அரசு சார்பாக கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சில நிபந்தனைகளின் பிரகாரம் ப.நா. நிதியத்தால் அங்கத்தவர்களுக்கு அவர்களுடைய அனுமதிப் பங்குத் தொகைக்கேற்ப சிஎஉ ஒதுக்கப்படலாம். ப.நா. நிதியத்தால் சிஎஉ ஒதுக்கப்படுவதன் மூலம் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் கிரயச் செலவற்ற சொத்தொன்று உருவாவதுடன், அதற்காக வட்டி உழைக்கப்படுவதோ அல்லது செலுத்தப்படுவதோ கிடையாது. சிஎஉ ஐ இரத்துச் செய்வதற்குக் கூட உடன்படிக்கையின் நிபந்தனைகள் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும் இற்றைவரை இவ்வேற்பாடுகள் செயற்படுத்தப்படவில்லை. சிஎஉ ஒதுக்குதல்கள் அதிகரிக்கப்படுவதன் மூலம் 11ஆவது குறிப்பில் காட்டப்பட்டுள்ளவாறு சிஎஉ வைத்திருத்தல் அதிகரிக்கிறது. அதன் தேறிய ஒதுக்குதலுக்குச் சமமான தொகையையும் அது சிஎஉ திணைக்களத்தின் தொழிற்பாடுகளில் பங்குபற்றியதன் காரணமாக ப.நா. நிதியம் சிஎஉ திணைக்களத்தை முடிவுறுத்துகின்ற அல்லது ஒழிக்கின்ற போது செலுத்த வேண்டியதாயுள்ள ஏனைய ஏதேனும் தொகைகள் இருப்பின் அவற்றையும் ப.நா. நிதியத்திற்குச் செலுத்துவதற்கு அங்கத்தவர்கள் கடப்பாடுடையவர்களாயிருப்பர்.

24.3 **அனுமதிப் பங்குப் பொறுப்புக்கள்:** 11.1ஆம் இலக்கக் குறிப்பில் விளக்கப்பட்டுள்ளவாறான ப.நா. நிதிய அனுமதிப் பங்கிற்காகச் செலுத்தப்பட்ட தொகை அனுமதிப் பங்குப் பொறுப்புக்கள் தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

24.4 **ப.நா. நிதியத்திற்குச் செலுத்தப்படத்தக்க ஏனைய தொகைகள்:** தொழிற்பாட்டு மற்றும் நிர்வாகக் கொடுக்கல்வாங்கல்கள் சார்பாக வங்கியானது ப.நா. நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகைகள் இதன் மூலம் காட்டப்படுகிறது.

## 25. ஏனையவை

| | 2023<br>ரூ. 000 | 2022<br>ரூ. 000 |
|---|---|---|
| திறைசேரி துணைச் செயலாளர் - எஸ்குரொ உடன்படிக்கையின் கீழ் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III **(குறிப்பு 25.1)** | - | 179 |
| திறைசேரி துணைச் செயலாளர் - எஸ்குரொ உடன்படிக்கையின் கீழ் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III - கட்டம் II **(குறிப்பு 25.2)** | - | 30,071 |
| திறைசேரி துணைச் செயலாளர் - சிறப்பு டொலர் கணக்கு 2 **(குறிப்பு 25.3)** | **248,714,938** | 991,218 |
| பரஸ்பர பரிமாற்றல் வசதியின் கீழ் வங்காளதேச வங்கிக்குச் செலுத்த வேண்டிய தொகை **(குறிப்பு 25.4)** | - | 73,060,873 |
| பரஸ்பர பரிமாற்றல் வசதியின் கீழ் சீன மக்கள் வங்கிக்குச் செலுத்த வேண்டிய தொகை **(குறிப்பு 25.5)** | **459,955,000** | 520,231,000 |
| இந்திய றிசேர்வ் வங்கியின் சிறப்பு பரஸ்பர பரிமாற்றல் **(குறிப்பு 25.6)** | **800,490,754** | - |
| ஏனைய வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | **95,080** | 70,110 |
| | **1,509,255,772** | 594,383,451 |

### 25.1 எஸ்குரோ உடன்படிக்கையின் கீழ் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III

இவ்வசதி உடன்படிக்கையானது சீன அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கை அரசாங்கத்திற்குமிடையில் ஐ.அ.டொலர் 300.00 மில்லியனுக்காக 2014 மாச்சு 11 அன்று கைச்சாத்திடப்பட்டது. முன்னுரிமை வீதி செயற்றிட்டம் கட்டம் III முன்னேற்றுதல் மற்றும் புனரமைத்தல் செலவிற்கு நிதியளிப்பதே இக்கடனின் நோக்கமாகும். வசதி உடன்படிக்கைக்கமைவாக, இலங்கை அரசாங்கத்தின் வங்கியாளராக வங்கி நியமிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, கடனை வைப்பிலிடுதல் மற்றும் வீதி செயற்றிட்டத்திற்கான அத்தகைய நிதியங்களைப் பகிர்ந்தளித்தல் ஆகிய ஏக நோக்கத்திற்காக அதன் கணக்குப் புத்தகங்களில் கணக்கு திறக்கப்பட்டுள்ளது. 2019ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், ஐ.அ.டொலர் 19.13 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. 2020 திசெம்பர் 31இல் உள்ளவாறு ஐ.அ.டொலர் 0.0004 மில்லியனை தோற்றுவித்து 2020ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இத்தகைய நிதியங்களைப் பயன்படுத்தி பல்வேறு பகிர்ந்தளிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. 2021 மற்றும் 2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கொடுக்கல்வாங்கல் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால், 2022 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை ஐ.அ.டொலர் 0.0004 மில்லியனாக காணப்பட்டது. 2023 மாச்சில், ஐ.அ.டொலர் 0.0004 மில்லியன் கொண்ட எஞ்சிய மீதி சீன அபிவிருத்தி வங்கிக்கு மீளளிக்கப்பட்டதுடன் 2023 திசெம்பரில் நிலுவை ஏதுவுமிருக்கவில்லை.

### 25.2 எஸ்குரோ உடன்படிக்கையின் கீழ் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III கட்டம் II

2019, ஐ.அ.டொலர் 20.24 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. 2020ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், ஐ.அ.டொலர் 13.83 மில்லியன் தொகை கொண்ட பகிர்ந்தளிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. 2021 மற்றும் 2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் எந்தவொரு பகிர்ந்தளிப்புக்களும் மேற்கொள்ளப்படவில்லை. 2022 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை ஐ.அ.டொலர் 0.082 மாத்திரமாகும். 2023 மாச்சில் ஐ.அ.டொலர் 0.082 மில்லியன் கொண்ட எஞ்சிய மீதி சீன அபிவிருத்தி வங்கிக்கு மீளளிக்கப்பட்டதுடன் 2023 திசெம்பரில் நிலுவை ஏதுவுமிருக்கவில்லை.

### 25.3 திறைசேரி துணைச் செயலாளர் சிறப்பு டொலர் கணக்கு 2

இது, ஐ.அ.டொலரில் திறைசேரியின் சார்பில் கிடைக்கப்பெற்ற பெறுகைகளை செலவு வைக்கும் பொருட்டு திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் சார்பில் பேணப்படும் டொலர் கணக்கொன்றாகும். 2023ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், இலங்கை வரவு செலவுத்திட்ட

நிதியிடலுக்காக பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்து விரிவாக்கப்பட்ட நிதிய வசதிக் கடனின் இரு தொகுதிகள் கிடைக்கப்பட்டன. இதற்கமைய, 2023ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் விரிவாக்கப்பட்ட நிதிய வசதிக் கடனின் 1ஆவது மற்றும் 2ஆவது தொகுதியில் ஐ.அ.டொலர் 331.63 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 337.80மில்லியன் என்பன செலவுவைக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக, 2023ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், பல்வேறு வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு அமைப்பிலிருந்து திறைசேரிக்கான நாணவித ஐ.அ.டொலர் பெறுகைகள் மற்றும் இத்தகைய நிதியங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வட்டி வருமானம் என்பன செலவுவைக்கப்பட்டதுடன் அரசாங்கத்தின் சார்பில் கடன்களை மீளச் செலுத்துவதற்கும் ஏனைய பகிர்ந்தளிப்புக்களுக்கும் பயன்படுத்தப்பட்டன. 2023 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை ஐ.அ.டொலர் 767.82 மில்லியனாகும்.

**25.4 வங்காளதேச வங்கிக்கும் இலங்கை மத்திய வங்கிக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட இருபுடை நாணய பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையின் கீழ் வங்காளதேச வங்கிக்கு செலுத்தவேண்டிய தொகை**

இலங்கை மத்திய வங்கியும் வங்காளதேச வங்கியும் இருபுடை நாணய பரஸ்பர உடன்படிக்கைக்குள்ளும் 2021இன் ஓகத்து/ செத்தெம்பர் மாதகாலப்பகுதியில் மூன்று தொகுதிகளாக பெறப்பட்ட ஐ.அ.டொலர் 200 மில்லியன் கொண்ட மொத்த தொகைக்காக 2021 ஓகத்து மற்றும் 2022 மே, மற்றும் 2023 பெப்புருவரியில் அதையொத்த பின்னிணைப்பொன்றிற்குள்ளும் நுழைந்தது. மூன்று மாத காலப்பகுதிக்கு இலங்கை ரூபாக்குச் சமமான தொகையில் அதையொத்த காலப்பகுதிக்குப் பின்னர் பல்வேறு தடவைகளில் மாற்றப்பட்டது.

இதற்கமைய, இப்பரஸ்பர பரிமாற்றல் வசதி 2023 ஓகத்து/ செத்தெம்பரில் முதிர்ச்சியடைந்ததுடன் இலங்கை மத்திய வங்கி பரஸ்ப பரிமாற்றல் வசதியை 2023 ஓகத்து / செத்தெம்பர் காலப்பகுதியில் முழுமையாக தீர்பனவு செய்யப்பட்டது.

**25.5 சீன மக்கள் வங்கிக்கும் இலங்கை மத்திய வங்கிக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட இருபுடை நாணய பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையின் கீழ் சீன மக்கள் வங்கிக்குச் செலுத்தவேண்டிய தொகை**

இலங்கை மத்திய வங்கியும் சீன மக்கள் வங்கியும் 2021 மாச்சு 19 அன்று இருபுடை நாணய பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையைக் கைச்சாத்திட்டது. இவ்வுடன்படிக்கையின் கீழ், சீன மக்கள் வங்கியிடமிருந்து ரென்மென்பி 10 பில்லியன் தொகை (ஐ.அ.டொலர் 1.5 பில்லியனுக்குச் சமமான) 2021 திசம்பரில் பெறப்பட்டது. இது, ஒரு ஆண்டுக் காலப்பகுதிக்காக இலங்கை ரூபாவிற்கு சமமான தொகையொன்றின் பரிமாற்றலில் மட்டுப்படுத்தப்பட்ட பயன்பாட்டிற்காக (குறிப்பு 8.1) பயன்படுத்தப்படும்.

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெளிநின்ற நிலுவையானது ஒரு ஆண்டுக் காலப்பகுதிக்காக 2023 திசெம்பரில் நீடிக்கப்பட்ட ரென்மென்பி 10 பில்லியன் பரஸ்பர பரிமாற்றல் தொகையை பிரதிபலிப்பதுடன் இவ்வசதியானது 2024 திசெம்பரில் முதிர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**25.6 இந்திய றிசேர்வ் வங்கிக்கும் இலங்கை மத்திய வங்கிக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட சிறப்பு பரஸ்பர உடன்படிக்கையின் கீழ் இந்திய றிசேர்வ் வங்கியக்குச் செலுத்தவேண்டிய தொகை**

குறிப்பு 23இல் தெளிவுபடுத்தப்பட்டவாறு, இலங்கை மத்திய வங்கியும் இந்திய றிசேர்வ் வங்கியும் 2023 ஒத்தோபரில் சிறப்பு பரஸ்பர உடன்படிக்கைக்குள் நுழைந்தது. இலங்கை மத்திய வங்கி 2023இன் பின்னைய பகுதியிலிருந்து செலுத்த வேண்டிய வட்டிகளுடன் மாதாந்த மீள்கொடுப்பனவை ஆரம்பித்ததுடன் பொறுப்பை மூன்று ஆண்டுகளுக்குள் முற்றாக தீர்ப்பனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## 26. வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள்

இவை மத்திய வங்கிச் சட்டத்தின் 32ஆம் பிரிவின் கீழ் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் பேணப்படும் வைப்புக்களாக இருப்பதுடன் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்கள், ஊழியர் சேம நிதியம் மற்றும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைகளின் பங்கேற்பாளர்கள் ஆகியோரினால் நாணய விதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வங்கிகளினால் தொழிற்படுத்தப்படும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் கீழான கொடுப்பனவுகளை கௌரவிப்பதற்காக பேணப்படும் வைப்புக்களாகவும் காணப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், அரசாங்கத்தினால் முழுமையாக பிணையிடப்பட்ட வட்டியற்ற ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி, தீர்ப்பனவு முறைமையின் சுமூகமான தொழிற்பாட்டிற்கு வசதியளிப்பதற்காக ஒரு நாளுக்குள்ளேயான கொடுப்பனவுக் கடப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக பங்கேற்பாளர்களுக்குக் கிடைக்கச் செய்யப்படுகிறது. இவ்வைப்புக்கள் கணக்கீட்டு வெளிப்படுத்துகைத் தேவைப்பாட்டு நோக்கங்களுக்காக தொடர்பான தரப்பினர் (அதாவது அரசிற்குச் சொந்தமான வங்கிகள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் ஏனையவை) என வகைப்படுத்தப்பட்டிருப்பினும், இவ்வைப்புக்கள் தொடர்பான நியதிச்சட்ட ஏற்பாடுகளின் நியதிகளில் பேணப்பட்டு வருகின்றதேயன்றி அவ்வரச நிறுவனங்களுடனான வங்கியின் குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தொடர்புகளுக்காகவல்ல.

| | 2023<br>ரூ. 000 | 2022<br>ரூ. 000 |
|---|---|---|
| வங்கிகளினால் செய்யப்பட்ட வைப்புக்கள் | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | **93,734,580** | 240,719,873 |
| - ஏனையவை | **36,014,842** | 70,817,929 |
| | **129,749,422** | 311,537,802 |
| நிதியியல் நிறுவனங்களால் செய்யப்பட்ட வைப்புக்கள் | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | **233** | 216 |
| - ஏனையவை | **12,722,927** | 11,508,163 |
| | **12,723,160** | 11,508,379 |
| வங்கிகளினாலும் ஏனைய நிதியியல் நிறுவனங்களினாலும் செய்யப்பட்ட மொத்த வைப்புக்கள் | **142,472,582** | **323,046,181** |

## 27. அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள்

| | 2023<br>ரூ. 000 | 2022<br>ரூ. 000 |
|---|---|---|
| அரச வைப்புக்கள் | **1,694,698** | 160,513 |
| அரச முகவராண்மைகளும் நிதியங்களும் | **378,592** | 60,898 |
| | **2,073,290** | 221,411 |

அரச மற்றும்/ அல்லது அரச முகவராண்மைகளின் அல்லது நிறுவனங்களின் வைப்புக்களுக்கான அலுவல்சார் வைப்பாளராக வங்கி இருப்பதனால் மத்திய வங்கிச் சட்டத்தின் 81 மற்றும் 82ஆம் பிரிவின் நியதிகளில் இவ்வைப்புக்கள் பேணப்படுகின்றன.

## 28. மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்

| | 2023<br>ரூ. 000 | 2022<br>ரூ. 000 |
|---|---|---|
| துணைநில் வைப்பு வசதிகள் | **227,035,873** | 330,637,059 |
| | **227,035,873** | 330,637,059 |

நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தலின் ஒரு பகுதியாக, மத்திய வங்கிச் சட்டத்தின் 31ஆம் பிரிவின் கீழ் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளானவை, பணச்சந்தையின் திரவத்தன்மையை ஒழுங்குபடுத்தும் பொருட்டு திறந்த சந்தை நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்படுகின்றன. இம்மீள்கொள்வனவு உடன்படிக்கைகளானவை காலத்திற்குக் காலம் வங்கியால் தீர்மானிக்கப்படுகின்ற திரவத்தன்மை முகாமைத்துவக் கொள்கைக்கு அமைவாக ஓரிரவு அல்லது தவணை முறையில் அரச பிணையங்களில் மாத்திரம் ஈடுபடுத்தப்படுகின்றன. 2023 திசெம்பர் 31இல் உள்ளவாறு மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் இலங்கை அரசாங்கத்தில் எந்தவொரு வெளிநின்ற நிலுவையும் காணப்படவில்லை (2022 - ஏதுமில்லை).

துணைநில் வைப்பு வசதியும் பணச் சந்தையில் திரவத்தன்மையை ஒழுங்குபடுத்தும் பொருட்டு திறந்த சந்தை நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்படுகின்றது. இந்த வசதியானது நாளாந்த மீள்கொள்வனவு ஏலங்களில் தமது திரவத்தன்மைத் தேவைப்பாடுகளை பெற்றுக்கொள்ள முடியாத பங்கேற்கும் நிறுவனங்களுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ளது. இது, பிணையில்லாத வசதியாக இருப்பதுடன் ஓரிரவு அடிப்படையில் மட்டுமே வழங்கப்படுகின்றது.

## 29. சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

இலங்கையின் நாணயத்தை வெளியிடும் தனி அதிகாரம் வாய்ந்த நிறுவனமென்ற ரீதியில் மத்திய வங்கியானது தொடர்ச்சியாக சட்டத்தின் பிரகாரம் செல்லுபடியாகும் நாணயத்தை வெளியிடுகின்றது. வங்கியினால் வெளியிடப்பட்டு குறிப்பிட்ட அறிக்கையிடல் திகதிகளில் சுற்றோட்டத்தில் உள்ளவாறான நாணயப் பெறுமதிகள் பின்வருமாறு:

| பெறுமதி<br>குத்திகள்: | 2023<br>ரூ. 000 | 2022<br>ரூ. 000 |
|---|---|---|
| சதம் 1 | **3,631** | 3,631 |
| சதம் 2 | **5,709** | 5,709 |
| சதம் 5 | **23,267** | 23,267 |
| சதம் 10 | **39,236** | 39,236 |
| சதம் 25 | **122,475** | 122,475 |
| சதம் 50 | **185,093** | 185,097 |
| ரூபா 1 | **1,073,741** | 1,054,291 |
| ரூபா 2 | **1,657,217** | 1,633,948 |
| ரூபா 5 | **5,477,594** | 5,373,467 |
| ரூபா 10 | **8,709,257** | 8,278,530 |
| ரூபா 20 | **149,841** | 149,777 |
| ஞாபகார்த்த நாணயக் குத்திகள் | **609,633** | 604,099 |
| | **18,056,694** | **17,473,527** |
| தாள்கள்: | | |
| ரூபா 1 | **4,981** | 4,981 |
| ரூபா 2 | **26,694** | 26,694 |
| ரூபா 5 | **37,190** | 37,191 |
| ரூபா 10 | **1,245,351** | 1,247,314 |
| ரூபா 20 | **7,818,764** | 7,714,028 |
| ரூபா 50 | **7,491,942** | 7,672,840 |
| ரூபா 100 | **28,520,217** | 27,890,398 |
| ரூபா 200 | **126,164** | 126,206 |
| ரூபா 500 | **57,752,961** | 52,838,832 |
| ரூபா 1000 | **160,871,342** | 154,427,683 |
| ரூபா 2000 | **2,363,611** | 2,709,640 |
| ரூபா 5000 | **902,187,270** | 754,397,918 |
| | **1,168,446,487** | 1,009,093,725 |
| சுற்றோட்டத்திலுள்ள மொத்த நாணயங்கள் | **1,186,503,181** | 1,026,567,252 |

## 30. ஏனைய செலுத்தத்தக்கவை

| | 2023 ரூ. 000 | 2022 ரூ. 000 |
|---|---|---|
| ஏற்பாடுகளும் கட்டணங்களும் | **895,496** | 7,910,908 |
| கடன் தீர்ப்பனவுகளுக்காக வர்த்தக வங்கிகளிலிருந்து பெறப்பட்ட தொகை | **3,231,613** | - |
| கைவிடப்பட்ட சொத்துக்களுக்கெதிராகப் பெறப்பட்ட பொறுப்புக்களின் மாற்றல்கள் (குறிப்பு 30.1) | **20,788,599** | 15,415,255 |
| ஊழியர் நன்மைத் திட்டங்களின் நிலுவைகள் (குறிப்பு 30.2) | **29,533** | 12,361 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | **4,562,565** | 44,981,823 |
| | **29,507,806** | 68,320,347 |

30.1 கைவிடப்பட்ட ஆதனங்கள் தொடர்பான செலுத்தத்தக்கவை 2009ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் கைவிடப்பட்ட ஆதனங்களை அடையாளம் காணல், அறிக்கையிடல், மாற்றல் செய்தல் மற்றும் பேணுதல் தொடர்பான வழிகாட்டலின் கீழ் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட கைவிடப்பட்ட ஆதனங்கள் தொடர்பானவையாக இருந்தன. கைவிடப்பட்ட சொத்துக்கள் மீது ஏதேனும் மேலதிகக் கோரல்கள் காணப்படும் சந்தர்ப்பத்தில் வங்கிகள் அவ்வாறு சேகரிக்கப்பட்ட வைப்புக்களை வட்டியுடன் செலுத்துவதற்குப் பொறுப்புடையனவாகும். எனவே, சேகரிக்கப்பட்ட மொத்த வைப்புக்கள் நிறையேற்றப்பட்ட சராசரி திறைசேரி உண்டியல் வீதங்களில் கணிக்கப்பட்ட வட்டி வீதத்துடன் சேர்த்து வங்கியின் பொறுப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 30.2 ஊழியர் நன்மைத் திட்டங்களிலுள்ள நிலுவைகள்

வங்கியானது பொதுவான அலுவல்களின் ஒரு பகுதியாக அதன் ஊழியர் நன்மைத் திட்டங்களிற்கு நடைமுறைக் கணக்கு வசதிகளினை வழங்குகின்றது. தனியாக நிருவகிக்கப்படுகின்ற வங்கியின் ஊழியர் நன்மைத் திட்டங்களின் நடைமுறைக் கணக்கு மற்றும் உள்ளக நிறுவகக் கணக்குகளில் வரவாக இருக்கும் தொகைகள் பின்வருமாறு:

| | 2023 ரூ. 000 | 2022 ரூ. 000 |
|---|---|---|
| இ.ம.வ சேம நிதியம், ஓய்வூதியத் திட்டங்கள் மற்றும் விதவைகள்/ விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் என்பவற்றின் நிலுவைகள் | **29,533** | 12,361 |
| | **29,533** | 12,361 |

## 31. பிற்போடப்பட்ட கொடைகள்

| | 2023 ரூ. 000 | 2022 ரூ. 000 |
|---|---|---|
| சனவரி 1 இல் உள்ளவாறு | **1,834** | 1,178 |
| ஆண்டு காலப்பகுதியில் சேர்க்கப்பட்டவை | **1,404** | 1,288 |
| ஆண்டு காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்டவை | **(735)** | - |
| ஆண்டு காலப்பகுதியில் பதிவழிக்கப்பட்டவை | **(28)** | (632) |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **2,475** | 1,834 |

பிற்போடப்பட்ட கொடைகள் அத்தகைய சொத்துக்களின் தேய்மானக் கொள்கையுடன் பொருந்தத்தக்க விதத்தில் இக்காலப்பகுதியில் பதிவழிப்புச் செய்யப்பட்டன. இது, எவ்வித விலையுமில்லாது வங்கியால் பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்களை உள்ளடக்குகின்றது. சொத்துக்களின் சீர்மதிப்புப் பெறுமதி பிற்போடப்பட்ட கொடைக் கணக்கொன்றில் வரவு வைக்கப்படுவதுடன், தொடர்பான சொத்துக்களின் தேய்மானக் கொள்கைகளின்படி அச்சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் முழுவதும் ஏனைய வருமானமாகக் கொள்ளப்படுகிறது.

எஸ்.ஏ.பி.பி கடன் திட்டங்களுக்கான புதிய தன்னியக்க அமைப்பைச் செயற்படுத்துவதற்கான மென்பொருள் மேம்பாட்டுச் செலவின் 70 சதவீதத்தினை மானியமாக எஸ்.ஏ.பி.பி முகாமைத்துவப் பிரிவிலிருந்து இலங்கை மத்திய வங்கியினால் பெற்றுக்கொண்ட தொகையும் இதில் அடங்கும். இது பாங்க் ஒவ் கொரியாவின் அறிவு பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்திடமிருந்து பெறப்பட்ட ரூ.1.45 மில்லியன் (2020, 2021 மற்றும் 2023 இல் பெறப்பட்டது) பெறுமதியான இரு ஆராய்ச்சிக் கொடையையும் உள்ளடக்குகின்றது. இது இலங்கை மத்திய வங்கி அலுவலர்களின உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் செலவை ஈடுசெய்யப் பயன்படுத்தப்படுவதுடன் நிலைபெறத்தக்க நிதியியல் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பயன்படுத்தப்பட்ட ரூ.2.32 மில்லியன் தொகை கொண்ட ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கும் பயன்படுத்தப்படும்.

## 32. ஓய்வூதியமும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நன்மைத் திட்டங்களும்

அனைத்து தகுதியான ஊழியர்களும் உள்ளடங்கக் கூடியவாறான குறித்துரைக்கப்பட்ட ஏழு நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள் வங்கியினால் தொழிற்படுத்தப்படுகின்றன. ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் (பழையது) கீழ் 1998 சனவரி 01ஆந் திகதிக்கு முன்னர் வங்கியில் சேர்ந்த ஊழியர்கள், 10 ஆண்டு பணிக் காலத்தைப் பூர்த்தி செய்ததன் பின்னர் இதற்குத் தகுதி பெறுகின்றனர். புதிய ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 1998 சனவரி 01ஆந் திகதிக்கு பின்னர் வங்கியில் சேர்ந்த ஊழியர்கள், 10 ஆண்டு பணிக்காலத்தைப் பூர்த்தி செய்ததன் பின்னர் இதற்குத் தகுதி பெறுகின்றனர். ஊழியர் ஓய்வூதியத் திட்டங்களானது பங்களிப்பில்லாத ஓய்வூதியத் திட்டமாக இருப்பதுடன் இதன் நன்மைகளின் கிரயத்தை முழுமையாகவே வங்கி ஏற்கின்றது. ஆண் ஊழியர்களுக்கான விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டமும் பெண் ஊழியர்களுக்கான விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டமும் 1998 சனவரி 01ஆம் திகதிக்கு முன்னர் வங்கியில் பணிக்குச் சேர்ந்த ஊழியர்களுக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள அதேவேளை, புதிய விதவைகள் மற்றும் அநாதைகள் மற்றும் விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் 1998 சனவரி 01 இற்குப் பின்னர் வங்கியில் பணிக்குச் சேர்ந்த ஊழியர்களுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ளது. விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் (பழையது),

துணைத் தகவல்கள்

ஆளுகை

வங்கியை முகாமைசெய்தல்

வங்கியின் வகிபாகம்

நிதியியல் அறிக்கைகள்

விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் (பழையது) இன் கீழ் தகுதி பெற்ற 1994 ஓகத்து 01இற்கு முன்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்கள் மாதாந்த அடிப்படைச் சம்பளத்தில் 5 சதவீதத் தொகையொன்றைப் பங்களிப்புச் செய்வதுடன் 1994 ஓகத்து 01 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்கள் மாதாந்த அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவீதத்தினைப் பங்களிப்புச் செய்வதுடன் புதிய விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் தகுதிபெற்ற ஊழியர்கள் தங்களின் மாதாந்த அடிப்படை சம்பளத்தில் 5.5 சதவீதத்தினைப் பங்களிப்புச் செய்கின்றனர்.

வங்கியில் ஐந்து ஆண்டு கால பணியைப் பூர்த்தி செய்தவர்களான, ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெறத் தகுதிபெறாத ஊழியர்களுக்காக பணிக்கொடை நன்மைகளை வங்கி வழங்குகின்றது. இப்பொறுப்புபைப் பூர்த்தி செய்வதற்காக, ஆயுட்கால மதிப்பீட்டைப் பயன்படுத்தி கணிப்பீடு செய்யப்பட்ட பொறுப்பிற்குச் சமமானதொரு தொகை ஏற்பாடாக நிதியியல் நிலைமைக் கூற்றில் முன்கொண்டு செல்லப்படுகின்றது.

வங்கித்தொழிலுக்குப பின்னரான மருந்து நன்மைத் திட்டத்தினைக் கொண்டிருப்பதுடன் இதன் கீழ், ஓய்வுபெற்ற ஊழியர்களால் அவர்கள் பெயரில் அல்லது அவர்களது துணைவர் பெயரில், அவர்களது பெற்றோர் பெயரில் மற்றும் ஊழியர்களது விதவைகள்/விதுரர்களாலும் ஏற்கப்படுகின்ற ஒரு சில மருத்துவச் செலவுகள் மீளளிக்கப்படுகின்றன.

ஊழியர் ஓய்வூதியத் திட்டம், விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம், விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம், புதிய விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் மற்றும் விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம், பணிக் கொடைகள் திட்டம் மற்றும் மருத்துவ நனமைத் திட்டம் என்பனவற்றின் குறித்துரைக்கப்பட்ட நன்மைக் கடப்பாடுகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய நடைமுறைப் பணிச் செலவுகள் தொடர்பில் மீள்மதிப்பீட்டைச் செய்வதற்காக சுயாதீனமான காப்புறுதி மதிப்பீட்டாளரான கே.ஏ.பன்டிற், ஆலோசகர் மற்றும் காப்புறுதி மதிப்பீட்டாளர் (மும்பாய்) ஆண்டுக் காலத்தில் பணியின் பொருட்டு வங்கியினால் அமர்த்தப்பட்டார்.

ஊழியர் ஓய்வூதியத் திட்டங்கள், விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத்திட்டம் மற்றும் விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத்திட்டம் என்பனவற்றின் நிதியங்கள் தனித்தனியாக முகாமைப்படுத்தப்படுவதுடன் தனித்தனியாக ஏடுகளும் பேணப்படுகின்றன. எனினும், பணிக்கொடைத் திட்டமும் மருத்துவ நன்மைகள் திட்டமும் வங்கியின் கணக்கேடுகளிலிருந்து வேறாக்கப்படவில்லை. மேலும் முதலீடுகளும் முதலீட்டு வருமானமும் வங்கி ஏடுகளில் இந்நிதியத்திற்காக தனித்தனியாக பதிவு செய்யப்படுகின்றதுடன், முதலீடுகளிலிருந்து உழைக்கப்பட்ட வருமானம் இந்நிதியத்திற்கு மாற்றல் செய்யப்படுவதுடன் பங்கிடப்படாமல் மீளமுதலிடப்படுகின்றன.

அறிக்கையிடும் காலப்பகுதியில் அனைத்து நன்மைக் கடப்பாடுகளினது தற்போதைய பெறுமதியான ரூ.75,377.83 மில்லியன் (2022 - ரூ.40,853.23 மில்லியன்) திட்டச் சொத்துக்களின்/ முதலீடுகளின் மொத்தச் சீர்மதிப்புப் பெறுமதியான ரூ.55,571.05 மில்லியனை (2022 - ரூ.43,838.73 மில்லியன்) விட விஞ்சிக் காணப்பட்டதுடன் அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் ரூ. 19,806.78 மில்லியன் கொண்ட பற்றாக்குறையாக (2022 - ரூ.2,985.49 மில்லியன்).

**2023 திசெம்பர் 31இல் உள்ளவாறு**

| நன்மை (சொத்துக்கள்)/ பொறுப்புக்கள் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய | பணிக் கொடைத் திட்டம் | மருத்துவ நன்மை திட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| நன்மைக் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதி | **52,618,936** | **2,964,009** | **12,463,640** | **1,310,948** | **966,603** | **562,315** | **4,491,378** | **75,377,829** |
| திட்டச் சொத்துக்களின்/ முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதி | **(31,615,810)** | **(7,471,123)** | **(7,618,333)** | **(3,238,555)** | **(1,781,443)** | **(239,112)** | **(3,606,677)** | **(55,571,053)** |
| **தேறிய நன்மைப் பொறுப்பு/ (சொத்து)** | **21,003,126** | **(4,507,114)** | **4,845,307** | **(1,927,607)** | **(814,840)** | **323,203** | **884,701** | **19,806,776** |

நிதியியல் நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள ஓய்வூதியமும் தொழிலுக்குப் பின்னரான ஏனைய நன்மைத் திட்டங்களின் மீதியானது, பின்வரும் காரணங்களின் காரணமாக மதிப்பீட்டாளரின்படியான தேறிய பொறுப்புக்களிலிருந்து வேறுபடுகின்றது:

**அ)** விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் எஞ்சிய மீதியை வங்கிக்குப் பகிர்ந்தளிப்பதற்கான சாத்தியம் குறைவாக இருப்பதன் காரணமாக இந்நிதியத்தின் தேறிய சொத்து நிலைமை கணக்குகளில் பிரதிபலிக்கப்படவில்லை.

**ஆ)** வங்கியானது வெவ்வேறான நிதியத்தில் (உள்ளக ரீதியாகப் பேணப்பட்ட) தொடர்பான சொத்துக்களை வைத்திருக்காததன் காரணமாக பணிக்கொடை மற்றும் மருத்துவ நன்மைத் திட்டம் இரண்டிற்கும் நிதியியல் கூற்றுக்கள் மொத்தப் பொறுப்பு நிலைமையைக் காட்டுமேயன்றி, மதிப்பீட்டாளரினால் மதிப்பிடப்பட்ட தேறிய பொறுப்புக்களைக் காட்டாது.

| | 2023<br>ரூ. 000 | 2022<br>ரூ. 000 |
|---|---|---|
| ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | **21,003,126** | 1,609,738 |
| ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய | **(4,507,114)** | (4,147,765) |
| விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | **4,845,307** | 1,018,938 |
| விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய* | **-** | (455,747) |
| பணிக்கொடைத் திட்டம் (மொத்தம்) | **562,315** | 316,311 |
| மருத்துவ நன்மைத் திட்டம் (மொத்தம்) | **4,491,378** | 3,430,954 |
| | **26,395,012** | 1,772,429 |

*உண்மையான மதிப்பீடு சீராக்கமாக ரூ.455.75 பில்லியன் 2023ஆம் ஆண்டில் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் சீராக்கப்பட்டது.

| நன்மை கடப்பாடுகள் / (சொத்துக்களின்) அசைவு | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய | பணிக் கொடைத் திட்டம் | மருத்துவ நன்மை திட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| 2023 சனவரி 01இல் உள்ளவாறு | 1,609,738 | (4,147,766) | 1,018,938 | (1,382,294) | (844,696) | 105,741 | 654,844 | (2,985,495) |
| தேறிய நன்மை செலவு (வருமானம்) | 305,850 | (767,483) | 159,280 | (268,352) | (258,672) | 42,575 | 139,566 | (647,236) |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொகை | 19,317,266 | 908,895 | 3,667,089 | (276,961) | 288,528 | 174,887 | 90,291 | 24,169,995 |
| செலுத்தப்பட்ட பங்களிப்பு | (229,728) | (500,761) | - | - | - | - | - | (730,489) |
| 2023 திசெம்பர் 31இல் உள்ளவாறு | **21,003,126** | **(4,507,115)** | **4,845,307** | **(1,927,607)** | **(814,840)** | **323,203** | **884,701** | **19,806,775** |

| எறிவுசெய்யப்பட்ட நன்மைக் கடப்பாடுகளின் தற்போதைய பெறுமதியிலான அசைவு | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதவைகள், அநாதைகள் மற்றும் விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் - புதிய | பணிக் கொடைத் திட்டம் | மருத்துவ நன்மை திட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| 2023 சனவரி 01இல் உள்ளவாறு | 28,743,485 | 742,361 | 6,594,557 | 769,222 | 256,344 | 316,311 | 3,430,954 | **40,853,234** |
| வட்டிச் செலவு | 5,461,262 | 141,049 | 1,252,966 | 146,152 | 48,705 | 60,099 | 651,881 | **7,762,114** |
2023 திசெம்பர் 31 அன்றுள்ளவாறு வங்கியின் மொத்த உரிமை மூலதனம் ரூ.11.1 பில்லியனாகவிருந்ததுடன் வங்கியின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு வங்கி போதுமானளவு மூலதனமாக்கப்பட்டுள்ளது என ஆளும் சபை அபிப்பிராயப்படுகின்றது. மத்திய வங்கிச் சட்டத்தின் 97ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் அதன் நாணயப் பொறுப்புக்களினதும் அதன் செலுத்தப்பட்ட மூலதனத்தினதும் தொகைக்குகக் கீழ் அதன் சொத்துக்களின் பெறுமதி வருவதைப் பிரதிபலிக்கின்ற சந்தர்ப்பத்தில் இலங்கை மத்திய வங்கி மூலதனத்தை ஒரு தடையற்ற நிலைமைக்கு மீட்டெடுக்க அரசாங்கத்திடமிருந்து மூலதன உட்செலுத்தலொன்றைக் கோரலாம். அத்தகைய நிகழ்வில், இ.ம.வங்கியின் நிலைமைய மதிப்பீட்டுப் பற்றாக்குறையின் அளவைத் தீர்மானிக்கும் மற்றும் ஆளுகைச் சபையின் ஒப்புதலுடன் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் மூலதனப் பங்களிப்பினை அமைச்சரிடம் கோருதல். நிலவுகின்ற தற்போதைய சந்தை தொடர்பான வட்டி வீதங்களில் நாணய அல்லது பேரம்பேசக்கூடிய சாதனங்களிலுள்ள மூலதனத்தின் தொகை பாராளுமன்றத்தின் ஒப்புதலைப் பெற்ற பின்னர் மாற்றப்படும்.

## 52. தொடர்பான தரப்பினர்கள்

### 52.1 அரச மற்றும் அரசினால் கட்டுப்படுத்தப்படுகின்ற நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்

மத்திய வங்கியின் வழமையான வியாபாரத்தின் போது தொடர்புடைய தரப்பினர்களோடு கொடுக்கல்வாங்கலில் ஈடுபடுகின்றது. தொடர்புடைய தரப்பினருள் இலங்கை அரசாங்கம் (அரசு, இ.ம. வங்கியின் உரிமையாளர் என்ற ரீதியில்), பல்வேறு அரச திணைக்களங்கள், அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிறுவனங்கள் என்பன உள்ளடங்குகின்றன. பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள் 24 - திருத்தப்பட்ட தொடர்புடைய தரப்பினரின் வெளிப்படுத்தல்களுக்கமைய வங்கியினால் அரசுடனும் அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிறுவனங்களுடனும் மேற்கொள்ளப்பட்ட தனித்தனியாக முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் தனித்தனியாக முக்கியத்துவமில்லாத ஆனால் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் முக்கியத்துவம் வாய்ந்த கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் ஒழுங்குகளின் விபரங்கள் பின்வருமாறு:

| கொடுக்கல்வாங்கலின் இயல்பு | 2023<br>ரூ. 000 | 2022<br>ரூ. 000 |
|---|---|---|
| **கொடுக்கல்வாங்கல்கள்:** | | |
| அரச பிணையங்களின் உடனடிக் கொள்வனவு | **1,394,499** | - |
| அரச பிணையங்களின் உடனடி விற்பனை | **-** | 242,099 |
| மீள்கொள்வனவு/ விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு/ விற்பனை செய்யப்பட்ட இ.ம.வ. மற்றும் அரச பிணையங்கள் | **13,979,231,698** | 143,913,767,948 |
| மீள்கொள்வனவு/ மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட/ விற்பனை செய்யப்பட்ட இலங்கை மத்திய வங்கி மற்றும் அரசாங்க பிணையங்கள் மீதான வட்டி வருமானம்/ செலவினம் | **-** | 56,770,262 |
| வங்கிகளுக்கான திரவத்தன்மை ஆதரவு வசதி | **32,500,000** | - |
| அரசாங்கத்தின் சார்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட நிதியங்கள் | **599,128,330** | 210,540,495 |
| அரசாங்கத்தின் சார்பாக பகிர்ந்தளிக்கப்பட்ட நிதியங்கள் | **351,384,381** | 211,034,101 |
| திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நாணயத் தாள்களை அச்சிடுவதற்கான செலவு **(குறிப்பு 52.1.3)** | **2,603,776** | 1,856,465 |
| திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டு காலப்பகுதியில் பொருட்கள், பணிகள் மற்றும் வரிகளுக்கான கொடுப்பனவுகள் **(குறிப்பு 52.1.4)** | **11,136,712** | 5,147,957 |
| ஆண்டினுள் மொத்த வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் **(குறிப்பு 52.1.6)** | | |
| விற்பனை | **285,491,347** | 872,421,407 |
| கொள்வனவு | **912,234,278** | 695,124,187 |
| ஐ.அ.டொலர்/ இல. ரூபா பெறுதிகள் | **10,742,797** | 595,270,456 |
| வெளிவாரி சட்டச் செலவுகள் | **4,109** | - |
| இவ்வாண்டுப்பகுதியில் கைவிடப்பட்ட ஆதனம் தொடர்பில் பெறப்பட்ட நிதியம் | **572,600** | 365,405 |
| வாடகை வருமானம் | **208,276** | 207,763 |
| பங்கிலாப வருமானம் | **135,642** | 115,786 |
| ஏனைய கொடுக்கல்வாங்கல்கள் **(குறிப்பு 52.1.9)** | **912,255** | 794,842 |
| **நிலுவைகள்:** | | |
| மத்திய வங்கியினால் வைத்திருக்கப்படுகின்ற இலங்கை அரச பிணையங்கள் **(குறிப்பு 52.1.7)** | **2,044,347,592** | 2,498,995,015 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் **(குறிப்பு 14)** | **-** | 235,638,700 |
| கொவிட்-19 புத்துயிரளித்தல் மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் | **14,435,008** | 1,821,749 |
| குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வைத்திருக்கப்பட்ட அரச பிணையங்கள் | **20,491,905** | 17,930,602 |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான அ.நே.மொ.தீ. நிலுவைகள் **(குறிப்பு 26)** | **93,734,580** | 240,719,873 |
| இலங்கை வங்கி இலண்டனுடனான நொஸ்ரோ கணக்கு நிலுவைகள் | **41,368** | 43,888 |
| திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களிலிருந்து பெறத்தத்தக்கவை | **8,698,715** | 3,540,670 |
| திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களுக்கு செலுத்தத்தக்கவை **(குறிப்பு 25)** | **248,714,938** | 1,021,468 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு அரச மற்றும் அரச நிறுவனங்களுடனான நடைமுறைக் கணக்கு நிலுவைகள் | **(199)** | (297) |
| கைவிடப்பட்ட ஆதன நிலுவைகள் | **8,766,945** | 5,998,940 |
| ஏனைய நிலுவைகள் **(குறிப்பு 52.1.9)** | **284,800** | 13,321,704 |

**52.1.1** மத்திய வங்கியின் சட்டத்தின் பாகம் IX இன் பிரிவு 61இன் கீழ் அதிகாரமளிக்கப்பட்டதுடன் ஆளும் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கி மேற்பார்வைத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியை உரிமம் வழங்கப்பட்ட வங்கிகள் மீதான மேற்பார்வைத் தொழிற்பாட்டையும் ஒழுங்குபடுத்துதலையும் மேற்கொண்டு வருகின்றது.

இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லாத நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களமானது வங்கியல்லாத நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் தொழிற்பாட்டையும் ஒழுங்குபடுத்துகையையும் மேற்கொண்டு வருகிறது. இதற்கிணங்க, அரச கட்டுப்பாட்டிலுள்ள தொடர்புடைய நிறுவனங்கள் அல்லது அரசினால் நிதியிடப்பட்ட வங்கியல்லாத நிதியியல் நிறுவனங்கள் இத்திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழுள்ளன.

**52.1.2** 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 132ஆம் பிரிவின்படி, மத்திய வங்கி அரசாங்கத்தின் முகவராகத் தொடர்ந்து செயற்படுவதுடன் அரசாங்கத்தின் கணக்கிற்கான அரசாங்கப் பிணையங்களை வழங்குவதில் மற்றும் பொதுப் படுகடன் முகாமைத்துவ நிறுவனம் அல்லது அலுவலகம் தொடர்பான தொடர்புடைய சட்டம் தொழிற்பாட்டுக்கு வருகின்ற குறிப்பிட்ட திகதி வரை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் படுகடன் ஆகிய இரண்டிற்குமான பணி உட்பட பொதுப் படுகடனை முகாமை செய்தல் தொடர்பாக மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளன.

**52.1.3** இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 44ஆம் பிரிவின்படி இலங்கையில் நாணய விநியோகத்தை மேற்கொள்ளும் ஏக உரிமையையும் அதிகாரத்தையும் வங்கி கொண்டுள்ளது. இதற்கிணங்க இ.ம. வங்கியின் நாணயத் திணைக்களம் இலங்கையிலே சட்ட ரீதியான நாணயத்தை விநியோகிக்கும் ஏக அதிகாரத்துவம் உடையதாகத் தொழிற்படுகின்றது. நாணயத் தாள்களை அச்சிடுதலானது, 40 சதவீதப் பங்குகளை அரசாங்கம் சொந்தமாகக் கொண்டுள்ள டி லா ரூ லங்கா கரண்சி அன்ட் செக்குரிட்டி (பிறைவேட்) லிமிடெட் எனும் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

**52.1.4** வங்கியின் சாதாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது வங்கியானது அரச நிறுவனங்கள் அல்லது அரசாங்கத்தின் குறிப்பிடத்தக்களவு செல்வாக்கு அல்லது கட்டுப்பாடுள்ள நிறுவனங்களுடன் பல்வேறுபட்ட பொருட்கள் மற்றும் பணிகளைப் பெற்றுக் கொள்வதற்காக கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகிறது.

**52.1.5** மத்திய வங்கியானது, குறிப்பு 56 இல் விளக்கப்பட்டுள்ளவாறு, பொதுவாக நம்பிக்கைப் பொறுப்பாளராகக் கடமை புரிவதனால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அரசாங்கம், நம்பிக்கைப் பெறுப்புக்கள், ஓய்வூதிய நன்மைத் திட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் சார்பில் வைத்திருக்க அல்லது வழங்க முன் வருகின்றது.

**52.1.6** நாணய விதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, (2023 செத்தெம்பர் 14ஆம் திகதியிலிருந்து நடைமுமுறைக்குவரும் விதத்தில் மத்திய வங்கிச் சட்டம்) வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அபிவிருத்தியையும் வர்த்தக வங்கிகளின் ஓரிரவுக்கான தேறிய வெளிநாட்டுச் செலாவணி திறந்த நிலையினையும் கண்காணிக்கின்றது. உள்நாட்டின் வெளிநாட்டுச் சந்தைச் செலாவணி அபிவிருத்தியைக் கண்காணிக்கின்ற போது வங்கியானது சந்தையின் இரு புறங்களிலுமிருந்து இலங்கை ரூபாவின் செலாவணி வீதத்தின் மிகை மாற்றமுறும் தன்மையினை மிதமான நிலைக்குக் கொண்டு வருகின்றது. எனினும், பன்னாட்டு நாணய நிதிய விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேறிய அலுவல்கள் பன்னாட்டு ஒதுக்ககள் இலக்கை அடைவதற்கு, குறிப்பாக வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளை ஒன்றுதிரட்ட வேண்டியதன் காரணமாக வங்கியின் தலையீட்டு உபாயம் முக்கியமாக வெளிநாட்டுச் செலாவணியைக் கொள்வனவு செய்வதில் கவனம் செலுத்துகிறது. முதலாவது காலாண்டுப்பகுதியில், நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளைப் பராமரிக்க உதவும் எரிபொருள் மற்றும் நிலக்கரி போன்ற அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிக்கு நிதியளிப்பதை நோக்கமாகக் கொண்டு வங்கி வெளிநாட்டுச் செலாவணியைச் சந்தைக்கு விற்க வேண்டியிருந்தது. அத்தகைய கண்காணிப்பு நடவடிக்கையின் பெறுபேறுகளாக வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவு மற்றும் விற்பனைத் தொகைகள் விளங்குகின்றன.

**52.1.7** வங்கியின் உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களமானது நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் நேரடித் தொழிற்பாட்டை, பிரதானமாக 2023ஆம் ஆண்டு 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 31ஆம் பிரிவின் படியாக, திறந்த சந்தை நடவடிக்கைகளினூடாக செயற்படுத்துவதுடன் இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 32 - 34 பிரிவுகளின் படியான நியதிச்சட்ட ஒதுக்குத் தேவைப்பாடுகளையும் நடைமுறைப்படுத்துவதுடன், அரசாங்கம் பங்குடமைகளைக் கொண்டுள்ள வர்த்தக வங்கிகளினதும் வேறும் சில நிதியியல் நிறுவனங்களினதும், அரச நிறுவனங்களினதும் வங்கியாகவும் தொழிற்படுகிறது. 2023 திசெம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறு இத்தொழிற்பாட்டின் நிமித்தமாக எழும் திரண்ட நிலுவைகள், குறிப்பு 12இல் தரப்பட்டுள்ளன. அரச பிணையங்களிலிருந்து உழைக்கப்பட்ட வட்டி குறிப்பு 36இல் தரப்பட்டுள்ளது.

**52.1.8** வங்கியானது எவ்விதக் கட்டணங்களையும் அறவிடாது, அரச கட்டுப்பாட்டிலுள்ள வங்கியொன்றின் காப்பாளர் நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது.

**52.1.9** ஏனைய மீதிகளும் கொடுக்கல்வாங்கல்களும் அரசாங்கம், அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்ட தனிப்பட்ட ரீதியில் முக்கியத்துவமில்லாத கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்குகின்றன.

### 52.2 முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல் வாங்கல்கள்

ஆளுநர், துணை ஆளுநர்கள் மற்றும் உதவி ஆளுநர்கள் உள்ளடங்கலாக ஆளுகைச் சபையின் அங்கத்தவர்கள் வங்கியின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினராவர். முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

### 52.3 முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான கொடுப்பனவு

| | 2023<br>ரூ. 000 | 2022<br>ரூ. 000 |
|---|---|---|
| குறுகிய கால ஊழியர் நன்மைகள் | **170,108** | 261,043 |

மேற்படி கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கு அவர்களுடனான தொழில் ஒப்பந்தங்களுக்கமைய வங்கியினால் காசல்லாத நன்மைகளும் வழங்கப்படுகின்றன.

### 52.4 முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடனான ஏனைய கொடுக்கல்வாங்கல்கள்

| | 2023<br>ரூ. 000 | 2022<br>ரூ. 000 |
|---|---|---|
| முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான வெளிநின்ற கடன்கள் | **250,997** | 329,345 |
| இவ்வாண்டுப்பகுதியில் வழங்கப்பட்ட கடன்கள் | **153,118** | 203,018 |
| இவ்வாண்டுப்பகுதியில் மீளச்செலுத்தப்பட்ட கடன்கள் | **205,474** | 187,331 |

அனைத்துக் கடன்களும் கடன் வகையைப் பொறுத்து 2 சதவீதம் தொடக்கம் 7 சதவீதம் வரையிலான வட்டி வீத வீச்சிடையுடன் கூடிய போதியளவு பிணையத்தைக் கொண்டுள்ளதுடன் மாதாந்தம் மீளச் செலுத்தப்படுகின்றன.

### 52.5 தொழில்நிலைக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்

| | 2023 ரூ. 000 | 2022 ரூ. 000 |
|---|---|---|
| செலுத்தப்பட்ட மற்றும் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புக்கள் | **69,624** | 106,371 |

குறிப்பு 32இல் தரப்பட்டுள்ளவாறு ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வூதியத்திற்குப் பின்னரான திட்டங்களுக்கு வங்கி பல்வேறு தொகைகளைப் பங்களித்ததுடன் ஊழியர் சேம நிதியத்திற்கு ரூ.1,017.89 மில்லியன் (2022இல் ரூ.986.99 மில்லியன்) பங்களிப்புச் செய்துள்ளது. வழமையான வியாபார நடவடிக்கைகளின் போது வங்கியானது அதன் தொழிலுக்குப் பின்னரான திட்டங்களுக்கு வங்கித்தொழில் மற்றும் நிதியியல் பணிகளை வழங்கியது. அத்தகைய திட்டங்களுடனான நிலுவைகளின் தொகைகள் குறிப்பு 30.2இல் தரப்பட்டுள்ளன.

## 53. எதிர்பாராப் பொறுப்புக்கள்

### 53.1 நிதியியல் உத்தரவாத ஒப்பந்தங்கள்

வங்கியானது அரசாங்கத்தின் அல்லது அதன் முகவராண்மைகளினதும் நிறுவனங்களினதும் முகவராகச் செயற்பட்டு, பொதுத் திறைசேரியினால் இ.ம. வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள பதில் உத்தரவாதங்களைப் பயன்படுத்தி பல்வேறு தரப்பினர்களுக்கும் உத்தரவாதங்களை வழங்குகின்றது. 2023 திசெம்பர் 31இல் உள்ளவாறு அத்தகைய வெளிநின்ற உத்தரவாதங்கள் எதுவுமிருக்கவில்லை.

### 53.2 கொடுகடன் உத்தரவாதங்கள்

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு நிதியிடுவதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வெளியக கொடுகடன் மூலங்களிலிருந்தான கடன் பெறுகைகளிலிருந்து மீள்நிதியிடலை வழங்குதல், அத்தகைய தொழில்முயற்சிகளுக்கு கடன்கள் மீதான கொடுகடன் உத்தரவாதங்களை வழங்குதல், உத்தரவாத தவணைத் தொகைகளைச் சேகரித்தல், கொடுகடன் உத்தரவாத நிதியங்களை நிருவகித்தல், கடன் செலுத்தத் தவறுகைகளைத் தடுக்கும் நோக்குடன் கடன் நிதியங்கள் உரிய விதத்தில் பயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக கொடுகடனுக்குப் பின்னரான சோதிப்புக்கள் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற தொழிற்பாடுகளை வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மேற்கொண்டது. ஆண்டுகாலப்பகுதியில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன்களை வழங்கிய பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு ஏழக்கூடிய இழப்புக்களுக்கெதிராக வங்கி உத்தரவாதங்களை வழங்கியது. இது கடன்பெறுநர்களின் செலுத்தத் தவறுகைகளுக்கான ஒரு உத்தரவாதமல்ல என்பதோடு இழப்புக்களுக்காக மட்டுமேயாகும். அதாவது, பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களின் மூலம் கடன்களை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் பின்னர் உருவாகின்ற இழப்புக்களுக்காக மாத்திரம் கோரல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ்வேற்பாடுகளின் கீழ் ஏழக்கூடிய எதிர்பாராப் பொறுப்புக்களுக்கான தொகைகள் பின்வருமாறு:

**உள்நாட்டு வர்த்தக வங்கிகள் - கொடுகடன் உத்தரவாதங்கள் தொடர்பானது:**

| | வெளிநின்ற உத்தரவாதங்களின் தொகை | |
|---|---|---|
| | 2023 ரூ. 000 | 2022 ரூ. 000 |
| தொடர்பான தரப்பினர்கள் | **114,763** | 1,989,471 |
| ஏனையவை | **5,979** | 88,808 |
| மொத்தக் கொடுகடன் உத்தரவாதங்கள் | **120,742** | 2,078,279 |

2023 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட கொடுகடன் உத்தரவாதம் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு குறிப்பு 39இல் பதியப்பட்டுள்ளது.

### 53.3 சட்ட ரீதியான கோரல்கள்

2023 திசெம்பர் 31இல் வங்கிக்கெதிரான பல சட்ட நடவடிக்கைகள் எஞ்சியிருந்தன. குறிப்பிடத்தக்க ஏதேனும் நட்டங்கள் ஏற்படுவது சாத்தியமற்றதென்ற அபிப்பிராயத்தை வங்கி கொண்டுள்ளதால், எவ்வித ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

## 54. கடப்பாடுகள்

அ) 2023 திசெம்பர் 31இல் உள்ளவாறு, ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கையேற்புத் தொடர்பில் வங்கி ரூ.64.78 மில்லியன் பெறுமதியான மூலதனக் கடப்பாட்டைக் கொண்டிருந்தது.

ஆ) 2023 திசெம்பர் 31இல் உள்ளவாறு வெளிநின்ற முன்னோக்கிய செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு காணப்பட்டன.

| முன்னோக்கிய செலாவணி ஒப்பந்தங்கள் | | 2023 ரூ. 000 | 2022 ரூ. 000 |
|---|---|---|---|
| முன்னோக்கிய செலாவணி விற்பனைகள் | | | |
| | ஐ.அ.டொலர் | **1,221,302** | 559,112 |
| | ஸ்ரேலிங் பவுண் | **-** | 12,500 |
| | யப்பான் யென் | **538,182** | - |
| முன்னோக்கிய செலாவணி கொள்வனவுகள் | | | |
| | ஐ.அ.டொலர் | **225,000** | 4,750 |

## 55. நிதியியல் சொத்துக்களின் மாற்றல்கள்

வழமையான வியாபார நடவடிக்கைகளின் போது நிதியியல் சொத்துக்களின், முக்கியமாக வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட படுகடன் பிணையங்களின் மாற்றலுக்கு வழிவகுக்கக்கூடிய கொடுக்கல்வாங்கல்களில் வங்கி ஈடுபடுகின்றது. குறிப்பு 5.3.3இல் குறிப்பிட்ட கணக்கீட்டுக் கொள்கையின்படி மாற்றல் செய்யப்பட்ட நிதியியல் சொத்துக்கள் தொடர்ச்சியாக முழுமையாக அல்லது வங்கியின் தொடர்ச்சியான ஈடுபாட்டின் அளவிற்கு அங்கீகரிக்கப்படலாம் அல்லது அவை முழுமையாக அங்கீகரிப்பிலிருந்தும் நீக்கப்படலாம்.

வங்கியானது முழுமையாக அங்கீகரிப்பிலிருந்து நீக்கப்படாத அல்லது முக்கியமாக பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் மூலம் வங்கியின் தொடர்ச்சியான ஈடுபாட்டைக் கொண்டிருக்கும் நிதியியல் சொத்துக்களை மாற்றல் செய்கின்றது.

- மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்
- கடன் பிணையங்கள்
- பிணையாக வைக்கப்பட்ட பிணையங்கள்

### 55.1 முழுமையாக அங்கீகரிப்பிலிருந்து நீக்கப்படாத மாற்றல் செய்யப்பட்ட நிதியியல் சொத்துக்கள்

**அ) மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்**

மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் வங்கியின் நாணயக் கொள்கை செயற்பாட்டின் ஒரு பகுதியாக செயற்படுத்தப்படுவதுடன் இவை உடமையின் குறிப்பிடத்தக்களவு அனைத்து இடர்நேர்வுகளையும் வெகுமதிகளையும் கொண்டுள்ளமையால் நிதியியல் நிலைமைக் கூற்றில் “இலங்கை அரச பிணையங்கள்” இன் கீழ் தொடர்ச்சியாக முழுமையாக அங்கீகரிக்கப்பட்டன. செலுத்தப்பட வேண்டிய காசு பிரதிபலன்கள் மற்றும் அதனுடன் தொடர்பான அட்டுறு வட்டி என்பன நிதியியல் நிலைமைக் கூற்றின் உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்களின் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

**ஆ) கடன் பிணையங்கள்**

கடன் பிணையங்கள் விபரிப்பது யாதெனில் கட்டணத்தினால் உருவாக்கப்பட்ட சந்தை நடைமுறைகளில் பிணையங்கள் தற்காலிக அடிப்படையில் ஒரு தரப்பினரிடமிருந்து (கடன்கொடுப்பவர்: உதாரணம் இ.ம.வ) இன்னொரு தரப்பினருக்கு (கடன்பெறுபவர்) மாற்றல் செய்யப்படுவதாகும். கடன்வாங்கியவர் ஒப்பந்த தவணை முடிவில் அல்லது கேட்கப்படும் போது திரும்பச் செலுத்த வேண்டியது கட்டாயமானதாகும். தற்போது பல்வேறு வழங்குநர்களினால் வழங்கப்படும் முறிகள் மற்றும் பல்தேசிய முறிகள் ஆகியவற்றின் கூட்டுக்காப்பாளராக தெரிவுசெய்யப்பட்ட கிளியரிங் ஹவுஸ் செயற்படுகின்றது. அந்த முறிகளின் கேள்வியின் அடிப்படையில் அவற்றை கடன்கொடுப்பதற்கு கிளியரிங் ஹவுசினை ஏதுவாக்குவதற்காக அதனுடன் இலங்கை மத்திய வங்கி ஒப்பந்தமொன்றில் கையெழுத்திட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கி கடன் கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபடாது கிளியரிங் ஹவுஸ் நேரடியாக கடன்படுநர்களுக்கு அவற்றைக் கொடுப்பதனால் இச்செயற்பாடு தன்னியக்க முறி கடன்வழங்கல் என அழைக்கப்படும். ஒவ்வொரு மாத இறுதியிலும் தன்னியக்க கடன்வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட முறிகள் ஏதேனும் இருந்தால் அவற்றின் தன்னியக்க முறி கடன்வழங்கலின் கட்டண வருமானத்தினைக் கட்டுக்காப்பாளர் அனுப்பி வைப்பார். இது உடமையின் குறிப்பிடத்தக்களவு முழுமையான இடர்நேர்வு மற்றும் வெகுமதிகளை கொண்டிருப்பதனால் வங்கியானது நிதியியல் நிலைமைக் கூற்றில் பிணையங்களைத் தொடர்ச்சியாக முழுமையாக அங்கீகரிக்கின்றது. இந்தப் பிணையங்கள் நிதியியல் நிலைமைக் கூற்றில் “ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்களாகக்” காட்டப்படுகின்றன.

**இ) பிணையாக வைக்கப்பட்ட பிணையங்கள்**

பிணையங்கள் தீர்ப்பனவு செயன்முறைக்கு வசதியளிக்கும் பொருட்டு அவுஸ்திரேலியா டொலர் 35.0 மில்லியன் பெறுமதியுடைய பிணையங்கள் வங்கியினால் யூரோ கிளியர் வங்கியில் பிணையிடப்பட்டதுடன் 2017 சனவரி வரை ஐ.அ.டொலர் 30 மில்லியன் பெறுமதி கொண்ட கொடுகடன் வசதி பெறப்பட்டது. தற்பொழுது, யூரோ கிளியர் வங்கியில் வைத்திருக்கப்படும் பிணையிடப்பட்ட பிணையங்கள் ஐ.அ.டொலர் 3 மில்லியனாகும். பிணையிடப்பட்ட பிணையங்கள் யூரோ கிளியரில் தனியான கணக்கில் வைத்திருக்கப்படுகின்றன.

| | ஏனைய அனைத்தையு முள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான நிதியியல் சொத்துக்கள் 2023 ரூ. 000 | ஏனைய அனைத்தையு முள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான 2022 ரூ. 000 |
|---|---|---|
| சொத்துக்கள் | | |
| யூரோ கிளியருடன் பிணையாக வைக்கப்பட்ட பிணையங்கள் | **3,749,003** | 1,090,124 |
| சொத்தின் கொண்டு செல்லும் பெறுமதி | **3,749,003** | 1,090,124 |

## 56. நம்பிக்கை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள்

மத்திய வங்கி பொதுவாக நம்பிக்கைப் பொறுப்பாளராக கடமை புரிவதனால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அரசாங்கம், நம்பிக்கைப் பொறுப்புக்கள், ஓய்வூதிய நன்மைத் திட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் சார்பில் வைத்திருக்க அல்லது வழங்க முன்வருகின்றது. வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான நம்பிக்கைப் பொறுப்பு நடவடிக்கைகள் பின்வருமாறு:

**56.1** வங்கியானது, இலங்கை அரசாங்கத்தின் சார்பில், வெளிநாட்டு நிதியிடப்பட்ட அபிவிருத்தி செயற்றிட்டங்கள் மற்றும் கொடுகடன் திட்டங்களின் கீழ் கிடைக்கும் பல்வேறு வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகளின் பகிர்வையும் மீள்செலுத்துதலையும் கையாள்கின்றது. மேலும், பல்வேறு வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகளின் கீழ் இணைத்தரப்பினர் நிதியத்தினை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பெற்று அத்தகைய நிதிகளை வழங்கும் முகவராண்மைகளது வேண்டுகோளின்படி திறைசேரி உண்டியல்களில் முதலிடுகின்றது.

**56.2** வங்கியே ஊழியர் சேம நிதியத்தின் பணத்தினைப் பாதுகாக்க வேண்டும். சட்ட நியதிகளின்படி பங்களிப்புக்கள் மற்றும் மிகைக் கட்டணங்களை சேகரித்தல், முதலீடுகளிலிருந்து வருமானமீட்டல், ஊழியர் சேம நியதித்தில் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களது முறையான கணக்குகளைப் பேணி வருதல், மிகையான நிதிகளை முதலீடு செய்தல், மற்றும் அங்கத்தவர்களுக்கு நன்மைக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் என்பன ஆளுகைச் சபையின் செயற்பாடுகளில் அடங்கும்.

**56.3** மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்ட வங்கித்தொழில் நிறுவனங்களிற்கும், 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் வங்கித்தொழிலை மேற்கொள்ளும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஏற்படையதான தன்னார்வ வைப்புக் காப்புறுதித் திட்டமாக விளங்கும் வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை வங்கியே நிருவகிப்பதுடன் 2010 ஒத்தோபர் 01ஆம் நாள் தொடக்கம் நிதிகள், 2010 செத்தெம்பர் 28ஆம் நாளிடப்பட்ட 1673/ 11 இலக்க அரச வர்த்தமானியின்படி உருவாக்கப்பட்ட இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்திற்கு மாற்றல் செய்யப்பட்டுள்ளன.

**56.4** மேற்குறிப்பிட்ட வர்த்தமானிக்கமைவாக, இ.ம.வங்கி 2020 ஒத்தோபர் 01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் அத்துடன் வைப்புக் காப்புறுதி நிதியம் என்ற பெயரில் வைப்பாளர்களின் நிதியினைப் பாதுகாக்கும் தேசிய நல நடவடிக்கையொன்றாகக் கட்டாய வைப்புக் காப்புறுதித் திட்டமொன்றினை ஏற்படுத்தியது.

2013 நவெம்பர் 22 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இத்திட்டம் “இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்டம்” என மீளப்பெயரிடப்பட்டதுடன் வைப்பு காப்புறுதி நிதி “இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவி நிதி” என மீளப்பெயரிடப்பட்டது.

மேலும், 2239/52ஆம் இலக்க வர்த்தமானி இலக்கத்திற்கமைவாக, 2010 செத்தெம்பர் 28ஆம் திகதியிடப்பட்ட 2010ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஆரம்ப இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்ட ஒழுங்குவிதிகளை இரத்துச்செய்து மாற்றீடு செய்வதன் மூலம் 2021 ஓகத்து 06ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 02ஆம் ஒழுங்குவிதிகள் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டம் என் தலைப்பில் புதிய ஒழுங்குவிதிகள் வெளியிடப்பட்டன.

2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டமானது (சிறப்பு ஏற்பாடுகள்) 15.11.2023 இலிருந்து தொழிற்பாட்டிற்கு வருகின்றமையால் 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்ட ஒழுங்குவிதிகள் இரத்துச் செய்து, 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரைகள் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் வங்கித்தொழில் சிறப்பு ஏற்பாடுகள் கூட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டன.

வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம்பெற்ற அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் நிதித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் என்பன இத்திட்டத்தின் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும். இதன்படி, 2023 திசெம்பர் 31இல் உள்ளவாறு 63 நிறுவனங்கள் இத்திட்டத்தின் உறுப்பினர்களாகவுள்ளனர். காப்புறுதி செய்யப்பட வேண்டிய வைப்புக்கள் வங்கித்தொழில் சிறப்பு ஏற்பாடுகள் கூட்டத்தின் பிரிவு 43(2)இன் நியதிகளுக்கிணங்க, உறுப்பினர் நிறுவனங்களின் கேள்வி, தவணை மற்றும் சேமிப்பு வைப்புப் பொறுப்புக்களை உள்ளடக்கப்படுவதுடன் வங்கித்தொழில் சிறப்பு ஏற்பாடுகள் கூட்டத்தின் பிரிவு 43(3)இல் மற்றும் அத்தகைய ஏனைய படுகடன் சாதனங்கள் உள்ளடங்கலான படுகடன் சாதனங்களையும் வைப்புப் பொறுப்புக்களையும் நீக்குகின்றது.

வைப்புக் காப்புறுதி நிதியமானது, சுய விருப்பு வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் முதலீட்டிலிருந்தான ரூ.350.20 மில்லியன் மாற்றலின் மூலமும் மற்றும் கைவிடப்பட்ட சொத்து நிதியமாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிலிருந்து சேகரிக்கப்பட்டவற்றிலிருந்து செய்யப்பட்ட ரூ.1,168.31 மில்லியன் முதலீட்டின் மூலமும் 2010 ஒத்தோபர் 01இல் உருவாக்கப்பட்டது. 2023 திசெம்பர் 31 இலுள்ளவாறு இலங்கை வைப்புக் காப்புறுதி, நிதியத்தின் அளவு ரூ.110,117.96 மில்லியனாகவும் (கணக்காய்வு செய்யப்படாதவை, தற்காலிகமானது) ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் கருவிகளின் மீதான ஒதுக்குகள் ரூ.2,528.25 மில்லியனாகவும் காணப்பட்டது. இதன்படி, 2023 திசெம்பர் 31இல் உள்ளவாறு இலங்கை வைப்புக் காப்புறுதி நிதியத்தின் மொத்த உரிமை மூலதன நிலுவை ரூ.112,646.21 மில்லியனாகும். தற்பொழுது, வைப்பாளரொருவருக்கு, நிறுவனமொன்றுக்கு கொடுபடத்தக்க இழப்பீட்டுத் தொகை ரூ.1,100,000.00 அல்லது வெளிநாட்டு நாணய வைப்புக்களாக இருக்குமிடத்து அதற்குச்சமனான தொகைக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. இழப்பீட்டுக் கொடுப்பனவிற்கு இலங்கை மத்திய வங்கி பொறுப்பேற்கமாட்டாது என்பதுடன் ஏதேனும் அனுமதிக்கப்பட்ட கடன்பாடுகள் மற்றும் பெறப்பட்ட உதவுதொகைகள் உட்பட வைப்புக் காப்புறுதி நிதியத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியம் அல்லது ஒதுக்கப்பட்ட நிதியத்திற்கு ஏற்றவாறு மட்டுப்படுத்தப்படும். நிதியத்தில் வரவு வைக்கப்பட்டுள்ள மொத்தத் தொகைக்கு மேலதிகமாக ஏற்படும் ஏதாவது பொறுப்பிற்கு இலங்கை மத்திய வங்கி பொறுப்பேற்க மாட்டாது.

வைப்புக் காப்புறுதிப் பிரிவு தற்பொழுது வைப்புக் காப்புறுதி மற்றும் தீர்மானங்கள் திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ளதுடன், இது, காலத்திற்குக் காலம் ஆளுகைச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறான பணிப்புரைகள் மற்றும் கொள்கைகளின் நியதிகளுக்கிணங்க வைப்புக் காப்புறுதி மற்றும் தீர்மானங்கள் திணைக்களப் பணிப்பாளரின் அறிவுறுத்தல்கள் மற்றும் மேற்பார்வையின் கீழ் இத்திட்டத்தின் தொழிற்பாடுகளுக்கும் முகாமைத்துவத்திற்கும் பொறுப்பாக இருக்கின்றது. வைப்புக் காப்புறுதிப் பிரிவானது வங்கியின் நிதியியல் கூற்றுக்களிலிருந்தும் தெளிவாகவும் தனியாகவும் ஏடுகளையும் கணக்குகளையும் பேணல் வேண்டும். அத்துடன் கணக்காய்வாளர் நாயகம் இப்பிரிவின் கணக்காய்வாளராக இருத்தல் வேண்டும்.

**56.5** வங்கியின் ஆளுகைச் சபை சார்பில், பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது மத்திய வங்கிச் சட்டத்தின் பிரிவு 87(1)இல் நிர்ணயிக்கப்பட்டவாறு இலங்கை அரசாங்கத்தாலும் வெளிநாட்டு நன்கொடையாளர்களினாலும் நிதியளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் பிரத்தியேக முகவராக தொழிற்படுகின்றது. 2023 திசெம்பர் 31இல் உள்ளவாறு, பங்கேற்பு நிதி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மீள்நிதி ரூ.17,091.78 மில்லியனுக்கு வகைகூறியது.

# உள்நாட்டு விலை உறுதிப்பாட்டைப் பேணுதல்

2023 செத்தெம்பரில் சட்டமாக்கப்பட்ட 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரகாரம் மத்திய வங்கியின் முதன்மைக் குறிக்கோள் உள்நாட்டு விலை உறுதிப்பாட்டை அடைதலும் பேணுதலுமாகும். இது தொடர்பில், நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் நாணயக் கொள்கையை வகுத்தலும் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி வீதக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்தலும் மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபைக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பானது நாணயக் கொள்கைக் கட்டமைப்பு உடன்படிக்கையில் நிர்ணயிக்கப்பட்டவாறு பணவீக்கத்தை இலக்கிடப்பட்ட மட்டங்களில் பேணுகின்ற அதேவேளை, இது பொருளாதார வளர்ச்சி அதன் உள்ளார்ந்த ஆற்றலை அடைந்துகொள்வதற்கு துணையளிக்கின்றது. 2023 ஒத்தோபர் 05 அன்று அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்கத்திற்கும் இலங்கை மத்திய வங்கிக்குமிடையிலான தற்போதைய நாணயக் கொள்கைக் கட்டமைப்பு உடன்படிக்கையானது பணவீக்கத்தை 5 சதவீதத்தில் பேணுவதற்கு மத்திய வங்கியைத் தேவைப்படுத்துகின்றது. இக்கட்டமைப்பின் தொழிற்பாட்டு நியமங்களில், பணவீக்க இலக்கினை எய்துவதற்கான கொள்கை நிலைப்பாட்டுடன் ஒத்திசைவாகவிருப்பதற்கு குறுகியகால வட்டி வீதங்களை, குறிப்பாக சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தை வழிநடாத்துவதற்கான அதன் கொள்கைக் கருவிகளை/சாதனங்களை மத்திய வங்கி பயன்படுத்துகின்றது.

## நாணயக் கொள்கையை நடாத்துதல்

மத்திய வங்கி 2023 யூன் வரை இறுக்கமான நாணயக் கொள்கை நிலையினைப் பின்பற்றியது. எனினும், பணவீக்கம் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க விரைவாக மிதமடைந்தமையினால், 2023 யூனில் மத்திய வங்கி நாணயக் கொள்கை நிலையினைத் தளர்த்தத் தொடங்கியதுடன், கேள்வியினால் தூண்டப்பட்ட பணவீக்க அழுத்தங்கள் தொடர்ந்தும் குறைவடைந்த நிலையில் காணப்படும் தெளிவான அறிகுறிகளின் காரணமாக ஆண்டின் பின்னரைப்பகுதியில்

### நாணயக் கொள்கைத் தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறை



நாணயக் கொள்கை தொடர்ந்தும் தளர்த்தப்பட்டது. நாணயக் கொள்கையை நடத்துவது தொடர்பான விபரமான விபரணங்களும் அதன் தாக்கமும் மத்திய வங்கியின் ஆண்டுப் பொருளாதார மீளாய்வு – 2023இல் தரப்பட்டுள்ளன.

பொருளாதாரத்தின் நாணய, வெளிநாட்டு, உண்மை மற்றும் இறைத் துறைகளிலுள்ள போக்குகளையும் அபிவிருத்திகளையும் அதேபோன்று உலகளாவிய பொருளாதாரத்தினையும் மத்திய வங்கி தொடர்ந்தும் தொகுத்து, கண்காணித்து, பகுப்பாய்வு செய்த வேளையில் முன்கூட்டியே மேற்கொள்ளப்படும் பொருளாதாரக் கொள்கைத் தீர்மானங்களுக்கு வசதியளிப்பதற்கு எறிவுகளும் எதிர்வுகூறல்களும் தயாரிக்கப்படுகின்றன. பணவீக்கம் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான அண்மைக்கால எதிர்வுகூறல்கள் தரவுகளால் தூண்டப்படும் தீர்மானங்கள் வகுக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக பாரம்பரியமான மற்றும் பாரம்பரியமற்ற முறைகளைப் முன்னோக்கிய பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்ட வேளையில் மாதிரியினை அடிப்படையாகக் கொண்ட மற்றும் குறிகாட்டியினை அடிப்படையாகக் கொண்ட எதிர்வுகூறல்கள் பல்வேறு மூலங்களிலிருந்தான தொடர்பான உள்ளீடுகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டன. இவ்வெதிர்வுகூறல்கள் கிரமமான நாணயக் கொள்கைச் சுற்றுக்களில் விபரமாகக் கலந்துரையாடப்பட்டன. இது அலுவலர் மட்டத்திலான பல சுற்றுக் கலந்துரையாடல்களையும் உள்ளடக்குவதுடன் அதனைத் தொடர்ந்து நாணயக் கொள்கைக் குழுவின் கூட்டம், நாணயக் கொள்கைச் சபைக்கு (முன்னர் நாணயச் சபை) நாணயக் கொள்கைத் தீர்மானத்திற்கு வசதியளிக்கும் விதத்தில் பொருத்தமான நாணயக் கொள்கை நிலையின் மீது விதந்துரைப்புக்களை வழங்கும்.

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 83ஆம் பிரிவின் கீழ், அரசாங்கத்தின் இறைக் கொள்கைகளையும் மத்திய வங்கியின் நாணய மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் கொள்கையினையும் இணைப்பதற்காக சபையொன்று நிறுவப்படும் (இணைப்புக் குழு) மத்திய வங்கியின் ஆளுநர் தலைவராகவும் தொழிற்படுவதுடன் திறைசேரிக்கான செயலாளர்கள் மற்றும் பொருளாதாரக் கொள்கை விடயம் ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சரின் அமைச்சு (நிதி அமைச்சர் தவிர்ந்த வேறொரு அமைச்சருக்கு அவ்விடயம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில்) இணைப்புச் சபையின் உறுப்பினர்களாக பணியாற்றுவர். இணைப்புச் சபையானது அண்மைய பேரண்ட பொருளாதார அபிவிருத்திகள், தோற்றப்பாடு மற்றும் இடர்நேர்வு என்பன மீதான கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதற்காக காலாண்டு தோறும் கலந்துரையாட வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இதன்படி, இணைப்புச் சபையின் அங்குராப்பணக் கூட்டம் 2023 நவெம்பர் 07இல் நடத்தப்பட்டது.

அதேவேளை, பொருளாதாரத்தின் முக்கிய பங்குதாரர்களுடனான ஈடுபாட்டை நாணயக் கொள்கை வகுத்தல் செயன்முறையினுள் விரிவடையச் செய்யும் பொருட்டு புகழ்பெற்ற தொழில்சார் நிபுணர்கள், கல்விமான்கள் மற்றும் தனியார் துறை அலுவலர்கள் உள்ளடங்கலாக பல வகையான பங்குதாரர் வகுப்பினரை உள்ளடக்குகின்ற பங்குதாரர் ஈடுபாட்டுக் குழுவின் காலாண்டு கூட்டங்களை மத்திய வங்கி நடாத்தியது.

## நாணயக் கொள்கைத் தொடர்பூட்டல்

மத்திய வங்கியின் நாணயக் கொள்கைத் தொடர்பூட்டல் உபாயமானது 2023இல் நாணயக் கொள்கை வகுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் என்பவற்றுடன் தொடர்புடைய கருமங்கள் பற்றி பொதுமக்களும் வேறு ஆர்வலர்களும் புரிந்துகொள்வதை மேம்படுத்தி உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை அடைந்து பேணும் மத்திய வங்கியின் முதன்மைக் குறிக்கோளை எய்துவதைக் கொண்டிருக்கும் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அவர்களை இயலச்செய்கின்ற தெளிவான மற்றும் சுருக்கமான தொடர்பூட்டலை மையப்படுத்தியிருந்தது. ஆகவே, மத்திய வங்கியின் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் நாணயக் கொள்கைக் கட்டமைப்பின் முக்கிய கூறான நாணயக் கொள்கைத் தொடர்பூட்டல் அதிகமான வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை என்பனவூடாக பணவீக்க எதிர்பார்ப்புக்களை நிலைநிறுத்துவதற்கு உதவுகின்றது. கொள்கைக் குறிக்கோள்கள், மற்றும் தீர்மானங்கள், எதிர்பார்ப்புக்கள், முன்னோக்கிய வழிகாட்டல் பற்றிய தெளிவான தொடர்பூட்டல், மற்றும் பங்குதாரர்களுடனான தொடர்ச்சியான ஈடுபாடு என்பன அதிகரித்த நிச்சயமற்றதன்மைகளுடன் மிகவும் இக்கட்டான ஆண்டாகவிருந்த 2023 காலப்பகுதியில் எதிர்பார்ப்புக்களை வடிவமைப்பதற்கு உதவின.

நியதிச்சட்டத் தேவைப்படுத்தலுக்கமைவாக, மத்திய வங்கி 2022ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் ஆண்டறிக்கையை 2023 ஏப்பிறலில் மூன்று மொழிகளிலும் வெளியிட்டது. மேலும், மத்திய வங்கியின் வலைத்தளத்தில் கிடைக்கப்பெறுகின்ற நாளாந்த, வாராந்த, மாதாந்த குறிகாட்டிகள் மற்றும் செய்தித் திரட்டுக்கள் அத்துடன் இணையவழித் தரவு நூலகம் ஊடாக பொருளாதாரம் மற்றும் நிதியியல் தகவல்களை மத்திய வங்கி தொடர்ந்தும் பரப்பியது. பணவீக்கத்தில் அண்மைய அசைவுகள், பணவீக்க மூலங்கள் மற்றும் பணவீக்கத்திற்கான நடுத்தரகால

எறிவுகள் அதேபோன்று அத்தகைய எறிவுகளுக்கான முக்கிய இடர்நேர்வுகள் என்பவற்றை எடுத்துக்காட்டியும் விளக்கியும் மத்திய வங்கி 2023 யூலையில் முதற்தடவையாக நாணயக் கொள்கை அறிக்கையினை வெளியிடுவதற்குத் தொடங்கியது. ஆண்டிற்கு இரு முறை வெளியிடப்படும் இவ்வறிக்கை 2023 செத்தெம்பரில் இலங்கை மத்திய வங்கிச் சட்டம் இயற்றப்பட்ட பின்னர் கட்டாயமாக்கப்பட்டது.

நாணயக் கொள்கை நிலைபற்றி பொதுமக்களுக்கு அறிவிக்கின்ற அதேவேளை நாணயக் கொள்கை மீளாய்வு ஊடக மாநாட்டையும் அது நேரலையாக இடம்பெறுதலையும் வசதிப்படுத்தி 2023 காலப்பகுதியில் நாணயக் கொள்கை மீளாய்வுகள் பற்றி எட்டு ஊடக வெளியீடுகள் வெளியிடப்பட்டு, நிகழ்நேர நாணயக் கொள்கை தொடர்பூட்டல்களின் பரந்தளவான சென்றடைதலை இயலச்செய்தது. தொடர்பூட்டலில் தெளிவுத்தன்மையை மேம்படுத்தும் வழியொன்றாகவும் பணவீக்கத்திற்கான எதிர்கால எதிர்பார்க்கையை வழங்குவதற்கும் மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கை அறிக்கைகள், நாணயக் கொள்கை மீளாய்வு ஊடக வெளியீடுகள் மற்றும் பணவீக்கம் பற்றிய ஊடக வெளியீடுகள் என்பவற்றில் பணவீக்க விசிறி வரைபடங்களைத் தொடர்ந்தும் வெளியிட்டது. பணவீக்கத் தோற்றப்பாடு பற்றிய வெளியீடு பொதுமக்களின் பணவீக்க எதிர்பார்ப்புக்களை வழிநடாத்துமென்றும் இதன் மூலம் நடுத்தர காலத்தில் பணவீக்க இலக்கினை அடைவதற்கு ஆதரவளிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

நாணயக் கொள்கை அறிவிக்கப்பட்டதனைத் தொடர்ந்து அதன் சென்றடைவினை மேம்படுத்துவதற்கு மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களினால் ஒருங்கிணைக்கப்பட்ட வெப்தளக் கருத்தரங்குகளை மத்திய வங்கி அதன் வளவாளர்களைக் கொண்டு வசதிப்படுத்தியதுடன் பொருளாதார அபிவிருத்திகள், நாணயக் கொள்கை மற்றும் ஏனைய மத்திய வங்கித் தொழிற்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை ஆண்டு முழுவதும் நடாத்தியது.

மேலும், பன்னாட்டு நாணய நிதியத்தின் விசேட தரவுப் பரப்புதல் நியமத்திற்காக வழங்கப்பட்ட தரவுகள் முன்கூட்டி வெளியிடப்பட்ட கலண்டர் அட்டவணையின் பிரகாரம் பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளுடனும் தொடர்புடைய தரவுகளைப் பரப்புவதை உறுதிசெய்தது. மேலும், பன்னாட்டு முகவர்களுக்கு சரியான காலத்தில் தரவுகளையும் தகவல்களையும் பரப்புவதனை மத்திய வங்கி உறுதிசெய்தது.

## நாணயத் தொழிற்பாடுகள்

இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 31ஆவது பிரிவில் எடுத்துரைக்கப்பட்டவாறு, மத்திய வங்கியின் உள்நாட்டு விலை உறுதிப்பாட்டு குறிக்கோளை எய்துவதற்காக மத்திய வங்கி திறந்த சந்தைத் தொழிற்பாடுகளைக் கொண்டு நடாத்துகின்றது. அதற்கமைய, நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் மத்திய வங்கியானது திரவத்தன்மை கிடைக்கப்பெறுதல் மீதான நிச்சயத்தன்மையினை உறுதிசெய்து, தேவையின் அடிப்படையில் 2023 ஏப்பிறல் நடுப்பகுதியிலிருந்து திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் ஓரிரவு மற்றும் தவணை நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களூடாக திரவத்தன்மையினை கிரமமாக உட்செலுத்தியது. மேலும், நிரந்த அடிப்படையில் திரவத்தன்மையினை உட்செலுத்துவதற்கு திறைசேரி முறிகளின் உடனடிக் கொள்வனவுகளும் ஏலங்களூடாக மேற்கொள்ளப்பட்டன. கிரமமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்கு மேலதிகமாக, சில வங்கிகளின் திரவத்தன்மை நிலைமைகளை வலுப்படுத்துவதற்கு விசேட திரவத்தன்மை வசதிகள் அவ்வங்கிகளுக்கு வழங்கப்பட்டன. பணச் சந்தைகள் மற்றும் நாளாந்த திறந்த சந்தைத் தொழிற்பாட்டு ஏலங்களூடாக தமது குறுங்கால திரவத்தன்மைத் தேவைப்பாடுகளை நிறைவுசெய்வதற்கு இயலாதிருந்த பங்கேற்பாளர் நிறுவனங்களுக்கு துணைநில் வசதிகள் வழங்கப்பட்டன.

உரிமம்பெற்ற வங்கிகள் துணைநில் வசதிகளில் அளவுக்கதிகமாகத் தங்கியிருப்பதைக் குறைக்கின்ற அதேவேளை பணச் சந்தை நடவடிக்கைகளை மீளச்செயற்படுத்துவதற்கு 2023 சனவரியில் துணைநில் வைப்பு வசதிகள் கிடைக்கப்பெறும் தன்மை மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அதற்கமைய, துணைநில் வைப்பு வசதியின் உபயோகமானது மாதமொன்றிற்கு உயர்ந்தபட்சம் ஐந்து (05) தடவைகளுக்கு வரையறுக்கப்பட்டிருந்த அதேவேளை தரப்பட்ட நாளொன்றில் ஒவ்வொரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியினதும் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டின் 90 சதவீதத்திற்கு துணைநில் கடன்வழங்கல் வசதி வரையறுக்கப்பட்டிருந்தது. திரவத்தன்மை நிலைமைகளிலும் உள்நாட்டு பணச் சந்தை நடவடிக்கைகளிலும் ஏற்பட்ட முன்னேற்றங்களைப் பரிசீலனையில் கொண்டு 2024 ஏப்பிறல் 1 இலிருந்து மேலே குறிப்பிடப்பட்ட துணைநில் வைப்பு வசதி மீதான கட்டுப்பாடுகளை மத்திய வங்கி நீக்கியது.

மேலும், இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 32ஆம் பிரிவின்

### துணைநில் வசதிகள் மீது கட்டுப்பாடுகளை விதித்தல்




நியதிகளுக்கமைய, மத்திய வங்கியுடனான அவர்களது தீர்ப்பனவுக் கணக்கில் உரிய வங்கியின் மொத்த சராசரி ரூபா வைப்புப் பொறுப்புக்களுக்கான விகிதசமத்தில் ஒவ்வொரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியும் பேண வேண்டப்பட்ட ஒதுக்குகளை நிர்ணயிக்கின்ற நியதி ஒதுக்கி விகிதத்துடனான உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் இணங்குவித்தலை மத்திய வங்கி தொடர்ந்தும் நிர்வகித்துக் கண்காணித்தது.

## உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைத் தொழிற்பாடுகள்

நாட்டின் செலாவணி வீதக் கொள்கையினை நிர்ணயிப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்குமான அதிகாரங்கள் இலங்கை மத்திய வங்கியிடம் உரித்தளிக்கப்பட்டுள்ள அதேவேளை உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுடனும் பல்வேறு ஏனைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இணைத்தரப்பினர்களுடனும் வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகளில் ஈடுபடுவதற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

சந்தையில் வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மையின் மேம்படுத்தலைக் கருத்திற்கொண்டு, சந்தைக்கு வழங்கப்படும் நாளாந்த வழிகாட்டலை 2023 மாச்சு 07 தொடக்கம் மத்திய வங்கி நிறுத்தியதுடன் 2022 மே 12 அன்று வழங்கப்பட்ட "நாளுக்குள்ளான செலாவணி வீதத் தளம்பலை முகாமைசெய்தல்" மீது உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்படும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இரத்துச்செய்யப்பட்டன. பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழான தேவைப்பாட்டிற்கும் இவ்வழிமுறை ஆதரவளித்தது. மேலும், 2023 மாச்சில் வெளிநாட்டுச் செலாவணியை மத்திய வங்கிக்குக் கட்டாயமாக விற்பனை செய்தல் மீது உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை இரத்துச்செய்தலை மத்திய வங்கி முன்னெடுத்துடன், நிலக்கரி மற்றும் எரிபொருள் இறக்குமதியை வசதிப்படுத்துவதற்கு உரிமம்பெற்ற வங்கிகளால் சுயவிருப்பு அடிப்படையில் ஒப்படைக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி கையேற்பினை நிறுத்தியது. அதன் பின்னர் 2023இன் முதலரையாண்டு காலப்பகுதியில் எப்போதாவது நிகழ்ந்த தளம்பலுடன் செலாவணி வீதத்தில் குறிப்பிடத்தக்க உயர்வடையும் போக்கு அவதானிக்கபட்டது. இதன் பின்னணியில் உள்நாட்டுச் செலாவணிச் சந்தையைக் கண்காணித்து வழிநடாத்துவதில் மத்திய வங்கி முனைப்புடன் ஈடுபட்ட அதேவேளை, செலாவணி வீதத்தில் அளவுக்கதிகமான தளம்பலைக் கட்டுப்படுத்தி மொத்த அலுவல்சார் ஒதுக்குகளைத் பெருக்கியது.

உள்நாட்டு படுகடன் மேம்படுத்துகையின் கீழ் இலங்கை அபிவிருத்தி முறிகளின் ரூபாத் தீர்ப்பனவு காரணமாக வெளிநாட்டு நாணயத்திலான பற்றாக்குறையினைச்

சமாளிப்பதற்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியிடமிருந்து வெளிநாட்டுச் செலாவணிக்கான தீவிரமடைந்த கேள்வி காரணமாக 2023இன் இரண்டாம் அரைப்பகுதி, செலாவணி வீதம் மீது சில மேல்நோக்கிய அழுத்தத்தை எடுத்துகாட்டியது. ஏதேனும் அளவுக்கு மீறிய அழுத்தத்தைக் கட்டுப்படுத்துவதற்கு தேவையேற்பட்ட போதெல்லாம் சந்தைக்கு வெளிநாட்டுச் செலாவணியை வழங்குவதனூடாக உடனடித் தலையீடுகளுடன் உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் ஏனைய பங்குதாரர்களுடன் ஒன்றிணைந்து மத்திய வங்கியின் செயற்றிறன் வாய்ந்த தொடர்பூட்டலினால் செலாவணி வீதத்தின் குறிப்பிடத்தக்க நிலைநிறுத்தலொன்று அவதானிக்கப்பட்டது. அதேவேளை, உள்நாட்டு படுகடன் மேம்படுத்துகைக்கமைவாக இலங்கை அபிவிருத்தி முறிகளை இலங்கை ரூபாவில் பெயர் குறிக்கப்பட்ட முறிகளுக்கான பரிமாற்றத்தை ஈர்ப்பதற்கு வசதியளிப்பதற்காக 2023இல் விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில் உரிய உரிமம்பெற்ற வங்கிகளுக்கு ஏற்புடைய தேறிய வெளிநாட்டுச் செலாவணி திறந்தநிலை வரையறைகளை தற்காலிகமாகத் திருத்துவதற்கு வழிமுறைகள் எடுக்கப்பட்டன.

செலாவணி வீத அபிவிருத்திகள் மீதான தகவல்களைப் பரப்பும் நியதிகளில் மத்திய வங்கி, முன்னர் வெளியிடப்பட்ட குறித்துரைக்கப்பட்ட மாறுபாட்டு எல்லையுடன்கூடிய நடு செலாவணி வீதத்திற்குப் பதிலாக 2023 மாச்சு தொடக்கம் ஐ.அ.டொலருக்கான குறிகாட்டி செலாவணி வீதத்தை ஏனைய தெரிவுசெய்யப்பட்ட உலக நாணயங்களுக்கான குறிகாட்டி செலாவணி வீதங்களுடன் இணைந்து வெளியிடுவதை மீளவும் தொடங்கியது. ஒன்பது முக்கிய நாணயங்களுக்காக நாளாந்த அடிப்படையில் ரூபாவிற்கெதிராக தெரிவுசெய்யப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகளின் சராசரி தந்தி மாற்றல் கொள்வனவு மற்றும் விற்பனைச் செலாவணி வீதங்களையும் மத்திய வங்கி மேலும் வெளியிட்டது.

2023 செத்தெம்பரில் இலங்கை மத்திய வங்கிச் சட்டம் இயற்றப்பட்டதனைத் தொடர்ந்து நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி வீதக் கட்டமைப்பொன்றினைப் பேணுகின்ற மத்திய வங்கியின் வகிபாகத்தினை வலியுறுத்துகின்றது. சந்தைக் கேள்வி மற்றும் நிரம்பல் நிலைமைகள் மூலம் செலாவணி வீதம் நிர்ணயிக்கப்படுவதை நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி வீதக் கட்டமைப்பு இயலச்செய்கின்றது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடானது பொருத்தமானவாறு செலாவணி வீதத்தில் மிதமிஞ்சிய தளம்பலை சீரமைப்பதற்கும் அலுவல்சார் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்குமாக வரையறுக்கப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவம்

பன்னாட்டு ரீதியான சிறந்த நடத்தைகளுக்கும், பாதுகாப்பு, திரவத்தன்மை மற்றும் ஆதாயக் குறிக்கோள்களைக் கருத்திற்கொண்டும் ஆளுகைச் சபையினால் ஆக்கப்பட்ட விதிகளுக்கும் ஒத்திசைவாக நாட்டின் அலுவல்சார் பன்னாட்டு ஒதுக்குகளை வைத்திருத்தல் அதேபோன்று முன்மதிமிக்கதாகவும் செயல்திறன்வாய்ந்த விதத்திலும் முகாமைசெய்தல் ஆகிய பொறுப்பு இலங்கை மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2023இல் பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவ நடவடிக்கையுடன் தொடர்புடைய முதலீட்டுக் கொள்கைக்கூற்றுக்கள், உபாய ரீதியான சொத்து ஒதுக்கீடுகள் மற்றும் முதலீட்டு வழிகாட்டல்கள் என்பவற்றுடனான இணங்குவித்தலை உறுதிசெய்து கடன் மற்றும் சந்தை இடர்நேர்வுகளை உள்ளடக்குகின்ற நிதியியல் இடர்நேர்வுகள் உள்ளடங்கலாக மொத்த வருவாய் அணுகுமுறையொன்றின் மீதான செயலாற்றத்தினை மதிப்பீடுசெய்கின்ற அதேவேளை, சொத்து மற்றும் பொறுப்புக் கட்டமைப்பிலிருந்து தோன்றுகின்ற மாதிரி அடிப்படையிலமைந்த அறிவியல் ரீதியான கட்டமைப்பிற்கமைவாக பன்னாட்டு ஒதுக்குகள் முகாமைசெய்யப்பட்டன.

2023 காலப்பகுதியில் பன்னாட்டு ஒதுக்குகளின் உறுதியான வளர்ச்சி வேகம் காரணமாக மத்திய வங்கி, மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டுத் திரவத்தன்மை மட்டங்கள் காரணமாக முன்னைய இரு ஆண்டுகாலப்பகுதியில் தடைப்படுத்தப்பட்டிருந்த பன்னாட்டு ஒதுக்குகளின் முதலீட்டு நடவடிக்கைகளை மீளத்தொடங்கியது. மேலும், இலங்கைக்கான தமது வர்த்தகத் தொடர்புகளை வெளிநாட்டு இணைத்தரப்பினர்கள் நிறுத்துவதற்கு இட்டுச்சென்ற நாடு பற்றிய பாதகமான தரப்படுதல் விபரத்தொகுப்பின் காரணமாக பன்னாட்டு நிதியியல் சந்தைகளுடன் வணிகம் செய்வதில் மத்திய வங்கி பல சவால்களை எதிர்கொண்டது. இச்சிக்கல்களுக்கு மத்தியில் பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டத்தின் ஆதரவுடன் பொருளாதாரத்தில் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டை துரிதமாக மீளமைப்பின் விளைவாக திரவத்தன்மை மற்றும் பாதுகாப்புக் கரிசனைகள் என்பவற்றுக்கான உரிய கவனத்துடன் உலகளாவிய உயர் வட்டிவீதச் சூழலிலிருந்து சாத்தியமான நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் ஒதுக்கு முகாமைத்துவத் தொழிற்பாட்டை முழுமையான வலுவுடன் மீளமைப்பதற்கான பாரிய முயற்சிகளை மத்திய வங்கி தீவிரப்படுத்தியது. அதற்கமைய, நிலையான வருமானப் பிணையங்களுக்கும்

பணச் சந்தை சாதனங்களுக்கும் பிரதானமாக முதலீட்டு நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டிருந்த அதேவேளை பன்னாட்டு மூலதனச் சந்தைகளின் நடப்பு உத்வேகத்திற்கமைவாக முதலீட்டுச் சொத்துப்பட்டியல்களுக்கு நிலைபேறான நிதியிடல் முதலீடுகளும் சேர்க்கப்பட்டது.

## நாணயக் கொள்கைத் தீர்மானத்தினை மேற்கொள்வதற்கான தரவுகளைத் தொகுத்தல்

தரவினால் தூண்டப்படும் தீர்மானத்தினை மேற்கொள்ளும் செயன்முறைக்கான உரியகால தகவல்களை வழங்குவதற்கு பொருளாதாரக் குறிகாட்டிகளைத் தொகுக்கின்றபோது உள்ளீடுகளாகப் பயன்படுத்தப்படுகின்ற முன்னோக்கிய தரவுகளை முதனிலை மற்றும் இரண்டாம் நிலை மூலங்களூடாக மத்திய வங்கி சேகரிக்கின்றது. முதனிலைத் தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் பிரதான மூலமாகக் கட்டமைக்கப்பட்ட அளவீடுகள் காணப்படுகின்ற அதேவேளை இரண்டாம் நிலைத் தரவுகள் வெளிவாரி நிறுவனங்களிடமிருந்து சேகரிக்கப்படுகின்றன. முதனிலைத் தரவுகளைச் சேகரித்தல் மற்றும் பயன்படுத்தலில் மத்திய வங்கியானது கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் அளவீடுகள், வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீடு, கூட்டு ஆதனச் சந்தை அளவீடு, கொடுகடன் வழங்கல் அளவீடு, கொடுகடன் கேள்வி அளவீடு மற்றும் பணவீக்க எதிர்பார்ப்பு அளவீடு மற்றும் வருடாந்த அரசாங்கத் துறை ஊழியர் அளவீடு உட்பட ஏனைய அளவீடுகள் அடங்கலான கிரமமான தொழில் அளவீடுகளூடாகச் சேகரிக்கப்படும் தரவுகளைப் பயன்படுத்தி பல வகையான முன்னோக்கிய குறிகாட்டிகளைத் தொடர்ந்தும் தொகுத்தது. மேலும், நுகர்வோர் பொருட்களின் சில்லறை விலைகள், வேளாண்மைப் பண்டங்கள் மற்றும் கட்டடப்பொருட்களின் உற்பத்தியாளர் விலைகள், முறைசாராத் துறை பணியாளர்களின் நாளாந்தக் கூலிகள், பணவீக்க எதிர்பார்ப்புக்கள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட பொருள் வகைகளின் சில்லறை விற்பனை அளவுகள் என்பவற்றைச் சேகரிப்பதற்கும், இதனூடாக மத்திய வங்கியின் கொள்கை வகுத்தல் செயன்முறைக்கு உரியகால உள்ளீடுகளை வழங்குவதற்கும் ஆசிரியர் பரீட்சகர்களின் ஈடுபாட்டுடன் நாடளாவிய தரவு சேகரித்தல் முறைமை 2023இல் தொடர்ந்தும் இயங்கியது. மேலும், மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்ற பிராந்தியப் புள்ளிவிபரங்களுடன் சேர்த்து உண்மைச் சொத்துத் துறை, மற்றும் வாகனங்களின் விலை கேட்டல் சுட்டெண்கள் முறைசார் மற்றும் முறைசாராத் துறை கூலி வீதச் சுட்டெண்கள் என்பன மீதான குறிகாட்டிகளும் தொகுக்கப்பட்டன.

மேலும், மத்திய வங்கி பல நிறையேற்றப்பட்ட சராசரி வட்டி வீதங்களின் தொகுப்பை தானியக்கப்படுத்திய அதேவேளை நாணயத் தரவுகளைத் தொகுப்பதற்கான செயன்முறைப்படுத்தல் நேரம் குறைக்கப்பட்டமை, நாணயக் கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்காக தரவுகள் கிடைக்கப்பெறும் தன்மையினையும் உரியகால நிலையினையும் இது மேம்படுத்தியது. அத்துடன் நாணயக் கொள்கையின் ஊடுகடத்தலை மதிப்பிடுவதற்கும் உறுதிசெய்வதற்கும் கடன்வழங்கல் வட்டி வீதங்கள் மீதான வங்கி தரவுகள் கிரமமான அடிப்படையில் உன்னிப்பாக கவனிக்கப்பட்டதுடன் மத்திய வங்கியின் எதிர்பார்ப்புக்களின் வேண்டப்பட்ட சந்தைச் சீராக்கம் குறைவடைகின்ற போதெல்லாம் ஊடுகடத்தல் மற்றும் வங்கிகளின் இணங்குவித்தல் என்பவற்றை மேம்படுத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டன. மேற்குறிப்பிட்டவற்றிற்கு மேலதிகமாக, நிதியியல் சந்தைகள் அத்துடன் உண்மைப் பொருளாதாரம் என்பவற்றுக்குள் நாணயக் கொள்கை ஊடுகடத்தலை மதிப்பிடுவதற்கு மாதாந்த அடிப்படையில் தனியார் துறைக்கு வழங்கப்படும் கொடுகடன் பற்றிய விரிவான பகுப்பாய்வை மத்திய வங்கி தொடர்ந்தும் முன்னெடுத்தது. கொடுகடன் பயன்பாட்டைப் புரிந்துகொள்ளும் பொருட்டு, காலாண்டு அடிப்படையில் கொடுகடன் பரம்பல் பற்றி நடாத்தப்பட்ட துறைசார் பகுப்பாய்வுகள், தீர்மானம் மேற்கொள்ளும் நோக்கங்களுக்காக பயனுள்ள தகவல்களை வழங்கின. மேலும், அண்மைக்காலம் தொடக்கம் நடுத்தரக்காலம் வரையான பொருளாதார நடவடிக்கையின் துரிதத்தையும் போக்கையும் அளவிடுவதற்கு ஏனையவற்றிற்கு மத்தியில் வலு, வேளாண்மை, தயாரிப்பு, துறைமுகங்கள் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் உள்ளடங்கலாக பொருளாதாரத்தின் பல முக்கிய துறைகளை உள்ளடக்கிய உயர் மீடிறன் குறிகாட்டிகளை மத்திய வங்கி தொடர்ந்தும் தொகுத்தது. இது, நாணயக் கொள்கைத் தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறைக்கு துணையளித்தது. ஆண்டுகாலப்பகுதியில் வங்கித்தொழில் துறையூடாக இடம்பெறும் எல்லைகடந்த வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய உயர்மட்ட தரவுத் தொகுதிகளைச் சேகரிப்பதற்கும் தொகுப்பதற்கும் பன்னாட்டு கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையினை நடைமுறைப்படுத்துவதில் மத்திய வங்கி குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துகொண்டது. பன்னாட்டு கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையின் தற்போதைய நிறைவு மட்டத்தின் மூலம் கொள்கை வகுப்புக்களை மேற்கொள்வதற்காக அனைத்தையுமுள்ளடக்கிய அறிக்கைகள் தற்போது கிடைக்கப்பெறுகின்றன. சேவைத் துறை உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள் மீதான மிகவும் விரிவான அத்துடன் செம்மையான தரவுகளைக்

கிடைக்கப்பெறச்செய்வதன் மூலம் பன்னாட்டு கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை சென்மதிநிலுவை புள்ளிவிபரங்களை வளம்பெறச்செய்யும். இது, உரியகாலத்தில் தரவுகள் கிடைக்கப்பெறும் தன்மையினையும் மேம்படுத்துகின்றது.

## முன்னோக்கிப் பயணித்தல்

2023 யூனில், நாணயக் கொள்கைத் தளர்த்தல் தொடங்கப்பட்டமையினைத் தொடர்ந்து கேள்வியினால் தூண்டப்பட்ட பணவீக்க அழுத்தங்களின் குறைவான மட்டங்கள் மற்றும் நிலைநிறுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்புக்கள் என்பவற்றுக்கு மத்தியிலும் மத்திய வங்கி அதன் தளர்த்தல் சுழற்சியைத் தொடர்ந்தது. பொருளாதாரமானது உள்ளார்ந்த ஆற்றலுக்குக் கீழ் தொழிற்படுவதனால் தளர்வான நாணயக் கொள்கை நிலையினைத் தொடர்ந்தும் முன்னெடுப்பது தேவைப்படலாம். எனினும், நாணயக் கொள்கை நிலை தொடர்ந்தும் தரவுகளினால் தூண்டப்படுவதாகக் காணப்படுவதுடன் புதிய தரவுகளின் கிடைப்பனவின் போது பொருத்தமான வகையில் சீராக்கப்படும்.

நாணயக் கொள்கை ஊடுகடத்தப்படுவதனையும் நாணயக் கொள்கை கண்ணோட்டத்தின் சமிக்ஞைப்படுத்தலையும் மேம்படுத்துவதற்கு தற்போதைய இரு கொள்கை வட்டி வீதங்களைக் கொண்ட பொறிமுறைக்குப் பதிலாக தனியொரு கொள்கை வட்டி வீதத்தை பின்பற்றுவது பற்றி மத்திய வங்கி பரிசீலிக்கின்றது. பன்னாட்டு சிறந்த நடத்தைகளைப் பின்பற்றி நியதிச்சட்ட ஒதுக்குத் தேவைப்பாட்டுக் கட்டமைப்பின் செயற்றிறன்வாய்ந்த தன்மையினை மேம்படுத்துவதற்கும் மத்திய வங்கி எதிர்பார்க்கின்றது. மேலும், திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் சுமுகமான தொழிற்பாட்டிற்காக முன்னேற்றம் கண்ட பயன்படுத்துநர் – சிநேகபூர்வ உட்கட்டமைப்பினை உருவாக்குவதற்கு மத்திய வங்கி எதிர்பார்க்கின்றது. மேலும், மாதிரி அடிப்படையிலமைந்த எதிர்வுகூறல் மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு முறைமை என்பவற்றைச் சீர்செய்வதன் மூலம் மத்திய வங்கி அதன் உள்ளக மாதிரியமைத்தல் மற்றும் எதிர்வுகூறல் இயலளவை தொடர்ந்தும் மேம்படுத்தும்.

நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி வீதக் கட்டமைப்பினை தொடர்ந்து முன்னெடுத்தலானது வரவிருக்கும் ஆண்டுகளில் வர்த்தகப் போட்டித்தன்மைக்கும் வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டிற்கும் அதேபோன்று நடுத்தரகால பொருளாதார உறுதிப்பாட்டிலும் ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஏசிஐ நிதியியல் சந்தைகள் அமைப்பு மற்றும் சந்தைப் பங்கேற்பாளர்களுடனான கலந்துரையாடல்கள், 2024 இறுதியளவில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணி உலகளாவிய குறியீட்டை நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய வங்கியை இயலச்செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணி உலகளவிலான குறியீட்டை நடைமுறைப்படுத்துவதன் நோக்கம், கிடைக்கப்பெறுகின்ற சந்தைத் தகவல்களைப் பிரதிபலிக்கின்ற போட்டி விலைகளில் சந்தைப் பங்கேற்பாளர்கள் நம்பிக்கையுடனும் செயற்றிறன்மிக்கதாகவும் கொடுக்கல்வாங்கலை மேற்கொள்வதற்கு இயலுமாகவிருக்கின்ற சந்தையில் ஆற்றல்வாய்ந்த, நியாயமான, திரவத்தன்மைமிக்க, திறந்த மற்றும் பொருத்தமான வெளிப்படையான சந்தையினை ஊக்குவிப்பதற்கான பொதுவான வழிகாட்டல் தொகுதியொன்றினை வழங்குவதாகும்.

# நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை உறுதிசெய்தல்

இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தினால் பொறுப்பாணையளிக்கப்பட்டவாறு நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை உறுதிசெய்யும் மிக முக்கிய குறிக்கோள் மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆற்றல்வாய்ந்த நிதியியல் முறைமை என்பது சேமிப்புக்களைத் திரட்டுதல் அவற்றை உற்பத்தித்திறன்மிக்க முதலீடுகளை நோக்கி வழிப்படுத்தல், இடர்நேர்வுகளை செயற்றிறன்வாய்ந்த விதத்தில் முகாமைசெய்தல், தங்குதடையற்ற கொடுப்பனவு தீர்ப்பனவுகளை வசதிப்படுத்தல் என்பவற்றில் முக்கிய ஏதுவாக விளங்குகின்றது. முக்கியமாக, பொருளாதார அதிர்வுகளையும் அழுத்தமிக்க சூழ்நிலைகளையும் பொருளாதார வளர்ச்சிக்கும் மக்களின் நலனோம்புகைக்கும் குறிப்பிடத்தக்களவு தாக்கம் விளைவிக்காது எதிர்த்து நிற்கக்கூடியதாகவும் அது இருக்கவேண்டும். வினைத்திறன்மிக்க நிதியியல் இடையீட்டினை இயலச்செய்கின்ற சூழலை பேணிவளர்த்தன் மூலம் முதலீடுகளைத் தூண்டி பொருளாதார வளர்ச்சியைப் பேணிவளர்ப்பதற்கு இம்முக்கிய வகிபாகம் பங்களிக்கின்றது.

## 2023இல் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டைப் பேணிக்காத்தல்

2023இல், பேரண்டப் பொருளாதார பாதக நிலைமைகள் வெளிநாட்டுப் படுகடன் ஸ்தம்பிதமடைதல் மற்றும் உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை போன்ற பல கோணங்களைக் கொண்ட சவால்மிக்க நிலைமைகளுக்கு மத்தியில் நாட்டின் நிதியியல் முறைமை குறிப்பிடத்தக்க இடர்களை எதிர்கொண்டது. எனினும், அதிகரித்த நெருக்கடித் தயார்நிலை மற்றும் முகாமைத்துவம் ஊடாக நிதியியல் முறைமை உறுதிப்பாட்டைப் பேணிக்காப்பதற்கு மத்திய வங்கி முன்னுரிமையளித்தது. தாக்குப்பிடிக்கும் தன்மையினை மேம்படுத்தல், விழிப்பான மேற்பார்வையினைப் பேணுதல், நிதியியல் நிறுவனங்களை ஒழுங்குபடுத்தல் என்பவற்றுக்கான கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதன் வாயிலாக நிதியியல் முறைமையினை செயற்றிறன்வாய்ந்த விதத்தில் வழிநடாத்தியது. மத்திய வங்கியின் முழுமையான மற்றும் செயலூக்கமிக்க அணுகுமுறை நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை உறுதிசெய்து, 2023 காலப்பகுதியில் வெளிப்பட்ட பல்வேறு சவால்களூடாக நிதியியல் முறைமை பாதுகாப்பாகப் பயணிப்பதற்கு இயலச்செய்தது.

## பொருளாதார நெருக்கடியிலிருந்து தோற்றம்பெறுகின்ற இடர்நேர்வுகளைத் தணித்தலும் நெருக்கடித் தயார்நிலையினை மேம்படுத்தலும்

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதற்கான அவசியமான மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்காக உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி போன்ற பல்தரப்பு முகவராண்மைகளுடன் மத்திய வங்கி முனைப்புடன் ஈடுபட்டது.

### 2023இல் நிதியியல் உறுதிப்பாட்டைப் பேணிக்காத்தல்



பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் இணங்கிய படுகடன் நிலைபெறுதன்மை இலக்குகளை நிறைவேற்றுவதற்கு நிதி அமைச்சினால் 2023இல் அறிவிக்கப்பட்ட உள்நாட்டு படுகடன் மேம்படுத்துகை நிகழ்ச்சித்திட்டத்திற்கு முக்கிய பங்குதாரர் என்ற வகையில் மத்திய வங்கி குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கியது. இச்செயன்முறையில் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பேணிக்காப்பது முன்னுரிமைப்படுத்தப்பட்டிருந்ததுடன் நிதியியல் முறைமையில் பொதுமக்கள் நம்பிக்கையினை உறுதிசெய்வதில் உரிய கால மற்றும் செயற்றிறன்வாய்ந்த தொடர்பூட்டல்கள் உதவின. மேலும், பன்னாட்டு நாணய நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கட்டமைப்புசார்ந்த அளவுகோலாக உள்நாட்டு ரீதியாக சொத்தாண்மையைக் கொண்ட வங்கிச் சொத்துக்களின் 90 சதவீதத்திற்கு மேல் வகைகூறுகின்ற 9 உள்நாட்டு வங்கிகளுக்கான சொத்துத்தர மீளாய்வுகள் 2023 காலப்பகுதியில் நிறைவுசெய்யப்பட்டன. மேலும், சொத்துத்தர மீளாய்வுகள், பேரண்ட நிதியியல் சூழ்நிலைகளின் அடிப்படையிலமைந்த முன்னோக்கிய அழுத்தப் பரிசோதனை மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்பு அதனைத் தொடர்ந்துவந்த சாத்தியமான மூலதனப் பற்றாக்குறைகளை நிறைவுசெய்வதற்கு மீள் மூலதனமாக்கல் உபாயம் என்பவற்றின் பெறுபேறுகளைக் கவனமாக மதிப்பிட்டதனூடாக தெரிவுசெய்யப்பட்ட வங்கிகளின் மறுசீரமைத்தல் மற்றும் மூலதன மேம்படுத்தல் என்பவற்றுக்கான வழிகாட்டலை மத்திய வங்கி உருவாக்கியது. சொத்துத்தர மீளாய்வினையும் மீள்மூலதனமாக்கல் வழிகாட்டலையும் நிறைவுசெய்தலானது நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை உறுதிப்படுத்துவதை நோக்கி நன்கு மூலதனமாக்கப்பட்ட வங்கித்தொழில் முறைமையொன்றை உறுதிசெய்கின்றது. மேலும், ஏற்கனவே காணப்படுகின்ற 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளை மேலும் வலுப்படுத்தி சீரமைக்கும் நோக்குடனும் அதன் ஏற்பாடுகள் பன்னாட்டு ரீதியான தரநியமங்களுக்கிசைவாக காணப்படுகின்றன என்பதனை உறுதிசெய்வதற்கும் பன்னாட்டு நாணய நிதிய விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மற்றுமொரு கட்டமைப்புசார்ந்த அளவுகோளாகவிருந்த வங்கித்தொழில் சட்டத்திற்கான திருத்தங்களை இயற்றும் இறுதிக்கட்டத்தில் மத்திய வங்கி காணப்படுகின்றது. இது தொடர்பான வங்கிச் சட்டத்தின் முக்கிய திருத்தங்களுக்கான முதன்மை அனுமதி அமைச்சரவையிலிருந்து 2023 யூனில் பெற்றுக்கொள்ளப்பட்டது. மேலும், வங்கிச் சட்டத்திற்கான திருத்தங்களின் மீதான ஆலோசனைப் பத்திரம் தொடர்புபட்ட பங்கேற்பாளர்களின் அவதானிப்புக்கள் மற்றும் கருத்துகளுக்காக 2023இன் இரண்டாம் அரையாண்டுப் பகுதியில் வழங்கப்பட்டது. வங்கிச் சட்டத்திற்கான திருத்தங்கள் பொருத்தமான விடத்து பங்கேற்பாளர்களின் கருத்துக்களை உள்ளடக்கி 2023இன் இறுதிப் பகுதியில் வரையப்பட்டது.

நிதியியல் துறையின் நெருக்கடி தயார்நிலைக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கு மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சு இரண்டினதும் அலுவலர்களைக் கொண்டு நிதியியல் துறை நெருக்கடி முகாமைத்துவக் குழு மற்றும் நிதியியல் துறை நெருக்கடி முகாமைத்துவம் மீதான தொழில்நுட்பக் குழு என்பன நிறுவப்பட்டன. இக்குழுக்களின் குறிக்கோள்கள், நிதியியல் துறையில் காணப்படும் சாத்தியமான முறைமையைப் பாதிக்கக்கூடிய நெருக்கடி மற்றும் உண்மைப் பொருளாதாரத்தின் மீதான இதன் தாக்கத்தை இனங்கண்டு, அதனூடாக பிரச்சனைகளைத் தீர்த்து, நிதியியல் துறைக்கான சாத்தியமான சேதங்களைக் குறைக்கின்ற அதேவேளை முகவராண்மைகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பு மற்றும் தொடர்பூட்டலூடாக ஆதரவளித்தல் இக்குழுக்களின் நோக்கமாகும்.

## நிதியியல் நிறுவனங்களை தொடர்ச்சியாக மேற்பார்வை செய்தலும் ஒழுங்குமுறைப்படுத்தலும்

பேரண்டப் பொருளாதார சவால்களுக்கு மத்தியில் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதற்கு மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்கின்ற நிதியியல் நிறுவனங்கள், உரிமம்பெற்ற வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள், உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர் கம்பனிகள் ஆகியவற்றின் தாக்குப்பிடிக்கும் தன்மை பற்றி மத்திய வங்கி விழிப்பாகவிருந்தது. 2023 காலப்பகுதியில் முன்மதியுடைய மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீது மத்திய வங்கி பணிப்புரைகள், தீர்மானங்கள் மற்றும் சுற்றறிக்கைகள் என்பவற்றை வழங்கியது.

2023 காலப்பகுதியில், இடர்நேர்வு அடிப்படையிலமைந்த திரட்டிய கட்டமைப்பின் கீழ் மத்திய வங்கி உரிமம்பெற்ற வங்கிகளின் நியதிச் சட்டப் பரீட்சிப்புக்களை நடாத்தியது. பல

உரிமம்பெற்ற வங்கிகள் மீது வாடிக்கையாளர் முறைப்பாடுகள், நிறுவன ஆளுகை, ரூபா திரவத்தன்மை நிலைகளை உறுதிப்படுத்தல் மற்றும் செலாவணி நிறுவனங்களின் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான கரிசனைகள் என்பன தொடர்புபட்ட கருமங்களை உறுதிப்படுத்துவதற்கு ஏனையவற்றிற்கு மத்தியில் அதே இடத்திலான பரீட்சிப்புக்கள் நடாத்தப்பட்டன. மேலும், 2023 காலப்பகுதியில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் மற்றும் முதனிலை வணிகர் கம்பனிகளின் நியதிச் சட்டப் பரீட்சிப்புக்களை நடாத்திய முக்கிய மேற்பார்வை கரிசனைகள் மீதான பரிந்துரைகளும் அத்தகைய கரிசனைகளைச் சீர்ப்படுத்துவதற்கு காலவரையறை செய்யப்பட்ட நடவடிக்கைத் திட்டங்களும் உரிய கம்பனிகளுக்குத் தேவையான சீராக்க நடவடிக்கைகளை எடுப்பதற்காக தொடர்பூட்டப்பட்டன. மேலும், பின்நெட் முறைமையூடாக ஒழுங்குமுறைப்படுத்தல் தகவல்களைச் சமர்ப்பிக்கும் செயன்முறையினை மதிப்பிடுவதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மீதும் அதே இடத்திலான பரீட்சிப்புக்கள் நடாத்தப்பட்டன. பாதுகாப்பினையும் ஆற்றல்வாய்ந்த தன்மையினையும் உறுதிசெய்வதற்கு முன்கூட்டிய எச்சரிக்கைக் குறிகாட்டிகளை உன்னிப்பாகக் கண்காணித்து அறிக்கையிடுவதனூடாக 2023 காலப்பகுதியில் மத்திய வங்கி அதன் மேற்பார்வையின் கீழ் வருகின்ற நிதியியல் நிறுவனங்களின் தொடர்ச்சியான மேற்பார்வையினை தீவிரப்படுத்தியது.

மேலும், வினைத்திறன் மிக்க விலை கண்டறியும் செயன்முறையில் அவர்களது ஒழுக்கநெறி சார்ந்த நடத்தையினை உறுதிசெய்வதற்கு பணம், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணி மற்றும் அரசாங்கப் பிணையங்கள் சந்தைகளின் இடையீட்டாளர் வகிபாகத்தை செயலாற்றுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகர்களின் தொழிற்பாடுகளை மத்திய வங்கி பரீட்சித்தது. கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிடத்தொலைபேசி கொடுப்பனவு முறைமைகள் என்பவற்றின் சேவைகளின் சீரான தொழிற்பாட்டை உறுதிசெய்வதற்கு மத்திய வங்கி தளத்திலான மேற்பார்வை மற்றும் தலத்திற்கு வெளியிலான கண்காணிப்பை நடாத்தியதுடன் கொடுப்பனவு தொடர்புபட்ட செல்லிடசெயலிகளுக்கான குறைந்தபட்ச இணங்குவித்தல் தரநியமங்கள் மீது வழங்கப்பட்ட வழிகாட்டல்களுடன் செல்லிடக் கொடுப்பனவு செயலி வழங்குநர்களின் இணங்குவித்தலை தொடர்ந்தும் கண்காணித்தது. இது நிதியியல் கொடுக்கல்வாங்கல்களை நடாத்துகின்ற போது செல்லிடத்தொலைபேசி கொடுப்பனவுச் செயலிகளைப் பயன்படுத்துவதன் இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கான குறித்துரைக்கப்பட்ட பாதுகாப்பான தேவைப்பாடுகளை நிறைவுசெய்வதற்கு செல்லிடக் கொடுப்பனவு மற்றும் வங்கித்தொழில் செயலிகளை உறுதிசெய்கின்றது.

## வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் ஒன்றுதிரட்டலுக்கான முதன்மைத் திட்டம்

நடுத்தர காலத்தில் வலுவான மற்றும் தாக்குப்பிடிக்கத்தக்க உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளை/சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளை உருவாக்குவதை நோக்காகக் கொண்டு, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் ஒன்றுதிரட்டலுக்காக மத்திய வங்கி 2020இல் முதன்மைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியது. துறையினுள் வைப்பாளர்களின் நலன்களைப் பாதுகாத்து, நிதியியல் முறைமையின் ஒட்டுமொத்த உறுதிப்பாட்டினை உறுதிசெய்யும் இலக்கினால் இம்முயற்சி தூண்டப்படுகின்றது. முதன்மைத் திட்டத்தின் முதலாம் கட்டத்தின் கீழ் 2023 காலப்பகுதியில் இரண்டு ஒன்றுதிரட்டல்கள் முழுமையாக நிறைவுசெய்யப்பட்டன.

## பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபையை ஸ்தாபித்தல்

மத்திய வங்கியின் பொறுப்பாணையையும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டைப் பாதுகாப்பதின் நோக்கெல்லையும் விரிவுபடுத்துவதன் மூலம் இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் இலங்கை பேரண்டமுன்மதியுடைய அதிகாரசபையாக மத்திய வங்கி பெயர்குறிக்கப்பட்டுள்ளது. பேரண்டமுன்மதியுடைய கொள்கை வழிமுறைகளானவை ஒட்டுமொத்த முறைமையையும் பாதிக்கின்ற இடர்நேர்வைத் தணிப்பதன் மூலம் இதனூடாக பொருளாதார வீழ்ச்சியை நெருக்கி குறிப்பிடத்தக்க நலனோம்புகை இழப்புகளுக்கு வழிவகுக்கக்கூடிய நிதியியல் நெருக்கடியொன்று நிகழும் தன்மையினைக் குறைப்பதன் மூலம் நிதியியல் முறைமையின் தாக்குப்பிடிக்கும் தன்மையை மேம்படுத்துகின்றன.

இலங்கை மத்திய வங்கிச் சட்டம் சட்டமாக்கப்பட்டதன் மூலம் மத்திய வங்கி அதன் பேரண்டமுன்மதியுடைய பொறுப்பாணையை இயக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்தது. உள்நாட்டு பின்னணிக்கு ஏற்வாறு உருவாக்கப்பட்ட பன்னாட்டு ரீதியான சிறந்த நடத்தைகளுக்கிசைவாக பேரண்டமுன்மதியுடைய

பொறுப்பாணையினை தொழிற்படுத்தும் கட்டமைப்பினைத் உறுதிப்படுத்துவதை இது உள்ளடக்குகின்றது. அதற்கமைய, நடப்பு பேரண்டமுன்மதியுடைய அணுகுமுறைகள் பற்றிய தீவிரமான மீளாய்வொன்று நடாத்தப்பட்டு இலங்கை மத்திய வங்கிச் சட்டத்திற்கமைவாக இற்றைப்படுத்தப்பட்ட பொறுப்பாணைகளுடன் நிதியியல் முறைமை மேற்பார்வைக் குழு, நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழு மற்றும் பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் என்பவற்றை மீளநிறுவுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

வெளிப்பட்ட சவால்மிக்க பேரண்ட நிதியியல் நிலைமைகளின் வெளிப்பாட்டை அல்லது சாத்தியமான தாக்கத்தை மதிப்பிடுவதற்கு கண்காணிப்பு அரங்கினை விரிவுபடுத்தல் மற்றும் அழுத்தப்பரீட்சிப்புச் செயன்முறையினை ஏற்றதாக்கிக்கொள்ளல் என்பன மூலம் ஒட்டுமொத்த முறையையும் பாதிக்கின்ற இடர்நேர்வுகளைக் கண்காணிக்கும் செயன்முறையினை மத்திய வங்கி தொடர்ச்சியாக இற்றைப்படுத்தியது.

நிதியியல் முறைமையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை பேணுகின்ற அதன் பேரண்டமுன்மதியுடைய குறிக்கோள்களை அடைவதற்கு பயன்படுத்தக்கூடிய அதிகாரங்களுடனும் கருவித் தொகுதியொன்றுடனும் இலங்கை மத்திய வங்கிக்கு இலங்கை மத்திய வங்கிச் சட்டம் வசதியளித்துள்ளது. ஆகையினால், எதிர்சுழற்சி மூலதன தாங்குதளம், வீடமைப்புக் கடன்கள் மீது பெறுமதிக்கான கடன் விகிதம் மற்றும் வருமானத்திற்கான படுகடன் தீர்ப்பனவு விகிதம் போன்ற பேரண்டமுன்மதியுடைய கருவிகளை நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய வங்கி முறையியல்களையும் கட்டமைப்புக்களையும் உருவாக்கியது. அத்தகைய கொள்கைகளை அறிமுகப்படுத்துவதற்கு பேரண்ட நிதியியல் நிலைமைகள் சாதகமாக திரும்புகின்ற போது அல்லது நிதியியல் முறைமையிலுள்ள நிலைமைகள் எதிர்காலத்தில் அத்தகைய கருவிகளின் நடைமுறைப்படுத்தலை வேண்டுகின்ற போது மத்திய வங்கி இக்கருவிகளைப் பயன்படுத்தும்.

காலத்திற்குக் காலம் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கைகள் அத்துடன்/ அல்லது அத்தகைய கொள்கைகளுக்கான மாற்றங்களின் முக்கிய குறிக்கோள்கள் மற்றும் கூறுகளை எடுத்துக்காட்டி நிதியியல் உறுதிப்பாட்டு கொள்கைகள் பற்றிய செயற்றிறன்வாய்ந்த தொடர்பூட்டல் முக்கியமானதாகும். மேலும், நிதியியல் உறுதிப்பாட்டு அம்சங்கள் பற்றிய தெளிவான தொடர்பூட்டலானது நம்பகமான தகவல்களைக் கொண்டு சந்தை இடர்நேர்வுகளை மதிப்பிடுவதற்கு சந்தைப் பங்கேற்பாளர்களுக்கு வசதியளிக்கக்கூடியது, இது, நிதியியல் உறுதிப்பாட்டிற்கு ஆதரவளிக்கின்ற நடத்தைசார்ந்த மாற்றங்களில் விளைகின்ற நிதியியல் துறை அபிவிருத்திகள் பற்றிய புரிந்துகொள்ளலை மேம்படுத்துகின்றது. ஆகையினால், பேரண்டமுன்மதியுடைய கொள்கைகளையும் நிதியியல் உறுதிப்பாடு பற்றிய வேறு அம்சங்களையும் தொடர்பூட்டுவதற்கு மத்திய வங்கி செயற்றிறன்வாய்ந்த உபாயமொன்றை வகுத்துள்ளது. அதற்கமைய 2023இல் மத்திய வங்கி நிதியியல் உறுதிப்பாட்டு மீளாய்வினை வெளியிட்டு நிதியியல் உறுதிப்பாட்டு மீளாய்வு மற்றும் நிதியியல் ஆற்றவாய்ந்த தன்மைக் குறிகாட்டிகள் என்பவற்றைத் தொடக்கி வைப்பது தொடர்பில் ஊடக மாநாடொன்றைத் தொடங்கிவைத்தது.

## கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் வினைத்திறன்மிக்க மற்றும் சீரான தொழிற்பாடு

நாட்டின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் 2023 ஆண்டுகாலப்பகுதியில் சீராகவும் வினைத்திறன்மிக்கதாகவும் தொழிற்படுத்தப்பட்டன. உடனடி வங்கிகளுக்கிடையிலான மாற்றல்களுக்கான பொதுவான இலத்திரனியல் நிதியமாற்றல் ஆளி, வாடிக்கையாளர்கள் தமது வங்கிக் கணக்குகளிலிருந்து நேரடியாக அரசாங்க நிறுவனங்களுக்குக் கொடுப்பனவு செய்வதை இயலச்செய்கின்ற லங்காபே இணையவழி கொடுப்பனவுத் தளம், லங்கா கியுஆர் மற்றும் ஜஸ்ட் பே இயலச்செய்யப்பட்ட செல்லிடச்செயலிக்கு பல வங்கிக் கணக்குகளை இணைப்பதனூடாக கொடுப்பனவுகளுக்கான ஜஸ்ட் பே உள்ளடங்கலாக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை மற்றும் சில்லறைக் கொடுப்பனவு முறைமைகள்/ சாதனங்கள் போன்ற பாரிய பெறுமதிக் கொடுப்பனவு முறைமைகளை மத்திய வங்கி வினைத்திறன்மிக்க வகையில் தொழிற்படுத்தியது.

பொதுமக்கள் தமது வங்கிக் கணக்குகளிலிருந்து உடனடியாக நேரடியாக கொடுப்பனவுகளை வசதியாகப் பெற்றுக்கொள்வதற்கு ஆண்டுகாலப்பகுதியில் அரசாங்க நிறுவனங்களுக்கும் கூட்டுறுவன அமைப்புக்களுக்குமான புதிய அபிவிருத்திகளுக்கு மத்திய வங்கி முன்னுரிமை வழங்கியது. பல அரசாங்க நிறுவனங்கள், விசேடமாக உள்ளூராட்சி மட்டத்தில் தற்போது தகவல் தொழில்நுட்ப முறைமைகளைக் கொண்டிராமையினால் அத்தகைய

நிறுவனங்கள் பொதுமக்களிடமிருந்து கொடுப்பனவுகளை டிஜிட்டல் ரீதியாகப் பெற்றுக்கொள்வதை இயலச்செய்வதற்கு மத்திய வங்கியின் வழிகாட்டலின் கீழ் லங்காபே பிறைவேட் லிமிடெட், அரசாங்க டிஜிட்டல் கொடுப்பனவுத் தளத்தினை அமுல்படுத்தியுள்ளது. டிஜிட்டல் ரீதியான கொடுக்கல்வாங்கல் வழிகளை மேலும் மேம்படுத்துவதற்கு லங்காபே இணையவழிக் கொடுப்பனவுத் தளம், நேரடி பற்று வசதி, பகிரப்பட்ட உங்களது வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்ளும் வசதி மற்றும் அரசாங்க டிஜிட்டல் கொடுப்பனவுத் தளம் போன்ற கூட்டுமுயற்சிகளுக்கு உரிமம்பெற்ற வங்கிகளுக்கு மத்திய வங்கி பொறுப்பாணை அளித்துள்ளது.

## தீர்மானக் கட்டமைப்பினை மேம்படுத்தலும் இலங்கை வைப்புக் காப்புறுதியும்

வைப்புக் காப்புறுதித் திட்டமொன்றுடன்கூடிய ஆற்றல்வாய்ந்த தீர்மானக் கட்டமைப்பு நிதியியல் முறைமையில் பொதுமக்கள் நம்பிக்கையினை அதிகரிப்பதுடன் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதில் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. ஆகையினால், மத்திய வங்கியின் தீர்மான அதிகாரத்தையும் தத்துவங்களையும் வரைவிலக்கணம் செய்கின்ற 2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் 2023இல் சட்டமாக்கப்பட்டது. அரசாங்கத்தின் ஆலோசனையுடன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நிதியியல் பாதுகாப்பு வலைப் பொறிமுறைகள், புதிய தீர்மான வழிமுறைகள் என்பவற்றை வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் அறிமுகப்படுத்தியதுடன் அதன் தீர்மான அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கு மத்திய வங்கியினுள் தனியான திணைக்களமொன்றினைத் நிறுவுவதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கியிருக்கின்றது. தேவையான போதும் தேவையானவாறும் உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு ஏற்புடையதாகவிருக்கின்ற தீர்மான வழிமுறைகளின் நீடித்தல் வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் இயலச்செய்யப்பட்டுள்ளது.

நிதியியல் முறைமையில் பொதுமக்கள் நம்பிக்கையினை நிலைநிறுத்துவதற்கும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினை ஊக்குவித்து பங்களிப்பதற்கும் வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினூடாக இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் சட்ட ரீதியாக நிறுவப்பட்டது. 2023 இறுதியிலுள்ளவாறு இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் 67 உறுப்பு நிறுவனங்களை உள்ளடக்கியிருந்தது. வைப்புக் காப்புறுதி பற்றி பொதுமக்கள் விழிப்புணர்வை மேம்படுத்துவதற்காக அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் உள்ளடங்கலாக ‘இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம்’ என்ற பெயரில் மத்திய வங்கி வலைத்தளப் பக்கமொன்றையும் தொடங்கிவைத்தது. நிதி அமைச்சுடனான அரசிறைக் அவசரகால நிதியிடல் ஏற்பாடுகளின் தாபனத்தை தொடங்குவதற்கு வழிமுறைகள் எடுக்கப்பட்ட அதேவேளை இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் நிறுவனசார் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கு அவசியமான சீராக்கங்களும் மேற்கொள்ளப்பட்டன. 2023 இறுதிவரை உரிமங்கள் இரத்துச்செய்யப்பட்ட உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் ஒட்டுமொத்தமாக 73,650 வைப்பாளர்களுக்கு ரூ.31 பில்லியனை இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் செலுத்தியுள்ளது. செலுத்தப்பட்ட இழப்பீட்டின் அளவு மொத்தக் காப்புறுதி செய்யப்பட்ட பெறுமதியான ரூ.35.3 பில்லியனில் 87.9 சதவீதமாகும்.

## நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பினை மேம்படுத்தல்

2023இல், நிதியியல் வாடிக்கையாளர்களைப் பாதுகாப்பதையும் நிதியியல் பணி வழங்குநர்கள் மத்தியில் நியாயமான மற்றும் ஒழுக்கம்சார்ந்த நடத்தைகளைப் பேணி வளர்ப்பதையும் நோக்காகக் கொண்ட வழிமுறைகளை மத்திய வங்கி நடைமுறைப்படுத்தியது. குறிப்பாக, 2023 ஓகத்தில் நிதியியல் பாதுகாப்புக் கட்டமைப்பு மீது அனைத்தையுமுள்ளடக்கிய ஒழுங்குவிதிகளை மத்திய வங்கி வழங்கியது. நிதியியல் வாடிக்கையாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான வலிமையான கட்டமைப்பொன்றினை இவ்வொழுங்குவிதிகள் உறுதிப்படுத்துகின்றன. மேலும், நிதியியல் வாடிக்கையாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான செயற்றிறன்வாய்ந்த பொறிமுறை மீது சந்தை நடத்தை மேற்பார்வையினை மேற்கொள்வதற்கு அவ்வாறான ஒழுங்குவிதிகள் மத்திய வங்கிக்கு தேவைப்படுகின்ற அதிகாரத்தை வழங்குகின்றது.

2023ஆம் ஆண்டு முழுவதும், தொடர்புபட்ட நிதியியல் நிறுவனங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினர்கள் ஆகியோருக்கிடையிலான இணக்கமான தீர்வுகளை வசதிப்படுத்துவதை நோக்காகக் கொண்டு, மாற்றுவழி பிணக்குத் தீர்த்தல் வழிகளை வழங்கி நிதியியல் வாடிக்கையாளர்களால் எழுப்பப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் குறைகளைத் தீர்ப்பதற்கு மத்திய வங்கி தொடர்ந்தும்

### வாடிக்கையாளர் முறைப்பாடுகளையும் விசாரணைகளைக் கையாளுதல்

**5,179**

2023 காலப்பகுதியில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள்




பெறப்பட்ட முறைப்பாடுகள்/ விசாரணைகளின் பிரதான வகைகள்

**கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின்/குறைகளின் பிரதான வகைகள்**

- நிதியியல் வசதிகள் மீதான சலுகைகளுக்கான கோரிக்கைகள்
- உயர்வான வட்டி வீதங்களை அறவிடுதல்
- மீளச்செலுத்தலை பிற்போடுதல் தொடர்பான விடயங்கள்
- வாடிக்கையாளர் கோரிக்கைகளுக்காக நிதியியல் நிறுவனங்களால் தகவல்/ ஆவணங்கள் வழங்கப்படாமை
- உயர்வான கட்டணங்களை மற்றும் தரகுகளை அறவிடுதல்

பொதுமக்களின் தொலைபேசி விசாரணைகளுக்கு மும்மொழியிலும் பதிலளிப்பதற்கு மத்திய வங்கி, பிரத்தியேக துரித அழைப்பு வசதியுடன் கூடிய அழைப்பு நிலையத்தை பேணுகின்றது.

**1935**

**57,498** அதிகூடிய பதிலளிப்பு வீதத்துடன் தொலைபேசி விசாரணைகளுக்கு பதிலளிக்கப்பட்டன

நடவடிக்கையெடுத்தது. ஆண்டு முழுவதும் மத்திய வங்கி மொத்தமாக 5,179 முறைப்பாடுகளையும் குறைகளையும் கையாண்டது. மேலும், பொதுமக்களிடமிருந்துவரும் தொலைபேசிக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு பிரத்தியேகமான உடனடி அழைப்பு வசதியும் மும்மொழி இயலளவுடனும்கூடிய தொடர்புநிலையமொன்றை மத்திய வங்கி தொழிற்படுத்துகின்றது. 2023இல், தொடர்புமையம் 57,000 மேற்பட்ட தொலைபேசி விசாரணைகளுக்கு பதிலிறுத்தது. இது வரவேற்கத்தக்க மிக உயர்ந்த பதிலிறுப்பு விகிதமாகும்.

## அதிகாரமளிக்கப்படாத நிதி வியாபாரங்களையும் தடை செய்யப்பட்ட திட்டங்களையும் விசாரணை செய்தல்

அதிகாரமளிக்கப்படாத நிதி வியாபாரங்களும் தடைசெய்யப்பட்ட திட்டங்களும் நிதியியல் முறைமையில் பொதுமக்கள் நம்பிக்கைக்குப் பாரிய சவால்களைத் தோற்றுவிக்கின்றன. ஆகையினால், அத்தகைய நகர்வுகளைக் கண்காணிப்பதற்கும் அத்தகைய திட்டங்களுக்கெதிரான உடனடி நடவடிக்கைகளை எடுத்தலையும் மத்திய வங்கி தொடர்ந்தும் முன்னெடுத்தது. 2023 காலப்பகுதியில், கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் மற்றும் தகவல்களின் அடிப்படையில் அதிகாரமளிக்கப்படாத வைப்பு ஏற்றல் மற்றும் நிதியளித்தல் வியாபாரங்கள் தொடர்பில் மத்திய வங்கி 143 விசாரணைகளைக் கையாண்டது. மேலும், 4 விசாரணைகள் தொடர்பில் நிதி வியாபாரச் சட்டத்தின் 44ஆம் பிரிவின் கீழ் வழங்கப்படும் தடைக்கட்டளைகளுக்காக கொழும்பு மேல் நீதிமன்றத்திடமிருந்து மத்திய வங்கி 2023இல் நீடிப்புக்களைப் பெற்றுக்கொண்டது. மேலும், விசாரணைக்குட்பட்ட 8 நிறுவனங்களின் தொடர்புடைய தரப்பினர்களின் வெளிநாட்டுப் பயணத்தை இடைநிறுத்துவதற்கு மத்திய வங்கி தொடர்புடைய நீதிவான் நீதிமன்றங்களிலிருந்து கட்டளைகளைப் பெற்றுக்கொண்டது. இதற்கு மேலதிகமாக, 2023இல் தடைசெய்யப்பட்ட திட்டங்கள் தொடர்பில் மத்திய வங்கி 8 விசாரணைகளை நிறைவுசெய்து அவசியமான சட்ட நடவடிக்கைகளுக்காக அறிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டன. மேலும், விழிப்புணர்வை அதிகரிப்பதற்கும் பொதுமக்கள் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்கும் தேவைவான போதும், தேவையானவாறும்

ஊடக அறிவித்தல்களை மத்திய வங்கி வழங்கியதுடன் நாடு முழுவதும் பாடசாலை மாணவர்கள், சட்ட அமுலாக்க அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் போன்றோருக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது.

## மத்திய வங்கியின் நீடித்துநிலைபெறத்தக்க நிதிச் செயற்பாடுகள்

2023 ஆண்டுகாலப்பகுதியில், இலங்கையின் நீடித்துநிலைபெறத்தக்க நிதிக்கான வழிகாட்டலை நடைமுறைப்படுத்துவதுடன் தொடர்புடைய தொடர் நடவடிக்கைகளில் மத்திய வங்கி ஈடுபட்டது. 2022இல் இலங்கை பசுமை நிதி பகுப்பியல் வழங்கலைத் தொடர்ந்து நிதியியல் துறையின் இயலளவுகளைக் கட்டியெழுப்புவதற்கான தேவையானது உரியகால தலையீடாகத் தோற்றம்பெற்றது. எனவே, ஐக்கிய நாடுகள் ஆசிய பசுபிக்கிற்கான பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழு, பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனம், நீடித்துநிலைபெறத்தக்க வங்கித்தொழில் மற்றும் நிதி வலையமைப்பு போன்ற பன்னாட்டு முகவராண்மைகளின் கூட்டிணைப்புடன் 2023இல் பல வகையான நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. பசுமை நிதி பகுப்பாய்வுடன் தொடர்புடைய தொழில்நுட்பப் பிரச்சனைகளைத் தெளிவுபடுத்துவதில் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிதியியல் நிறுவனங்களின் தேவைகளை நிறைவுசெய்வதற்கான முயற்சியொன்றாக மத்திய வங்கி, பகுப்பியல் மூலம் இனங்காணப்பட்ட துறைகளிலுள்ள தொழில்நுட்ப நிபுணத்துவத்துடன்கூடிய வெளிவாரி நிபுணர்கள் குழாமொன்றை நியமித்தது. மத்திய வங்கி பிரதிநிதித்துவப்படுத்தும் நீடித்துநிலைபெறத்தக்க நிதிக்கான சர்வதேசத் தளத்தில் இலங்கை 20ஆவது உறுப்பினராகியது. அரங்கில் இயலளவை விருத்திசெய்வதற்கும் தளத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்படுகின்ற பல்வேறு கலந்துரையாடல் மன்றங்களில் உறுப்பு நாட்டு அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்வதற்குமான சர்வதேசத் தளமாக இது காணப்படுகின்றது. மேலும், நாட்டில் நீடித்துநிலைபெறத்தக்க நிதியிடல் முயற்சிகளை ஊக்குவிப்பதில் உள்நாட்டிலும் உலகளவிலும் பன்னாட்டு முகவராண்மைகள் மற்றும் வேறு தொடர்புடைய ஆர்வலர் குழுக்கள் என்பவற்றுடன் மத்திய வங்கி தொடர்ந்தும் நெருங்கிப் பணியாற்றியது.

நிதியியல் துறையின் அபிவிருத்தி விபரங்கள் ஆண்டு பொருளாதார மீளாய்வு – 2023இன் நிதித் துறை அபிவிருத்திகளின் பிரிவில் தரப்பட்டுள்ளது.

## முன்னோக்கிப் பயணித்தல்

நாட்டின் பொருளாதார மீட்சிக்கு தொடர்ச்சியாகப் பங்களிக்கின்ற அதேவேளை மத்திய வங்கி நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை உறுதிசெய்யும். உள்நாட்டு மற்றும் சர்வதேச ஒழுங்குமுறைப்படுத்தல் அத்துடன் சந்தை அபிவிருத்திகள் மற்றும் சிறந்த நடத்தைகள் என்பவற்றுக்கிசைவாக முன்மதிமிக்க ஒழுங்குவிதிகளை வழங்குதல், மீளாய்வு செய்தல் மற்றும் திருத்துதலூடாக நிதியியல் நிறுவனங்களை மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தல் மத்திய வங்கியினால் மேலும் வலுப்படுத்தப்படவுள்ளது. மேலும் மத்திய வங்கியின் முன்கூட்டிய எச்சரிக்கை மற்றும் கண்காணித்தல் கட்டமைப்பினைத் தீவிரப்படுத்துவதன் மூலம் வங்கி நீடித்துநிலைத்திருக்கக்கூடிய தரப்படுத்தல் குறிகாட்டியை மேம்படுத்தி தொடர்ச்சியாகக் கண்காணிப்பதனூடாக இடர்நேர்வு அடிப்படையிலமைந்த மேற்பார்வையை வலுப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக, பாதிக்கப்படக்கூடிய மற்றும் சிறிய தொடக்கம் நடுத்தரளவிலான உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் நீண்டகால நீடித்துநிலைத்திருக்கக்கூடிய தன்மையினை உறுதிசெய்வதற்கு வங்கியல்லா நிதி நிறுவனங்களின் முதன்மைத் திட்டத்தின் கட்டம் II, நடுத்தரகாலத்தில் மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

டிஜிட்டல் கொடுப்பனவுகளை வினைத்திறன்மிக்க, பாதுகாப்பான மற்றும் உறுதியான விதத்தில் விரிவுபடுத்துவற்கு ஆதரவளிப்பதற்கும் நாட்டில் டிஜிட்டல் நிதி அறிவுப் பற்றாக்குறையானது கொடுப்பனவுகளில் காசைப் பயன்படுத்துவதிலிருந்து மாறுவதற்கு வாடிக்கையாளர்களைத் தூண்டுவதில் முக்கிய சவாலொன்றினைத் தோற்றுவித்துள்ளமையினால் 2024 காலப்பகுதியில் டிஜிட்டல் கொடுப்பனவு முறைமைகள்/ முறைகள் பற்றிய பொதுமக்கள் விழிப்புணர்வு அமர்வுகளை தொடர்ந்தும் நடாத்துவதற்கும் நிதியியல் நிறுவனங்களுடன் மத்திய வங்கி நெருங்கிய பின்தொடர் நடவடிக்கையினை எடுக்கும்.

மேலும், அனைத்து ஆர்வலர்களுக்கும் சுமூகமான மாறுதலை உறுதிசெய்து ஒழுங்குவிதிகளையும் சந்தை நடத்தை மேற்பார்வையினையும் படிப்படியாக நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், இலங்கை முழுவதும் வாடிக்கையாளர்களுக்கு முக்கிய தகவல்களைப் பரந்தளவில் பரவச்செய்வதை உறுதிப்படுத்தி 2024இல் வெகுசன

ஊடக அலைவரிசைகளூடாக நிதியியல் வாடிக்கையாளர் விழிப்புணர்வுப் பிரச்சாரத்தின் அடைவினை நீடிப்பதற்கான திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

நிதியியல் முறைமையின் ஆற்றல்வாய்ந்த தன்மை அதிகரிக்கப்படக்கூடியவகையில் ஏதேனும் ஒன்றுசேர்கின்ற ஒட்டுமொத்த முறைமையையும் பாதிக்கக்கூடிய இடர்நேர்வினைத் தணிப்பதற்கு நிலைமைகள் அவசிப்படுத்தப்படுகின்ற போது பொருத்தமான பேரண்டமுன்மதியுடைய சாதனங்கள் மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்பு மற்றும் கொள்கை வகுப்பில் சர்வதேச சிறந்த நடத்தைகளுக்கிசைவாக பேரண்டமுன்மதியுடைய அணுகுமுறையினை மத்திய வங்கி தொடர்ந்தும் இற்றைப்படுத்தும்.

நிதியியல் துறையின் விரபமான தோற்றப்பாடு ஆண்டு பொருளாதார மீளாய்வு – 2023இன் உள்நாட்டுப் பொருளாதார தோற்றப்பாட்டின் பிரிவில் தரப்பட்டுள்ளன.

## முன்னேற்றகரமான மற்றும் அனைவரையும் வசதிக்குட்படுத்துகின்ற நிதியியல் முறைமையொன்றினை ஊக்குவித்தல்

நிதியியல் வசதிக்குட்படுத்தல் பற்றிய தற்போதைய கொள்கை மையப்படுத்தலானது வெறுமனே நிதியியல் உற்பத்திகளுக்கும் சேவைகளுக்கும் எளிதான மற்றும் வசதியான பெறுவழியினை வழங்குவது என்பதை விடவும் பரந்துபட்டதாகும். நிதிக்கான பெறுவழியினை அதிகரிக்கும் மரபுசார்ந்த நோக்கிலிருந்து அது நிதியியல் சேவைகளின் தரத்தினை மேம்படுத்துவதையும் ஈடுபடுத்துகின்ற மிகவும் முழுமைபெற்ற அணுகுமுறையொன்றுக்கு இது மாறுதலடைந்துள்ளது. மத்திய வங்கியின் தலைமையில் பல ஆர்வலர்களின் முயற்சியொன்றாக அறிமுகப்படுத்தப்பட்டு தொடர்புடைய தேசியமட்ட பங்குதாரர்களின் கூட்டிணைப்புடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற "இலங்கையின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம் 2021-2024" என்ற நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவிப்பதற்கான நாட்டின் முதலாவது தேசிய மட்டக் கொள்கைக் கட்டமைப்பினால் இக்கொள்கை மாறுதல் அங்கீகரிக்கப்பட்டது.

### 2023இல் நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவித்தல்

இலங்கையின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம் இலங்கையிலுள்ள அனைத்து தனிப்பட்டவர்களும் மற்றும் தொழில்முயற்சிகளும் பல வகையான உயர்தரமிக்க, பொருத்தமான, பாதுகாப்பான மற்றும் வசதியான நிதியியல் உற்பத்திகளுக்கும் சேவைகளுக்கும் நன்கு அறிந்த அத்துடன் நியாயமான, சமத்துவமான பெறுவழியினைக் கொண்டிருந்து இதனூடாக பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களித்து வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்துகின்ற "சிறந்த வாழ்க்கைக்கான சிறந்த தரத்திலான வசதிக்குட்படுத்தல்" என்ற தொலைநோக்கொன்றுடன் 2021இல் தொடங்கப்பட்ட இலங்கையின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தலின் நடைமுறைப்படுத்தல் 2023ஆம் ஆண்டில் அதன் மூன்றாவது ஆண்டை குறித்தது.

நான்கு முக்கிய கருப்பொருள் சார்ந்த துறைகளை மையப்படுத்தியுள்ள இலங்கையின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் நடவடிக்கைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய வங்கி 20 தேசிய மட்ட பங்குதாரர்களுடன் கூட்டிணைந்தது. இலங்கையின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாய நடவடிக்கைத் திட்டமானது 26 பரந்த நிதியியல் வசதிக்குட்படுத்தல் குறிக்கோள்களை அடைவதற்கென வடிவமைக்கப்பட்ட 80 நடவடிக்கைகளைக் கொண்டுள்ளது. 2023 இறுதியளவில் நடவடிக்கைத் திட்டத்தின் ஒட்டுமொத்த செயலாற்றுகை மட்டம், 75.9 சதவீதமாக இனங்காணப்பட்டுள்ளது.

**இலங்கையின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் கவனம் செலுத்தும் துறைகளும் ஆக்கக்காரணிகளும்**



2023இல், மிகவும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட, பன்முகப்படுத்தப்பட்ட, வசதிக்குட்படுத்துகின்ற மற்றும் நிதியியல் ரீதியாக தாக்குப்பிடிக்கும் தன்மையுடைய பொருளாதாரத்திற்கு ஆதரவளிப்பதற்கான நிதியியல் முறைமையை ஊக்குவிப்பதை நோக்கி இலங்கையின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம் மூலம் வழிநடாத்தப்படும் உபாய ரீதியான அறிமுகப்படுத்தலை மத்திய வங்கி மேலும் மேம்படுத்தியது. நீண்டகால இக்கூட்டு முயற்சியினை மீள வலுப்படுத்தி, "நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவித்தல்" இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தினால் மத்திய வங்கியின் நியதிச்சட்டப் பொறுப்பொன்றாக அங்கீகரிக்கப்பட்டது.

## நிதியியல் சேவைகளின் டிஜிட்டல் மயப்படுத்தலை முன்னேற்றுதல்

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைகளின் பாதுகாப்பு, வினைத்திறன் மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றை உறுதிசெய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்ற வகையில் மத்திய வங்கியானது மிகவும் வசதிக்குட்படுத்துகின்ற அத்துடன் முன்னேற்றகரமான நிதியியல் முறைமையை நோக்கிப் பங்களிப்பதற்கான நாட்டின் டிஜிட்டல் பயணத்தில் பல முன்முயற்சிகளை மேற்கொண்டு நடைமுறைப்படுத்தியது. இம்முயற்சிகள் காசற்ற கொடுப்பனவுகள் பற்றிய பொதுமக்கள் நம்பிக்கையினையும் இலத்திரனியல் சில்லறைக் கொடுப்பனவு முறைமைகள் மற்றும் சாதனங்களின் பரிமாற்றங்களில் வளர்ச்சியினையும் கண்கூடாக அதிகரித்துள்ளன.

அரசாங்கத்தின் டிஜிட்டல் பொருளாதார நிகழ்ச்சிநிரலுக்கமைவாக எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு மேலதிகமாக, 2023இல் அதேநேரக் கொடுக்கல்வாங்கல் அறிவித்தல்களை இயலச்செய்வதற்கும் தூரப் பிரதேசங்களில் டிஜிட்டல் பரிவர்த்தனைகளை வசதிப்படுத்துவதற்கும் டிஜிட்டல் வழிகளூடாக கடனட்டைத் தீர்ப்பனவுகளை உடனடியாக இற்றைப்படுத்துவதற்கும் டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்களுக்கு கட்டாயத் தொடர்புக் கூறுகளை அமுல்படுத்துவதற்கும் உரிமம்பெற்ற வங்கிகள் பணிக்கப்பட்டன. மேலும், வணிகர் கழிவு வீதத்தை வாடிக்கையாளர்களுக்கு ஊடுகடத்தும் நடைமுறையானது கொடுப்பனவு அட்டைப் பயன்பாட்டினை தடைப்படுத்த முனைவதனால் அவ்வாறான நடத்தையில் ஈடுபடாமலிருப்பதற்கு டிஜிட்டல் ரீதியான கொடுக்கல்வாங்கல்களில் வாடிக்கையாளர் வசதியினையும் மலிவான தன்மையினையும் வலியுறுத்தி நிதியியல் கையேற்பாளர்களாக செயற்படுகின்ற உரிமம்பெற்ற வங்கிகள் அறிவுறுத்தப்பட்டன.

## லங்காபேயின் சர்வதேச கூட்டிணைப்புகள்

உரிய நாட்டின் அல்லது அதிகாரசபையின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டு ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்ற பல பிராந்திய மற்றும் நாடுகளின் கொடுப்பனவு வலையமைப்புடன் இணைந்துகொள்வதற்கு லங்காபேயிற்கு மத்திய வங்கி அனுமதி வழங்கியது. இச்செயன்முறையினை வசதிப்படுத்தி சர்வதேசக் கொடுப்பனவு வலையமைப்புடன் இணைந்த செல்லிடத்தொலைபேசி செயலிகளிலிருந்து கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்வதற்கு லங்கா கியுஆர் வணிகர்களை இயலச்செய்யுமாறு மத்திய வங்கி அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் அறிவித்தது.

டிஜிட்டல் கொடுப்பனவு முறைகளின் சென்றடைவினை அதிகரிக்கின்ற அதேவேளை, கொடுப்பனவு முறைமைகளின் பாதுகாப்பினையும் தாக்குப்பிடிக்கும் தன்மையினையும் உறுதிசெய்வதில் மத்திய வங்கி அதிகம் கவனம்செலுத்தியது. அதற்கமைய, டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய அதிகரிக்கின்ற வாடிக்கையாளர் கரிசனைகளைத் தீர்ப்பதற்கு மத்திய வங்கி முன்கூட்டிய வழிமுறைகளைத் தொடங்கியது. வெளிப்படைத் தன்மையினையும் பொறுக்கூறலையும் எடுத்துக்காட்டி, கொடுப்பனவு சேவைகளில் சாத்தியமான இடர்நேர்வுகள் மீது பின்னூட்டல்களைச் சேகரிப்பதற்கான மும்மொழியிலான வலைத்தளப் படிவமொன்றினை அறிமுகப்படுத்துவதை இது உள்ளடக்கியிருந்தது. மேலும், செல்லிடத்தொலைபேசி செயலி கொடுக்கல்வாங்கல்களில் மோசடியான இடர்நேர்வுகளைக் கையாளுவதற்கு உயர்ந்தளவான செல்லிடத்தொலைபேசி கொடுப்பனவுகளில் வாடிக்கையாளர் நம்பகத்தன்மையினையும் பாதுகாப்பினையும் அதிகரிப்பதை நோக்காகக் கொண்டு ரூ.10,000 இனை விஞ்சுகின்ற பரிவர்த்தனைக்காக ஒருநேரக் கடவுச்சொற்கள் போன்ற மேலதிகப் பாதுகாப்பு வழிமுறைகளை அமுல்படுத்துமாறு "ஜஸ்ட்பே" கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்துகின்ற உரிமம்பெற்ற வங்கிகளுக்கு மத்திய வங்கி பொறுப்பாணையளித்தது.

2023இல், ஏற்கனவே காணப்படுகின்ற அதேபோன்று தோற்றம்பெறுகின்ற நிதியியல் வசதிக்குட்படுத்தல் செய்பாடுகளிலிருந்து உருவாகின்ற பணம் தூயதாக்குதல் மற்றும் பயங்கரவாதிக்கு நிதியளித்தல் இடர்நேர்வினை மதிப்பிடும் நோக்குடன் தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டின் பாகமொன்றாக நிதியியல் வசதிக்குட்படுத்தல் செயற்பாடுகள் இடர்நேர்வு மதிப்பீட்டினை மத்திய வங்கி மேற்கொண்டது.

2023ஆம் ஆண்டுகாலப்பகுதியில், நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவிப்பதற்கு இலத்திரனியல் - உங்கள் வாடிக்கையாளரை தெரிந்துகொள்ளுங்கள் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. மேலும், குறைவான - இடர்நேர்வுமிக்க வாடிக்கையாளர்களுக்கென/ சாதனங்களுக்கென எளிமைப்படுத்தப்பட்ட உரிய விழிப்புணக் கவனத்தினை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் உள்ளடங்கலாக நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடும் சட்டத்திற்கு அவசியமான திருத்தங்களை கூட்டிணைக்கும் செயன்முறையினை மத்திய வங்கி முன்னெடுத்தது.

## நிதியியல் சாதனங்கள் மற்றும் சேவைகளின் பெறுவழியினை அதிகரித்தல்

அனைவரையும் வசதிக்குட்படுத்துகின்ற நிதியியல் முறைமையொன்றுக்கு முறைசார்ந்த நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகின்ற நிதியியல் சேவைகளுக்கான வினைதிறன்மிக்க மற்றும் செயல்திறன்வாய்ந்த பெறுவழி முன்தேவைப்பாடொன்றாக விளங்குகின்றது. நிதியியல் ரீதியாக விடுபட்டுள்ளவர்களினதும் குறைவாக சேவையாற்றப்படும் வகுப்பினர்களினதும் தேவைக்கு பதிலிறுத்தி மத்திய வங்கியானது புதிய வங்கிக் கிளைகளை, மாணவர் சேமிப்பு அலகுகளை மற்றும் தானியக்க பணம் மீளெடுப்பு இயந்திரங்கள், பணம் வைப்பு இயந்திரங்கள், பண மீள்சுழற்சி இயந்திரங்கள் போன்ற சுயசேவை இயந்திரங்கள் என்பவற்றை கிராமிய மற்றும் வங்கிகள் இல்லாத பிரதேசங்களில் திறக்குமாறு பதிவுசெய்யப்பட்ட நிதியியல் நிறுவனங்களை தொடர்ச்சியாக ஊக்குவித்து வசதிப்படுத்துகின்றது.

பேரண்ட பொருளாதார நிலைமைகளினால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட தனிப்பட்டவர்கள் மற்றும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் பொருட்டு, வாடிக்கையாளர்களின் கடன் நம்பகத்தன்மையைக் கருத்திற்கொண்டு விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில்

### நிதியியல் அறிவு வழிகாட்டல் கட்டமைப்பு




மூலம்: நிதியியல் அறிவு அளவீடு 2021

பொருத்தமான நிதியியல் சலுகைகளை வழங்குமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் கோரிக்கை விடுக்கப்பட்டது. 2023 ஓகத்தில் உரிமம்பெற்ற வங்கிகளில் சில இலங்கை ரூபா பெயர்குறிக்கப்பட்ட உற்பத்திகள் மீது வட்டி வீத உச்சங்கள் விதிக்கப்பட்டன.

## அதிகரித்த நிதியியல் அறிவு ஊடாக இலங்கையர்களை வலுவூட்டல்

பொதுமக்களின் நிதியியல் அறிவினை உயர்த்துவதற்கு மத்திய வங்கி 2023 ஆண்டுகாலப்பகுதியில் அநேகமான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது. வரவுசெலவுத் திட்டமமைத்தல், முதலிடுதல், கொடுகடன் மற்றும் படுகடன், சேமிப்புகளுக்கும் ஓய்வுகாலத்திற்கும் திட்டமிடுதல், டிஜிட்டல் கொடுப்பனவு வழிகள், நிதியியல் நிறுவனங்கள் மற்றும் உற்பத்திகளை கவனமாகக் கண்டறிதல் மற்றும் நிதியியல் அமைப்பு முறைமையில் அவர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் என்பன பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்கு தேவைக்கேற்றவாறு வடிவமைக்கப்பட்ட விரிவான ஊடகப் பிரச்சாரங்களை இவை உள்ளடக்கியிருந்தன. மேலும், பதிவுசெய்யப்பட்ட நிதியியல் நிறுவனங்கள் உள்ளடங்கலாக தொடர்புடைய பங்குதாரர்களை இலக்காகக் கொண்டு பல இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும் தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித்திட்டங்களையும் மத்திய வங்கி நடாத்தியது.

வேறுபட்ட பங்குதாரர்கள் மூலமான ஏற்கனவேயுள்ள நிதியியல் அறிவுசார் முயற்சிகளைச் சீரமைக்கும்பொருட்டு, மத்திய வங்கியின் தலைமையில் பல பங்குதாரர்களின் கூட்டிணைப்புடன் இலங்கை நிதியியல் அறிவு வழிகாட்டலானது தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் பாகமாக உருவாக்கப்பட்டது. இலங்கையர்களின் நிதியியல் நடத்தை மற்றும் இயலளவுகளை மேம்படுத்துகின்ற அடிப்படைக் குறிக்கோளுடன் மிகவும் அறிந்த நிதியியல் தீர்மானங்களை அவர்கள் எடுப்பதை இயலச்செய்து, நிதியியல் அறிவில் ஈடுபட்டுள்ள அனைத்து பங்குதாரர்களுக்கும் சான்று அடிப்படையிலமைந்த வழிகாட்டலை இத்தொடக்க முயற்சி ஏற்பாடு செய்கின்றது. "நிதியியல் அறிவு பெற்ற இலங்கை" என்ற எழுச்சியூட்டும் தொலைநோக்குடன் இலங்கை நிதியியல் அறிவு வழிகாட்டல் 2024இன் முதலரைகாலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்படும். வழிகாட்டலை நடைமுறைப்படுத்துவதற்கு 2024ஆம் ஆண்டிலிருந்து தொடங்குகின்ற ஐந்தாண்டு காலப்பகுதிக்காக

### இலங்கையின் நிதியியல் அறிவு தோற்ற அமைப்பை மேம்படுத்துவதற்கான மத்திய வங்கியின் தொடர்பாடல் உபாயம்



அனைத்தையுமுள்ளடக்கிய நடவடிக்கைத் திட்டமொன்று பங்குதாரர்களால் உருவாக்கப்பட்டது. மத்திய வங்கி அதன் தொடர்பூட்டல் உபாயத்தின் கீழ் பல்வேறு இலத்திரனியல், டிஜிட்டல் ஊடகத்தளங்கள் வாயிலாக நிதியியல் வலுவூட்டலையும் ஊக்குவித்தது. நிகழ்நேர பின்னூட்டல்களினதும் ஆழமான தாக்கத்தின் முக்கியத்துவத்தை இனங்கண்டு மத்திய வங்கியின் சென்றடைவினை மேம்படுத்துவதற்கும் பொதுமக்கள் பல்வேறு வகுப்பினருக்கும் குறிப்பான செய்திகளை காத்திரமாகக் கொண்டு சேர்ப்பதற்கு மத்திய வங்கி சமூக ஊடக வலைத்தளங்களை அதிகளவில் பயன்படுத்தியது.

## முன்னோக்கிப் பயணித்தல்

இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் மத்திய வங்கிக்கு நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவிப்பதற்கான நியதிச்சட்டக் கடப்பாடு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பின்னணியில், நிதியியல் துறையின் வழங்கல் மற்றும் கேள்வி ஆகிய இரு பக்கங்களையும் தொடர்புபடுத்தி தேசிய மட்டத்தில் மிகுந்த நிதியியல் வசதிக்குட்படுத்தல் பற்றிய முயற்சிகளுக்கு ஆதரவு தேடுவதற்கு எதிரேயுள்ள பாதை மிகவும் நம்பிக்கையளிக்கின்றது. தேசிய அபிவிருத்திக் கொள்கைக் குறிக்கோள்களுடன் தொடர்ச்சியாக ஒருங்கிணைந்து மாறிவருகின்ற நிதியியல் சூழலுக்கும் நிதியியல் தேவைகளுக்கும் ஏற்றதாக மாற்றமடைந்து பங்குடமைகளை வலுப்படுத்தி கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டிற்காக வலுவான பொறிமுறைகளை நடைமுறைப்படுத்துவது என்பன மத்திய வங்கியின் எதிர்கால நோக்குகளாகும்.

தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் கட்டம் I இனை நடைமுறைப்படுத்தல் 2024 இறுதியளவில் நிறைவுசெய்யப்படவுள்ளது. ஒட்டுமொத்த முன்னேற்றத்தையும் தாக்கத்தினையும் மதிப்பிடுவதன் மூலம் காலநிலை மாற்றத்தின் எதிர்மறையான தாக்கங்களைத் தணிப்பதற்கும் அதற்கெதிரான தாக்குப்பிடிக்கும் தன்மையினைக் கட்டியெழுப்புவதற்கும் ஆதரவளிக்க “வசதிக்குட்படுத்துகின்ற பசுமை நிதி” மீது விசேட கவனம் செலுத்தி 2025 இலிருந்து தொடங்கி தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம் கட்டம் II இனை வகுப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் மத்திய வங்கி எதிர்பார்க்கின்றது.

நிதியியல் அறிவினை மேம்படுத்துவதன் வாயிலாக அறிந்த நிதியியல் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் நிதியியல் ரீதியாக தாக்குப்பிடிக்கத்தக்கவர்களாகவிருப்பதற்கும் இலங்கையர்கள் மத்தியில் நிதியியல் நடத்தை மாற்றத்தினைத் தோற்றுவிப்பதற்கான தொடர்ச்சியான தேவையினை நிறைவுசெய்வதற்கு நிதியியல் அறிவு வழிகாட்டல் நடவடிக்கைத் திட்டம் 2024 நடுப்பகுதியிலிருந்து செயற்படுத்தப்படவுள்ளது.

## நாணயத் தொழிற்பாடுகளின் முகாமைத்துவம்

இலங்கையின் நாணயத்தை வழங்குவதற்கும் முகாமைசெய்வதற்கும் இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் மத்திய வங்கிக்கு ஏக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. திட்டமிடுகின்ற கட்டத்திலிருந்து விநியோகித்தல் வரை நாணயத்தின் ஒட்டுமொத்த 'வாழ்க்கைச் சுழற்சி' மற்றும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் வைப்பிலிடப்படுகின்ற நாணயத் தாள்களையும் குற்றிகளையும் கையாளுதல் என்பவற்றை ஈடுபடுத்துகின்ற செயன்முறையொன்றான நாணய முகாமைத்தவப் பொறுப்பு வங்கியின் நாணயத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பொறுப்புடமையுடன் ஒன்றிணைந்து சுற்றோட்டத்திலுள்ள நாணயத் தாள்களுக்காக பொருத்தமான நியமமொன்றினைப் பேணுவதற்கும் இதனூடாக நியமத்தினை நிறைவுசெய்யாத நாணயத் தாள்களை செயன்முறைப்படுத்தி மீளப்பெறுவதற்குமான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. சட்டத்தை அமுலாக்குதல் மற்றும் நீதிமன்றங்களூடாக போலி நாணயங்களைக் கண்டுபிடிப்பதுறுக்கும் மத்திய வங்கி ஆதரவளிக்கின்றது. ஆகையினால், சீரான நாணய முகாமைத்துவச் செயன்முறையினை உறுதிப்படுத்துவதற்கு மத்திய வங்கி உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுடனும் உள்ளூர் அதிகாரசபைகளுடனும் நெருங்கிப் பணியாற்றுகின்றது.

தாள்களினதும் குற்றிகளினதும் போதுமான நிரம்பல் கிடைக்கப்பெறுவதை உறுதிசெய்யவேண்டும். அதற்கமைய, 2023இல் மத்திய வங்கி 250 மில்லியன் புதிய நாணயத் துண்டுகளுக்குக் கட்டளைகளை முன்வைத்தது. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு அவற்றின் கோரிக்கையின் பேரில் மத்திய வங்கி நேரடியாக அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பணம் கொண்டுசெல்லும் கம்பனிகளூடாக நாணயத் தாள்கள் மற்றும் குற்றி இருப்புகளை வழங்குகின்றது. 2023 காலப்பகுதியில் மத்திய வங்கி ரூ.469.28 பில்லியன் பெறுமதிக்கான நாணயத் தாள்களையும் ரூ.571.95 மில்லியன் பெறுமதிக்கான நாணயக் குற்றிகளையும் சுற்றோட்டத்திற்கு வழங்கியது. போதுமான கையிருப்பு கிடைக்கப்பெறும் தன்மையினை உறுதிசெய்வதற்கும் அவசரகால வழிமுறையொன்றாகவும் நாடு முழுவதும் பல பாதுகாப்பான காப்பறைகளில் போதுமான ஒதுக்குகளைத் தொடர்ந்தும் பேணியது.

2023இல் உத்தரவாத வைப்புக்களாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்து ரூ.311.49 பில்லியன் பெறுமதியுடைய உபயோகிக்கத்தக்க (பொருத்தமான) உபயோகிக்கத்தகாத (பொருத்தமற்ற) நாணயத் தாள்களை ஏற்றுக்கொண்டது.

### நாணயத் தொழிற்பாடுகளை முகாமைசெய்தல்




## நாணயத் தொழிற்பாடுகள்

ஏக நாணய வழங்குநர் என்ற வகையில் மத்திய வங்கியானது பொதுமக்களின் கேள்வியினை நிறைவேற்றுவதற்கு நாணயத்

பல நாணய செயன்முறைப்படுத்தல் இயந்திரங்களைப் பயன்படுத்தி மத்திய வங்கி நாணயத் தாள் வைப்புக்களைச் செயன்முறைப்படுத்துகின்றது. இச்செயன்முறையின் போது மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட

| வருடாந்த தொழிற்பாட்டுத் தரவுகள் - நாணயத் தாள்கள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. 5000 | ரூ. 1000 | ரூ. 500 | ரூ. 100 | ரூ. 50 | ரூ. 20 | மொத்தம் |
| வழங்கல்கள் (ரூ. பில்.) | 375.23 | 66.51 | 20.17 | 6.08 | 0.71 | 0.58 | **469.28** |
| வைப்புகள் (ரூ. பில்.) | 229.28 | 60.14 | 15.26 | 5.45 | 0.89 | 0.47 | **311.49** |
| அழிப்பு (ரூ. பில்.) | 28.15 | 34.55 | 10.24 | 5.44 | 0.91 | 0.47 | **79.76** |

| வருடாந்த தொழிற்பாட்டுத் தரவுகள் - நாணயக் குற்றிகள் | | | | | |
|---|---|---|---|---|---|
| வகை | ரூ. 10 | ரூ. 5 | ரூ. 2 | ரூ. 1 | மொத்தம் |
| வழங்கல்கள் (ரூ. மில்.) | 425.44 | 104.33 | 22.88 | 19.30 | **571.95** |

பொருத்தத் தரநியமங்களுக்கிசைவாக நாணயத் தாள்கள் அத்தாட்சிப்படுத்தப்பட்டு வகை பிரிக்கப்படுகின்றன. வகை பிரித்தல் தரநியமங்களை நிறைவுசெய்ய இயலாத நாணயத் தாள்கள் பொருத்தமற்றவையாகக் கருதப்பட்டு சுற்றோட்டத்திலிருந்து அகற்றப்படுகின்றன. 2023இல் மத்திய வங்கி ரூ.79.8 பில்லியன் பெறுமதியுடைய பொருத்தமற்ற நாணயத் தாள்களை அழித்துள்ளது.

## சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

இலங்கையின் சுற்றோட்டத்திலுள்ள நாணயம் 2022இன் 2.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2023இல் 1,186.5 பில்லியனாக 15.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

சுற்றோட்டத்திலுள் பணத்தின் வருடாந்த அதிகரிப்பு




ஏப்பிறல் மற்றும் திசெம்பர் மாதங்களின் வழமையான பருவகால மாறுபாடுகளுக்குப் புறம்பாக குறிப்பிடத்தக்க உயர்வொன்று அறிக்கையிடப்பட்டிருந்தது. 2023 யூலையில் இலங்கை அரசாங்கத்தின் உள்நாட்டு படுகடன் மேம்படுத்துகை நிகழ்ச்சித்திட்டம் இதற்குக் காரணமாக அமைந்திருக்கலாம்.

2019 முதல் 2023 வரையிலான காற்றோட்டத்தில் உள்ள நாணயத்தின் அசைவுகள்




## போலி புனைதலை முறியடித்தல்

நாட்டில் போலி நாணயத் தாள்கள் பரவுவதைக் குறைப்பதற்கும் இலங்கை ரூபாவில் பொதுமக்கள் நம்பிக்கையினைப் பேணிக்காப்பதற்கும் மத்திய வங்கி உள்ளூர் அதிகாரநிறுவனங்களுடன், குறிப்பாக குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் போலி நாணயப் பணியகத்துடன் இணைந்து பணியாற்றுகின்றது.

2023இல் 1,769 போலி நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. போலி நாணயத் தாள்களின் தற்போதைய கண்டுபிடித்தல் வீதம் சுற்றோட்டத்திலுள்ள ஒரு மில்லியன் நாணயத் தாள்களுக்கு 1.4 தாள்களாகக் காணப்பட்டு, ஒரு மில்லியன் தாள்களுக்கு சராசரியாக 15 இனைக் கொண்ட உலகளாவிய சராசரியுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க குறைவான நிகழ்வு மட்டங்களை எடுத்துக்காட்டுகின்றது. ஆண்டுகாலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 57ஆம் பிரிவுகளின் நியதிகளுக்கமைய நீதிமன்ற நடவடிக்கைமுறைகளை வசதிப்படுத்துவதற்கு நாணயத் தாள்களின் போலிக்கான தீர்மானச் சான்றாக மத்திய வங்கி 97 சான்றுகளை வழங்கியதுடன் போலிபுனைதலுடன் தொடர்புபட்ட 11 நீதிமன்ற வழக்குகளில் பங்கேற்றது.

இதற்கு மேலதிமாக, மத்திய வங்கி போலி நாணயத் தாள்களை அடையாளப்படுத்தல் மீதான அறிவினை மேம்படுத்துவதற்கும் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் தரத்தினைப் பேணுவதற்கு சிறந்த கையாளுதல் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கும் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் சட்ட அமுலாக்க அலுவலர்கள் போன்றோருக்கு விழிப்புணர்வுப் பிரசாரங்களை காலமுறையாக நடாத்துகின்றது.

## ஞாபகார்த்தக் குற்றி வழங்கல்

நிதியமைச்சரின் அனுமதியுடன் முக்கிய நிகழ்வுகளையும் அல்லது நாட்டின் நலனுக்காக பங்களித்தவர்களைக் குறிப்பதற்கு ஞாபகார்த்தக் குற்றிகளை மற்றும் நாணயத் தாள்களை வெளியிடுவதற்கு இலங்கை மத்திய வங்கிச் சட்டம் மத்திய வங்கிக்கு அதிகாரமளித்துள்ளது.

- **இலங்கை சுதந்திரம்பெற்ற 75ஆவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடுதல்**

2023 காலப்பகுதியில், இலங்கையின் சுதந்திரம் பெற்ற 75ஆவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடுவதற்கான ஞாபகார்த்தக் குற்றியொன்றை மத்திய வங்கி வெளியிட்டது. வெளியிடப்பட்ட குற்றி நெதர்லாந்தின் றோயல் டச் மின்ட் மூலம் வார்க்கப்பட்ட ரூ.1,000 முகப் பெறுமதியுடன்கூடிய சுற்றோட்டத்திற்கு விடப்படாத நாணயக் குற்றியாகவிருந்தது. இக்குற்றி 2023 மாச்சு 09 தொடக்கம் மத்திய வங்கி காசுக் கருமபீடங்கள், பொருளாதார அரும்பொருட்காட்சிச்சாலை மற்றும் மத்திய வங்கி பிரதேச அலுவலகங்களூடாக ரூ.6,000 விலையில் விற்பனைசெய்யப்பட்டன.




## முன்னோக்கிப் பயணித்தல்

பல தொழிற்பாட்டுக் குறைபாடுகளையும் நிவர்த்திசெய்வதற்கு மத்திய வங்கி அதன் தற்போதுள்ள நாணயத் தொழிற்பாடுகளை மறுசீரமைப்பதற்குத் திட்டமிடுகின்றது. புதிய உபகரணங்களை கையேற்பதன் வாயிலாக நாணயத் தாள் செயன்முறைப்படுத்தல் இயலளவை அதிகரித்தல், செயன்முறைகளைச் சீர்படுத்துவதன் மூலம் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்தல், புதிய மென்பொருள் உபகரணங்களை அறிமுகப்படுத்தல், தொழிற்பாட்டுப் பிரதேசங்களில் பாதுகாப்பு மற்றும் ஆபத்தற்ற தரநியமங்களை அதிகரித்தல் என்பவற்றை இம்மறுசீரமைப்புக் கருத்திட்டம் உள்ளடக்குகின்றது. 2025 இறுதியளவில் இக்கருத்திட்டம் நிறைவுசெய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## பன்னாட்டு ரீதியான ஈடுபாடுகள்

2023இல் நிதியியல் துறை உறுதிப்பாடு மற்றும் மறுசீரமைப்புக்கள், நிதியியல் துறை பாதுகாப்பு வலையை வலுப்படுத்தல், தொழில்நுட்ப உதவியினைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அறிவுப் பரிமாற்றம் என்பன மீது மத்திய வங்கி அதன் வெளிநாட்டு ஈடுபாட்டை பிரதானமாக மைப்படுத்தியிருந்தது.

### நிதியியல் துறை உறுதிப்பாட்டிற்கும் மறுசீரமைப்புகளிற்குமான நிகழ்ச்சித்திட்டம்

ஒவ்வொன்றும் ஐ.அ.டொலர் 200 மில்லியன் கொண்ட இரு துணை நிகழ்ச்சித்திட்டங்களுடன் கொள்கை அடிப்படையிலமைந்த கடன் நடைமுறையினைப் பின்பற்றுகின்ற நிதியியல் துறை உறுதிப்பாடு மற்றும் மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அவசியமான நெகிழ்வுத்தன்மையினை உறுதிசெய்வதற்கும் முறையான தொடர் மறுசீரமைப்புக்களுக்கும் மத்திய வங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் கூட்டிணைந்த அதேவேளை, நெருக்கடி காலப்பகுதியில் பல்லாண்டு கொள்கை மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்தின. இதற்கு மேலதிகமாக, தீர்மானக் கட்டமைப்பினை வலுவூட்டும் பொருட்டு, ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கை மத்திய வங்கிக்கு தொழில்நுட்ப உதவியினை வழங்குவதற்கு சம்மதித்துள்ளது.

### நிதியியல் துறைக்கான பாதுகாப்பு வலையை வலுப்படுத்துவதற்கான கருத்திட்டம்

இலங்கை வைப்புக் காப்புறுதி மீதான வலியுறுத்தலுடன் உலக வங்கி, மத்திய வங்கி மற்றும் இலங்கை அரசாங்கம் என்பன நிதியியல் துறை பாதுகாப்பு வலை வலுப்படுத்தல் கருத்திட்டதிற்காக மீது இணைந்து பணியாற்றுகின்றன. 2024 சனவரியில் இக்கருத்திட்டத்திற்கு நிதியளிப்பதற்கு ஐ.அ.டொலர் 150 மில்லியனுக்கு கடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது. செயல்திறன்வாய்ந்த வைப்புக் காப்புறுதி முறைமைகளுக்கான உலகளாவிய சிறந்த நடத்தைகளுக்கமைவாக இலங்கை வைப்பு காப்புறுதி முறைமையின் நிறுவனசார் நிதியியல் இயலளவினை அதிகரிப்பது இக்கருத்திட்டத்தின் இலக்காகும்.

### மத்திய வங்கிகளுடனான நாணய பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்த உடன்படிக்கைகள்

சீன மக்கள் வங்கியுடனான பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்த உடன்படிக்கையின் நீடிப்புக்கு மேலதிகமாக ஐ.அ.டொலர் 2.6 பில்லியனுக்கு இந்திய ரிசேர்வ் வங்கியுடன் 2023 ஒத்தோபரில் விசேட பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்த உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது.

### ஆசியாவிற்கான நிதியியல் உறுதிப்பாட்டுச் சபை பிராந்திய ஆலோசனைக் குழு

ஹொங்கொங்கில் 2023 நவெம்பர் 29 அன்று கூட்டப்பட்ட ஆசியாவிற்கான நிதியியல் உறுதிப்பாட்டுச் சபை பிராந்திய ஆலோசனைக் குழுக் கூட்டத்திற்கு மத்திய வங்கியின் ஆளுநரும் ஹொங்கொங் நாணய அதிகாரசபையின் பிரதம நிறைவேற்று அலுவலரும் இணைத்தலைமை தாங்கினர். வங்கியல்லா நிதியியல் இடையீட்டிலிருந்து உருவாகுகின்ற பாதிக்கப்படும் தன்மைகள், சில வளர்ந்துவரும் சந்தைகளிலும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களிலும் இறையாண்மைகளுக்கும் வங்கிகளுக்கும் இடையில் அதிகரிக்கின்ற உறவு மற்றும் கிறிப்டோ-சொத்து தொடர்புடைய இடர்நேர்வுகளை செயல்திறன்வாய்ந்த விதத்தில் ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வைசெய்வதற்கான உபாயங்கள் என்பன இக் கூட்டத்தில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன. இவ்விடர்நேர்வுகளை இனங்காணுதல், கண்காணித்தல் மற்றும் தணித்தல் தொடர்பாக உறுப்பினர்கள் உள்நோக்குகளைப் பரிமாறிக்கொண்டதுடன் நிதியியல் முறைமை தாக்குப்பிடிக்கும் தன்மையினை வலுப்படுத்துவதற்கு நிதியியல் உறுதிப்பாட்டுச் சபையின் உறுதியான முயற்சிகளுக்கு பாராட்டுக்களைத் தெரிவித்தனா

### பன்னாட்டு நாணய நிதியத்தின் மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளர்

பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் பன்னாட்டுப் பொருளாதார விவகாரங்கள் என்பவற்றில் காணப்படும் பரந்த நிபுணத்துவத்தின் அங்கீகாரமாக மத்திய வங்கி அலுவலர்கள் பன்னாட்டு நாணய நிதியத்தின் மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராக தொடர்ந்தும் பணியாற்றினர். மத்திய வங்கித்தொழில் பற்றிய நுணுக்கங்களை புரிந்துகொள்ளல், செயல்திறன்வாய்ந்த தலைமைத்துவம் பற்றிய எண்பிக்கப்பட்ட பதிவுகள் மூலம் உலகளாவிய அரங்கில் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், மற்றும் பூட்டான் நாடுகளை உள்ளடக்குகின்ற தொகுதியின் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு இவ்வலுவலர் போதிய தகமையை பெற்றுள்ளனர். உலகளாவிய பொருளாதார மற்றும் நிதியியல் கொள்கைகள் பற்றிக் கலந்துரையாடல்களில்

பெறுமதிவாய்ந்த நுண்ணறிவாற்றல்களையும் நோக்குகளையும் பங்களிப்புச்செய்வதற்கான மத்திய வங்கியின் இயலுமையில் பன்னாட்டு நாணய நிதியத்தின் நம்பிக்கையினை இந்நியமனம் பிரதிபலிக்கின்றது.

## நிலைபெறத்தக்க நிதி மீதான பன்னாட்டு ஒத்துழைப்பு

நிலைபெறத்தக்க நிதி வழிகாட்டலை நடைமுறைப்படுத்துவதற்கான செயலகம் என்றவகையில் மத்திய வங்கியின் பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களமானது ஐக்கிய நாடுகள் ஆசிய மற்றும் பசுபிற்கான பொருளாதார சமூக ஆணைக்குழு, பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனம், நிலைபெறத்தக்க வங்கித்தொழில் மற்றும் நிதி வலையமைப்பு, ஐக்கியநாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நிலைபெறத்தக்க நிதிக்கான சர்வதேசத் தளம் உள்ளடங்கலாக முகவராண்மைகளுடன் 2023 காலப்பகுதியில் தொடரான இருதரப்பு மற்றும் பல்தரப்பு ஈடுபாடுகளில் பங்கேற்றது. நாட்டில் நிலைபெறத்தக்க நிதியிடலுக்கான கொள்கைக் கட்டமைப்புக்களை விருத்திசெய்து நடைமுறைப்படுத்தல் மற்றும் அவற்றின் தொடர்புடைய நிதியியல் நிறுவனங்களில் நிலைபெறத்தக்க நிதிச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நிதியியல் துறையின் தொழில்நுட்ப மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் இயலளவினைக் கட்டியெழுப்புதல் என்பனவற்றை இவ்ஈடுபாடுகள் அநேகமாக நோக்காகக் கொண்டிருந்தன. மேலும், நிலைபெறத்தக்க நிதி பற்றி அறிவைப் பகிர்ந்துகொள்வதற்கான தளமாகக் காணப்படுகின்ற நிலைபெறத்தக்க நிதிக்கான பன்னாட்டுத் தளத்தில் இலங்கை 20ஆவது உறுப்பினரானது. நிலைபெறத்தக்க நிதி அபிவிருத்தி வழிகாட்டலுக்காக நிலைபெறத்தக்க வங்கித்தொழில் மற்றும் நிதி வலையமைப்பு மூலம் “வளர்ந்துவருகின்ற சந்தைகள், சிறந்த நடத்தை, விடய ஆய்வு” ஆக இலங்கை இடம்பெற்றதுடன் இலங்கையின் அனுபவத்தினைப் பகிர்ந்துகொள்வதற்கு 2023 யூனில் மொங்கோலியாவில் இடம்பெற்ற நிதி வார நிகழ்வில் அலுவலரொருவர் பங்கேற்றார்.

## பன்னாட்டுத் தரப்படுத்தல் முகவராண்மைகளுடனான ஈடுபாடு

பன்னாட்டுத் தரப்படுத்தல் முகவராண்மை மீளாய்வாளர்களுக்குத் தேவையான அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதாரத் தரவுகளையும் கொள்கை இற்றைப்படுத்தல்களையும் வழங்குவதற்கு மத்திய வங்கி பன்னாட்டுத் தரப்படுத்தல் முகவராண்மைகளான மூடீஸ், எஸ் அன்ட பி மற்றும் பிச் நிறுவனங்களுடன் ஈடுபட்டது. இலங்கையின் கடன் நம்பகத்தன்மையினையும் இடர்நேர்வுத் தொகுப்பையும் செம்மையாக மதிப்பிடுவதற்கு அத்தகைய தரப்படுத்தல் முகவராண்மைகளை இயலச்செய்வதன் மூலம் உலகளாவிய மூலதனச் சந்தைகளுக்கான இலங்கையின் பெறுவழியினை மீளப்பெறுவதற்கு இவ்ஈடுபாடு அத்தியாவசியமானதாக அமைகின்றது. வெளிநாட்டு முதலீட்டைக் கவருவதிலும் இலங்கைப் பொருளாதாரத்தில் முதலீட்டாளர் நம்பிக்கையினைப் பேணுவதிலும் இம்முயற்சிகள் இன்றியமையாத பங்காற்றுகின்றன.

## ஆளுனரின் அதிகரித்த உலகளாவிய ஈடுபாடு

2023 ஏப்பிறல் மற்றும் ஒத்தோபர் மாதங்களில் முறையே பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் உலக வங்கி வசந்தகால மற்றும் வருடாந்தக் கூட்டங்களில் மத்திய வங்கியின் ஆளுநரும் பேராளர் குழுவும் பன்னாட்டு நாணய நிதியம், உலக வங்கி அத்துடன் வேறு பன்னாட்டு சமூகத்துடன் இருதரப்பு மற்றும் பல்தரப்பு அடிப்படையில் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தது.

நிதியியல் உறுதிப்பாட்டுச் சபையின் ஆசியாவிற்கான பிராந்தி ஆலோசனைக் கூட்டத்தின் இணைத்தலைவராகப் ஆளுநர் பணியாற்றியதுடன் 2023 நவெம்பரில் கொங்ஹொங்கில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டார்.

பங்களதேஷில் 14ஆவது தெற்காசிய பொருளாதார உச்சிமாநாடு, மொரோக்கோவில் தெற்குலகு நாட்டிற்கான படுகடன் அழுத்தங்கள் மீதான மறாக்கேஸ் பொருளாதாரப் பண்டிகை, இந்தியாவின் கௌடில்லிய பொருளாதார மாநாடு, ஜேர்மனியில் பொருளாதாரக் கலந்துரையாடல், தாய்லாந்தில் “காலநிலைப் பிரச்சனைகள்” பற்றி உயர்மட்ட கருத்தரங்கு ஆகியன உள்ளடங்கலாக பல்வேறு பன்னாட்டு மன்றங்களிலும் நெருக்கடி காலத்தில் இலங்கைப் பொருளாதாரத்தை முகாமைசெய்வதில் அவரது அனுபவத்தையும் பொருளாதாரத்திற்கான எதிர்கால தோற்றப்பாடு மீதான வங்கியின் கருத்துக்களையும் ஆளுநர் பகிர்ந்துகொண்டார். மேலும், இந்திய வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனம், எச்எஸ்பீசி மற்றும் ஒக்ஸ்போட் உலகச் சங்கம் போன்றன மூலம் ஏற்பாடுசெய்யப்பட்ட மெய்நிகர் நிகழ்வுகளில் ஆளுநர் முக்கிய உரைகளை நிகழ்த்தினார்.

பொருளாதார நெருக்கடியுடன் கூடிய நாட்டின் அனுபவம் பற்றி விபரித்தல், மீட்சியின் அளவை மதிப்பிடுதல் மற்றும் சர்வதேச உறவுகளை மேம்படுத்தல் பற்றி பல்வேறு இராஜதந்திரிகளுடனும் ஆளுநர் தொடர்ச்சியான கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

தேசிய ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் என்ற வகையில் ஆளுநரும் ஆளுநரின் தலைமையில் நிதியியல் உளவறிதல் பிரிவின் மூன்று மூத்த அலுவலர்களைக் கொண்ட இலங்கையின் பேராளர் குழு, கனடாவில் வெங்குவரில் 2023 யூலையில் இடம்பெற்ற 2023 ஆசிய பசுபிக் குழும வருடாந்த முழுநிறைவுக் கூட்டத்தில் பங்கேற்றது. இலங்கையில் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியழித்தலை ஒழித்தல் தொடர்பான தொழில்நுட்ப உதவியினை மேம்படுத்துவது தொடர்பில் பல்தரப்பு தொழில்நுட்ப உதவி வழங்குநர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

## தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்தலும் செயன்முறை அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளலும்

“இலங்கையில் பணச் சந்தை அபிவிருத்தி” பற்றிய ஆய்வினூடாக 2023இல் கொரிய வங்கியுடனான அறிவுப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டமொன்றுகாக மத்திய வங்கி இணைந்து செயற்பட்டது. பணச் சந்தைத் தொழிற்பாடுகளில் பன்னாட்டு ரீதியாக சிறந்த நடத்தைகள் பற்றிய நடைமுறை அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளலும் தொழில்நுட்ப அறிவை வளர்த்துக்கொள்ளலும் இவ்வாராய்ச்சிக் கருத்திட்டத்தின் மூலம் சாத்தியமானது.

திரவத்தன்மை எதிர்வுகூறல் கட்டமைப்பு மீதான தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் குறிக்கோளுடன் 2023இல் “இலங்கை மத்திய வங்கியின் திரவத்தன்மை எதிர்வுகூறல் கட்டமைப்பிற்கான மேம்படுத்தல்களை அறிமுகப்படுத்தல்” மீது தொழில்நுட்ப உதவிகளை பன்னாட்டு நாணய நிதிய தெற்காசிய ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப உதவி நிலையம் வழங்கியது. இலங்கையில் நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல் செயன்முறையினை இது வலுப்படுத்தும்.

மத்திய வங்கிச் சட்டத்திற்கமைவாகவும் பேரண்டமுன்மதியுடைய கருவிகளின் உருவாக்கம் மற்றும் அளவுத்திருத்தம் என்பவற்றுக்கமைவாகவும் மத்திய வங்கியின் பேரண்டமுன்மதியுடைய பொறுப்பாணையைச் செயற்படுத்துவதன் நோக்காக பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து மத்திய வங்கி தொடரான தொழில்நுட்ப உதவியினைப் பெற்றுக்கொண்டது.

இம்முயற்சிகளுக்கு மேலதிகமாக மத்திய வங்கி வேறு தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்தும் நன்மையடைந்தது.

## பன்னாட்டு கருத்தரங்குகள், மாநாடுகள், செயலமர்வுகள் மற்றும் பயிற்சி அமர்வுகள்

2023 யூனில் “மேற்பார்வை, கண்காணித்தல் மற்றும் பரீட்சித்தலின் புதிய கருவிகள்” பற்றிய தென்கிழக்காசிய மத்திய வங்கிக் கற்கைநெறியினை வங்கித்தொழில் கற்கைகளுக்கான நிலையம் நடாத்தியது.

தொடர்ச்சியாக நான்காவது ஆண்டாகவும் 2023 ஒத்தோபரில் பேரண்ட பொருளாதார உறுதிப்பாட்டிற்காக தோற்றம்பெற்றுவரும் பிரச்சனைகளை மையப்படுத்தி ஆசிய அபிவிருத்தி வங்கி நிறுவனம் மற்றும் ஆசிய பசுபிக் பிரயோகப் பொருளாதார அமைப்பு ஆகியவற்றுடனான கூட்டிணைப்பில் மத்திய வங்கி இணைந்து வருடாந்த பன்னாட்டு ஆராய்ச்சிச் செயலமர்வை ஏற்பாடு செய்திருந்தது.

இச்செயலமர்வில் ஆசிய பசுபிக் பிரயோகப் பொருளாதார அமைப்பு ஆராய்ச்சியாளர்களுடன் இணைந்து தயாரித்த மூன்று ஆராய்ச்சிக் கட்டுரைகளை மத்திய வங்கி அலுவலர்கள் முன்வைத்தனர். மத்திய வங்கி வங்கித்தொழில் கற்கைகள் நிலையத்தினூடகவும் பன்னாட்டு தீர்ப்பனவுகளுக்கான வங்கியின் நிதியியல் உறுதிப்பாட்டு நிறுவனம் மற்றும் ஐரோப்பிய மேற்பார்வையாளர் கல்வி முயற்சி என்பவற்றின் ஒத்துழைப்புடனும் வங்கி பிரத்தியேகமாக அதன் அலுவலர்களுக்காக “தூண் 2 மற்றும் அழுத்தப் பரிசோதனைகள்” தொடர்பான மெய்நிகர் கருத்திரங்கொன்றை ஏற்பாடுசெய்தது.

“காசு முகாமைத்துவம் தொடர்பில் தானிக்கப்படுத்தல், டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் நிலைபெறுதன்மை” பற்றி பிரத்தியேகமாக மத்திய வங்கி அலுவலர்களுக்காக டொயிஸ் புன்டே வங்கியுடனான கூட்டிணைப்புடன் வங்கித்தொழில் கற்கைகளுக்கான நிலையத்தினால் மெய்நிகர் பயிற்சியொன்று நடாத்தப்பட்டது.

நேபாளத்தின் கேளப்ஏ வியாபாரப் பாடசாலைக்காக “கிளை முகாமைத்துவத்தில் உன்னதத்தை அடைந்துகொள்ளல்” மற்றும் இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகளின் பொதுநோக்கு பற்றி நேபாள ரஸ்றா வங்கியின் அலுவலர்களுக்காக என இரு விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

இதற்கு மேலதிகமாக, லாவோ மக்கள் சனநாயக குடியரசு, நேபாளம், புரூணை மற்றும் டிமோலஸ்டே நாடுகளுக்கான பரஸ்பர மதிப்பீடுகளின் மதிப்பீட்டாளர்களாக நிதியியல் உளவறிதல் பிரிவின் நான்கு மூத்த அலுவலர்கள் பங்கேற்றனர். நாவுறு மற்றும் மாஸல் குடியரசுத் தீவுகள் பற்றிய மதிப்பீடுகளில் இந்நாடுகளுக்கான பரஸ்பர மதிப்பீட்டுக்கான வெளிநாட்டு மீளாய்வாளர்களாக மேலும் இரு நிதியியல் உளவறிதல் பிரிவின் இரண்டு அலுவலர்கள் தற்போது மதிப்பீடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

## வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குபடுத்தலும் மேற்பார்வை செய்தலும்

இலங்கையில் வெளிநாட்டுச் செலாவணியின் முறையான ஊக்குவித்தலையும் ஒழுங்குபடுத்தலையும் உறுதிசெய்யும்பொருட்டு 2017 நவெம்பர் 20 அன்று செயற்பாட்டிற்கு வந்த 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கத்தின் முகவர் என்ற வகையில் மத்திய வங்கி பொறுப்புமிக்கதாக விளங்குகின்றது. அதற்கமைய, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் நியதிகளுக்கமைய வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கும் பொதுமக்களுக்கு ஒழுங்குவிதிகளையும் கட்டளைகளையும் அத்துடன் அதிகாரமளிக்கபட்ட வணிகர்களுக்கு (அதாவது இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கிகள்) பணிப்புரைகளையும் வழங்குவதற்கு மத்திய வங்கி விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சருக்கு மத்திய வங்கி வசதியளிப்பதுடன் இணங்குவித்தலைக் கண்காணித்து இணங்காமைகள் மீது விசாரணைகளையும் நடாத்துகின்றது. மேலும், மத்திய வங்கியானது மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களை அதாவது அதிகாரமளிக்கபட்ட பணமாற்றுநர்களையும் ஏனைய ஆட்களையும் வெளிநாட்டுச் செலாவணியில் வணிகம் செய்வதற்கு நியமிக்கின்றது. மேலும், கோரிக்கைகளின் தகைமைகள் மற்றும் தொடர்புடைய உள்ளார்ந்தங்கள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு விடயத்திற்கேற்றவாறு வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் நியதிகளுக்கமைய பொதுவான அனுமதியின் கீழ் அனுமதிக்கப்படாத கோரிக்கைகளுக்காக மத்திய வங்கி விசேட அனுமதியளிப்பதுடன் குறித்துரைத்த தேவைப்பாடுகளைத் திருப்பதிப்படுத்துகின்ற வெளிமுக மூலதனக் கொடுக்கல்வாங்கல்களுக்கான இசைவுகளையும் வழங்குகின்றது.

**ஏற்றுமதி வருவாய்கள் மாற்றல் மற்றும் ஆண்டுக்கான திருப்பியனுப்பதலுக்கும் இடையிலான ஒப்பீடு - 2022 தொடக்கம் 2023 (பொருட்களும் சேவைகளும்)**




இதற்கு மேலதிகமாக, இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் இயலச்செய்கின்ற ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைய தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். நீக்கப்பட்ட 1949ஆம் ஆண்டின் 59ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட விதிகளுக்கிணங்கி இலங்கைக்கு ஏற்றுமதிப் பெறுகைகளை அனுப்புதல், எஞ்சிய மாற்றுதல்கள் என்பவற்றையும் மத்திய வங்கி கண்காணிக்கின்றது. 2023 காலப்பகுதியில் மூலதன மற்றும் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல் தொடர்பில் இடைநிறுத்தல்கள்/ மட்டுப்பாடுகள் சிலவற்றை முன்னேற்றகரமாகத் தளர்த்தும்பொருட்டு, மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் இரு கட்டளைகளை 2023 யூன் 28 அன்றும் 2023 திசெம்பர் 20 அன்றும் வழங்கியது. மேலும், வதியாத முதலீட்டாளர்களிடமிருந்து கம்பனியின் பங்கு மூலதனத்திற்குள் முதலீடொன்றாக கிடைக்கப்பெற்ற பெறுகைகளிலிருந்து "விசேட வெளிநாட்டு நாணயக் கணக்குகள் - முதலீட்டைப் பெறுபவர்" திறந்து பேணுவதற்கு அதகாரமளிக்கபட்ட வணிகர்களுக்கு அனுமதியளித்து பணிப்புரைகள் வழங்கப்பட்டன. கடல்சார் எரிபொருள் (நீர்க்கலங்களுக்கு எரிபொருள் வழங்கல்) போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டுச் சேவைகள் என்பவற்றில் ஈடுபட்டுள்ள வியாபார நிறுவனங்களுக்கிடையில் சில வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்துவதற்கு முறையே வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கான வசதிகள் தொடர்பில் பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

## முன்னோக்கிய பாதை

அதிகாரமளிக்கபடாத வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களைக் கட்டுப்படுத்துவதற்கான ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரங்களை வலுப்படுத்தல் உள்ளடங்கலாகச் சட்டத்தின் தற்போதைய ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இனங்காணப்பட்ட பல பிரச்சனைகளையும் கரிசனைகளையும் சீர்செய்யும்பொருட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தினைத் திருத்துவதற்கு மத்திய வங்கி எதிர்பார்க்கின்றது.

மத்திய வங்கிச் சட்டத்தின் 132ஆவது பிரிவின்படி, பொதுப் படுகடன் முகாமைத்துவ முகவராண்மை அல்லது அலுவலகம் தொடர்பான இயைபான சட்டம் நடைமுறைக்குவரும் அத்தகைய திகதி வரை, அரசாங்கம் மற்றும் அரச படுகடன் முகாமைத்துவத்தின் கணக்கிற்காக அரசாங்கத்தின் பிணையங்களை வழங்குவது தொடர்பில் மத்திய வங்கி அரசாங்கத்தின் முகவராக தொடர்ந்தும் செயற்படும். இதன்படி, மத்திய வங்கி அரசாங்கத்தின் நிதித் தேவைப்பாடுகள் சாத்தியமானளவிற்கு குறைந்த செலவில், முன்மதியுடைய இடர்நேர்வு மட்டங்களில் பூர்த்தி செய்யப்படுகின்றமையினை உறுதிப்படுத்துகின்ற அதன் முக்கிய தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் ஆற்றுகின்ற வேளையில் சிறந்த நியமங்களையும் நடைமுறைகளையும் பின்பற்றிய வேளையில் வினைத்திறன்மிக்க அரச பிணையங்கள் சந்தையை அபிவிருத்தி செய்தல் மற்றும் பேணுதல், சந்தைப் பங்கேற்பாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் தேவையான தகவல்கள் கிடைப்பதனை உறுதிப்படுத்துதல், அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட பிணையங்களுக்கான பதிவேடுகளைப் பேணுதல் மற்றும் தொடர்பான கொள்கைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் உரிய நேரத்தில் அரச படுகடன்களைத் தீர்ப்பனவு செய்தல் என்பனவற்றையும் மேற்கொண்டு வருகிறது.

## அரசாங்கத்தின் மொத்த கடன்பாட்டுத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு நிதிகளைத் திரட்டுதல்

(அ) விடாப்பிடியான சவால்மிக்க பேரண்டப் பொருளாதாரம் மற்றும் சந்தை நிலைமைகளுக்கு மத்தியிலும், பொதுத் திறைசேரியின் நிதியிடல் தேவைப்பாடுகள், முக்கியமாக, உள்நாட்டு மூலங்களினூடாக நிதியிடப்பட்ட வேளையில் முன்மதியுடைய படுகடன் முகாமைத்துவ வழிமுறை பின்பற்றப்பட்டதுடன் ஒழுங்குமுறையான சந்தை நிலைமைகள் உறுதிப்படுத்தப்பட்டன. எந்தவொரு வெளிநாட்டு வர்த்தக நிதியிடல்களை அணுகுவது 2023இல் தொடர்ந்தும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) உள்நாட்டுப் பக்கத்தில், நிதியிடல் தேவைப்பாடானது, படுகடன் மறுசீரமைப்பு அளவுமுறையில் காணப்பட்ட நிச்சயமற்ற தன்மையின் பெருமளவு காரணமாக, உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை நிகழ்ச்சித்திட்டத்தின் மீதான அறிவித்தலுக்கு முன்னதாக நீண்ட கால முதலீடுகளுக்கான சந்தை தயக்கங்களை பிரதிபலிக்கின்ற விதத்தில் குறுங்கால திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளினூடாகத் திரட்டப்பட்டது. உள்நாட்டு படுகடன் மேம்படுத்துகை நிகழ்ச்சித்திட்டம் இறுதிப்படுத்தப்பட்டமையுடன் சேர்ந்து முன்னேற்றம் கண்ட இறைச் செயலாற்றம், உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் மீண்டும் உறுதியாக உத்வேகம் பெற்றமை, நன்கு நிலைநிறுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்புக்கள் மற்றும் கட்டியெழுப்பப்பட்ட தாங்கிருப்பு நிதியம் உட்பட, நிதியமைச்சின் சம்மதத்துடன் பின்பற்றப்பட்ட முன்மதியுடைய படுகடன் முகாமைத்துவம் வழிமுறைகள் சாதகமான சந்தை மனோபாவங்களை அதிகரித்து அரச பிணையங்களுடன் சேர்ந்து காணப்பட்ட கணிசமான இடர்நேர்வுக் கட்டணங்கள் படிப்படியாக மறைந்து போக வழிவகுத்தன.

(இ) இவ்வபிவிருத்திகள் அரச பிணையங்களின் விளைவு வீதங்கள் 2023 இறுதியில் கணிசமானளவிற்கு கீழ்

**திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் வழங்கல் - 2022 மற்றும் 2023**

| | 2022 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| சாதனம் | வழங்கல்கள் ரூ.பில். | நி.ச.வி. வீதம் (%) | மு.ச.காலம் (ஆண்டுகள்) | ஏலங்களின் எண்ணிக்கை | வழங்கல்கள் ரூ.பில். | நி.ச.வி. வீதம் (%) | மு.ச.காலம் (ஆண்டுகள்) | ஏலங்களின் எண்ணிக்கை |
| திறைசேரி உண்டியல்கள் (அ) | 9,942.8 | 25.21 | 0.33 | 52 | 15,446.3 | 22.36 | 0.34 | 52 |
| திறைசேரி முறிகள் | 2,373.0 | 21.24 | 5.15 | 24 | 7,614.52 | 21.00(ஆ) | 8.56 | 14 |

நி.ச.வி: நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம்/செலவு மு.ச.கா: முதிர்ச்சிக்கான சராசரிக் காலம்

(அ) மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் உட்பட மொத்த திறைசேரி உண்டியல்களின் வழங்கல்.

(ஆ) உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட திறைசேரி முறிகள் நீங்கலாக.

நோக்கிச் சீராக்கப்படுவதனை தூண்டியதுடன் இந்நிலைமை 2024 வரை தொடர்ந்தது. இதன் மூலம் அரச நிதியிடல் தேவைப்பாடுகளை திரட்டுவதற்கு கூடுதலான சந்தைத் தூண்டல் நிலைமைகளுக்கு வசதியளிக்கப்பட்டது.

(ஈ) அதேவேளை, ப.நா.நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், மத்திய வங்கியுடன் தொடர்பான அரசிற்கான தேறிய கொடுகடன் இலக்குகளை அடைவதனை உறுதிப்படுத்துவதற்காக, இலங்கை மத்திய வங்கி வசமிருந்த திறைசேரி உண்டியல் சுமையினைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

(உ) நிதியத்தின் ஒவ்வொரு மூலங்களின் கீழுமான நடவடிக்கைகளின் சுருக்கமான அட்டவணை கீழே தரப்படுகிறது.

## உள்நாட்டுப் படுகடனை மேம்படுத்துகை நிகழ்ச்சித்திட்டம்

2023 மாச்சு 20ஆம் நாளன்று ஒப்புதலளிக்கப்பட்ட ப.நா.நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், முக்கிய குறிக்கோள்களிலொன்றாக இருந்த இலங்கையின் பொதுப்படுகடன் உறுதித்தன்மையினை பழைய நிலைக்கு கொண்டுவரும் நோக்குடன் நிதி அமைச்சு உள்நாட்டுப் படுகடனை மேம்படுத்துகை நிகழ்ச்சித்திட்டம் மீதான அதன் கொள்கையினை 2023 யூலை 4ஆம் நாள் அறிவித்தது. அது தொடர்பில், மற்றைய விடயங்களுடன் தகைமையுடைய உடமையாளர்களினால் வைத்திருக்கப்படும் திறைசேரி முறிகள், மத்திய வங்கி வசமுள்ள திறைசேரி உண்டியல்கள் இலங்கை அரசாங்கத்திற்கு மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட தற்காலிக முற்பணங்கள், தனிப்பட்ட முதலீட்டாளர்களினால் வைத்திருக்கப்படுபவை தவிர்ந்த இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் உள்நாட்டு சட்ட வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் வங்கிக் கடன்கள் என்பன ஏற்புடைத்தானவாறு நீண்ட கால திறைசேரி முறிகளுக்கு மாற்றப்பட வேண்டும்/ பரிவர்த்தனை செய்துகொள்ளப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது.

உள்நாட்டுப் படுகடனை மேம்படுத்துகை நிகழ்ச்சித்திட்டம் மத்திய வங்கியினால் பல்வேறு கட்டங்களில் நிறைவேற்றப்பட்டது. முதலில், ஐ.அ.டொலரில் குறித்துரைக்கப்பட்ட தகைமை வாய்ந்த இலங்கை அபிவிருத்தி முறிகள் ரூ.252.2 பில்லியன் பெறுமதி வாய்ந்த புதிய இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளுக்கு 2023 ஓகத்து 15ஆம் நாளன்று மாற்றப்பட்டதுடன், இலங்கை அபிவிருத்தி முறிகளின் கடந்த நிலுவை மீது சேரவேண்டிய ஒன்றுசேர்ந்த வட்டித்தொகை இலங்கை ரூபாவில் தீர்ப்பனவு செய்யப்பட்டது. இலங்கை அபிவிருத்தி முறிகளுக்காக வழங்கப்பட்ட செலாவணி விஞ்ஞாபனத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தீர்ப்பனவுகளுக்குப் புறம்பாக, நிதி அமைச்சு இலங்கை மத்திய வங்கியின் ஒத்துழைப்புடன் இலங்கை அபிவிருத்தி முறிகளின் எஞ்சியுள்ள உடமையாளர்களுக்காக தீர்ப்பனவுத் தேர்வொன்றினை மேற்கொண்டது. இதன் விளைவாக, 2023 நவெம்பர் இறுதியளவில் வெளிநின்ற இலங்கை அபிவிருத்தி முறிகள் என எதுவுமிருக்கவில்லை.

2023 செத்தெம்பர் 14ஆம் நாளன்று நிறைவேற்றப்பட்ட திறைசேரி முறி பரிவர்த்தனை ரூ.3,204.5 பில்லியன் பெறுமதியான திறைசேரி முறிகளைப் பரிவர்த்தனை செய்தமையின் மூலம் 12 புதிய திறைசேரி முறிகளின் மூலமாக 49 தகைமையுடைய முறிகள் பதிலீடு செய்யப்பட்டன. தனிப்பட்ட முதலீட்டாளர்கள் தகைமையுடைய முதலீட்டாளர்களிலிருந்து நீக்கப்பட்டதுடன் ஓய்வுகால நிதியங்கள் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட வரி ஊக்குவிப்பினூடாக பரிவர்த்தனையில் பங்கேற்பதற்கு ஊக்குவிக்கப்பட்டன. மத்திய வங்கிச் சட்டத்தின் பிரிவு 129(2)இற்கிணங்க, அரசாங்கத்திற்கான மத்திய வங்கியின் வெளிநின்ற கடனும் நியமிக்கப்பட்ட 2023 செத்தெம்பர் 15 திகதியிலுள்ளவாறு ஆரம்பச் சந்தையில் கொள்வனவு செய்யப்பட்ட வெளிநின்ற பிணையங்களும் ரூ.2,713.1 பில்லியனாக விளங்கியதுடன் இவை 2023 செத்தெம்பர் 21ஆம் நாளன்று, பத்து படிமுறைகளிலமைந்த நிலையான கூப்பன் புதிய திறைசேரி முறிகளுக்கும் 12 ஏற்கனவேயுள்ள திறைசேரி உண்டியல்களுக்கும் மாற்றப்பட்டன.

உள்நாட்டுப் படுகடனை மேம்படுத்துகை நிகழ்ச்சித்திட்டம் தற்போது இடம்பெற்று வருகின்ற இறைத்திரட்சிச் செய்முறையுடன் சேர்ந்து, நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலப்பகுதியில் ப.நா. நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்டவாறு, எதிர்பார்க்கப்பட்ட படுகடன் உறுதித்தன்மை இலக்குகளை எய்துவதனூடாகப் படுகடன் உறுதித்தன்யினை மீண்டும் அடைந்து கொள்வதற்கு பங்களிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, மத்திய வங்கி பொதுப்படுகடன் உறுதித்தன்மையினை மீண்டும்

அடைந்து கொள்ளும் அவர்களின் முயற்சிக்கு நிதியியல் மற்றும் சட்ட மதியுரையாளராக விளங்கி அரசாங்கத்திற்கு உதவுவதை தொடர்ந்தது.

## பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகமொன்றினை நிறுவுதல்

2022ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டதைப் போன்று, முக்கியமான நிறுவன ரீதியான சீர்திருத்தங்களிலொன்றாக சுயாதீனமான பொதுப்படுகடன் முகாமைத்துவ அலுவலகமொன்றினை நிறுவுவதனை அரசாங்கம் அடையாளம் கண்டிருந்தது. மேலும், 2023 மார்ச்சில் ப.நா.நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் இணங்கிக் கொள்ளப்பட்ட பொருளாதாரம் மற்றும் நிதியியல் கொள்கைகள் விஞ்ஞாபனத்தின்படி அரசாங்கம் பொதுப்படுகடன் முகாமைத்துவ அலுவலகமொன்றினை நிறுவுவதற்கு பொறுப்பாக்கப்பட்டது. இவ்வலுவலகம் (i) நிதி அமைச்சருக்கு அறிக்கையளிப்பதுடன் பொறுப்புக்கூற வேண்டியுமிருக்குமெனினும் கணிசமான தொழிற்பாட்டு சுயாதீனத்தினைக் கொண்டிருக்கும் (ii) நடுத்தர கால படுகடன் உபாயங்களையும் வருடாந்த கடன்பாட்டுத் திட்டங்களையும் வடிவமைப்பதன் மூலம் படுகடன் முகாமைத்துவத்திற்கான ஒட்டுமொத்த கொள்கைக்குப் பொறுப்பாக இருக்கும் என கருதப்படுகிறது அத்துடன் (iii) ஏல வெட்டு நேரம் தொடர்பான தீர்மானங்களை எடுப்பது உள்ளிட்ட வருடாந்த கடன்பாட்டுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதனை நெறிப்படுத்தும். பொதுப்படுகடன் முகாமைத்துவ அலுவலகம் நிறுவப்பட்டதும் அனைத்து உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சந்தையினை அடிப்படையாகக் கொண்ட நிதியியல் தீர்மானங்களையும் மேற்பார்வை செய்யுமெனவும் அனைத்துப் படுகடன்கள், பெறுதிகள் மற்றும் உத்தரவாதங்களை மதிப்பீடு செய்வதில் பங்கேற்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பில், பொதுப்படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தினை நிறுவுவதற்கான சட்டக் கட்டமைப்பு உட்பட ஒட்டுமொத்த அரச படுகடன் முகாமைத்துவத் தொழிற்பாடுகளையும் வழங்கக்கூடிய பொதுப்படுகடன் முகாமைத்துவச் சட்டம் இயற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. பொதுப்படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் வரைவிற்கான உள்ளீடுகளை மத்திய வங்கி வழங்கும் என்பதுடன் எதிர்பார்க்கப்படுகின்ற பொதுப்படுகடன் முகாமைத்துவ அலுவலகத்திற்கு ஏற்புடைத்தானவாறு அறிவாற்றல், நிபுணத்துவம் மற்றும் தொடர்பான காலப்பகுதியில் உட்கட்டமைப்பினை கட்டியெழுப்புதல் என்பன தொடர்பில் நிதி அமைச்சுடனான தொடர்புகளைத் தொடர்ந்தும் கொண்டிருக்கும்.

## அரச பிணையங்களின் உரித்துப் பதிவினைப் பேணுதல் மற்றும் அரச படுகடனைத் தீர்ப்பனவு செய்தல்

பத்திரங்களற்ற அரச பிணையங்களின் உரித்துப் பதிவு மத்திய வைப்பக முறைமையில் பதிவுசெய்யப்படுகின்றது. மத்திய வைப்பக முறைமையுடன் சேர்ந்த பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை லங்கா செகுயர் முறைமையினையும் உள்ளடக்கியிருக்கிறது. பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை அரச பிணையங்களின் முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களுக்கான தீர்ப்பனவு பணிகளை வழங்குகிறது. 2023 இறுதியிலுள்ளவாறு, மத்திய வைப்பக முறைமையில் பதிவுசெய்யப்பட்ட பத்திரங்களற்ற பிணையங்களின் மொத்த உடமைகள் முகப்புப் பெறுமதியில் ரூ.16,136.8 பில்லியனாக விளங்கி ரூ.4,092.5 பில்லியன் திறைசேரி உண்டியல்களையும் ரூ.12,044.4 பில்லியன் திறைசேரி முறிகளையும் உள்ளடக்கியிருந்தது. 2023 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட மத்திய வைப்பக முறைமைக் கணக்குகளின் உடமையாளர்களது எண்ணிக்கை 139,180 ஆகக் காணப்பட்டது. 2023 இறுதியில் லங்காசெகுயர் முறைமை 32 வணிகர் நேரடி பங்கேற்பாளர்களையும் (24 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், ஒரு உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி மற்றும் ஏழு முதனிலை வணிகர்கள்) மற்றும் மூன்று நேரடி பங்கேற்பாளர்களையும் உள்ளடக்கியிருந்தது. லங்காசெகுயர் முறைமையானது (i) இ-கூற்றுக்கள் (ii) அதேநேரத்தில் அறிவித்தல் மற்றும் (iii) நிகழ்நிலை முறையில் பார்த்துக் கொள்வதற்கான வசதி போன்ற அரச பிணையங்களின் முதலீடுகள் தொடர்பில் பல்வேறு பாதுகாப்புப் பண்புகளுக்கு வசதியளித்தது. அத்தகைய அனைத்து வசதிகளும் 2023இல் வெற்றிகரமாகத் தொடர்ந்தம் மேற்கொள்ளப்பட்டன.

2023ஆம் காலப்பகுதியில் ரூ.4,263,339 மில்லியன் தொகை கொண்ட மொத்தப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளுக்கு வசதியளிக்கப்பட்டது. இது ரூ.3,792,857 மில்லியன் மற்றும் ரூ. 470,482 மில்லியன் கொண்ட முறையே உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுகளை உள்ளடக்கியிருந்தது. இதில், வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுகள் 2022 ஏப்பிறல்

12ஆம் திகதியிடப்பட்ட வெளிநாட்டுப் பொதுப்படுகடனைத் தீர்ப்பனவு செய்வது தொடர்பான அரசாங்கத்தின் இடைக்கால கொள்கைகக்கு இசைவாக மேற்கொள்ளப்பட்டது. வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுப் படுகடனைப் பொறுத்தவரை மாற்று தீர்ப்பனவுப் பொறிமுறையும் நிதி அமைச்சினால் அறிவிக்கப்பட்ட உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை நிகழ்ச்சித்திட்டம் மீதான கொள்கையும் ஏற்புடைத்தானவாறு பின்பற்றப்பட்டன.

## 2023இல் படுகடன் முகாமைத்துவ முன்னெடுப்புக்களும் சந்தை அபிவிருத்திகளும்

**(அ) முதலாந்தர ஏலங்களில் முன்வைக்கப்படுகின்ற தொகைகளை முகாமைப்படுத்தல் மற்றும் போதுமான காசு தாங்கியிருப்பொன்றினை பேணுவதற்கு வசதியளித்தல்.** 2023இன் இறுதிப்பகுதியில், மத்திய வங்கி முன்கூட்டிய செயற்பாடு சார்ந்த விதத்தில் முதலாந்தர ஏலங்களில் முன்வைக்கப்படுகின்ற தொகைகளை முகாமைப்படுத்துவது மற்றும் போதுமான காசு தாங்கிருப்பொன்றினை பேணுவது தொடர்பில் நிதி அமைச்சுடன் ஒத்துழைப்பினை வழங்கி வருகிறது. இவ்வழிமுறைகள், மேம்பட்ட இறைச் செயலாற்றம் மற்றும் தாழ்ந்த பணவீக்க எதிர்ப்பார்ப்புக்கள் என்பனவற்றுடன் சேர்ந்து இடர்நேர்வு கட்டணங்களை கணிசமாகக் குறைப்பதற்கு உதவியதன் மூலம் அரசாங்கப் பிணையங்களின் விளைவு வீதங்களில் விரைவானதும் கணிசமானதுமான கீழ் நோக்கிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன. தேவையற்ற வட்டி வீத தளம்பல்களைத் தொடர்ச்சியாக கட்டுப்படுத்துவதற்கு காசுத் தாங்கிருப்பினைப் பேணுவது மேலும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுவதுடன் மத்திய வங்கி, தேவைப்படும் போது நிதி அமைச்சின் இம்முயற்சிக்கு வசதியளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**(ஆ) லங்காசெகுயர் இ-கூற்று வசதியை முன்னெடுத்தல்:** பங்கேற்பாளர்கள் அவர்களது வசதிக்கேற்ப அவர்களது கூற்றுக்களை வினைத்திறனுடனும் தீங்குகள் ஏதுமற்ற விதத்திலும் வழங்கும் விதத்தில் லங்காசெகுயர் காலாந்தரக் கூற்றுக்களை இ-கூற்று வசதிக்கு முழுமையாக மாற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

**(இ) முதனிலை வணிகர்களுடன் தனித்தனியான கூட்டங்களை முன்னெடுத்தல்:** குறிப்பாக, உள்நாட்டுப் படுகடனை மேம்படுத்தலுக்குப் பின்னர் படுகடன் முகாமைத்துவ உபாயங்களை வடிவமைப்பதில் சந்தை மனோபாவங்களையும் கண்ணோட்டங்களையும் மதிப்பிடுவதன் முக்கியத்துவத்தினை அங்கீகரிக்கின்ற விதத்தில் பொதுப்படுகடன் திணைக்களம் முதனிலை வணிகர்களுடன் தனித்தனியான கூட்டங்களை நடத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டது. வாடிக்கையாளர்களுடனான ஒவ்வொரு முதனிலை வணிகர்களுடனான வணிகத்தில் குறித்துரைக்கப்பட்ட முறைமைகள்/ தொழிற்பாடுகள் நடைமுறையில் இருந்ததுடன், மற்றைய விடயங்களுடன் ஏனைய சந்தை அபிவிருத்தி முன்னெடுப்புக்களும் இக்கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டன.

**(ஈ) வலைத்தளத்தை அடிப்படையாகக் கொண்ட திறைசேரி உண்டியல் வழங்கல் முறைமை மற்றும் திறைசேரி முறிகளுக்கான வலைத்தளத்தை அடிப்படையாகக் கொண்ட நேரடி வழங்கல் நிலையம் என்பனவற்றை நிறைவேற்றுதல்:** பிரயோகிக்கத்தக்க பணிப்புரைகள் வெளியிடப்பட்டமையுடன், மத்திய வங்கி, திறைசேரி உண்டியல்களுக்காக வலைத்தளத்தை அடிப்படையாகக் கொண்ட திறைசேரி உண்டியல் வழங்கல் முறைமையினையும் திறைசேரி முறிகளுக்கான வலைத்தளத்தை அடிப்படையாகக் கொண்ட நேரடி வழங்கல் நிலையத்தினையும் முறையே 2023 யூன் 21 இலும் 2023 செத்தெம்பர் 20 இலும் அறிமுகப்படுத்தியது.

## முன்னோக்கிப் பயணித்தல்

எதிர்பார்க்கப்படுகின்றவாறு வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்பினை நேரகாலத்துடன் நிறைவுசெய்வது சாதகமான இறைத் தோற்றப்பாட்டினையும் முதலீட்டாளர் மனோபாவத்தினையும் வலுப்படுத்தும். இதன் மூலம் உள்நாட்டுச் சந்தையில் ஏற்படும் கசிவுத்தாக்கங்கள் விளைவு வீதங்களில் மேலும் கீழ் நோக்கிய சீராக்கங்கள் ஏற்பட வழிவகுக்கும். இறைத் துறையில், குறிப்பாக, அரசிறைச் சேகரிப்பு தொடர்பில் காணப்படும் சாதகமான அபிவிருத்திகளைக் கவனத்திற் கொள்கையில் நிதியிடல் தேவைப்பாடுகள் ஒப்பீட்டு ரீதியில் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதுடன், இதற்கேற்றவாறு திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளை வழங்குகின்ற ஏற்பாடுகள் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரச பிணையங்களுக்கான இரண்டாந்தரச் சந்தையின் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்யும் பொருட்டு முதலாந்தர வழங்கல்களில் புதிய மாறபடுகின்ற மற்றும் பல்வேறு படிநிலை

கூப்பன் திறைசேரி முறிகளுடன் சேர்ந்த ஏற்கனவேயுள்ள முறிகளினை வழங்குவது தொடர்பிலான சாத்தியங்களைக் கண்டறிவதற்கான வழிமுறைகள் நடைமுறைக்கிடப்பட்டுள்ளன. அதேவேளை, பொதுப்படுகடன் முகாமைத்துவச் சட்டத்தினை நேரகாலத்துடன் இயற்றுதல் குறிப்பிடத்தக்களவு தொழிற்பாட்டுச் சுயாதீனத்துடன் எதிர்பார்க்கப்பட்ட படுகடன் முகாமைத்துவ அலுவலகம் நிறுவப்படுவதற்கு வழிவகுக்கும் என்பதுடன் அத்தகைய பொதுப்படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தினூடாக முழுமையான படுகடன் முகாமைத்துவ அணுகுமுறையினை மேற்கொள்வது, படுகடன் முகாமைத்துவப் பக்கத்தில் அவதானிக்கப்பட்ட அண்மைய நேர்க்கணிய அபிவிருத்திகளை ஒன்றுதிரட்டிக் கொள்வதற்கும் முன்னோக்கிப் பயணிக்கும் விதத்தில் பொதுப்படுகடனில் விரும்பத்தக்க உறுதித்தன்மையினை எய்துவதற்கம் மிக இன்றியமையாததாகும்.

# ஊழியர் சேமலாப நிதியம்

1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைய ஊழியர் சேமலாப நிதியத்தின் பொதுவான நிர்வாகமானது தொழில் ஆணையாளருக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதேவேளை நிதியத்தின் முகாமைத்துவம், கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் மீதான அனைத்தையுமுள்ளடக்கிய அதிகாரம் தற்போதய இலங்கை மத்திய வங்கிச் சட்டத்திற்கமைவாக இலங்கை மத்திய வங்கியாக அங்கீகரிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் உரித்தளிக்கப்பட்டுள்ளது. மத்திய வங்கியானது நிதியத்தின் கட்டுக்காவலராகப் பணியாற்றி அதன் செயல்திறன்வாய்ந்த தொழிற்பாட்டை உறுதிசெய்வதில் முக்கிய பங்காற்றுகின்றது.

ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் பிரகாரம் மத்திய வங்கியினால் பொறுப்பளிக்கப்பட்ட பொறுப்புக்களை ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம் நிறைவேற்றுகின்றது. அதன் முதன்மைப் பொறுப்புக்களானவை ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் கீழ் பங்களிப்புக்களாக, மிகைக் கட்டணங்களாக, கட்டணங்களாக அதேபோன்று நாணய முதலீடுகளிலிருந்தான வருமானமாக செலுத்தப்படுகின்ற அனைத்துத் தொகைகளையும் பெற்றுக்கொள்வதை உள்ளடக்குகின்றது. நிதியத்தின் பணத்தொகைகளை கட்டுக்காவலில் வைத்திருத்தல், ஒவ்வொரு உறுப்பினருக்குமென வேறான கணக்குகளைப் பேணுதல் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு உரித்தான நலன்களை தொழில் ஆணையாளரினால் சான்றுபடுத்தப்பட்ட தனிப்பட்டவர்களுக்குச் செலுத்துதல் ஆகிய பணிகள் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக, உடனடியாகத் தேவைப்படாத நிதியத்தின் பணத் தொகைகளை முதலிடுதல், கணக்குகளின் ஏடுகளைப் பேணுதல், நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்தல், தொழிலுக்குப் பொறுப்பான அமைச்சருக்கு நிதியியல் கூற்றுக்களின் பிரதியொன்றை அனுப்புதல் அத்துடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதனைச் சமர்ப்பித்தல் என்பனவும் அதன் பொறுப்பாகும்.

## நிதியத்தின் பொதுக் கணக்குகளையும் உறுப்பினர் கணக்குகளையும் பேணுதல்

நிதியத்தின் மொத்தப் பெறுமதி 2023 இறுதியிலுள்ளவாறு ரூ.3,857.4 பில்லியன் தொகையாகவிருந்து பிரதானமாக முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து ஈட்டப்பட்ட வருமானத்தின் காரணமாக 2022 இறுதியில் பதிவாகிய ரூ.3,459.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 11.5 சதவீத அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. உறுப்பினர்களுக்கான மொத்தப் பொறுப்பானது (உறுப்பினர் நிலுவைகள்) 2022 இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூ.3,380.6 பில்லியனிலிருந்து 12.9 சதவீத அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்து, 2023 இறுதியில் ரூ.3,817.9 பில்லியனை எட்டியது.

## பங்களிப்புக்களை பெற்றுக்கொள்ளலும் நன்மைகளைச் செலுத்துதலும்

2023இல், மொத்த உறுப்பினர் பங்களிப்புக்கள், 2022இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.194.6 பில்லியனிலிருந்து ரூ.210.6 பில்லியனுக்கு 8.2 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேபோன்று, உறுப்பினர்களுக்கும் அவர்களின் சட்டபூர்வ பின்னுரித்தாளர்களுக்கும் செலுத்தப்பட்ட மொத்த மீளளிப்புக்களும் 2022இல் ரூ.163 பில்லியனிலிருந்து ரூ. 215.9 பில்லியனாக 32.4 சதவீதத்தினால் கணிசமமாக அதிகரித்தன. அதற்கமைய, தேறிய பங்களிப்பானது 2022 இல் பதிவுசெய்யப்பட்ட சாதகமான ரூ.31.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023இல் ரூ.5.3 பில்லியன் கொண்ட எதிர்மறைப் பெறுமதியினைப் பதிவுசெய்தது.

**நிதியத்தின் தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய தகவல்கள்**

| விடயம் | 2022 | 2023 (அ) | மாற்றம் (%) |
|---|---|---|---|
| நிதியத்தின் மொத்தப் பெறுமதி (ரூ. பில்.) | 3,459.9 | 3,857.4 | 11.5 |
| உறுப்பினர்களின் மொத்தப் பொறுப்பு (ரூ. பில்) | 3,380.6 | 3,750.7 | 12.9 |
| மொத்தப் பங்களிப்புக்கள் (ரூ. பில்) | 194.6 | 210.6 | 8.2 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ. பில்) | 163.0 | 215.9 | 32.4 |
| தேறிய பங்களிப்புக்கள் (ரூ. பில்) | 31.6 | (5.3) | (116.8) |

(அ) தற்காலிகமானவை

*மூலம்:* ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## நிதியத்தின் முதலீட்டுச் செயற்பாடுகள்

2023ஆம் ஆண்டுமுழுவதும், தாபிக்கப்பட்ட ஆளுகைக் கட்டமைப்பினுள் நீண்டகால சாதகமான உண்மை ஆதாயங்களை வழங்கும் அதேவேளை உறுப்பினர் பங்களிப்பின் பாதுகாப்பினை உறுதிசெய்கின்ற குறிக்கோள் மூலம் வழிநடாத்தப்பட்டு ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம் அதன் நிதி முகாமைத்துவ நடவடிக்கையை விழிப்புக் கவனத்துடன் கொண்டுநடாத்தியது. 2023 இறுதியிலுள்ளவாறு மொத்தமாக ரூ.3,867.6 பில்லியன் கொண்ட முதலீட்டுச் சொத்துப்பட்டியலானது அரசாங்கப் பிணையங்களில் 96.2 சதவீதத்தினையும், உரிமை மூலதனத்தில் 2.7 சதவீதத்தினையும் நிறுவனத் தொகுதிக் கடன்களில் 0.4 சதவீதத்தையும் நேர்மாற்றுக் கொள்வனவு உடன்படிக்கைகளில் எஞ்சிய 0.7 சதவீதத்தையும் உள்ளடக்கியிருந்தது.

## உறுப்பினர் நிலுவைகளுக்கான வட்டிக் கொடுப்பனவு

2023இல், ஈட்டிய வருமானத்தையும் ஏனைய எதிர்பாராப் பொறுப்புக்களின் இற்றைப்படுத்தப்பட்ட நிலையையும் கருத்திற்கொண்டு, தொழிலுக்குப் பொறுப்பான அமைச்சரினதும் நிதிக்குப் பொறுப்பான அமைச்சரினதும் அனுமதிக்குட்பட்டு அவர்களின் ஆண்டு இறுதி மீதிகள் மீது ஊ.சே.நிதிய உறுப்பினர்களுக்கு பொருத்தமான வட்டி வீதத்தினை வழங்கும்.

## உறுப்பினர் கணக்குக் கூற்றுக்களை வழங்குதல்

ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகி உரிய தொழில்தருநர்களூடாக அவர்களின் கணக்குகளின் கொடுக்கல்வாங்கல் விபரங்களைத் தொடர்பூட்டி, பங்களிக்கின்ற உறுப்பினர்களுக்கு உறுப்பினர் கணக்குக் கூற்றுக்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதற்கமைய, 2022இன் முதல் மற்றும் இரண்டாம் அரையாண்டுகளுடன் தொடர்புடைய உறுப்பினர் கணக்குக் கூற்றுக்கள் 2023 காலப்பகுதியில் விநியோக்கிக்கப்பட்டன.

**உறுப்பினர் கணக்குக் கூற்றுக்களை வழங்குதல்**

| காலப்பகுதி | தொழில்தருநர்களின் எண்ணிக்கை | கூற்றுக்களின் எண்ணிக்கை (செயற்படுகின்ற உறுப்பினர்கள்) |
|---|---|---|
| 2022 முதலரையாண்டு | 63,831 | 2,176,751 |
| 2022 இரண்டாமரையாண்டு | 72,000 | 2,579,208 |

*மூலம்:* ஊ.சே.நி. திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## நிதியத்தின் ஆண்டு நிதியியல் கூற்றுக்களை வெளியிடுதல்

ஊழிய சேமலாப நிதியத்தின் 2022இற்கான நிதியியல் கூற்றுக்கள் கணக்காய்வாளரின் அறிக்கை கிடைக்கப்பெற்றதையடுத்து அதன் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

## உறுப்பினர்களுக்கும் ஏனைய பங்குதாரர்களுக்கும் சேவைகளை வழங்குதல்

ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம், அதன் உறுப்பினர்களினதும் வேறு பங்குதாரர்களினதும் கோரிக்கைகளை நிறைவுசெய்வதற்கு 2023இல் மிகவும் வினைத்திறனாகவும் செயல்திறனாகவும் தொடர்ந்தும் அதன் சேவைகளை வழங்கியது.

### வீடமைப்பு கடன்களை வசதிப்படுத்துவதற்கு உத்தரவாதச் சான்றிதழ்களை வழங்குதல்

ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம், 2023இல் நிதியத்தின் உறுப்பினர்கள் சார்பில் 13,784 கடன் உத்தரவாதச் சான்றிதழ்களை வழங்கி ரூ.10,240 மில்லியன் தொகையை பங்கேற்கின்ற கடன்வழங்கும் நிறுவனங்களிடமிருந்து வீடமைப்புக் கடன்களாகப் பெற்றுக்கொள்வதற்கு அவர்களை இயலச்செய்தது, மேலும், தொடர்புடைய உறுப்பினர் கணக்குகளிலிருந்து ஏறத்தாழ ரூ.4,236 மில்லியன் கழிக்கப்பட்டு 2022ஆம் ஆண்டிற்காக நிலுவையாகவிருந்த கடன்களைத் தீர்ப்பனவுசெய்வதற்கு 2023இல் பங்கேற்கின்ற கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டது.

### ஓய்வுபெறுவதற்கு முன்னரான மீளளிப்புத் திட்டம்

2015 யூலை 01 தொடக்கம் தொழிற்பாட்டு வந்த உறுப்பினர் மீதியிலிருந்து 30 சதவீத மீளெடுத்தலைக் கொண்ட ஓய்வுக்கு முந்திய நலத்திட்டத்தின் கீழ் 2023 ஆண்டு காலப்பகுதியில் 42,603 உறுப்பினர்களுக்காக மொத்தமாக ரூ.25.8 பில்லியன் விடுவிக்கப்பட்டது.

### பதிவுத் திருத்தங்கள்

2023ஆம் ஆண்டில், ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம் உறுப்பினர் கணக்குகளுடன் தொடர்புடைய ஏறத்தாழ 105,627 ஊழியர் சேமலாப நிதியப் பதிவுத் திருத்தங்களைச் செயன்முறைப்படுத்தியது. குறிப்பாக இத்திருத்தங்கள் மத்தியில் 97,998 திருத்தங்கள் பெயர்/தேசிய அடையாள அட்டையுடன் தொடர்புடையதாகவிருந்ததுடன் 7,629 திருத்தங்கள் கணக்கு மீதானவையாக அமைந்திருந்தன. திருத்தங்களுக்காக பிரதேச அலுவலகங்களூடாகக் கிடைக்கப்பெற்ற 23,571 கோரிக்கைகளைக் கொண்ட கணிசமானளவினை இது உள்ளடக்கியிருந்தது.

### விசாரணைகளைக் கையாளுதல்

ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் பொதுமக்கள் தொடர்புகள் மற்றும் விசாரணைகள் கருமபீடம், வருகைதருகின்ற உறுப்பினர்களின்/தொழில்தருநர்களின் சேவைக் கோரிக்கையினை நிறைவுசெய்து, நிதியத்தின் அனைத்துப் பங்குதாரர்களுக்கும் பெறுமதிவாய்ந்த சேவையினை வழங்கியுள்ளதுடன் தொலைபேசி, அஞ்சல், மின்னஞ்சல் வாயிலாகச் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து வேறு கோரிக்கைகளுக்கும் பதிலளித்தது.

## பங்குதாரர்கள் மத்தியில் ஊழியர் சேமலாப நிதியச் செயற்பாடுகள் பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்துதல்

பங்குதரர்கள் மத்தியில் ஊழியர் சேமலாப நிதியச் சேவைகள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதற்கு 2023இல் திணைக்களம் பல நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடுசெய்தது. தொழில் திணைக்களத்துடனான கூட்டிணைப்புடன் இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சம்மேளம் வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு போன்ற நிறுவனங்களுடனான ஒத்துழைப்புடன் இடம்பெற்ற நடமாடும் சேவைகள் மற்றும் பொதுமக்கள் கண்காட்சிகள் என்பவற்றை இம்முயற்சிகள் உள்ளடக்கியிருந்தன. மேலும், சுரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள், காணொளி நறுக்குகள் மற்றும் எடுத்துரைப்புக்கள் உள்ளடங்கலாக பல்வேறு வகையான தொடர்பூட்டல் ஊடகங்கள் வாயிலாக தொழில்தருநர்கள், உறுப்பினர்கள், வேறு பங்குதாரர்கள் போன்றோருக்கான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் தேவைக்கேற்றவாறு அமைக்கப்பட்டிருந்தன.

## 2023இல் எதிர்கொண்ட சவால்கள்

2023இல், ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம் நாட்டிற்கான படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையைச்

ஊழியர் சேமலாப நிதியத்தினால் உறுப்பினர்களுக்கும் ஏனைய ஆர்வலர்களுக்கும் சேவைகளை வழங்குதல் - 2023



சூழ்ந்திருந்த நிச்சயமின்மைகளுக்குப் பதிலிறுத்தி அரசாங்கப் பிணையங்களில் குறிப்பாக திறைசேரி உண்டியல்களில் முதலீடுகளை முன்னுரிமைப்படுத்துவதன் மூலம் சவால் மிக்க சந்தை நிலைமைகளூடாகப் பயணித்தது. உரிமை மூலதனச் சந்தைகளில் தீவிரமடைந்த தளம்பல்களைக் கவனத்திற்கொண்டு, உரிமை மூலதன முதலீடுகள் தொடர்பில் எச்சரிக்கைமிக்க அணுகுமுறையொன்று பின்பற்றப்பட்டது. பாதகமான பேரண்டப் பொருளாதார நிலைமைகள் நிறுவனத் தொகுதிக் கடன்களில் மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புக்களுக்கு வழிவகுத்தன.

2023 யூலை 04 அன்று, இரு மாற்றுவழிகளை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு வழங்கி அரசாங்கத்தின் உள்நாட்டு பொதுப்படுகடன் மேம்படுத்துகை உபாயத்தை நிதியமைச்சு அறிவித்தது. முதலாவது தெரிவின் கீழ், ஊழியர் சேமலாப நிதியம் 2027 மற்றும் 2038 இற்கிடையில் முதிர்ச்சியடைகின்ற 12 புதிய தொடர்களுக்கு அதன் ஏற்கனவே காணப்படுகின்ற திறைசேரி முறிகளின் குறைந்தபட்ச வேண்டப்பட்ட தொகையினைப் பரிமாற்றுவதற்கான வாயப்பினைக் கொண்டிருந்தது. இப்பரிமாற்றமானது திறைசேறி முறி சொத்துப் பட்டியலிலிருந்து பெறுவிக்கப்படுகின்ற அதன் வரிவிதிக்கத்தக்க வருமானத்தின் மீது ஆண்டிற்கு 14 சதவீத வருமான வரிக்கு ஊழியர் சேமலாப நிதியத்தை உட்படுத்தும். மாற்றுவழியாக ஊழியர் சேமலாப நிதியமானது ஏற்கனவே காணப்படும் அதன் திறைசேரி முறிகளை பரிமாற்றாதிருப்பதற்குத் தெரிவுசெய்யுமாயின் அதன் திறைசேரி முறி சொத்துப்பட்டியலிலிருந்து ஈட்டப்படுகின்ற வரிவிதிக்கத்தக்க வருமானத்திற்கு நிலையான 30 சதவீத வரி ஏற்புடையதாகவிருக்கும். இத்தெரிவுகளை கவனமாக பரிசீலித்ததன் பின்னர் ஊழியர் சேமலாப நிதியத்தின் கட்டுக்காவலராகச் செயற்பட்டு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை படுகடன் பரிமாற்ற முன்னறிவிப்பை அநுசரிப்பதற்குத் தெரிவுசெய்தது. படுகடன் பரிமாற்றத்திற்காக திறைசேரி முறிகளின் ரூ.2,667.5 பில்லியன் முகப்பெறுமதியினை ஊழியர் சேமலாப நிதியம் முன்வைப்பதை ஈடுபடுத்துகின்ற நீண்டகால நோக்கு மற்றும் நிதியத்தின் உறுப்பினர்களின் சிறந்த நலன் என்பவற்றைக் கொண்டு இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

ஊழியர் சேமலாப நிதியத்தின் சொத்துக்கள் ரூ.3.9 றில்லியனை அண்மித்ததினால் நிதியத்தின் அளவு தொடர்புபட்ட சவால்கள் செயல்திறன்வாய்ந்த பன்முகப்படுத்தலை விசேடமாக சிறிய மற்றும் நடுத்தர திரவச் சந்தைகளில் செயல்திறன்வாய்ந்த பன்முகப்படுத்தல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. சாதகமான போக்கில், பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் உட்கட்டமைப்பு முறிகளின் வழங்கலையும் பட்டியலிடலையும் வசதிப்படுத்தி ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்றினை அனுமதித்துள்ளது. போதுமான வெளிப்படைத்தன்மைச் செயன்முறையுடன் மற்றும் நீண்டகால முதலீட்டு வாய்ப்புடன் அத்தகைய முதலீட்டு உற்பத்திகளை உருவாக்கியமை ஊழியர் சேமலாப நிதியம் அதன் முதலீட்டுச் சொத்தப்பட்டியலை செயல்திறன்வாய்ந்த விதத்தில் இயலளவை தோன்றுவிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, ஊழியர் சேமலாப நிதியம் அதிகரித்த செயற்பாட்டு அளவுகளை குறிப்பாக மீளளிப்புக் கோரிக்கைகள், உறுப்பினர் விசாரணைகள், வளத்தடங்கல்களுக்குள் சேவையினை வினைத்திறன் மிக்கவாறு பேணுவதற்கான வழிமுறைகளுக்கு முனைதல் என்பவற்றை அவதானிக்கின்றது.

## முன்னோக்கிப் பயணித்தல்

அதிகரித்த பணி அளவுகள், உறுப்பினர் கணக்குகள் மற்றும் அறிக்கையிடும் தேவைப்பாடுகள் என்பவற்றைக் கையாளுவதற்கு தொழில்நுட்பத்தை ஏற்பதற்கும் அதிலிருந்து பயன்பெறுவதற்கும் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம் எதிர்பார்க்கின்றது. உறுப்பினர் பங்களிப்புக்கள் மற்றும் தனிப்பட்டவர் விபரங்கள் என்பவற்றைச் சேகரிப்பதற்கு டிஜிட்டல்மயப்படுத்தப்பட்ட/இலத்திரனியல் முறைகளை நடைமுறைப்படுத்தல், தேசிய அடையாள அட்டை உறுதிப்படுத்தல் ஊடாக தனித்துவமான அடையாள முறைமையொன்றினைப் பேணுவதற்கு ஊழியர் சேமலாப நிதிய உறுப்பினர்களை மீளப் பதிவுசெய்தல், ஒருங்கிணைக்கப்பட்ட தகவல்தொழில்நுட்பத் தீர்வினை வசதிப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்படும் தகவல்தொழில்நுட்ப தீர்வுகளை மறுசீரமைத்தல் ஆகியவற்றை முக்கிய கவனத்துறைகள் உள்ளடக்குகின்றன.

நிதி அமைச்சர் என்ற வகையில் சனாதிபதியின் கட்டளையின்படி இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவு 2006ம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடும் சட்டத்தின் நோக்கத்திற்கான நிதியியல் உளவறிதல் பிரிவாக குறித்துரைக்கப்பட்டுள்ளது.

2007இலிருந்து இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு இலங்கை மத்திய வங்கியின் நிர்வாக கட்டமைப்பின் கீழ் தனது நியதி அதிகாரங்களையும் கட்டுப்பாடுகளையும் வினைத்திறனாக நிறைவேற்றுகின்ற ஒரு சுயாதீன திணைக்களமாக தொழிற்படுகின்றது.

## தகவல் பகுப்பாய்வு மற்றும் உளவறிதல் முகாமைத்துவம்

2023 காலப்பகுதியில் நிதியியல் உளவறிதல் பிரிவு அதன் அறிக்கையிடும் நிறுவனங்களிடமிருந்தும் பொதுமக்களிடமிருந்தும் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளைப் பெற்றுக்கொண்டது. சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் மேலதிக விசாரணைகளுக்காக சட்ட அமுலாக்கல் முகவராண்மைகளுக்கும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரிகளுக்கும் ஆற்றுப்படுத்தப்பட்டன். நிதியியல் உளவறிதல் பிரிவு 2023 காலப்பகுதியில் 1,369 சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளைப் பெற்றுக்கொண்டதுடன் அவற்றில் 236 சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் சட்ட அமுலாக்கல் முகவராண்மைகளுக்கும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரிகளுக்கும் மேலதிக விசாரணைகளுக்காக ஆற்றுப்படுத்தப்பட்டன.

## நிதிசார் தரவு முகாமைத்துவம்

நிதியியல் உளவறிதல் பிரிவானது அறிக்கையிடும் அதிகாரிகளிடமிருந்தும் அடிப்படை அளவிற்கு மேலான அறிக்கைகளை அறிக்கைகளை பெறுகின்றது. 2023ஆம் ஆண்டு முழுவதும் ‘goAML’ அறிக்கையிடும் முறைமையூடாக குறித்துரைக்கப்பட்ட அடிப்படை அளவிற்கு மேல் 5.4 மில்லியன் (தற்காலிக) காசுக் கொடுக்கல்வாங்கல்கள், 13.4 மில்லியன் (தற்காலிக) இலத்திரனியல் நிதிய மாற்றல்கள், 0.5 மில்லியன் (தற்காலிக) சர்வதேச நிதிய மாற்றல்கள் என்பவற்றை அறிக்கையிடும் நிறுவனங்கள் அறிக்கையிட்டன.

## இடர்நேர்வு அடிப்படையில் அமைந்த பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மேற்பார்வை

நிதியியல் உளவறிதல் பிரிவானது நிதியியல் நிறுவனங்கள் குறித்துரைக்கப்பட்ட, நிதியல்லா வணிகங்கள் மற்றும் தொழில்கள் போன்ற அறிக்கையிடும் நிறுவனங்கள் மீதான பரீட்சிப்புகளை நடாத்துகின்றது. இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு அல்லது ஒரு சட்ட அமுலாக்கள் முகவராண்மையினால் எதிர்பார்க்கப்படட ஏதேனும் விசாரணைகளை வசதிப்படுத்துவதாகும். இணங்குவித்தலை அமுலாக்குவதுமான செயற்பாடுகளை எடுப்பதற்கு நிதியியல் உளவறிதல் பிரிவு ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரிகள் மற்றும் அறிக்கையிடும் நிறுவனங்களுடன் கூட்டிணைகின்றது. 2023 காலப்பகுதியில் நிதியியல் நிறுவனங்கள் மீது நிதியியல் உளவறிதல் பிரிவு 23 தளத்திலான பரீட்சிப்புக்களையும் ஆறு தளத்திலான உடனடிப் பரீட்சிப்புக்களையும் ஒரு தளத்திற்கு வெளியிலான உடனடிப் பரீட்சிப்புக்களையும் 4 கருப்பொருள் சார்ந்த மீளாய்வுகளையும் நடாத்தியது.

## தேசிய பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வு மதிப்பீடு

பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் மீதான நாட்டின் இரண்டாவது தேசிய இடர்நேர்வு மதிப்பீடு 2021/2022 காலப்பகுதியில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டு 2023இல் நிறைவுசெய்யப்பட்டது. இலங்கை எதிர்கொள்கின்ற மிகமுக்கியமான பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் அச்சுறுத்தல்கள், பாதிக்கப்படும் தன்மைகள் மற்றும் இடர்நேர்வுகளை எடுத்துக்காட்டுகின்ற தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டின் மட்டுப்படுத்தப்பட்ட விடய அறிக்கை 2021/2022 நிதியியல் உளவறிதல் பிரிவின் வலைததளத்தில் வெளியிடப்பட்டது. தேசிய இடர்நேர்வு மதிப்பீடு 2021/2022இல் கண்டறியப்பட்டவைகளின் அடிப்படையில் 2023-2028 இற்கான நாட்டின் தேசிய பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கொள்கை அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்டது.

## பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மீதான தேசிய ஒருங்கிணைப்பு குழுவிற்கும் அமைச்சரவை நியமித்த செயலணிக்குமான செயலகம்

இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு இலங்கைக்கான பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கட்டமைப்பிக்கான ஆலோசணை அமைப்பான தேசிய ஒருங்கிணைப்பு குழுவிற்கான செயலகமாக தொழிட்படுகின்றது. தேசிய ஒருங்கிணைப்பு குழு பிரதான பங்குதாரர்களிடமிருந்து பிரதிநிதிகளை உள்ளடக்குகின்றது. இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு 2023 திசெம்பரிலிருந்து பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலின் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட செயலணிக் குழுவிற்கான செயலகமாகவும் தொழிற்படுகின்றது. செயலணிக் குழு 2025இல் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலின் பரஸ்பர மதிப்பீட்டிற்கான தயாா்படுத்தல்களின் 24 பங்குதாரர்களின் அமைச்சரவையினால் அனுமதியளிக்கப்படட நடவடிக்கை திட்டங்களின் முன்னேற்றங்களை மதிப்பீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

2023இல், நிதியியல் உளவறிதல் பிரிவு, தொடர்புடைய துறைகள் மற்றும் முகவர்களுக்காக விசேடமாக இரண்டாவது தேசிய இடர்நேர்வு மதிப்பீடு, தேசிய பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கொள்கை என்பவற்றின் பெறுபேறுகள் தொடர்பில் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் இணங்குவித்தல், சட்டக் கட்டமைப்பு, தடைசெய்யப்பட்ட திட்டங்கள் (பிரமிட்) மோசடிகள், கிறிப்டோ நாணய விசாரணைகள், பழயுஆடு முறைமைத் தொழிற்பாடுகள் மற்றும் வலைத்தள அறிக்கையிடல் போன்ற முக்கிய துறைகளை மையப்படுத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியதுடன் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு அமர்வுகளையும் நடாத்தியது.

## முன்னோக்கிப் பயணித்தல்

பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான 2025 மாச்சில் பரஸ்பர மதிப்பீட்டிற்கான இலங்கையின் ஆயத்தநிலையினைத் தொடர்ந்து நிதியியல் உளவிறதல் பிரிவு - இலங்கை ஆர்வலர் அடிப்படையிலான நடவடிக்கைத் திட்டங்களின் நடைமுறைப்படுத்தலை இணைக்கிறது. இது தொடர்பில், தேசிய இடர்நேர்வு மதிப்பீடு நாட்டின பணம் தூ யதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வு தோற்றப்பாட்டினைப் பிரதிபலிக்கும் விதத்தில் இற்றைப்படுத்தப்படவுள்ளதுடன் தேசிய பணம் தூ யதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் இடர்நேர்வு தோற்றப்பாட்டினைப் பிரதிபலிக்கும் விதத்தில் இற்றைப்படுத்தப்படவுள்ளதுடன் தேசிய பணம் தூ யதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்த ல் கொள்கை நடைமுறைக்கிடப்படும். நிதியியல் உளவறிதல் பிரிவு - இலங்கை, இதன் தொழிற்பாடுகளுடன் தொடர்புபடுகின்ற முதன்மைச் சட்டங்களுக்காக அதாவது 2006ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல், 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் மற்றும் 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாதத்தினை ஒடுக்கிவிடுதல் மீதான சமவாயச் சட்டம் என்பனவற்றிற்கு முன்மொழிந்த திருத்தங்களை நிறைவுசெய்ய எதிர்பார்க்கிறது. சட்டவாக்கத் திருத்தங்கள் மிகுந்த பொருத்தத்தினைக் கொண்டனவாகவும் மனதை மாற்றக்கூடிய அறிவுரை நிரம்பியவையாகவும் இருக்கும் விதத்தில் தடைகளின் அமைப்பு வலுப்படுத்தப்படும். பரிணாமமடைந்து வரும் பன்னாட்டு பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் நியமங்களுடன் இசைந்துசெல்லும் விதத்தில் நிதியியல் உளவறிதல் பிரிவு மற்றைய தொடர்பான நியதிச் சட்டங்களைத் திருத்துவதற்கும் அவற்றை புதிய சட்டவாக்கங்களுக்கு – 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம், 1917ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க நம்பிக்கை பொறுப்புக் கட்டளைச் சட்டம், உத்தேச சூதாட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைச் சட்டமூலம், குற்றவியல் சட்ட விசாரணைகளுக்கான உத்தேச சட்ட மூலம் மற்றும் 2014ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க கட்டுமான கைத்தொழில் அபிவிருத்திச் சட்டம் என்பனவற்றிற்குக் கொண்டு வருவதற்கும் உதவி வருகின்றது. மேலும், நிதியியல்

உளவறிதல் பிரிவு - இலங்கை நடவடிக்கை எடுக்கத் தகுந்த உளவறிதலை உருவாக்குவதற்காக தொழிற்பாட்டு ரீதியானதும் உபாய ரீதியானதுமான பகுப்பாய்வுகளைத் தொடர்ந்தும் மேற்கொள்ளும். மேலும் நிதியியல் உளவறிதல் பிரிவு - இலங்கை அறிக்கையிடும் நிறுவனங்களின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் இணங்குவிப்புக் கடப்பாடுகள் பூர்த்தி செய்யப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக, அறிக்கையிடும் நிறுவனங்கள் மீது இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வையினை மேற்கொள்ளும்.

# இடர்நேர்வு முகாமைத்துவமும் இணங்குவித்தலும்

இயக்கவாற்றல்மிக்க மத்திய வங்கித் தொழில் தோற்றவமைப்பில் செயல்திறன்வாய்ந்த இடர்நேர்வு முகாமைத்துவம், இணங்குவித்தல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பன உறுதிப்பாட்டினதும் கொள்கை ரீதியான ஆற்றல்தன்மைக்கும் அடித்தளமொன்றினை உருவாக்குகின்றன. அதற்கமைய, இடர்நேர்வு முகாமைத்துவம், இணங்குவித்தல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு நடத்தைகளின் அதிஉயர் தரநியமங்களை நிலைநிறுத்துவதற்கு மத்திய வங்கி அர்ப்பணித்துள்ளது. இணங்குவித்தல் வழிமுறைகள் மற்றும் தாக்குப்பிடிக்கத்தக்க உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றுடன் ஒன்றிணைந்து இடர்நேர்வுகளை இனங்கண்டு, மதிப்பிட்டு தணிப்பதற்கான செலுாக்கமிக்க அணுகுமுறையொன்றினூடாக மத்திய வங்கியானது வெளிப்படைத் தன்மையினை உறுதிசெய்து பொதுமக்களின் நம்பிக்கையையும் நம்பகத்தன்மையினையும் பேணி பங்குதாரர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கு முனைகின்றது. மேலும், ஆளுகை, இடர்நேர்வு மற்றும் இணங்குவித்தல் தோற்ற அமைப்பில் இயலளவுகளை அதிகரிப்பதை நோக்காகக் கொண்டு நவீன உபாயங்களையும் தொழில்நுட்பங்களையும் அறிமுகப்படுத்துவதற்கான முன்முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

## மத்திய வங்கியின் இடர்நேர்வு ஆளுகைக் கட்டமைப்பு

இடர்நேர்வு ஆளுகைக் கட்டமைப்பானது இரு முக்கிய அடுக்குகளை உள்ளடக்குகின்றது:

**இடர்நேர்வு ஆளுகைக் கட்டமைப்பு,** ஆளும் சபை, சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு, கணக்காய்வுக் குழு என்பவற்றின் வகிபாகங்களையும் பொறுப்புக்களையும் எடுத்துரைக்கின்றது. பொறுப்புக்கூறலுக்கும் தீர்மானம் மேற்கொள்ளலுக்குமான வெளிப்படையான கட்டமைப்பொன்றினை இது தாபிக்கின்றது.

**இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு** மத்திய வங்கியின் அனைத்து நடவடிக்கை முழுவதும் இடர்நேர்வுகளை இனங்கண்டு, மதிப்பிட்டு, தணித்து, கண்காணிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட பொருத்தமான அனைத்தையுமுள்ளடக்கிய வழிகாட்டல்கள், நடைமுறைகள், கருவிகளை உள்ளடக்குகின்றது. இடர் முகாமைத்துவக் கட்டமைப்பானது, நிதியல்லா இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் முதலீட்டு மேற்பார்வைக் குழுக்கள் என்பவற்றின் வகிபாகங்களையும் பொறுப்புக்களையும் எடுத்துரைக்கின்றது.

### இலங்கை மத்திய வங்கியின் இடர் ஆளுகை கட்டமைப்பு



மத்திய வங்கியானது அதன் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினை வலுவூட்டுவதற்கு மூன்று நிலை மாதிரியை பின்பற்றுகின்றது. முதல் நிலையானது அவற்றின் தொடர்புடைய தொழிற்பாட்டுத் துறைகளுக்குள் இடர்நேர்வுகளை இனங்கண்டு, மதிப்பிட்டு, முகாமைசெய்வதற்கு அவ் இடர்நேர்வு எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு உரிய திணைக்களங்களை உள்ளங்குகின்றது. இரண்டாம் நிலையானது வங்கி முழுவதும் செயல்திறன்வாய்ந்த இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதை உறுதிசெய்வதற்கு சுயாதீன மேற்பார்வை மற்றும் வழிகாட்டலை வழங்குகின்ற இணங்குவித்தல் மற்றும் இடர்நேர்வு மேற்பார்வை போன்ற இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடுகளைக் கொண்டுள்ளது. மூன்றாவது நிலையானது இடர்முகாமைத்துவ கட்டமைப்பின் தாக்கம் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு உத்தரவாதம் வழங்குவதற்காக இடர் முகாமைத்துவ செயற்பாடுகளின் சுயாதீன மதிப்பீட்டினை மேற்கொள்ளும் உள்ளக கணக்காய்வினை உள்ளடக்குகின்றது. மூன்று நிலைகளின் கோட்பாடுகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் மத்திய வங்கி அதன் இடர்நேர்வு முகாமைத்துவ இயலளவுகளை வலுப்படுத்துவதற்கும் பல்வேறு நிச்சயமின்மைகள் மற்றும் சவால்களை எதிர்கொள்வதில் ஒட்டுமொத்த தாக்குப்பிடிக்கும் தன்மையை அதிகரிப்பதையும் நோக்காகக் கொள்கின்றது.

## இடர்நேர்வுகளை முகாமைசெய்தல்

பாதுகாப்பின் இரண்டாம் நிலையினுள் மத்திய வங்கியானது நிதியியல் மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுடன் இணையப்பெற்ற நடவடிக்கைகளை மையப்படுத்துக்கின்ற மத்தியமயப்படுத்தப்பட்ட பிரத்தியேகமான இடர்நேர்வுத் தொழிற்பாட்டினை முதன்மையாகப் பணிக்கமர்த்துகின்றது. அதன் தொழிற்பாடுகளின் நேர்மைத்தன்மையினை உறுதிசெய்வதற்கும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை நிறைவுசெய்வதற்கும் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை நியமங்களை நிலைநிறுத்துவதற்கும் மத்திய வங்கி வலுவான இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளைக் கடைப்பிடிக்கின்றது. கொடுகடன், சந்தை மற்றும் திரவத்தன்மை போன்ற நிதியியல் இடர்கள் மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளின் முகாமைத்துவத்திற்கு இடர் முகாமைத்துவ திணைக்களம் வசதியளிக்கின்றது. அறிந்த தீர்மானங்களை எடுப்பதற்கும் செயல்திறன்வாய்ந்த இடர்நேர்வு அளுகைக்கு உதவுவதற்கும் வெளிப்படைத்தன்மைமிக்க தொடர்பூட்டலும் அறிக்கையிடுதலும் துணையளிக்கின்றன. முன்னோக்கி நோக்குகையில் இடர்நேர்வு மதிப்பீட்டு முறைமையினை மேம்படுத்துவதற்கும் இடர் ஏற்புக் கட்டமைப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்கும் தானியக்கம்செய்யப்பட்ட ஆளுகை, இடர்நேர்வு மற்றும் இணங்குவித்தல் முறைமையொன்றினை பணிக்கமர்த்துவதற்கும மற்றும் மத்திய வங்கியின் ஐந்தொகை மீது கிரமமான அழுத்தப் பரிசோதனையை நடாத்துவதற்கும் குறிப்பான முன்முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

## இணங்குவித்தல்: கண்காணித்தலும் அறிக்கையிடுதலும்

மத்திய வங்கியின் இணங்குவித்தல் தொழிற்பாடானது சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் இணங்குவித்தல் தேவைப்பாடுகளையும் சாத்தியமான இணக்கமின்மைகளையும் தொகுத்து, பகுப்பாய்வுசெய்து, அறிக்கையிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், நிறுவனம் முழுவதும் ஒழுங்குமுறைப்படுத்தல், இணங்குவித்தல் கோட்பாடுகளைப் பொருந்தசெய்வதற்கும் அனைத்து மட்டங்களிலும் பொறுப்புமிக்க சந்தை நடத்தையினை உறுதிசெய்வதற்கும் மத்திய வங்கியில் இணங்குவித்தல் கலாச்சாரமொன்று ஊக்குவிக்கப்படுகின்றது. ஒழுங்குமுறைப்படுத்தல் கடப்பாடு பற்றிய விழிப்புணர்வை அதிகரித்தல், அலுவலர்களுக்காக அனைத்தையுமுள்ளக்கிய இணங்குவித்தல் பயிற்சியினை வழங்குதல், நேர்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றிற்கான வலுவான கடமைப் பொறுப்பொன்றினை வளர்த்தல் ஆகியவற்றிற்கான செயலூக்கமிக்க முயற்சிகளை இது ஈடுபடுத்துகின்றது. இணங்குவித்தல் கலாச்சாரத்தை மனதில்பதியச்செய்வதன் மூலம் நிறுவனசார் கலாச்சாரத்தில் ஒழுங்குமுறைப்படுத்தல் கடைப்பிடிக்கப்படுகின்ற அத்துடன் மைய விழுமியமொன்றாகத் தழுவிக்கொள்கின்ற பணிச் சூழலொன்றினை உருவாக்குவதை மத்திய வங்கி நோக்காகக் கொள்கின்றது.

# உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடானது மத்திய வங்கியின் விழுமியங்களை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் இடர்நேர்வு அடிப்படையிலமைந்த அத்துடன் குறிக்கோள் சார்ந்த உத்தரவாதம், மதியுரை மற்றும் உள்நோக்கு என்பவற்றை வழங்குவதுடன் ஆளுகை, இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டுச் செயன்முறைகள் என்பவற்றின் செயல்திறனை மதிப்பிடுவதற்கும் மேம்படுத்துவதற்கும் முறைமைசார்ந்த, ஒழுக்கமிக்க அணுகுமுறையொன்றினைக் கொண்டுவருவதனூடாக அதன் குறிக்கோள்களை எய்துவதற்கு வங்கிக்கு உதவுகின்றது. உள்ளகக் காணக்காய்வுத் திணைக்களமானது இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினது பாதுகாப்பின் மூன்றாவது நிலையாக தொழிற்படுகின்ற அதேவேளை, வங்கியின் தொழிற்பாடுகளுக்கு பெறுமதிசேர்ப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் சுயாதீன, குறிக்கோள் சார்ந்த உத்தரவாதத்தையும் பரிந்துரைகளையும் வழங்குகின்றது. மத்திய வங்கியின் உள்ளகக் காணக்காய்வுத் தொழிற்பாட்டின் சுயாதீனத்தை உறுதிசெய்வதற்கு உள்ளகக் காணக்காய்வுத் திணைக்களத்தின் தலைவரான பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் கணக்காய்வுக் குழு ஊடாக ஆளும் சபைக்கு தொழிற்பாட்டு ரீதியான அறிக்கையிடுவதுடன் ஆளுநருக்கு நிர்வாக ரீதியாக அறிக்கையிடுகின்றார்.

உள்ளகக் காணக்காய்வுத் திணைக்களத்தின் நோக்கு மற்றும் பணி தரநியமங்கள் பணிநோக்கெல்லை, அதிகாரம், பொறுப்பு, சுயாதீனம் மற்றும் பாரபட்சமற்ற தன்மை என்பன சபை அனுமதித்த உள்ளகக் கணக்காய்வுச் சாசனத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளன. இது, உள்ளகக் கணக்காய்வுச் செயன்முறையின் செயல்திறன்வாய்ந்த தன்மையினையும் நேர்மையினையும் உறுதிசெய்வதற்கு உதவுகின்றது. கணக்காய்வு நடத்தைகளில் ஒத்திசைவினையும் இது ஊக்குவிப்பதுடன் வெளிப்படைத் தன்மைமிக்க ஆற்றல்வாய்ந்த ஆளுகைக்கான கடமைப் பொறுப்பினை எடுத்துக்காட்டுவதன் மூலம் பங்குதாரர்கள் மத்தியில் நம்பிக்கையினைப் பேணி வளர்க்கின்றது.

## 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாட்டின் கட்டமைப்புசார்ந்த மறுசீரமைப்புக்கள்

இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 102ஆம் பிரிவில் உள்ளகக் காணக்காய்வுத் தொழிற்பாட்டின் முக்கியத்துவம் உரியவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய பன்னாட்டு தொழில்சார் நடத்தைகள் கட்டமைப்பிற்கிசைவாக மத்திய வங்கியின் கணக்காய்வு சாசனத்தில் உள்ளவாறு உள்ளகக் கணக்காய்வின் தத்துவங்களை, கடமைகளை, பணிகளை நிறைவேற்றுவதற்கு, செயலாற்றுவதற்கு, பிரயோகிப்பதற்கு பிரதான உள்ளகக் கணக்காய்வாளரை நியமிப்பதற்கு ஆளும் சபைக்கு அது ஏற்பாடுகளை வழங்குகின்றது.

## கணக்காய்வுகளை நடாத்துதல், கணக்காய்வு முன்னேற்றத்தை அறிக்கையிடுதல், கணக்காய்வு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் நிலைமைகளைப் பின்தொடர்தல்

உள்ளகக் காணக்காய்வுத் திணைக்களமானது, அனைத்தையுமுள்ளடக்கிய இடர்நேர்வு அடிப்படையிலமைந்த முறையியல் ஒன்றினூடாக மத்திய வங்கியின் முழுமையான கணக்காய்வையும் (அனைத்து கணக்காய்வு செய்யத்தக்க செயற்பாடுகள்) இற்றைப்படுத்துவதன் மூலம் அடுத்துவருகின்ற 4 ஆண்டுகளுக்காக அதன் இடர்நேர்வு அடிப்படையிலமைந்த உபாயக் கணக்காய்வுத் திட்டத்தையும் அடுத்த ஆண்டிற்கான ஆண்டுக் கணக்காய்வுத் திட்டத்தினையும் தயாரிக்கின்றது. அதற்கமைய, 2023 காலப்பகுதியில் மத்திய வங்கியின் முக்கிய தொழிற்பாடுகளின் செயற்பரப்பை உறுதிசெய்து உள்ளகக் காணக்காய்வுத் திணைக்களம் அதன் இடர்நேர்வு அடிப்படையிலமைந்த ஆண்டு கணக்காய்வுத் திட்டத்தினை நிறைவேற்றியதுடன் கொள்கை, இணங்குவித்தல், தொழிற்பாட்டு, சட்டம் மற்றும் வேறுதொடர்புபட்ட இடர்நேர்வுத் துறைகளை உள்ளடக்கி அதன் உபாய ரீதியான குறிக்கோள்களை அடைவதற்கு வங்கியின் தொழிற்பாடுகளை மேம்படுத்துவதற்கு கணக்காய்வு பரிந்துரைகளை வழங்கியது.

நடாத்தப்பட்ட கணக்காய்வு ஒப்படைகளின் முன்னேற்றம், கணக்காய்வுப் பரிந்துரைகளின் நடைமுறைப்படுத்தல் நிலைமைகள் என்பன கணக்காய்வுக் குழுவிற்கும் நாணயச் சபைக்கு/ ஆளும் சபைக்கு அறிக்கையிடப்பட்டன.

## தர உத்தரவாதமும் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டமும்

உள்ளக் கணக்காய்வின் காத்திரமான தன்மையினையும் சிறந்த நடைமுறைகளுடன் அணிசேர்வதனையும் உறுதிப்படுத்துவதற்காக, மத்திய வங்கியின் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகள் உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட நியமங்களையும் கட்டளைகளையும் பின்பற்றுகின்றன. உள்ளகக் கணக்காய்வாளர்

திணைக்களத்தின் பன்னாட்டு தொழில்சார் நிபுணத்துவ நடைமுறைகளின் கட்டமைப்பினைக் கைக்கொள்வதன் மற்றும் பின்பற்றுவதன் மூலமும் உள்ளக கணக்காய்வு திணைக்களம் அவற்றின் தொழிற்பாடுகளை நிறைவேற்றும் போது தொழில்சார் நிபுணத்துவத்தின் உயர்ந்த நியமங்கள், நேர்மைத்தன்மை மற்றும் ஒழுக்கம்சார் நடத்தைகளைப் பேணுகின்றன.

பன்னாட்டு தொழில்சார் நிபுணத்துவ நடைமுறைக் கட்டமைப்புடன் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு, உள்ளக மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. இவை செயலாற்றம் தொடர்பாக தற்பொழுது இடம்பெற்றுவரும் கணக்காணிப்பு மற்றும் 2023இன் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கையின் காலாந்தர சுய மதிப்பீடு என்பனவற்றை உள்ளடக்கியிருந்ததுடன் இவற்றின் பெறுபேறுகள் கணக்காய்வுக் குழுவூடாக ஆளுகைச் சபைக்கு தொடர்பூட்டப்பட்டன.

2023இல் மத்திய வங்கியின் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடு ஆர்மேனியா மற்றும் நெதர்லாந்து நாடுகளைச் சேர்ந்த உள்ளகக் கணக்காய்வு நிபுணர்களைக் கொண்ட குழுவொன்றின் கடுமையான வெளிவாரி தரமதிப்பீடொன்றிற்கு உட்படுத்தப்பட்டது. இம்மதிப்பீடு, பன்னாட்டு தொழில்சார் நிபுணத்துவ நடைமுறைக் கட்டமைப்பிற்கெதிராக மத்திய வங்கியின் உள்ளகக் கணக்காய்வு நடத்தைகளின் அனைத்தையுமுள்ளடக்கிய மதிப்பீடொன்றாக அமைந்தது. இம்மதிப்பீட்டின் பெறுபேறு பன்னாட்டுத் தொழில்சார் நிபுணத்துவ நடைமுறைகளின் கட்டமைப்புடன் மத்திய வங்கியின் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகள் முழுமையாக இணைந்து செல்வதனை ஐயத்திற்கிடமின்றி உறுதிப்படுத்துகின்றது.

மேலும், உள்ளகக் கணக்காய்வு செயன்முறையுடன் ஆர்வலர்கள் பரீட்சயமாகிக்கொள்வதனை மேம்படுத்தும் பொருட்டு அனைத்துத் திணைக்களங்களையும் சேர்ந்த பிரதிநிதிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது.

## கணக்காய்வுக் குழு வசதிப்படுத்தல்

பிரதான உள்ளக கணக்காய்வாளர் கணக்காய்வுக் குழுவிற்கான உதவிச் செயலாளராகத் தொழிற்படுவதுடன் கணக்காய்வு குழுவிற்குச் செயலக வசதிகளையும் வழங்கினார். அதற்கமைய, கணக்காய்வுக் குழுவின் விதந்துரைப்புக்கள் நடைமுறைப்படுத்தலின் பின் தொடர் நடவடிக்கை காலாந்தர ரீதியில் மேற்கொள்ளப்பட்டு ஆண்டு காலப்பகுதியில் அறிக்கையிடப்பட்டது.

## மனித மூலதனம் மற்றும் பொது நிருவாகம்

பொறுப்பு வாய்ந்த தொழில்தருநர் என்ற ரீதியில், மத்திய வங்கி பொருளாதாரத்திற்கும் நிதியியல் - முறைமைக்குமான அதன் அர்ப்பணிப்பு மிக்க தொழிற்படையின் இன்றியமையாத பங்களிப்பினை ஏற்றுக்கொண்டிருக்கிறது. 29 திணைக்களங்களிலும் பரந்து தொழில்புரியும் 1,226 ஊழியர்களை உள்ளடக்கும் விதத்தில் அவர்களது தொழில்சார் நிபுணத்துவம், தொழில்நுட்ப நிபுணத்துவம், ஒருங்கிணைப்பு மற்றும் ஆர்வம் என்பனவற்றை வங்கி வெற்றிகரமாக ஒருங்கே பிணைத்திருக்கிறது.

2023இல், இலங்கை மத்திய வங்கி, அதிகரித்தளவு சலிப்பு மற்றும் நேரகாலத்துடனான ஓய்வுபெறல் உள்ளிட்ட குறிப்பிடத்தக்களவு சவால்களை எதிர்நோக்கியது. இது, தற்போதுள்ள தொழிற்படையின் மீது அழுத்தத்தினை ஏற்படுத்தி தொழிற்பாட்டு வினைத்திறனுக்கு முட்டுக்கட்டையாக விளங்கியது. இச்சவால்களைக் கட்டுப்படுத்துவதற்காக மத்திய வங்கி ஆட்சேர்ப்புச் செய்முறைகளை விரைவுபடுத்துவதற்கு பல்வேறு வழிமுறைகளையும் நடைமுறைக்கிட்ட வேளையில், ஊழியர்களின் திருப்தியையும் அதிகரித்துக் கொண்டது.

### திறனை அடைந்து கொள்ளுதல்

உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை பேணுவதிலும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை அடைந்து கொள்வதிலும் மத்திய வங்கி தவிர்க்க முடியாத வகிபாகமொன்றினைக் கொண்டிருக்கிறது. மத்திய வங்கி உயர்ந்த தகைமைகளைக் கொண்ட அதன் திறமைவாய்ந்த பணிக் குழுவிற்கு மிகப் பொருத்தமான தனிப்பட்டவர்களை ஈர்ப்பதற்கும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கும் மிகக் கவனமாக உபாயங்களைக் கைக்கொண்டது. உயர்ந்த தேர்ச்சி வாய்ந்ததும் தகுதி வாய்ந்ததுமான தொழிற்படையைக் கொண்டிருப்பதன் மிகுந்த முக்கியத்துவத்தினை அங்கீகரிக்கின்ற விதத்திலும் வங்கியின் குறிக்கோள்களை எய்துவதற்கு காத்திரமான விதத்தில் பங்களிக்கக்கூடிய தனிப்பட்டவர்களை அடையாளம் காணவும் நியமிக்கவும் மத்திய வங்கி திறன் வாய்ப்புக்களை அடைந்து கொள்ளும் செய்முறையொன்றினை வடிவமைத்திருக்கிறது.

மத்திய வங்கியின் திறனை அடைந்து கொள்ளும் முயற்சி மிகச் சிறந்த கல்வித் தகைமையைக் கொண்டிருக்கும் பரீட்சர்களை மாத்திரம் அடையாளம் காண்பதற்கு முன்னுரிமையளிப்பது மட்டுமன்றி நெருக்கடியான நேரத்தில் சிந்திப்பதற்கும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் சூழ்நிலைக்கேற்ப அதற்கு பரீட்சயமாகிக் கொள்வதற்கான மனச்சால்பினையும் எடுத்துக்காட்டுதல் வேண்டும். இவை பொருளாதாரக் கொள்கை வடிவமைப்பின் சிக்கலான தன்மைக்கு வழிகாட்டுவதற்கும் நிதியியல் முறைமைக்குள் உறுதித்தன்மையினைப் பேணுவதற்கும் இன்றியமையாதது எனக் கருதப்படுகிறது.

2022இலிருந்து அலுவலர்களின் அதிகரித்த மனச்சோர்வுகளின் பின்னணியில், மத்திய வங்கி 2023இல் முகாமைத்துவப் பயிற்சியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் செய்முறையினையும் உள்ளகப் பரீட்சார்த்திகளை தகுதிகாண் உயர் பதவி அலுவலர்களாக பதவி உயர்த்துவதனையும் விரைவுபடுத்தியது.

மேலும், 2023ஆம் ஆண்டுப்பகுதியில், பல்வேறுபட்ட ஊழியர்களையும் பதவி உயர்த்தும் திட்டங்களின் கீழ், அவர்கள் வகிக்கும் பதவியை முன்னேற்றுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் மொத்தமாக 163 அலுவலர் உறுப்பினர்களுக்குப் பல்வேறு வகைகளின் கீழும் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன.

### பயிற்சி மற்றும் அபிவிருத்தி

மத்திய வங்கி அதன் அலுவலர்களுக்கும் அதேபோன்று நிதியியல் துறை அலுவலர்களுக்கும், மத்திய வங்கியின் பயிற்சித்துறையான வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தினூடாக இயலாற்றலை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளை 2023இலும் தொடர்ச்சியாக மேற்கொண்டது. மேலும், மனித வளத் திணைக்களம் மத்திய வங்கி அலுவலர்கள் அவர்களது தேர்ச்சி, அறிவு மற்றும் தொழில்சார் தகுதிகள் என்பனவற்றை பட்டப்பின் படிப்பு கற்கைகளைத் தொடர்வதற்கும் புலமைப்பரிசில்களூடாக வசதியளிப்பதுடன் மத்திய வங்கியுடன் தொடர்பான தொழில்சார் தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் உதவும். மேலும், உள்நாட்டு மற்றும் பன்னாட்டு முகவர்களினால் நடத்தப்படுகின்ற மத்திய வங்கி தொடர்பான விடயங்களில் அண்மைக்கால அறிவினை இற்றைப்படுத்திக் கொள்ளும் விதத்தில் மத்திய வங்கி அலுவலர்கள் பயிற்சி அமர்வுகள்/ செயலமர்வுகள்/ ஆய்வரங்குகளில் கலந்து கொண்டனர்.

### ஊழியர் நலனோம்புகைகளை முன்னெடுத்தல்

போட்டித்தன்மை வாய்ந்த பன்னாட்டு தொழிற்சந்தைகள், நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நிலைமைகள் காரணமாக கடந்த ஒரு சில ஆண்டுகளாக திறமை மிகுந்த அலுவலர்களைத் தக்கவைத்துக் கொள்வது இலங்கை மத்திய




வங்கிக்கு கணிசமான சவாலாக அமைந்தன. இச்சவால்களைக் காத்திரமான விதத்தில் கட்டுப்படுத்துவதற்கும் வங்கியின் தொழிற்பாடுகள் மீது அதன் சாத்தியமான தாக்கங்களைக் குறைப்பதற்காகவும் மத்திய வங்கியின் முகாமைத்துவம் ஊழியர்களின் திருப்தியை மேம்படுத்துவதன் மீதும் தொழில்சார் வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான வாய்ப்புக்களை வழங்குதல் மற்றும் விசுவாசத்தினைப் பேணுதல் மற்றும் தொழிற்படையிடையே கடப்பாடுகளையும் பேணி வளர்க்கும் பணி இடங்களின் ஒட்டுமொத்த கலாச்சாரத்தினை உயர்த்துதல் மீது கவனம் செலுத்தும் உபாயங்களை மத்திய வங்கி நடைமுறைப்படுத்துகிறது. ஊழியர்களின் திருப்திகரமான முகாமைத்துவக் கடப்பாட்டின் ஒரு பகுதியாக இலங்கை மத்திய வங்கியின் பல்வேறுபட்ட அலுவலர் நன்மைகள் திட்டத்தின் கீழும் மருத்துவ நன்மைகள் மற்றும் அலுவலர் கடன் வசதிகள் உள்ளிட்ட ஊழியர்களுக்கான ஊக்குவிப்புக்கள் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டன. மத்திய வங்கி ஊழியர்களின் சம்பளங்கள் நாணயச் சபைக்கும் (தற்பொழுது ஆளுகைச் சபை) மத்திய வங்கியில் தொழிற்படுகின்ற தொழிற்சங்கங்களுக்குமிடையில் கையொப்பமிடப்பட்ட கூட்டு உடன்படிக்கையின் கீழ் மூன்றாண்டுகளுக்கொரு தடவை திருத்தப்படுகின்றன. இதற்கமைய, 2023இல் மத்திய வங்கி தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியுள்ளதுடன், பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் 2024 – 2026ஆம் ஆண்டிற்கான கூட்டு ஒப்பந்தம் 2024 சனவரியில் கையெழுத்தானது. இச்சம்பளத் திருத்தம் தற்பொழுது, பொது நிதி மீதான பாராளுமன்றக் குழுவின் விதந்துரைப்புக்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் நிதி அமைச்சுக்குப் பொறுப்பானவர் என்ற முறையில் மேதகு சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட சுயாதீனமான குழுவின் மீளாய்விற்குட்பட்டு வருகிறது.

## ஒட்டுமொத்த கம்பனி நிருவாகம்

2023ஆம் ஆண்டுப்பகுதியில் ஒட்டுமொத்த கம்பனி நிருவாகம் ஏற்புடைத்தான ஒழுங்குவிதிகள், பொறுப்புக்கூறும் தன்மையினை உறுதிப்படுத்தல், சிறந்த ஆளுகை தொடர்பான ஏனைய காரணங்கள் என்பனவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் ஆற்றப்பட்டது. கம்பனி நிருவாகத்திற்குக் கீழான நடவடிக்கைகள் கொள்வனவு, மத்திய வங்கியின் அனைத்து ஆதனங்களுக்குமான அனைத்தையுமுள்ளடக்கிய காப்புறுதிக் காப்பு, அஞ்சல் பணி, நிகழ்வுகளுக்கான நிறுவனம் மற்றும் சபை அளவீட்டினை நடத்துதல் மற்றும் ஒப்பந்த முகாமைத்துவம் என்பனவற்றை உள்ளடக்குகிறது.

## வசதிகள் முகாமைத்துவம்

வசதிகள் முகாமைத்துவம் ஊழியர்கள் மற்றும் ஆர்வலர்களுக்கான பணி அமைவிடச் சூழலைத் தூண்டும் தன்மையினை உருவாக்குவதன் மீது கவனம் செலுத்துகின்ற பரந்த அடிப்படையிலான கடமைகளை உள்ளடக்குகின்ற வேளையில், தொழிற்பாட்டு வினைத்திறனையும் செலவுச் சிக்கனத்தினையும் பேணுகின்றது. இதன்படி, 2023இல் வசதிகள் முகாமைத்துவத்தின் கீழ் இந்நடவடிக்கைகள் இடர்நேர்வு முகாமைத்துவம், உட்கட்டமைப்பு பேணல், போக்குவரத்து மற்றும் வலு வினைத்திறன் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

## மக்களையும் ஆதனங்களையும் பாதுகாத்தல்

மத்திய வங்கியின் ஆளணியினரினதும் சொத்துக்களினதும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு உத்வேகம் மிக்க பாதுகாப்பு ஏற்பாடுகள், நடைமுறையிலுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள், அணுகு வழிகளைக் கட்டுப்படுத்தல், கண்காணிப்பு முறைமைகள், பாதுகாப்பு ஆளணியினரைப் பணிக்கமர்த்தல் மற்றும் அவசரகால பதிலிறுப்பு நடவடிக்கைகள் போன்ற பல்வேறு வழிமுறைகளை உள்ளடக்கியுள்ளன. பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதன் மூலம் மத்திய வங்கி இதன் தொழிற்பாடுகளை பாதுகாப்பது மட்டுமன்றி பொதுமக்களின் நம்பிக்கையினையும் நம்பகத்தன்மையினையும் பேணிக்கொள்ளும்.

## தகவல் முறைமைகளையும் தொழில்நுட்பங்களையும் மேம்படுத்தல்

மத்திய வங்கியின் தகவல் முறைமைகளும் தொழில்நுட்பவியல்களும் தொழிற்பாட்டு வினைத்திறன், ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வை என்பனவற்றை மேம்படுத்துவதற்காக 2023இல் கணிசமான மேம்படுத்துகைகளுக்குட்பட்டதுடன் நாட்டின் நிதியியல் உறுதித்தன்மை இலக்குகளுக்கும் ஆதரவளிக்கப்பட்டது.

இம்முன்னேற்றங்கள் ஏற்றுமதிப் பெறுகைகள் மற்றும் நிதியியல் திட்டங்களுக்கான கண்காணிப்பு முறைமைகளை ஒழுங்குமுறைப்படுத்தல், தன்னியக்கப்படுத்தப்பட்ட இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வைக் கருவிகள் மற்றும் மேம்பட்ட தரவுச் சேகரிப்பு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல், அறிக்கையிடல் பொறிமுறை என்பனவற்றை உள்ளடக்குகிறது.

இவற்றிற்குப் புறம்பாக, நிகழ்நிலை ஆட்சேர்ப்புச் செய்முறைகளைத் தரமுயர்த்தல், வெளிவாரி நிறுவனங்களுக்கு தரவுப் பரப்புதல்களை மேம்படுத்தல் மற்றும் நிதியியல் தரவுகளை ஊடுகடத்துவதற்காக உலகளாவிய நியமங்களுடன் இணைப்பதற்கான முன்னெடுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. மேலும், தொழில்நுட்பவியல் உட்கட்டமைப்பு TIA 942 - B:2017, 3 தரமிடப்பட்ட தரவுநிலையம் நிறுவப்பட்டதுடன், அதேவேளை சைபர் பாதுகாப்பு வழிமுறைகள் பலப்படுத்தப்பட்டன.

இம்முயற்சிகள் சிறந்த ஆளுகை, வெளிப்படைத்தன்மை மற்றும் நிதியியல் துறையின் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மை என்பனவற்றிற்காக தொழில்நுட்பவியலை உயர்த்தும் மத்திய வங்கியின் கடப்பாட்டில் பிரதிபலிக்கப்படுகின்றன.

## வழக்காடல்கள் மற்றும் சட்ட சீர்திருத்தங்கள்

2023இல், மத்திய வங்கி சட்ட சீர்திருத்தங்கள், குறிப்பாக, பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேலோட்டமாகக் குறிப்பிடப்பட்ட முன்நடவடிக்கைகளை பூர்த்திசெய்வதற்காக முறையே 2023.09.15இலும் 2023.11.15இலும் நடைமுறைக்கு வந்த 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க மத்திய வங்கிச் சட்டம் மற்றும் 2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் இயற்றப்பட்டமை மற்றும் ஒப்புதல் வழங்கப்பட்டமை என்பனவற்றை உள்ளடக்கயிருந்தது.

மேலும், மத்திய வங்கி பின்வருவன உட்பட பல சட்டச் சீர்திருத்தங்களை முன்னெடுத்திருக்கிறது:

- 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்திற்கான திருத்தங்கள், இது 2024 ஏப்பிறலில் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டது.
- 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்திற்கான திருத்தம்
- 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டத்திற்கான திருத்தம்
- 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைச் சட்டத்திற்கான திருத்தம்
- 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திற்கான திருத்தம்
- வர்த்தகப்படுத்தல் தீர்ப்பனவு மற்றும் தேறல் சட்டம்
- மேலும், பின்வரும் சட்டங்களை வரைவதில் நிதி அமைச்சிற்கு மத்திய வங்கி தொழில்நுட்ப உதவிகளை வழங்கும்
- நுண்பாக நிதி மற்றும் கொடுகடன் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபை சட்ட மூலம்
- நிதியியல் சொத்து முகாமைத்துவக் கம்பனிகள் சட்டம்

மேலும், மத்திய வங்கி, சட்டப் பிணக்குகளில் நிறுவனத்தின் நலவுரித்துக்களைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்குடன், ஆண்டு முழுவதும் பல்வேறுபட்ட சட்ட விடயங்களிலும் காத்திரமான விதத்தில் அதுவாகவே பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டுள்ளது. மேலும், மத்திய வங்கி இவ்வாண்டுப்பகுதியில் 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவல்களை அறியும் சட்டத்தின் கீழ் 290 தகவல் கோரிக்கைகளையும் 45 மேன்முறையீடுகளையும் 4 விசாரணைகளையும் கவனித்துக் கொண்டது.

## வியாபாரச் செய்முறையினை மீளப்பொறியியற்படுத்தும் செய்முறை

2023இல் மத்திய வங்கி உத்வேகம் மிக்க வியாபாரச் செய்முறையினை மீள்பொறியியற்படுத்தும் முயற்சியில் இறங்கியிருக்கிறது. இம்முன்னெடுப்பு, குறைபாடுகளை அடையாளம் காணுதல், சாத்தியமான உயர்வுகளை மதிப்பீடு செய்தல் மற்றும் கூடுதலானளவிற்கு செலவுச் சிக்கனத்தினை உறுதிப்படுத்துவதற்காக மனித வளத்தின் செய்முறையினை ஒழுங்குமுறைப்படுத்தல், கணியம்சார் மேற்பார்வை மற்றும் தொழிற்பாட்டு ரீதியாக வினைத்திறன் மிக்க ஒருங்கிணைக்கப்பட்ட கட்டமைப்பு என்பனவற்றை அடையும் விதத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. முதன்மை நோக்கம் யாதெனில் மனித வள முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் வழங்கலைச் சீரமைத்தல், மூலவளங்கள் உத்தம அளவில் பயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்தல் மற்றும் மத்திய வங்கியின் குறிக்கோள்களைப் பூர்த்திசெய்யும் விதத்தில் காத்திரமான தன்மையினை உயர்த்துதல் என்பனவாகும்.

## முன்னோக்கிப் பயணித்தல்

மத்திய வங்கி அதன் மனித வள நடைமுறைகளை அதிகரிக்கின்ற வேளையில் மனித வளக் கட்டமைப்பிற்கு ஏற்படக்கூடிய தவிர்க்க முடியாத நெருக்கடிகளைக் கட்டுப்படுத்துவதற்கும் மத்திய வங்கித்தொழிலுக்குத் தேவையான விடயங்களில் பன்னாட்டு நிறுவனத்தின் நிபுணத்துவத்தினைப் பயன்படுத்திக் கொள்வதற்குமான பயணமொன்றினைத் தொடங்கியிருக்கிறது. செயற்றிட்டத்தில் உடனடியாக எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் தொடர்ச்சியான திட்டமிடல் மீதான உபாயக் கவனம், மனித வளச் சவால்களை உடனடியாகக் கட்டுப்படுத்துவது மற்றும் ஊழியர் ஈடுபாடுகளைப் பேணி வளர்த்தல் என்பனவற்றை உள்ளடக்குகிறது. இது, தொடர் திட்டமிடல்களின் மீது உபாய ரீதியாக கவனம் செலுத்துதல், மனித வளச் சவால்களை உடனடியாகக் கட்டுப்படுத்தல் மற்றும் ஊழியர்களின் ஈடுபாடுகளைப் பேணுதல் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கிறது. இது தொடர்பில் மத்திய வங்கியின் மனித வள உபாயங்களை முழுமையாக புதுப்பிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதுடன், பன்னாட்டு நியமங்களுடன் நவீனப்படுத்தல் மனித வளங்களை இணைத்தல் நடவடிக்கைகளையும் அது உள்ளடக்குகின்றது. இம்முக்கிய கூறுகளை வலியுறுத்துவதன் மூலம், மத்திய வங்கி உயர்ந்தளவு ஈடுபாடு கொண்ட, தகுதி வாய்ந்த, விரைவான திறன் கொண்ட குழுவொன்றினை வங்கியில் வடிவமைத்துக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# சபை உறுப்பினர்கள்

(2024 மார்ச்சு 31 அன்று உள்ளவாறு)

**முனைவர். பி. நந்தலால் வீரசிங்க**
ஆளுநர்

**இலங்கை மத்திய வங்கியில் தற்போது வகிக்கும் பதவி**

தலைவர் - ஆளும் சபை
தலைவர் - நாணயக் கொள்கைச் சபை

**கல்விசார் பின்னணி**

பொருளியலில் முனைவர் பட்டம், அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா

பொருளியலில் விஞ்ஞான முதுமானிப் பட்டம் அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா

விஞ்ஞானமானிப் பட்டம், இலங்கை களனிப் பல்கலைக்கழகம்

**தொழில் விபரம்:**

**தற்போதைய ஈடுபாடுகள்**

முனைவர் வீரசிங்க தற்போது இலங்கை மத்திய வங்கியின் 17ஆவது ஆளுநராகப் பணியாற்றுகின்றார். இவர் நாட்டின் நாணயக் கொள்கை, நிதியியல் உறுதிப்பாடு மற்றும் பொருளாதார வளர்ச்சி முயற்சிகளுக்கு உபாய ரீதியான தலைமைத்துவத்தை வழங்கி மேற்பார்வை செய்கின்றார்.

**அனுபவம்**

முனைவர் வீரசிங்க, நாணய மற்றும் செலாவணி வீதக் கொள்கை பற்றிய விரிவான புரிந்துகொள்ளளுடன்கூடிய அனுபவம் பெற்ற மத்திய வங்கியாளராவார். மத்திய வங்கியில் அவரது தொழில் வாழ்க்கைக் காலப்பகுதியில் இவர் மூத்த துணை ஆளுநர், துணை ஆளுநர், உதவி ஆளுநர் மற்றும் முதன்மைப் பொருளியலாளர் பதவிகளை வகித்தார். பன்னாட்டு நாணய நிதியத்தில் மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராகப் பணியாற்றி பன்னாட்டு அனுபவத்தையும் இவர் பெற்றுள்ளார்.

பொருளியலாளர் என்றவகையில் இவர் அமைச்சரவை துணைக் குழுக்களில் பொருளாதாரக் கருமங்கள் மீது ஆலோசனை வழங்கியுள்ளார். முனைவர் வீரசிங்க கொழும்புப் பல்கலைக்கழகத்தில் வருகைதரு விரிவுரையாளராகவும் மலேசியாவில் தென்கிழக்காசிய மத்திய வங்கிகள் நிலையத்திலும் அவுஸ்திரேலியாவின் தேசிய பல்கலைக்கழகத்திலும் வருகைதரு ஆராய்ச்சிப் பொருளியலாளராகவும் பணியாற்றி கல்விக்கும் பங்களித்துள்ளார்.

அவரது பரந்த பின்னணி மற்றும் பன்மைத்துவப் பங்களிப்பு என்பவற்றுடன் முனைவர் வீரசிங்க நாணய மற்றும் பொருளாதாரக் கொள்கைகளை முன்னேற்றுவதில் இன்றியமையாத பங்காற்றுகின்றார்.

## திரு. நிஹால் பொன்சேகா

### இலங்கை மத்திய வங்கியில் தற்போது வகிக்கும் பதவி

நியமிக்கப்பட்ட உறுப்பினர் - ஆளும் சபை
நியமிக்கப்பட்ட உறுப்பினர் - நாணயக் கொள்கைச் சபை
தலைவர் - சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு

### கல்விசார் பின்னணி:

விஞ்ஞானமானி, இலங்கைப் பல்கலைக்கழகம், கொழும்பு

சக உறுப்பினர், பட்டய வங்கியாளர்கள் நிறுவனம், ஐக்கிய இராச்சியம்

கௌரவ சக உறுப்பினர், பட்டயப் பிணையங்கள் மற்றும் முதலீடுகள் நிறுவனம், ஐக்கிய இராச்சியம் (FCSL)

### தொழில் விபரம்:

**தற்போதைய ஈடுபாடு**

திரு. நிஹால் பொன்சேகா, முன்னணி நிறுவனங்களில் முக்கிய பதவிகளை வகிக்கின்றார். இவர் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சியில் மூத்த சுயாதீனப் பணிப்பாளராவும் குழுமக் கணக்காய்வுக் குழுவின் தலைவராகவும் பணியாற்றுகின்றார். மேலும், பீனிக்ஸ் இன்டஸ்ரீஸ் லிமிடெட்டின் தலைவராகவும் பிராண்டிக்ஸ் லங்கா லிமிடெட்டின் நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர் மற்றும் கணக்காய்வுக் குழுத் தலைவராகவும் பணியாற்றுகின்றார். பீனிக்ஸ் வென்ஜெர்ஸ் லிமிடெட்டின் நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர் முதலீட்டுக் குழுத் தலைவர் ஆகிய பதவிகளை வகிக்கின்றார்.

**அனுபவம்**

திரு. நிஹால் பொன்சேகா அரசாங்க மற்றும் தனியார் துறைகள் இரண்டிலும் பல முக்கிய பதவிகளை வகித்து நிதியியல் ஆளுகை மற்றும் அபிவிருத்திக்கு பரந்தளவில் பங்களித்துள்ளார். நிதியியல் துறையில் அவரது பரந்தளவிலான தலைமைத்துவத்தையும் அனுபவத்தையும் அவரது சாதனைப் பதிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. இவர் 2016-2020 வரை இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார். இவர் 2016இல் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்புச் சபையில் பணிப்பாளராகவும் அதே ஆண்டில் தேசிய பெறுகை ஆணைக்குழு உறுப்பினராகவும் பணியாற்றி அரசாங்க சேவையிலான அவரது அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டினார். தனியார் துறையில் 2000 - 2013 வரை டிஎவ்சிசி வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலராக / பணிப்பாளராகப் பணியாற்றி அதன் தொழிற்பாடுகள் மற்றும் உபாயப் பணிப்புரையினை மேற்பார்வை செய்தார். திரு. பொன்சேகா 2011 - 2012 வரை மணிலாவிலுள்ள ஆசிய பசுபிக் அபிவிருத்தி நிதி நிறுவனங்களின் அமைப்பின் தலைவர் மற்றும் 2005 - 2009 வரை கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் தலைவர் போன்ற புகழ்பெற்ற பதவிகளை வகித்தார். 2000 - 2009 வரை கொமர்ஷல் பேக்ங் பிஎல்சியின் பணிப்பாளர் உள்ளடங்கலாக பல்வேறு சபைகளிலும் தனது நிபுணத்துவத்தைப் பகிர்ந்துகொண்டார். இதற்கு மேலதிகமாக, 2009இல் வரிவிதித்தல் மீதான சனாதிபதி ஆணைக்குழுவில் இவர் இருந்ததுடன் 1990 - 1999 வரை இலங்கை எச்எஸ்பிசி துணை முதன்மை நிறைவேற்று அலுவலராகவும் பணியாற்றி நிதித்துறையில் அவரது பரந்த தலைமைத்துவத்தையும் அனுபவத்தையும் எடுத்துக்காட்டினார்.

## முனைவர் ரவி ரத்நாயக்க

### இலங்கை மத்திய வங்கியில் தற்போது வகிக்கும் பதவி

நியமிக்கப்பட்ட உறுப்பினர் - ஆளும் சபை
நியமிக்கப்பட்ட உறுப்பினர் - நாணயக் கொள்கைச் சபை
நியமிக்கப்பட்ட உறுப்பினர் - கணக்காய்வுக் குழு

### கல்விசார் பின்னணி

பொருளியலில் முனைவர் பட்டம், லட் றொப் பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா

பொருளாதார அபிவிருத்தியில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா, கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

கணனி முறைமையில் டிப்ளோமா, தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம்

இளமானி பட்டம் (பொருளியளில் கௌரவ பட்டம்) பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை

### தொழில் விபரம்:

**தற்போதைய ஈடுபாடு**

முனைவர் ரத்நாயக்க தற்போது பொருளாதார மற்றும் தேசிய வியாபாரத்தில் சர்வதேச ஆலோசகராக ஈடுபட்டுள்ளார். இதற்கு மேலதிகமாக, இவர் பிரிட்ஜிங் த கெப் பவுன்டேசனின் செயலாளர் நாயகமாகப் பணியாற்றுகின்றார்.

**அனுபவம்**

முனைவர் ரத்நாயக்க பேராசிரியர், சிரேஷ்ட விரிவுரையாளர், சிரேஷ்டப் பொருளாதார ஆராய்ச்சியாளர் போன்ற வகிபாகங்களுடன் சேர்த்து ஆசிய பசுபிக்கிற்கான ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவில் முதன்மைப் பொருளியலாளர் மற்றும் வர்த்தக முதலீட்டுப் பணிப்பாளராக 40 வருடங்களுக்கு மேற்பட்ட பரந்த பன்னாட்டு அனுபவத்தைப் பெற்றுள்ளார். பேரண்டப் பொருளாதாரக் கொள்கை பற்றி 25 இற்கு மேற்பட்ட அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு ஆலோசனை வழங்கியதுடன் பல எண்ணிக்கையான வெளியீடுகளுக்கும் ஆசிரியராகயிருந்து வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் மீதான பிராந்தியக் கருத்திட்டங்களை ஒருங்கிணைத்தார். முனைவர் ரத்நாயக்க ஆசிய பசுபிக்கிற்கான ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவில் முக்கிய முன்முயற்சிகளை நிறுவுவதற்கு கௌரவமிக்க பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஆலோசனைச் சேவைகளையும் வழங்கியுள்ளார். இலங்கையில் இவர் வர்த்தகக் கொள்கை வகுத்தல் மற்றும் பேச்சுவார்த்தை என்பவற்றில் முக்கிய பதவிகளை வகித்துள்ளார்.

## திரு. அனுஷ்க விஜேயசிங்க

**இலங்கை மத்திய வங்கியில் தற்போது வகிக்கும் பதவி**

நியமிக்கப்பட்ட உறுப்பினர் - ஆளும் சபை
நியமிக்கப்பட்ட உறுப்பினர் - நாணயக் கொள்கைச் சபை
தலைவர் - ஒழுக்கநெறிக் குழு

**கல்விசார் பின்னணி**

பொருளியளில் முதுமானிப்பட்டம், லீட்ஸ், பல்கலைக்கழகம், ஐக்கிய இராச்சியம்

பொருளியளில் விஞ்ஞானமானிப் பட்டம், லண்டன் பல்கலைக்கழகம், ஐக்கிய இராச்சியம்,

ஹாவார்ட் கென்னடி பாடசாலை நிறைவேற்றுக் கல்வி பழைய மாணவர்

**தொழில் விபரம்:**

**தற்போதைய ஈடுபாடு**

திரு.விதுஜயசிங்க தற்போது சென்டர் போ ஸ்மார்ட் பியூச்சரின் ஸ்தாபகராகவும் பணிப்பாளராகவும் துறைகளுக்கிடையிலான பொது கொள்கை முயற்சிகளை மேற்பார்வை செய்வதில் ஈடுபட்டுள்ளார். இவர் சனாதிபதி செயலகத்தில் ஏற்றுமதிகள் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு மீதான மேற்பார்வைக் குழுவிலும் பணியாற்றுகின்றார். இதற்கு மேலதிகமாக, திரு. விஜேயசிங்க பெயார் பெஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடெட் மற்றும் குட்லைப் எக்ஸ் (பிறைவெட்) லிமிடெட் என்பவற்றில் சுயாதீன நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளராகவும் பதவி வகிக்கின்றார்.

**அனுபவம்**

திரு. விஜயசிங்க, பரந்த பன்னாட்டு மற்றும் உள்நாட்டு அனுபவத்துடன்கூடிய தேர்ச்சிபெற்ற தொழில்நிபுணரொருவராவார். ஆசியா மற்றும் மத்திய கிழக்கு முழுவதும் ஆலோசனைக் கருத்திட்டங்கள் மீதான பன்னாட்டு ஆலோசகர் ஒருவராக இவர் பணியாற்றியதுடன் செலான் வங்கி பிஎல்சி மற்றும் எச்என்பி பினான்ஸ் பிஎல்சி என்பவற்றில் மூத்த சுயாதீன நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர் உள்ளடங்கலாக நிதியியல் துறையில் மூத்த பதவிகளை வகிக்கின்றார். திரு. விஜேயசிங்க, இலங்கையில் புத்தாக்கம் மற்றும் பொருளாதார அபிவிருத்தியைப் பேணி வளர்ப்பதில் முனைப்புடன் ஈடுபட்டு இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் தேசிய புத்தாக்க முகவராண்மை போன்ற பல்வேறு சபைகளிலும் பேரவைகளிலும் பணியாற்றுகின்றார். இலங்கை வர்த்தக சம்மேளத்தில் முதன்மைப் பொருளியலாளர் மற்றும் இலங்கை கொள்கை ஆய்வுகள் நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பொருளியலாளர் ஆகிய பின்னணியுடன் பெறுமதிவாய்ந்த பொருளாதார உள்நோக்குகளைக் கொண்டுள்ளார். மேலும் இவர் சியோலின் கொரிய அபிவிருத்தி நிறுவனத்தில் வருகைதரு ஆராய்ச்சியாளரொருவராக ஆராய்ச்சிக்கு பங்களித்துள்ளார்.

## திரு. விஷ் கோவிந்தசாமி

**இலங்கை மத்திய வங்கியில் தற்போது வகிக்கும் பதவி**

நியமிக்கப்பட்ட உறுப்பினர் - ஆளும் சபை
நியமிக்கப்பட்ட உறுப்பினர் - நாணயக் கொள்கைச் சபை

**கல்விசார் பின்னணி:**

வியாபார நிருவாகத்தில் முதுமானி மற்றும் மின்சாரப் பொருளியளில் விஞ்ஞானமானி

ஹார்ட்போர்ட் பல்கழைக்கழகம், ஐக்கிய அமெரிக்கா

சக உறுப்பினர் சான்றுப்படுத்தப்பட்ட தொழில்சார் முகாமையாளர்கள் நிறுவனம், இலங்கை

**தொழில் விபரம்:**

**தற்போதைய ஈடுபாடு**

துணைத் தலைவர் சன் சைன் ஹோல்டிங் பிஎல்சி

**அனுபவம்**

இலங்கை வர்த்தக சம்மேளனம் மற்றும் இலங்தை தொழில்தருநர்கள் சம்மேளனம் இரண்டினதும் உடனடி கடந்தகால தலைவரான திரு. கோவிந்தசாமி வியாபாரத் தோற்றஅமைப்பிற்கான அவரது குறிப்பிடத்தக்க பங்களிப்புகளுக்காக பரந்தளவில் அங்கீகரிக்கப்பட்டவராவார். ஷெஸ்டா, வட்டவல, ரன்கஹுட்ட போன்ற பிரபல்யமிக்க யேிலை வர்த்தநாமகங்களை உருவாக்கியதன் பெருமை அவரது மகத்தான தொழில்முயற்சிசார் தொலைநோக்கையும் சந்தைப்படுத்தல் புத்திக்கூர்மையையும் எடுத்துக்காட்டுக்கின்றது. அவரது உபாய ரீதியான உள்நோக்குகளும் தலைமைத்துவமும் உயர்ந்தளவில் மதிக்கத்தக்க பல்வேறு பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் சபைகளிலும் சுயாதீனப் பணிப்பாளரொருவராக அவர் பணியாற்றுகின்றமையினால் திரு. கோவிந்தசாமியின் நிபுணத்துவமானது நிறுவன ஆளுகை வரை விரிவடைகின்றது.

## திரு. ரஜீவ் அமரசூரிய

**இலங்கை மத்திய வங்கியில் தற்போது வகிக்கும் பதவி**

நியமிக்கப்பட்ட உறுப்பினர் - ஆளும் சபை
நியமிக்கப்பட்ட உறுப்பினர் - நாணயக் கொள்கைச் சபை
உறுப்பினர் - கணக்காய்வுக் குழு

**கல்விசார் பின்னணி:**

சட்டமானி கௌரவப் பட்டம், கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

சட்டத்தரணி, இலங்கை உயர் நீதிமன்றம்

சக உறுப்பினர் பட்டயம்பெற்ற முகாமைத்துவக் கணக்காளர்கள் நிறுவனம் (ஐக்கிய இராச்சியம்)

பட்டயம்பெற்ற உலகளாவிய முகாமைத்துவக் கணக்காளர்

ஹாவார்ட் கென்னடி பாடசாலையின் பழைய மாணவர் (நிறைவேற்றுக் கல்வி)

ரைஸ்சினா சக உறுப்பினர், இளம் உலகளாவிய ஆளுகை மீதான ஆசிய மன்றம்.

**தொழில் விபரம்:**

**தற்போதைய ஈடுபாடு**

திரு. ரஜீவ் அமரசூரிய பொதுமக்கள் சட்டம் மற்றும் சிவில் வழக்காடலின் வேறுபடட்ட துறைகளில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொழில்புரிவதிலின் மையப்படுத்தலுடன் அனுபவம்பெற்ற சட்டத்தரணியொருவராவார். இவர் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு தரநியமங்கள் சபையின் சபை உறுப்பினராகவும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினராகவும் பணியாற்றுகின்றார். திரு. அமரசூரிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சட்டக் கற்கைகள் நிலையியற் குழுவின் உறுப்பினராவதுடன் சட்ட கல்வி அமைப்பிற்கான இலங்கையின் நாட்டிற்கான பிரதிநிதியாகச் செயற்படுகின்றார். இவர் லோஏசியா நிறைவேற்றுக் குழுவிலும் பதவி வகிக்கின்றார்.

**அனுபவம்**

திரு. அமரசூரிய இலங்கையின் சட்ட மற்றும் தொழில்சார் நிறுவனங்களில் முக்கிய பதவிகளை வகிக்கின்றார். இவர் சட்டத்தரணிச் சங்கத்தின் செயலாளராகவும் இலங்கை சட்டக் கல்விச் சபையினதும் உறுப்பினராக விளங்குவதுடன் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஆணையாளரும் ஆவர். இதற்கு மேலதிகமாக திரு. அமரசூரிய நடுத்தீர்ப்புக்கு பங்களிப்பதுடன் இலங்கை தேசிய நடுத்தீர்ப்பு நிலையத்தின் முன்னாள் உறுப்பினராக ஈடுபட்டதுடன் கொழும்பு பல்கலைக்கழக பழைய மாணவர்கள் அமைப்பின் உடனடி கடந்தகால மாணவத் தலைவருமாவார்.

## திரு. மணில் ஜயசிங்க

**இலங்கை மத்திய வங்கியில் தற்போது வகிக்கும் பதவி**

நியமிக்கப்பட்ட உறுப்பினர் - ஆளும் சபை
நியமிக்கப்பட்ட உறுப்பினர் - நாணயக் கொள்கைச் சபை
தலைவர் - கணக்காய்வுக் குழு

**கல்விசார் பின்னணி:**

சக உறுப்பினர், இலங்கை பட்டயக் கணக்காய்வு நிறுவனம்

சக உறுப்பினர், பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனம் (ஐக்கிய இராச்சியம்)

சக உறுப்பினர் இலங்கை சான்றுப்படுத்தப்பட்ட முகாமையாளர் கணக்காளர்கள்

உறுப்பினர், சான்றுப்படுத்தப்பட்ட அரசாங்க நிதி கணக்கீட்டு நிறுவனம்

**தொழில் விபரம்:**

**தற்போதைய ஈடுபாடு**

திரு. ஜயசிங்க பல்வேறு நிறுவனங்களில் முக்கிய பதவிகளை வகிக்கின்றார். இவர் நியதிச் சட்ட கணக்கீட்டு தரநியமங்கள் குழுவின் தலைவராவதுடன் இலங்கை தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனத்தின் கணக்கீட்டு தரநியமங்கள் குழுவிற்கு தலைமை தாங்குகின்றார். இதற்கு மேலதிகமாக இவர் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் குழுவிலும் இலங்கை முதலீட்டுச் சபையிலும் பணியாற்றுகின்றார். மேலும் திரு.ஜயசிங்க டிமோ மற்றும் சிலோன் ஹொஸ்பிட்டல் உள்ளடங்கலாக பல முதன்மைக் கம்பனிகளுக்கான சுயாதீன பணிப்பாளராகச் செயற்படுகின்றார்.

**அனுபவம்**

ஏனஸ்ட் அன்ட் யங் நிறுவனத்தில் 30 ஆண்டுககால மேன்மைமிக்க பதவிக்காலத்தைக் கொண்டவராவார். இங்கு அவர் இலங்கை மற்றும் மாலைதீவின் பங்காளராகவும் நாட்டிற்கான முகாமைத்துவப் பங்காளராகப் பணியாற்றினார். உத்தரவாத நடைமுறை பிரதானி மற்றும் தொழில்சார் நடைமுறைப் பணிப்பாளர் உள்ளடங்கலாக இவர் முக்கிய தலைமைத்துவ வைபாகங்களை வகித்தார். திரு. ஜயசிங்க பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் தரநியமங்களிலும் இலங்கை கணக்கீட்டு தரநியமங்களிலும் நிபுணராவதுடன் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் தலைவராக கணக்கீட்டுத் தொழிலுக்கு குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளார். இவர், தேசிய வர்த்தக சம்மேளனம் மற்றும் இலங்கை பட்டய முகாமைத்துவக் கணக்காளர் சபை போன்ற தொழில்சார் அமைப்புகளில் முனைப்புடன் ஈடுபடுகின்றார்.

## முனைவர் (செல்வி) துஷ்னி வீரகோன்

**இலங்கை மத்திய வங்கியில் தற்போது வகிக்கும் பதவி**

நியமிக்கப்பட்ட உறுப்பினர் - நாணயக் கொள்கைச் சபை

**கல்விசார் பின்னணி:**

பொருளியலில் முனைவர் பட்டம், மன்செஸ்டர் பல்கலைக்கழகம், ஐக்கிய இராச்சியம்

பொருளியலில் முதுமானி பட்டம், மன்செஸ்டர் பல்கலைக்கழகம், ஐக்கிய இராச்சியம்

பொருளியலில் விஞ்ஞானமானி, பெல்பாஸ்ட் குயின்ஸ் பல்கலைக்கழகம் ஐக்கிய இராச்சியம்

**தொழில் விபரம்:**

**தற்போதைய ஈடுபாடு**

முனைவர் திருமதி. வீரகோன் தற்போது இலங்கை கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளாராக பணியாற்றுகின்றார். இவ்வகிபாகத்திற்கு மேலதிகமாக இவர் இலங்கை கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவகத்தில் பேரண்டப் பொருளாதார கொள்கை ஆராய்ச்சித் திணைக்களத்திற்கு தலைமை வகிக்கின்றார். இங்கு பேரண்டப் பொருளாதாரப் போக்குகளை மற்றும் கொள்கைகளை மையப்படுத்திய ஆராய்ச்சி முயற்சிகளுக்கு தலைமை வகிக்கின்றார்.

**அனுபவம்**

முனைவர் (திருமதி) வீரகோன் பன்மைத்துவ துறைகளுடன் கூடிய தொழில்சார் நிபுணரொருவராவார். இவர் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையில் நியமிக்கப்பட்ட உறுப்பினராகப் பணியாற்றுவதுடன் காகில்ஸ் சிலோன் பிஎல்சி, நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி சுயாதீன நிறைவேற்றுதரமல்லாத பணிப்பாளர் பதவிகளை வகிக்கின்றார். முனைவர் வீரகோன் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சமூகக் கொள்கை நிலையத்திற்கு பணிப்புரை வழங்குவதுடன் சர்வதேச ரீதியாக இவர் அவுஸ்திரேலிய மோனாஸ் பல்கலைக்கழகத்தில் அபிவிருத்திப் பொருளியல் மற்றும் நிலைபெறுதன்மைக்கான நிலையத்திற்கு ஆலோசனை வழங்குவதுடன் ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி மற்றும் உலக வர்த்தக அமைப்பு போன்ற அமைப்புகளுக்கும் ஆலோசனை வழங்குகின்றார்.

## முனைவர் பிரியங்க துணுசிங்க

**இலங்கை மத்திய வங்கியில் தற்போது வகிக்கும் பதவி**

நியமிக்கப்பட்ட உறுப்பினர் - நாணயக் கொள்கைச் சபை

**கல்விசார் பின்னணி:**

பொருளியல் பேராசிரியர், பொருளியல் துறை கொழும்பு பல்கலைக்கழகம்

**தொழில் விபரம்:**

**தற்போதைய ஈடுபாடு**

முனைவர் துணுசிங்க இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்பத்துறை தலைவரும் பொருளியல் பேராசிரியருமாவார்.

**அனுபவம்**

முனைவர் துணுசிங்க பல்வேறு துறைகளுக்கு இடையில் பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் அபிவிருத்திகள் என்பவற்றில் விசேடத்துவம் பெற்ற மதிப்புமிக்க ஆராய்ச்சியாளரொருவராவார். இவர் ஐக்கிய நாடுகள், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற கௌரவமிக்க அமைப்புகளுக்கும் இலங்கை அரசாங்கத்தின் பல்வேறு அமைச்சுக்களுக்கும் ஆலோசனைச் சேவைகளை வழங்கியுள்ளார். மேலும், முனைவர் துணுசிங்க ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி நிறுவனத்தில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழு உறுப்பினர் என்ற வகையில் விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கு பங்களிக்கின்றார். இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் பிரிவின் பணிப்பாளராகவும் பணியாற்றுகின்றார்.

## திருமதி. ரி.எம்.ஜே.வை.பி. பர்னாந்து

மூத்த துணை ஆளுநர்

**இலங்கை மத்திய வங்கியில் தற்போது வகிக்கும் பதவி**

உறுப்பினர் - நாணயக் கொள்கைச் சபை
உறுப்பினர் - ஒழுக்கநெறிக் குழு

**கல்விசார் பின்னணி:**

நிதியியல் பொருளியலில் முதுமானிப்பட்டம், கொழும்பு பல்கலைக்கழகம், இலங்கை

வணிகமானி (சிறப்பு) ஸ்ரீ ஜயர்வர்த்தனபுர பல்கலைக்கழகம், இலங்கை

**தொழில் விபரம்**

இலங்கை மத்திய வங்கியின் மூத்த துணை ஆளுநரான திருமதி. பர்னாந்து நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் கொத்தணிக்குத் தலைமை தாங்குவதுடன் வங்கி மேற்பார்வை, வங்கியல்லா மேற்பார்வை, கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள், நாணயம், வெளிநாட்டுச் செலாவணி, நிதி, பிரதேச அபிவிருத்தி மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் உள்ளடங்கலாக பல்வேறு திணைக்களங்களை மேற்பார்வை செய்கின்றார். மத்திய வங்கியில் 34 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்துடன் வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதி நிறுவனங்களை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்தல், வெளிநாட்டுச் செலாவணியை முகாமைசெய்தல், நாணயத் தொழிற்பாடுகளை மேற்பார்வைசெய்தல், கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை என்பவற்றில் இவர் பரந்தளவிலான நிபுணத்துவத்தைக் கொண்டுள்ளார்.

திருமதி. பர்னாந்து, இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்தின் தலைவர் மற்றும் இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் தலைவர் போன்ற முக்கிய பதவிகளை வகித்து பல்வேறு வெளிவாரி நிறுவனங்களிலும் மத்திய வங்கியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றார். இவர், இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் எமக்காக நாம் நிதியத்தின் முகாமைத்துவ சபை என்பவற்றின் உறுப்பினராகப் பணியாற்றுகின்றார்.

## திருமதி. கே.எம்.ஏ.என். டவுலகல

துணை ஆளுநர்

**இலங்கை மத்திய வங்கியில் தற்போது வகிக்கும் பதவி**

உறுப்பினர் - நாணயக் கொள்கைச் சபை
உறுப்பினர் - ஒழுக்கநெறிக் குழு
தகவல் அலுவலர் - இலங்கை மத்திய வங்கி (2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தின் கீழ்)

**கல்விசார் பின்னணி**

நிதியியல் வியாபாரப் பொருளியலில் விஞ்ஞான முதுமானிப் பட்டம், எஸெக்ஸ் பல்கலைக்கழகம், ஐக்கிய இராச்சியம்.

வியாபார நிருவாகத்தில் முதுமானிப் பட்டம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், இலங்கை

சக உறுப்பினர் பட்டய முகாமைத்துவக் கணக்காளர்கள் நிறுவனம், ஐக்கிய இராச்சியம்

**தொழில் விபரம்:**

திருமதி. டவுலகல, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை, ஒழுங்குமுறைப்படுத்தல், பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பு, நிதி, பன்னாட்டுத் தொழிற்பாடுகள், இடர்நேர்வு முகாமைத்துவம், பிரதேச அபிவிருத்தி, மனித வள முகாமைத்துவம், பயிற்சி மற்றும் அபிவிருத்தி அத்துடன் நிறுவன ஆதரவுச் சேவைகள் போன்ற துறைகளில் வேறுபட்ட பதவிகளில் இலங்கை மத்திய வங்கியில் 31 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பணியினை மேற்கொண்டவராவார்.

இவர், நாணயச் சபையின் செயலாளராகவும், மத்திய வங்கியின் சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு மற்றும் ஆலோசனைக் கணக்காய்வுக் குழு என்பவற்றின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். நிதி அமைச்சின் அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

தற்போது, திருமதி டவுலகல இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு தரநியமங்கள் கண்காணிப்புச் சபைக்கு தலைமை தாங்குகின்றார்.

இதற்கு மேலதிகமாக, இலங்கை கொடுகடன் தகவல் பணியகம், இலங்கை வங்கியாளர்கள் நிறுவகம் மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு போன்ற முக்கிய வெளிவாரி நிறுவனங்களில் இவர் மத்திய வங்கியினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றார்.

# சபை துணைக் குழுக்கள்

| குழு | பணிகள் | உறுப்பினர்கள் |
|---|---|---|
| கணக்காய்வுக் குழு | இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் உண்மைத்தன்மை மற்றும் குறிப்பிடத்தக்க நிதியியல் அறிக்கையில் சிக்கல்கள் குறித்து ஆலோசனை வழங்குதல் மற்றும் கணக்காய்வு செயன்முறையில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கு வெளிவாரிக் கணக்காய்வாளருடன் ஈடுபடுதல்.<br><br>உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகளின் போதுமான தன்மை மற்றும் செயல்திறன் பற்றி மீளாய்வுசெய்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல்.<br><br>தகவல் தெரிவித்தல் இணங்குவிப்பு மற்றும் மோசடி அறிக்கையிடல் வழிமுறைகள் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடுகளை மதிப்பிடுதல்.<br><br>ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவ முறைமையின் பின்னணியில் மத்திய வங்கிகளின் உள்ளகக் கணக்காய்வு தொழிற்பாட்டின் செயல்திறனை கண்காணித்தல். | ஆளும் சபையினால் பெயர்குறிக்கப்பட்ட சபை உறுப்பினர் (தலைவர்)<br><br>பெயர்குறிக்கப்பட்ட சபை உறுப்பினர்கள்<br><br>அவதானிப்பாளர்கள்: நிதித் திணைக்களத்திற்குப் பொறுப்பான உதவி ஆளுநர், முதன்மை இணங்குவித்தல் அலுவலர், முதன்மை இடர்நேர்வு அலுவலர், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரதிநிதியாக தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வுக் கண்காணிப்பாளர்<br><br>செயலாளர்: ஆளும் சபைக்கான செயலாளர்<br><br>உதவிச் செயலாளர்:<br><br>பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் |
| சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு | இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான பொருத்தமான கட்டமைப்பு கிடைக்கப்பெறுவதை உறுதிப்படுத்தல்<br><br>இலங்கை மத்திய வங்கியின் இடர்நேர்வு ஏற்புக் கூற்றை பரிந்துரைத்தல்.<br><br>இலங்கை மத்திய வங்கியின் இடர்நேர்வுகளை வினைத்திறனாக முகாமை செய்தலுடன் இடர்நேர்வு ஏற்புக்குள் இருப்பதை உறுதிசெய்வதற்கு இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாட்டை மீளாய்வுசெய்து மதிப்பீடு செய்தல்.<br><br>இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடு மற்றும் இடர்நேர்வு ஆளுகைக் கட்டமைப்பில் உள்ள குழுக்களின் தன்மை, பங்கு, பொறுப்புக்கள் மற்றும் அதிகாரம் ஆகியவற்றை மீளாய்வுசெய்து மதிப்பீடுசெய்தல்.<br><br>உபாய முக்கியத்துவத்தின் நிதியியல்/ தொழிற்பாடு/ இணங்குவிப்பு இடர்நேர்வுகள் ஆளும் சபைக்கு தெரிவிக்கப்படுவதை உறுதிசெய்தல்.<br><br>இலங்கை மத்திய வங்கிக்கு தாக்கத்தைக் கொண்டிருக்கின்ற/ எதிர்காலத் தாக்கங்களைக் கொண்டுள்ள வெளிவாரி அபிவிருத்திகள் மற்றும் வெளிப்படுகின்ற இடர்நேர்வுகள் இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறையில் கருத்திற்கொள்ளப்படுகின்றன என்பதை உறுதிசெய்தல்.<br><br>இலங்கை மத்திய வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவ இயலளவுகள், அதன் குறிக்கோள்களுக்கும் அதன் அனைத்து இடர்நேர்வு ஏற்கும் நடவடிக்கைகளுக்கும் முழுமையாக ஆதரவளிப்பதற்கு போதுமானளவு ஆற்றல்வாய்ந்தவையாக மற்றும் வினைத்திறன்மிக்கவையாக காணப்படுவதை உறுதிசெய்தல்.<br><br>குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படும் தகவல்கள் பற்றி சுயாதீனமானமிக்க, குறிக்கோள்மிக்க மேற்பார்வை மற்றும் கருத்துக்களை வழங்குதல்.<br><br>இலங்கை மத்திய வங்கிக்கு ஆற்றல்வாய்ந்த தொழில் தொடர்ச்சி/ நெருக்கடி முகாமைத்துவத் திட்டம் கிடைப்பதை உறுதிசெய்தல். | சபையினால் பெயர்குறிக்கப்பட்ட சுயாதீன சபை உறுப்பினர் (தலைவர்)<br><br>இரண்டு சுயாதீன வெளிவாரி நிபுணர்கள்<br><br>அவதானிப்பாளர்: மூத்த துணை ஆளுநர், துணை ஆளுநர்கள், முதன்மை இணங்குவித்தல் அலுவலர், தொழில் தொடர்ச்சித் திட்டமிடல் குழுவின் தலைவர், பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர்.<br><br>செயலாளர்: ஆளும் சபைக்கான செயலாளர்<br><br>அவதானிப்பாளர்/ கூட்டம் கூட்டுபவர்/உதவிச் செயலாளர்: இடர்நேர்வு முகாமைத்துவப் பணிப்பாளர் (முதன்மை இடர்நேர்வு அலுவலர்) |
| ஒழுக்கநெறிக் குழு | 2018.06.03 தொடக்கம் நடைமுறைக்குவந்த இலங்கை மத்திய வங்கி ஊழியர்களுக்கான நடத்தைக் கோவை தொடர்பிலான கருமங்கள் மற்றும் 2019.01.01 தொடக்கம் நடைமுறைக்குவந்த நாணயச் சபை உறுப்பினர்கள் மற்றும் நாணயச் சபை நியமித்த ஆலோசனை/ துணைக் குழுக்களுக்கான நடத்தைக் கோவை என்பவற்றை கையாளுதல்.<br><br>(மேலே குறிப்பிடப்பட்ட நடத்தைக் கோவைகள் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் 8(1)ஆம் பிரிவின் நியதிகளுக்கமைவாக வழங்கப்பட்டதுடன் தற்போது 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 133ஆம் பிரிவுடன் அது சேர்த்து வாசிக்கப்படவேண்டும்). | சபையினால் நியமிக்கப்படக்கூடியவாறான சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் (தலைவர்)<br><br>சபையினால் நியமிக்கப்பட்ட வெளிவாரி உறுப்பினர் ஒருவர்.<br><br>மூத்த துணை ஆளுநர் மற்றும் அனைத்து துணை ஆளுநர்கள்<br><br>நாணயச் சபைக்கான செயலாளர் (ஒழுக்கநெறிக் குழுவின் செயலாளராகச் செயற்படுவார்) |

## 2023ஆம் ஆண்டுக்காலப்பகுதி மற்றும் நிதியியல் ஆண்டுடன் தொடர்புடைய நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் செயற்பாட்டு அறிக்கை

### 1. அறிமுகம்

நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழு என்பது நாணயச் சபையினால் நியமிக்கப்பட்ட துணைக் குழுவொன்றாகும். இது நாணயச் சபையினால் அனுமதியளிக்கப்பட்ட நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழுவினால் ஆளுகை செய்யப்படுகின்றது. இதற்கமைய, செயற்பாட்டு அறிக்கையின் உள்ளடக்கமானது இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழு கட்டமைப்பிற்கமைவாகவுள்ளது. நிதியியல் அறிக்கையிடலுடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் கருமங்கள், உள்ளகக் கட்டுப்பாடுகள், உள்ளகக் கணக்காய்வு, வெளிவாரிக் கணக்காய்வு அத்துடன் நாணயச் சபையினால் குறித்தொதுக்கப்படுகின்ற வேறு ஏதேனும் விடயம் தொடர்பாக நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழு நாணயச் சபைக்கான அதன் பரிந்துரைகளை வழங்குகின்றது.

### 2. 2023.08.15 வரையான நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் உள்ளமைப்பு

நாணயச்சபை மதியுரைக் கண்காய்வுக் குழுவின் உள்ளமைப்பு கட்டமைப்பிற்கமைவாக நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுவானது நாணயச் சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரினால் தலைமை தாங்கப்படுவதுடன் கணக்காய்வு/கணக்கீட்டு இரு வேறு தொழில்சார் நிபுணர்களை கொண்டுள்ளது.

2023.08.15 வரையான நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் உள்ளமைப்பு பின்வருமாறு காணப்பட்டது:

i. முனைவர் (திருமதி) ராணி ஜயமகா* - தலைவி

ii. திருமதி. அனுஷா மொஹொட்டி - உறுப்பினர்

iii. திரு. ஏ. இந்திரஜித் பெர்னான்டோ - உறுப்பினர்

நாணயச் சபைக்கான செயலாளர் நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழுவின் செயலாளர் ஆவார் என்பதுடன் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழுவிற்கான உதவிச் செயலாளர் ஆவார். உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களமானது நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழுவுக்கு செயலக வசதிகளை வழங்கின. நிதித் திணைக்களத்திற்குப் பொறுப்பான உதவி ஆளுநர், கணக்காய்வாளர் அதிபதியின் பிரதிநிதியாக தேசிய கணக்காய்வு அலுவலகத்திடமிருந்தான கணக்காய்வுக் கண்காணிப்பாளர், இலங்கை மத்திய வங்கியின் முதன்மை இணங்குவித்தல் அலுவலர், முதன்மைக் கணக்காளர், மற்றும் முதன்மை இடர்நேர்வு அலுவலர் ஆகியோர் நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழுக் கூட்டங்களில் அவதானிப்பாளர்களாகச் சமூகமளித்தனர். கலந்துரையாடல்களுக்கு அவசியப்படுகின்றவாறும் அவசியப்படுகின்ற போதும் இலங்கை மத்திய வங்கியின் திணைக்களத் தலைவர்கள் நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழுவின் தலைவரினால் அழைக்கப்பட்டு கணக்காய்வு கேள்விகளுக்கு பதிலளிக்கின்றனர். இலங்கை மத்திய வங்கியின் வெளிவாரிக் கணக்காய்வினைக் கொண்டு நடாத்துவதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வு நிறுவனத்தின் ஈடுபாட்டுப் பங்காளர் இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் கலந்துரையாடப்படுகின்ற போது அழைப்பின் பேரில் நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களிலும் சமூகமளிக்கின்றது. நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வுக் குழுவானது ஆண்டுக்கு குறைந்தது ஆறு (06) தடவைகள் சந்திப்பதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ளது. கூட்டமொன்றிற்கான நிறைவெண், தலைவர் உள்ளடங்கலாக இரண்டு (02) ஆகும்.

### 3. 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டம்

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 103ஆம் பிரிவிற்கமைய, இலங்கை மத்திய

*2023/09/12 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் நாணயச் சபையில் இருந்து பதவி விலகினார்.

வங்கியின் புதிய நிர்வாகக் கட்டமைப்பிற்கு ஏற்ப கணக்காய்வுக் குழுவின் அமைப்பு, அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள் மாற்றப்பட்டுள்ளன. அதற்கமைய, 2024.02.21 அன்று நடைபெற்ற இலங்கை மத்திய வங்கியின் ஆளும் சபை அதன் கூட்டம் இலக்க 06/2024 இல் ஆளைச் சபையிலிருந்து நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களைக் கொண்ட புதிய கணக்காய்வுக் குழுவை நியமித்தது.

3.1. புதிய கணக்காய்வுக் குழுவின் உள்ளமைப்பு பின்வருமாறு காணப்பட்டது:

i. திரு. மணில் ஜயசிங்க - தலைவர்

ii. முனைவர். ரவி ரத்நாயக்க - உறுப்பினர்

iii. திரு. ரஜீவ் அமரசூரிய - உறுப்பினர்

## 4. 2023ஆம் ஆண்டுகாலப்பகுதியில் நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வுக் குழுவினால் செயற்படுத்தப்பட்ட நடவடிக்கைகள்

நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழுவானது 2023.01.01 இலிருந்து 2023.08.15 வரையில் ஏழு (07) கூட்டங்களை நடாத்தியதுடன் 2023இலும் குறிப்பிடப்பட்ட கூட்டங்களில் பின்வரும் நடவடிக்கைகளை கொண்டு நடாத்தியது.

**4.1. நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வுக் குழுவினது நிதி அறிக்கையிடல் மற்றும் வெளிவாரி கணக்காய்வினை பின்வருமாறு மீளாய்வு செய்தது:**

i. 2022.12.31இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான ஈவை நிறுவனம் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால முகாமைத்துவக் கடிதம், இறுதி முகாமைத்துவக் கடிதம் மற்றும் அதற்கான முகாமைத்துவப் பதிலிறுத்தல்கள்.

ii. 2022.12.31இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்கள்

iii. 2022.12.31இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான நிதியியல் கூற்றுக்கள் மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்தில் முன்மொழியப்பட்ட இலாப பகிர்ந்தளிப்புக் கொள்கை.

iv. 2022.12.31இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான ஊழியர் சேமலாப நிதியத்தின் நிதியியல் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

